உக்ரேனிய
நாடோடிக்
கதைகள்

உக்ரேனிய நாட்டோடிக் கதைகள்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

தொகுப்பாசிரியர்: **விளதீமிர் போய்கோ**
மொழிபெயர்ப்பாளர்: **நா. முகம்மது செரீபு, எம். ஏ.**
ஓவியர்: **வா. கொர்தியசுக்**
பதிப்பாசிரியர்கள்: **எவ்கேனி கனவாலவ், வித்தாலி ஃபுர்னீக்கா**

Украинские народные сказки
На тамильском языке

Ukrainian Folk Tales
In Tamil

© *தமிழ் மொழிபெயர்ப்பு*, **ராதுகா பதிப்பகம்**, *1988*
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-002023-9

பொருளடக்கம்

ன்னுரை 7
றுகக் கொறிப்பான் வெள்ளாடு . 11
ந்திரக் கையுறை 19
கோதரி நரியும் சகோதரன் ஓநாயும் . 23
ர் பூசப்பட்ட சிறிய வைக்கோல் காளை . 31
னையும் சேவலும் . . 36
னையார் 41
வள்ளாடும் செம்மறியாடும் . 46
கோதரி நரி . . 51
ய் சிர்கோ 59
ங்கம் கிணற்றில் மூழ்கியது எப்படி . 64
ன்னம், நண்டு மற்றும் பைக் மீன் . 71
ர் ஆக்கப்பட்ட சிங்கம் . 75
டிக்குச்சி தெலெசிக் . 91
ந்திர முட்டை . . 102
ய் மேய்ப்பன் 118
ால்பதனிடுவோன் கிரிலோ . . 123
. . 129

உருளும் பட்டாணி 143

பறவை நாகம் கொல்லும் இவான் . . 162

பறக்கும் கப்பல் 169

விவசாயியின் மகன் இவான் 183

ஒரு லின்டன் மரமும் பேராசைக் கிழவியும் . . 204

கிழவனுடைய மகளும் கிழவியினுடைய மகளும் . . 208

வளர்ப்புத் தந்தை 222

புத்திசாலிச் சிறுமி 229

நேர்மையான மருமகனும் நேர்மையற்ற மாமனும் . . 237

முன்னுரை

ஆதி காலத்திலிருந்தே ஒரு தலைமுறையிடமிருந்து மற்றொன்றுக்கு வந்து சேர்ந்தவை மந்திர உலகத்தையும் அதனது கதாநாயகர்களையும் பற்றிய நாடோடிக் கதைகள் – கிண்டலோடும், கூரறிவோடும், விவேகத்தோடும் பேசப்பட்டவை அவை. மிக நீண்ட காலமாக இந்த நாடோடிக் கதைகள் வாய் மொழி வடிவத்திலேயே வழங்கி வந்தன, கேட்பவர்களுக்கு அவை சொல்லப்பட்டுவந்தன. அது காரணமாகத்தான் அவை நாடோடிக் கதைகள் என வழங்கப்பட்டன...

உக்ரேனிய நாடோடிக் கதைகள் ஏராளமாக இருக்கின்றன. அவை வீரர்களாலும், மிகப் பண்டையக் காலத்து நிகழ்ச்சிகளாலும், மிகவும் தொன்மைக் காலத்தில் அல்லாதனவாலும் நிறைந்து காணப்படுகின்றன. சாதாரண மக்களின் துணிச்சல் மிக்கவர்களான இந்தப் புத்தகத்தின் கதாநாயகர்களை வாசகர் விரும்புவார், வியப்பூட்டும் தீரச் செயல்களாலும், விலங்குகளின் மற்றும் பறவைகளின் குறிப்பிடத்தக்க குணங்களாலும் வாசகர் மகிழ்ச்சியடைவார் என்றே நாம் நம்புகிறோம். மந்திரக் கையுறை, பறக்கும் கப்பல், 'வெப்பத்தைத் தின்னவும், தீநாக்கினைக் குடிக்கவும்' செய்கிற ராட்சசக் குதிரை ஆகியன போன்ற கற்பனையான, கவித்துவமான உருவங்களை அவர் நினைவில் வைத்திருப்பார்...

இயற்கை, வீட்டு மிருகங்கள், காட்டுப் பறவைகள், கொடிய விலங்குகள் இவை பற்றிய அடிப்படை அறிவை இந்த நாடோடிக் கதைகள் குழந்தைக்கு வழங்குகின்றன. காட்டில் கிழவன் ஒருவன் அவனது கையுறையை இழந்தது பற்றியும் அவற்றில் தங்கிய விலங்குகள் பற்றியும் உள்ள நாடோடிக் கதையைத் தொட்டிலில் இருக்கக்கூடிய குழந்தை, முதலாவதாகக் கேட்கலாம். விலங்குகளின் கற்பனை உருவங்கள் குழந்தைப் பருவத்திலிருந்து விருப்பமுடையதாக மாறி, அதனால்

மகிழ்ச்சியுற்ற அந்தக் குழந்தை அவற்றிற்குத் திரும்பத் திரும்ப வந்துகொண்டிருக்கிறது. அவன் வளர்ச்சியடையும் போது, புதிய நாடோடிக் கதைகள் அவனிடம் வருகின்றன. கவர்ச்சியினால் ஓர் இளம் வாசகன் தந்திரமுள்ள சகோதரி நரியின் வீரதீரச் செயல்களோடு ஒன்றிப் போகிறான். வீட்டு விலங்குகளையும், காட்டின் பிற விலங்குகளையும் சுற்றிச் செல்கின்ற உக்ரேனிய நாடோடிக் கதைகளில் இந்தப் பாத்திரமானது அடிக்கடி காணப்படுகிறது. சேவல், முயல், ஓநாய், கரடி ஆகியவற்றோடு மோதுகின்ற போது நரி அடிக்கடி தந்திரத்தால் வெற்றிபெறுகிறது. ஆனால் சில நேரங்களில் தனது மோசடிகளுக்கு அதுவும் கூட விலை கொடுக்க வேண்டியிருக்கிறது.

விலங்குகளைப் பற்றி இவை பேசினாலும், ஒருவகையில் மனிதர்களையே சுட்டிக்காட்டுகின்றன என்று விலங்குகளைப் பற்றிய நாடோடிக் கதைகள் கூறும் பழமொழி சந்தர்ப்பவசமானதில்லை. சில பழமொழிகள் இதையும் கூறுகின்றன: ''அவன் நரியைப் போலத் தந்திரமுள்ளவன்'', ''அவன் ஓநாயைப் போலப் பசியுள்ளவன்''. ஆனால் நாடோடிக் கதைகளின் படைப்பாளர்களாகிய மக்கள் எப்போதுமே அவமதிக்கப்பட்டவர்களின் பக்கமிருப்பார்கள், அவர்களது இடர்ப்பாடுகளுடன் பரிவு கொள்கிறார்கள், அவர்களது அன்புக்காக, பரிவு கொள்ளும் தன்மைக்காக, ஈடுபாட்டிற்காக அவர்களை மக்கள் விரும்புகிறார்கள்.

இந்தத் தொகுப்பில் மந்திரக் கதைகளும் உண்டு. தீய சக்திகளுடன் — பெரிய பாம்புகளுடனும் பறவை நாகங்களுடனும் — கடினமான போராட்டத்தில், சாதாரணமான மனிதனின், உழைப்பாளியின் வீரமிக்க சுபாவம் வெளிப்படுத்தப்படுகிறது. மந்திரக் கதைகளில் உள்ள கதாநாயகர்களுடைய பெயர்கள் — அவர்கள் சாதாரண குடும்பங்களில் பிறந்தவர்கள் — அடிக்கடி மிக எளிதாக இருக்கின்றன: குடியானவனின் மகன் இவான், இளம் மேய்ப்பன், தோல்பதனிடுவோன் கிரிலோ... தீயவனைத் தண்டிப்பதற்காக, தொல்லையில் இருப்பவர்களைக் காப்பாற்றுவதற்காக, நியாயத்தை நிலைநாட்டுவதற்காகக் கதாநாயகன் போரிட வேண்டியிருப்பது ஒன்று அல்லது இரண்டு முறையல்ல; அவன் பறவை நாகத்தின் பல தலைகளை வெட்ட வேண்டும். இக்கதாநாயகர்களின் துணிகர நிகழ்ச்சிகளையும் தீரச் செயல்களையும் சொல்வதன் மூலம், மக்கள் நாடோடிக் கதைகளில் அவர்களது துணிவை, அன்பை, கூரறிவைப் பாராட்டுகிறார்கள்.

மந்திரக் கதைகளில் மக்களின் கற்பனையாற்றல்கள் ஒரு மனிதனுடைய உணர்ச்சி பொங்குகிற சக்தி பற்றிய, ஒரு மனிதனுடைய வளர்கின்ற திறமைகள் பற்றிய விவசாயிகளுடைய கனவுகளை உள்ளடக்கமாகக் கொண்டன. பல உக்ரேனிய நாடோடிக் கதைகளில் அதீதமான திறமைகள் கொடுக்கப்பட்ட கதாநாயகர்கள் விரிவாக வருணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சாதாரண மக்களுடன், அதாவது உக்ரேனிய விவசாயிகளுடன் சம்பந்தப்பட்ட கதைகளால் நாடோடிக் கதைகளின் தொகுப்பு முடிவடைகிறது. அவர்களுடைய உழைப்பு, கைத்தொழில்கள், குடித்தனம் ஆகியன நாடோடிக் கதைகளில் இடம் பெற்றுள்ள கடந்த காலத்திய சிறப்பியல்புகளாகும். பணக்காரர்களுக்கும் ஏழை

களுக்கும், நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் உள்ள விசேஷமான உறவுகள், உண்மையாக வாழக் கூடியவர்களுக்கும் தவறான வழிகளில் ஒருவனால் வாழ முடியும் என நம்பக் கூடியவர்களுக்கும் உள்ள உறவுகள் இக்கதைகளில் சித்திரிக்கப்படுகின்றன. இந்தக் கதைகளில் ஜார்களின் மற்றும் பணக்காரர்களின் தற்பெருமையும் முட்டாள் தனமும் அம்பலப்படுத்தி கேலி செய்யப்படுகிறது, ஒரு சாதாரண மனிதனுடைய கூரறிவும் துணிவும் வெல்கிறது.

இந்தக் கதைகள் மக்களுடைய நகைச்சுவையையும், கூர்மையான அங்கதத்தையும் வெளிக்காட்டி, கொடுங்கோலர்களையும், மற்ற மனிதனுடைய துயரத்தில் லாப மடைபவர்களையும் தோலுரித்துக் காட்டுகின்றன.

தங்களது கடின உழைப்பை எளிதாக்க வேண்டும், தங்களது வாழ்வை அலங் கரிக்க வேண்டும், தீமையையும் வன்முறையையும் எதிர்த்து நீதியை நிலைநாட்ட வேண்டும், எல்லா மக்களும் சுதந்திரமாகவும், வறுமையில்லாமலும், மகிழ்ச்சியாகவும் அழகுணர்வுடனும் வாழ வேண்டும் என்ற சாதாரண மக்களுடைய ஆசையுடன் எல்லா நாடோடிக் கதைகளிலும் காணப்படுகின்றன...

காலம், இடம், கதைசொல்பவரின் ஆளுமை இவற்றின் அடிப்படையில் நாடோடிக் கதைகள் பல்வேறு பாட பேதங்கள் கொண்டிருக்கின்றன என்பது நன்கு தெரியும். பல்வேறு மாற்றங்கள் நாடோடிக் கதைகளுக்குள்ளாகத் தொடர்ச்சியாகப் புகுத்தப் பட்டன, புதிய கலைக்குரிய விவரங்களினால் அவற்றின் கதைத் திட்டங்கள் செழுமைப் படுத்தப்பட்டன.

இந்தத் தொகுப்பிலுள்ள நாடோடிக் கதைகள் பெரும்பாலும் **19ஆம்** நூற்றாண்டின் இரண்டாவது பாதியில், தற்போதைய **15** சோவியத் சோஷலிசக் குடியரசுகளில் ஒன்றான சோவியத் உக்ரேனின் பொல்தாவா மற்றும் கீவ் மாவட்டங் களில் பதிவு செய்யப்பட்டவை. கார்ப்பேதிய மலைகளிலிருந்து கருங்கடல் வரை உக்ரேன் விரிந்து கிடக்கிறது. கிழக்கிலும் வடக்கிலும் ருஷ்யாவும், பெலோருஷ்யாவும், தென்மேற்கில் மால்தேவியாவும் அதன் எல்லைகளாக இருக்கின்றன.

இந்தக் கதைகளின் கதாசிரியர்களும், கதைசொல்பவர்களும் அவர்களுக்கு நன் றாக அறிமுகமான விவசாயிகளுடைய, உக்ரேனியக் குடியானவர்களுடைய வாழ்க்கை முறை, உழைப்பு, அவர்களது பழக்க வழக்கங்கள், குடித்தனம், வீட்டு மிருகங்கள், வீட்டுப் பறவைகள் ஆகியவற்றை இக்கதைகளில் பிரகாசமாகச் சித்திரிக்கிறார்கள். உக்ரேனிய மக்களின் நாடோடிக் கதைகளுடன் அறிமுகம் செய்து கொள்கையில், உக்ரேனின் ஒரு தனிப்பட்ட இயற்கையை — அதனது ஸ்டெப்பிகளையும், காடு களையும், பெரியதும் சிறியதுமான மலைகளையும் ஆறுகளையும் வாசகர் காண்பார். நாடோடிக் கதையின் மந்திர உலகம் இந்த அழகான நாட்டிற்கு, நீப்பர் நதியின் கரைகளுக்கு வாசகரை அழைத்துச் செல்லும், புதிய கதாநாயகர்களுடன் அறிமுகம் செய்துகொள்ளும், அவர்களோடு ஒன்றாக மகிழ்ச்சியும் ஆர்வமும் பெற்று, தீமையை எதிர்த்து ஒரு வெற்றியை மீண்டும் அநுபவிக்கச் செய்யும்...

நாடோடிக் கதையின் மந்திர உலகத்தை உலகெங்கிலும் உள்ள மிகப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பாராட்டி அதனின்றும் தங்களது கலைக்குரிய உத்வேகத்தைப்

பெற்றார்கள். நாடோடிக் கதைகளின் கருத்துக்களையும் கற்பனைப் பாத்திரங்களை யும் கேதே, ஷில்லெர், மித்ஸ்கேவிச், பூஷ்கின், ஷெவ்சேன்கோ, ரவீந்திரநாத் தாகூர் மற்றும் பலரது படைப்புகளில் ஒருவர் காண முடியும்.

பண்டைய இந்தியாவிலிருந்து 'பஞ்ச தந்திர'க் கதைத் தொகுப்பும், மத்திய கிழக்கு அரபு மக்களிடமிருந்து 'ஆயிரத்து ஓர் இரவுகள்' என்ற கதைத் தொகுப்பும் நமக்கு வந்தன. அவை மட்டுமே அல்ல. இப்போது வரையும் கிரீம் சகோதரர்கள், அன்டர்சன் மற்றும் பெர்ராட் இவர்களின் மந்திரக் கதைகளும் இளைய வாசகர் களுக்கு மகிழ்ச்சி தருகின்றன. மந்திரக் கதைகளின் ஆசிரியர்கள் தங்கள் நாடுகளின் கதைகளை இலக்கிய ரீதியாக உருவாக்கி அவற்றிற்கு ஒரு புதிய உயிர் கொடுத்து, உலகம் முழுவதிலுமுள்ள குழந்தைகளுக்காகத் தந்தார்கள்.

கடந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி, பன்முகப்பட்டதும் வேறுபாடுகள் கொண்டதுமான வாழ்க்கையின் அழகை இளம் வாசகருக்கு நாடோடிக் கதைகள் சித்திரிக்கின்றன.

டாக்டர் விளதீமிர் போய்கோ



சிறுகக் கொறிப்பான் வெள்ளாடு

முன்னொரு காலத்தில் ஒரு கிழவனும் ஒரு கிழவியும் வசித்தனர். ஒரு நாள் கிழவன் சந்தைக்குச் சென்று ஒரு வெள்ளாடு வாங்கினான். அந்த ஆட்டை வீட்டிற்குக் கொண்டு வந்தான். மறுநாள் காலைத் தன் மூத்த மகனிடம் அதனை மேய்ச்சலுக்கு வெளியே ஓட்டிப் போகச் சொன்னான். மாலை வரை ஆட்டை மேயவிட்ட இளைஞன், பின்னர் அதை வீட்டிற்கு ஓட்டி வந்தான். நேராகப் படலை நோக்கி ஓட்டிவர, அங்கே தனது சிவப்புக் காலணிகளுடன் இருந்த கிழவன் கேட்டான்:

''கூறுவாய் என்னிடம், சின்னஞ்சிறு ஆடே, சிறுகக் கொறிப்பானே, உண்ணவும் குடிக்கவும் உனக்குப் போதுமானவைக் கிடைத்தனவா?''

''இல்லை, தாத்தா, நான் குடிக்கவோ உண்ணவோ இல்லை,'' என்று ஆடு பதிலளித்தது. பிறகு: ''நடை பாலத்தில் ஓடுகையில் மேப்பிள் மரத்தின் ஓரிலையைக் கொறித்தேன், சிறு அணை மீது ஓடுகையில் குடிக்கத்தான் ஓர்துளியது நீரினையும் வாரினேன், தின்றதுவும் குடித்ததுவும் திட்டமாய் அவ்வளவே.''

ஆட்டை ஒழுங்காகப் பார்த்துக் கொள்ளாததற்காக தன் மகனிடம் கோபமுற்ற கிழவன் அவனை வீட்டை விட்டுத் துரத்தினான்.

மறுநாள் தனது இளைய மகனிடம் மேய்ச்சலுக்கு ஆட்டை ஓட்டிச் செல்லுமாறு கூறினான். மாலை வரை ஆட்டை மேயவிட்ட இளை

ஞன், பின்னர் அதை வீட்டிற்கு ஓட்டி வந்தான். நேராகப் படலை நோக்கி ஓட்டிவர, அங்கே தனது சிவப்புக் காலணிகளுடன் இருந்த கிழவன் கேட்டான்:

''கூறுவாய் என்னிடம், சின்னஞ்சிறு ஆடே, சிறுகக் கொறிப் பானே, உண்ணவும் குடிக்கவும் உனக்குப் போதுமானவைக் கிடைத் தனவா?''

''இல்லை, தாத்தா, நான் குடிக்கவோ உண்ணவோ இல்லை,'' என்று ஆடு பதிலளித்தது. பிறகு: ''நடை பாலத்தில் ஓடுகையில் மேப்பிள் மரத்தின் ஓரிலையைக் கொறித்தேன், சிறு அணை மீது ஓடுகையில் குடிக்கத்தான் ஓர்துளியது நீரினையும் வாரினேன், தின்றதுவும் குடித்தது வும் திட்டமாய் அவ்வளவே.''

ஆகவே கிழவன் தனது இளைய மகனையும் வீட்டை விட்டுத் துரத்தினான்.

மூன்றாம் நாள் மேய்ச்சலுக்கு ஆட்டை விட அவன் கிழவியை அனுப்பினான். நாள் முழுக்கக் கிழவி ஆட்டை மேயவிட்டு, மாலை வந்ததும் அதனை வீட்டிற்கு ஓட்டி வந்தாள். படலை யருகே தனது சிவப்புக் காலணிகளுடன் இருந்த கிழவன் கேட்டான்:

''கூறுவாய் என்னிடம், சின்னஞ்சிறு ஆடே, சிறுகக் கொறிப்பானே, உண்ணவும் குடிக்கவும் மகிழவும் உனக்குப் போதுமானவைக் கிடைத் தனவா?''

''இல்லை, தாத்தா, நான் குடிக்கவோ உண்ணவோ இல்லை,'' என்று ஆடு பதிலளித்தது. பிறகு: ''நடை பாலத்தில் ஓடுகையில் மேப்பிள் மரத்தின் ஓரிலையைக் கொறித்தேன், சிறு அணை மீது ஓடுகையில் குடிக்கத்தான் ஓர்துளியது நீரினையும் வாரினேன், தின்றது வும் குடித்ததுவும் திட்டமாய் அவ்வளவே.''

ஆகவே கிழவன் கிழவியையும் வீட்டை விட்டுத் துரத்தினான்.

நான்காம் நாள் தானே மேய்ச்சலுக்கு ஆட்டை ஓட்டிச் சென்றான். நாள் முழுக்க அதை மேயவிட்டு, மாலை வந்ததும் சாலை நோக்கி அதனை ஓட்டினான். அதற்கு முன்னால் தானே ஓடி, சிவப்புக் காலணி யுடன் தனது வீட்டின் படலை யருகே நின்று கேட்டான்:

''கூறுவாய் என்னிடம், சின்னஞ்சிறு ஆடே, சிறுகக் கொறிப்பானே, உண்ணவும் குடிக்கவும் மகிழவும் உனக்குப் போதுமானவைக் கிடைத் தனவா?''

''இல்லை, தாத்தா, நான் குடிக்கவோ உண்ணவோ இல்லை,'' என்று ஆடு பதிலளித்தது. பிறகு: ''நடை பாலத்தில் ஓடுகையில் மேப்பிள் மரத்தின் ஓரிலையைக் கொறித்தேன், சிறு அணை மீது ஓடுகையில் குடிக்கத்தான் ஓர்துளியது நீரினையும் வாரினேன், தின்றது வும் குடித்ததுவும் திட்டமாய் அவ்வளவே.''

கிழவன் ஆடு மீது மிகுந்த கோபமுற்றான். கொல்லனிடம் சென்று தனது கத்தியைக் கூராக்கினான். ஆட்டைக் கொல்லவிருந்த சமயம் ஆடு தானே கட்டவிழ்த்துக் கொண்டு காட்டை நோக்கி ஓடியது. அங்கே ஒரு முயலின் குடிசையைக் கண்டு, அதன் உள்ளே சென்று அடுப்பில் ஒளிந்து கொண்டது.

இதற்கிடையில் முயல் உள்ளே வந்து, தனது குடிசையில் யாரோ இருப்பதைக் கண்டது.

''அங்கே என் குடிசையில் இருப்பது யார்?'' என்று கேட்டது.

வெள்ளாடு திரும்பச் சொன்னது:

''சிறுகக் கொறிக்கும் வெள்ளாடு என்னைச்
சந்தை தன்னிலே சிறுபணம் மூன்றுக்கு
வாங்கி வந்தனர் வறண்ட தோலுடன்,
கத்தியே யானும் கதறச் செய்வேன்,
காலால் உதைத்துக் கீழே தள்ளுவேன்,
கொம்பு கொண்டே குத்திக் கிழிப்பேன்,
வாலது கொண்டே வாரித் துடைப்பேன்,
வம்பாய் முடியும் வாழ்வு உனக்கே!''

முயல் மிகவும் நடுக்குற்றுப் போனது. குடிசைக்கு வெளியே ஓடிச் சென்று ஒரு மரத்தின் கீழே அமர்ந்து புலம்பத் தொடங்கியது. இதற்கிடையே கரடி ஒன்று அவலட்சணமாக நடந்து வந்தது.

''ஏன் நீ அழுது கொண்டிருக்கிறாய், தாவிக்குதிப்பானே?'' என்று கேட்டது.

''நான் எப்படி அழாமல் இருக்க முடியும், முணுமுணுப்பானே! ஒரு பயங்கர விலங்கு என் குடிசையில் உட்கார்ந்து கொண்டிருக் கிறது!''

''நான் அதை வெளியே துரத்தப் போகிறேன்!'' என்ற கரடி, குடிசைக்குள் சென்றது.

''இந்தக் குடிசையில் உட்கார்ந்து கொண்டிருப்பது யார்?'' எனக் கேட்டது.

வெள்ளாடு திரும்பச் சொன்னது:

''சிறுகக் கொறிக்கும் வெள்ளாடு என்னைச்
சந்தை தன்னிலே சிறுபணம் மூன்றுக்கு
வாங்கி வந்தனர் வறண்ட தோலுடன்,
கத்தியே யானும் கதறச் செய்வேன்,
காலால் உதைத்துக் கீழே தள்ளுவேன்,
கொம்பு கொண்டே குத்திக் கிழிப்பேன்,
வாலது கொண்டே வாரித் துடைப்பேன்,
வம்பாய் முடியும் வாழ்வு உனக்கே!''

கரடி மிகவும் நடுக்குற்றுப் போய், குடிசையிலிருந்து வெளியே ஓடியது.

''இல்லை, நான் பயப்படுகிறேன், என்னால் உனக்கு உதவிட முடியாது, தாவிக்குதிப்பானே!'' என்றது.

ஆகவே திரும்பவும் முயல் மரத்தடியில் அமர்ந்து மேன்மேலும் புலம்பியது. இதற்கிடையே ஓநாய் ஒன்று ஆடிக்கொண்டு வந்தது.

''ஏன் நீ அழுது கொண்டிருக்கிறாய், தாவிக்குதிப்பானே?'' என்று கேட்டது.

''நான் எப்படி அழாமல் இருக்க முடியும், ஊளையானே! ஒரு பயங்கர விலங்கு என் குடிசையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது!''

''நான் அதை வெளியே துரத்தப் போகிறேன்!'' என்றது ஓநாய்.

''ஐயோ, அதை நான் நம்பவில்லை! கரடி முயன்றது அதனால் முடியவில்லை, ஆகவே உன்னால் கூட முடியாது.''

''பொறு, என்னால் முடியாதா என்பதைச் சற்றே பார்!''

குடிசைக்குள்ளாகச் சென்றது ஓநாய்.

''இந்தக் குடிசையில் உட்கார்ந்து கொண்டிருப்பது யார்?'' எனக் கேட்டது.

வெள்ளாடு திரும்பச் சொன்னது:

''சிறுகக் கொறிக்கும் வெள்ளாடு என்னைச்
சந்தை தன்னிலே சிறுபணம் மூன்றுக்கு
வாங்கி வந்தனர் வறண்ட தோலுடன்,

கத்தியே யானும் கதறச் செய்வேன்,
காலால் உதைத்துக் கீழே தள்ளுவேன்,
கொம்பு கொண்டே குத்திக் கிழிப்பேன்,
வாலது கொண்டே வாரித் துடைப்பேன்,
வம்பாய் முடியும் வாழ்வு உனக்கே!''

ஓநாய் மிகவும் நடுக்குற்று வெளியே ஓடியது.

''இல்லை, நான் பயப்படுகிறேன், என்னால் உனக்கு உதவிட முடியாது, தாவிக்குதிப்பானே!'' என்றது.

ஆகவே திரும்பவும் முயல் மரத்தடியில் அமர்ந்து மேன்மேலும் புலம்பியது. இதற்கிடையே நரி ஒன்று ஓடி வந்தது.

''ஏன் நீ அழுது கொண்டிருக்கிறாய், தாவிக்குதிப்பானே?'' என்று நரியும் கேட்டது.

''நரி சகோதரியே, நான் எப்படி அழாமல் இருக்க முடியும்? ஒரு பயங்கரமான விலங்கு என்னுடைய குடிசையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது!''

''நான் அதை வெளியே துரத்தப் போகிறேன்!'' என்றது நரி.

''ஐயோ, நரியே, அதை நான் நம்பவில்லை! கரடி முயன்றது அதனால் முடியவில்லை, ஓநாய் முயன்றது அதனால் முடியவில்லை, ஆகவே உன்னால் கூட முடியாது.''

''பொறு, என்னால் முடியாதா என்பதைச் சற்றே பார்!''
குடிசைக்குள்ளாகச் சென்றது நரி.

''இந்தக் குடிசையில் உட்கார்ந்து கொண்டிருப்பது யார்?'' எனக் கேட்டது.

வெள்ளாடு திரும்பச் சொன்னது:

''சிறுகக் கொறிக்கும் வெள்ளாடு என்னைச்
சந்தை தன்னிலே சிறுபணம் மூன்றுக்கு
வாங்கி வந்தனர் வறண்ட தோலுடன்,
கத்தியே யானும் கதறச் செய்வேன்,
காலால் உதைத்துக் கீழே தள்ளுவேன்,
கொம்பு கொண்டே குத்திக் கிழிப்பேன்,
வாலது கொண்டே வாரித் துடைப்பேன்,
வம்பாய் முடியும் வாழ்வு உனக்கே!''

நரி மிகவும் நடுக்குற்று வெளியே ஓடியது.

"இல்லை, நான் பயப்படுகிறேன், என்னால் உனக்கு உதவிட முடியாது, தாவிக்குதிப்பானே!'' என்றது.

ஆகவே திரும்பவும் முயல் மரத்தடியில் அமர்ந்து மேன்மேலும் விம்பியது. இதற்கிடையே நண்டு ஒன்று ஊர்ந்து வந்தது.

''ஏன் நீ அழுது கொண்டிருக்கிறாய், தாவிக்குதிப்பானே?'' என்று கேட்டது.

''நான் எப்படி அழாமல் இருக்க முடியும்? ஒரு பயங்கர விலங்கு என் குடிசையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது!''

''நான் அதை வெளியே துரத்தப் போகிறேன்!'' என்றது நண்டு.

''ஐயோ, அதை நான் நம்பவில்லை! கரடி முயன்றது அதனால் முடியவில்லை, ஓநாய் முயன்றது அதனால் முடியவில்லை, நரி முயன்றது அதனால் முடியவில்லை, ஆகவே உன்னால் கூட முடியாது.''

''பொறு, என்னால் முடியாதா என்பதைச் சற்றே பார்!''

அதனையடுத்து நண்டு முயலின் குடிசைக்குள்ளாக ஊர்ந்து சென்றது.

''இந்தக் குடிசையில் உட்கார்ந்து கொண்டிருப்பது யார்?'' எனக் கேட்டது.

வெள்ளாடு திரும்பச் சொன்னது:

> ''சிறுகக் கொறிக்கும் வெள்ளாடு என்னைச்
> சந்தை தன்னிலே சிறுபணம் மூன்றுக்கு
> வாங்கி வந்தனர் வறண்ட தோலுடன்,
> கத்தியே யானும் கதறச் செய்வேன்,
> காலால் உதைத்துக் கீழே தள்ளுவேன்,
> கொம்பு கொண்டே குத்திக் கிழிப்பேன்,
> வாலது கொண்டே வாரித் துடைப்பேன்,
> வம்பாய் முடியும் வாழ்வு உனக்கே!''

ஆனால் இது நண்டை நிறுத்திடவில்லை. மேன்மேலும் ஊர்ந்து, அடுப்பு வரை சென்று சொன்னது:

> ''எனக்குப் பயந்தனர் எல்லாரும்
> ஏனென அறிவாய் விரைவில்
> அடித்தால் ஓடுவாய் தூரமே
> கிள்ளினால் அழுவாய் நாளுமே!''

தனது கொடுக்குகளால் வெள்ளாட்டை அது கிள்ளியது. ஆடு கத்தியபடி அடுப்பிலிருந்து கீழே குதித்து தன்னால் முடிந்தளவுக்கு விரைவாக ஓடியது! தாவிக்குதிப்பான் பெருமகிழ்ச்சி கொண்டது. அது குடிசைக்குள்ளாக வந்து நண்டுக்குத் திரும்பத் திரும்ப நன்றி சொன்னது!.. மேலும் அது தனது குடிசையில் கதகதப்புடன் இன்றைய நாள் வரை வசிக்கிறது.

மந்திரக் கையுறை

முன்னர் ஒரு சமயம் காட்டில் ஒரு கிழவன் தனது கையுறையை இழந்து விட்டான். இதோ, ஒரு சுண்டெலி அங்கே ஓடிவந்து, கையுறைக்குள்ளாக நுழைந்து கொண்டது.

இதற்கிடையே ஒரு தவளை தாவித்தாவி வந்து நின்று கேட்டது:

''யாரங்கே? இந்தக் கையுறைக்குள் வசித்துக் கொண்டிருப்பது யார்?''

''நான் தான் கறுமுறுப்பான் சுண்டெலி. நீ யார்?''

''குவாக்குவாக் தவளை. உள்ளே நான் வரலாமா?''

''சரி, குதி உள்ளே!''

இதற்கிடையே ஒரு சின்ன முயல் அங்கே குறுநடை ஓட்டமிட்டு வந்து நின்று கேட்டது:

''யாரங்கே? இந்தக் கையுறைக்குள் வசித்துக் கொண்டிருப்பது யார்?''

''நாங்கள் தான். கறுமுறுப்பான் சுண்டெலியும் குவாக்குவாக் தவளையும். நீ யார்?''

''தாவிக்குதிப்பான் முயல். உங்களோடு நானும் சேரலாமா?''

''சரி. குதி உள்ளே!''

இதற்கிடையே ஒரு நரி குதியாட்டமிட்டு வந்து நின்று கேட்டது:

"யாரங்கே? இந்தக் கையுறைக்குள் வசித்துக் கொண்டிருப்பது யார்?"

"நாங்கள் தான். கறுமுறுப்பான் சுண்டெலியும் குவாக்குவாக் தவளையும் தாவிக்குதிப்பான் முயலும். நீ யார்?"

"சகோதரி நரி. எனக்காக இடம் நீங்கள் தரமாட்டீர்களா?"

"சரி. குதி உள்ளே!"

ஆக அங்கே அவை நாலும் அமர்ந்திருந்தன. இதற்கிடையே ஒரு சின்ன நாய் விறாப்பு நடைபோட்டு வந்து நின்று கேட்டது:

"யாரங்கே? இந்தக் கையுறைக்குள் வசித்துக் கொண்டிருப்பது யார்?"

"நாங்கள் தான். கறுமுறுப்பான் சுண்டெலியும் குவாக்குவாக் தவளையும் தாவிக்குதிப்பான் முயலும் சகோதரி நரியும். நீ யார்?"

"ஊளையான் ஓநாய். நான் உள்ளே வரலாமா?"

"சரி. வா!"

ஆகவே அவை ஐந்தும் கையுறைக்குள் உட்கார்ந்திருந்தன. இதற்கிடையே ஒரு காட்டுப் பன்றி சோம்பலாக நடந்து வந்து நின்று முழவுடன் கேட்டது:

"யாரங்கே? இந்தக் கையுறைக்குள் வசித்துக் கொண்டிருப்பது யார்?"

"நாங்கள் தான். கறுமுறுப்பான் சுண்டெலியும், குவாக்குவாக் தவளையும், தாவிக்குதிப்பான் முயலும், சகோதரி நரியும், ஊளையான் ஓநாயும். நீ யார்?"

"நீள் மூக்கன் பன்றி. என்னையும் நீங்கள் உள்ளே விடுவீர்கள் என்று நிச்சயமாகக் கருதுகிறேன்!"

"சரி. குதி உள்ளே!"

ஆகவே பன்றி நெருக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தது. அவை ஆறும் கையுறைக்குள் அமர்ந்திருந்தன.

இதற்கிடையே ஒரு கரடி அருவருப்பாக வந்து, உறுமி, கர்ஜித்துக் கேட்டது:

"யாரங்கே? இந்தக் கையுறைக்குள் வசித்துக் கொண்டிருப்பது யார்?"

"நாங்கள் தான். கறுமுறுப்பான் சுண்டெலியும், குவாக்குவாக் தவளையும், தாவிக்குதிப்பான் முயலும், சகோதரி நரியும், ஊளையான்

ஓநாயும், நீள் மூக்கன் பன்றியும். நீ யார்?''

''முணுமுணுப்பான் கரடி. எனக்காக நீங்கள் இடம் தாருங்கள்!''

''சரி. குதி உள்ளே!''

ஆகவே கரடியும் உள்ளே நெருக்கிக்கொண்டு சென்றது. அவை ஏழும் கையுறைக்குள் உட்கார்ந்தன.

இதற்கிடையே ஒரு வேடுவன் நடந்து வந்து கொண்டிருந்தான். கையுறை நகர்வதைப் பார்த்தான், 'படார்' என்று தனது துப்பாக்கி யால் சுட்டான். கையுறை வெடித்தது. ஏழு நண்பர்களும் தாறுமாறாக அப்பால் ஓடின.



சகோதரி நரியும் சகோதரன் ஓநாயும்

ஒரு காலத்தில் நரி ஒன்று தானாகவே ஒரு குடிசையைக் கட்டிக் கொண்டு அங்கே கதகதப்பாக வாழ்ந்தது. ஆனால் குளிர்காலம் வரவும் குடிசையில் குளிராக இருந்தது, ஆகவே தனது சூட்டடுப்புக்கு நெருப்பு வாங்கிவர கிராமத்திற்கு ஓடியது. ஒரு கிழவியினுடைய வீட்டிற்கு வந்து அது சொன்னது:

“வணக்கம், பாட்டி! எனக்கு நெருப்புக் கொடு, நான் உனக்குக் கடன்பட்டிருக்க மாட்டேன்.”

“சரி, சகோதரி நரியே,” என்றாள் கிழவி. “உட்கார்ந்து கதகதப் பாக்கிக் கொள், அதற்குள் சூட்டடுப்பிலிருந்து பணியாரங்களை எடுக் கிறேன்.”

அப்போது கிழவி கசகசா விதையுடன் பணியாரங்களைச் சுட்டுக் கொண்டிருந்தாள். சூட்டடுப்பிலிருந்து அவற்றை வெளியே எடுத்து ஆற வைக்க மேசை மீது வைத்தாள். நரி அவற்றை ஒரு பார்வை பார்த்து, பணியாரங்களில் ஒன்றை அபகரித்துக்கொண்டு, அதனுடன் ஓட்டம் பிடித்தது. கசகசா விதையுடன் உள்ளடக்கத்தைத் தின்றுவிட்டு, பணி யாரத்தின் உள்ளாக வைக்கோலை வைத்துத் திணித்து, அதை மூடியது. பிறகு திரும்பவும் தனது வழியில் ஓட்டம் பிடித்தது.

பசு மந்தையை நீர்காட்டுவதற்காக ஓட்டிவந்து கொண்டிருந்த இரு

இளம் மேய்ப்பர்களைப் பார்க்கின்ற வரையிலும் அது மேன்மேலும் ஓடியது.

''வணக்கம், எனது அருமை இளைஞர்களே!'' என்று நரி அழைத்தது.

''வணக்கம், சகோதரி நரியே!''

''நாம் வியாபாரம் செய்யலாம். ஓர் இளம் காளையை எனக்குக் கொடுங்கள், நான் இந்தக் கசகசா விதையுடன் பணியாரத்தை உங்களுக்குத் தருவேன்.''

''சரி,'' என்றார்கள் அவர்கள்.

''ஆனால் நான் கிராமத்தை விட்டுப் போகும்வரை பணியாரத்தைத் தின்னக் கூடாது.''

ஆகவே ஓர் இளம் காளைக்குப் பதிலாக மேய்ப்பர்களிடம் பணியாரத்தை நரி கொடுத்தது. அந்தக் காளையோடு காட்டிற்குப் புறப்பட்டது. பணியாரத்தைத் தின்னத் தொடங்கிய மேய்ப்பர்கள் அது வைக்கோலால் நிறைந்திருப்பதைக் கண்டார்கள்.

சகோதரி நரி தனது வீட்டுக்கு வந்து ஒரு மரத்தை வெட்டி ஒரு ஸ்லெட்ஜ் * தயாரித்தது. காளங்கன்றை ஸ்லெட்ஜில் பூட்டி நெடுகிலும் ஓட்டிக்கொண்டு சென்றது. இதற்கிடையில் அதை நோக்கி சகோதரன் ஓநாய் ஓடி வந்துக் கொண்டிருந்தது.

''வணக்கம், சகோதரி நரியே!'' என்றது ஓநாய்.

''வணக்கம் உனக்கு, சகோதரன் ஓநாயே!''

''காளங்கன்றையும் ஸ்லெட்ஜையும் நீ எங்கே பெற்றாய்?''

''அவற்றை நான் தயாரித்தேன்!''

''கொஞ்ச தூரத்திற்கு உன்னோடு பயணம் செய்ய என்னை விடு, சகோதரி நரியே!''

''எப்படி நான் அதைச் செய்ய முடியும்? நீ எனது ஸ்லெட்ஜை உடைத்து விடுவாய்.''

''இல்லை, நான் உடைக்க மாட்டேன். எனது கால்களில் ஒன்றை மட்டும் அதன் மீது வைத்துக் கொள்வேன்!''

''அப்படியா, மிகவும் நல்லது.''

ஆக நரியும் ஓநாயும் நெடுகிலும் ஒன்றாக ஓட்டிச் சென்றன, இதற்கிடையில் ஓநாய் சொன்னது:

---

* ஸ்லெட்ஜ் — பனிச் சறுக்கு வண்டி. — மொ-ர்.

''என்னுடைய இரண்டாவது காலை ஸ்லெட்ஜ் மேல் வைக்கலாம் என நினைக்கிறேன், சகோதரி நரியே.''

''ஐயோ, வேண்டாம், ஏனெனில் நீ ஸ்லெட்ஜை உடைத்து விடுவாய், சகோதரன் ஓநாயே!''

''இல்லை, நான் உடைக்க மாட்டேன்.''

''நல்லது, பிறகு, காலை வைத்துக் கொள்.''

ஆக ஓநாய் ஸ்லெட்ஜ் மீது மற்றொரு காலை வைத்தது. அதுவும் நரியும் திரும்பவும் ஒன்றாக ஓட்டிச் சென்றன, அப்போது திடீரென்று ஒரு பெரிய ஓசை வந்தது!

''அதோ, நீ எனது ஸ்லெட்ஜை உடைத்துக் கொண்டிருக்கிறாய், சகோதரன் ஓநாயே!'' என்று நரி கத்தியது.

''இல்லை, நான் உடைக்கவில்லை, சகோதரி நரியே, நான் ஒரு கொட்டையை மட்டுமே உடைத்துக் கொண்டிருந்தேன்!''

''ஓ, நல்லது, அப்படி என்றால்!..''

ஆக அவை இரண்டும் திரும்பவும் நெடுகிலும் ஓட்டிச் சென்றன, இதற்கிடையில் ஓநாய் சொன்னது:

''இப்போது ஸ்லெட்ஜ் மீது எனது மூன்றாவது காலை வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன், சகோதரி நரியே.''

''இது எப்படி முடியும்? நீ எனது ஸ்லெட்ஜை உடைத்து விடுவாய், பிறகு விறகை நான் எப்படி எடுத்துச் செல்வது?''

''நான் உடைக்க மாட்டேன், நீ பயப்பட வேண்டாம்.''

''ஓ, மிகவும் நல்லது, பிறகு!''

ஆக ஓநாய் தனது மூன்றாவது காலை ஸ்லெட்ஜ் மீது வைக்க, திரும்ப ஏதோ சப்தம் வந்தது.

''ஐயோ பாவம்! நீ போய்விடுவது நல்லது, சகோதரன் ஓநாயே, அல்லது நீ என்னுடைய ஸ்லெட்ஜை உடைத்துவிடுவாய்!'' என்றது நரி.

''மாட்டேன், சகோதரி நரியே, நான் ஒரு கொட்டையை மட்டுமே உடைத்துக்கொண்டிருந்தேன்.''

''எனக்கும் ஒன்று தா!''

''அதற்கு மேல் என்னிடம் இல்லை. அதுவே கடைசி.''

அவை திரும்பவும் நெடுகிலும் ஓட்டிச் சென்றன, இதற்கிடையில் ஓநாய் சொன்னது:

''இப்போது உன்னுடைய ஸ்லெட்ஜுக்குள்ளாக ஏறிக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன், சகோதரி நரியே!''

''இது எப்படி முடியும், சகோதரன் ஓநாயே? நீ ஸ்லெட்ஜை உடைத்து விடுவாய்!''

''இல்லை, நான் உடைக்க மாட்டேன். எச்சரிக்கையாக இருப்பேன்.''

''நல்லது, ஏறிக்கொள்!''

ஆக ஓநாய் ஸ்லெட்ஜுக்குள்ளாக ஏறிக் கொண்டது, ஆனால் அதற்குக் கீழே அது உடைந்து துண்டுகளாகிப் போனது. நரி சீற்றம் கொண்டது. ஓநாயை வசைமாரிப் பொழிந்து பிறகு சொன்னது:

''போய் ஒரு மரத்தை வெட்டி, மோசக்காரா, அதைத் துண்டுகளாகக் கூறு போடு, எனது வீட்டை வெதுவெதுப்பாக வைத்திருக்கும் அளவுக்கு, மேலும் ஒரு புதிய ஸ்லெட்ஜும் தயாரிப்பதற்காகக் கட்டைகளை இங்கே இழுத்துவா.''

''அதை நான் எப்படிச் செய்வேன்?'' என்றது ஓநாய். ''எந்த மரத்தை வெட்ட வேண்டும் என்று எனக்குத் தெரியாது.''

''மோசக்காரா,'' என்று நரி கத்தியது. ''எனது ஸ்லெட்ஜை உடைப்பது எப்படி என்று நீ அறிந்திருக்கிறாய், ஆனால் ஒரு மரத்தை வெட்டிச்சாய்ப்பது எப்படி என்று உனக்குத் தெரியாது என்று பாசாங்கு செய்கிறாய்!'' நரி மேன்மேலும் வசைமாரிப் பொழிந்து, பிறகு சொன்னது: ''நீ காட்டுக்கு வந்ததுமே இப்படி சொல்ல வேண்டும்: 'கீழே விழு, மரமே, வளைந்ததும் நேரானதும்! கீழே விழு, மரமே, வளைந்ததும் நேரானதும்!' ''

ஓநாய் புறப்பட்டுச்சென்று, காட்டை அடைந்ததும் சொன்னது:

''கீழே விழு, மரமே, வளைந்ததும் வளைந்ததும்! கீழே விழு, மரமே, வளைந்ததும் வளைந்ததும்!''

மரம் கீழே விழுந்தது, கட்டைகள் அந்தளவு முறுக்கியும் கணுக்கள் கொண்டும் இருந்ததால், அவற்றிலிருந்து ஒரு குச்சி கூடத் தயாரிக்க முடியவில்லை.

ஓநாய் அந்தக் கட்டைகளை நரியிடம் கொண்டுசென்றது. அவற்றை நரி எடுத்து முன்னிலும் கடுமையாக ஓநாயை வசைபாடத் தொடங்கியது:

''மோசக்காரா, தவறான வார்த்தைகளை நீ அவசியம் சொல்லியிருக்க வேண்டும்!''

''ஓ இல்லை, சகோதரி நரியே. நான் சொன்னது இதுதான்: 'கீழே விழு, மரமே, வளைந்ததும் வளைந்ததும்.'''

''நான் எதிர்பார்த்ததுதான்! எவ்வளவு முட்டாள் நீ!.. இங்கே உட்கார், நான் போய் ஒரு மரத்தை நானாகவே வெட்டி வருகிறேன்.''

நரி புறப்பட்டுச்சென்றது.

ஓநாய் அங்கே உட்கார்ந்தது, இதற்கிடையில் பசி கடுமையாக இருப்பதை உணரத் தொடங்கியது. நரியினுடைய குடிசை முழுக்கப் பார்த்தது, ஆனால் எதையும் காணவில்லை. மேன்மேலும் சிந்தித்தது... பிறகு தனக்குத்தானே சொல்லிக்கொண்டது:

''காளங்கன்றைத் தின்றுவிட்டு ஓடிப்போகலாம் என்று நினைக்கிறேன்.''

காளங்கன்றின் பக்கவாட்டில் ஒரு துளை போட்டு, அதற்கு உள்ளிருந்த எல்லாவற்றையும் தின்று, காளையின் உட்புறத்தைச் சிட்டுக் குருவிகளால் நிறைத்து கையளவு வைக்கோலால் துளையை மூடிவிட்டு, அப்பால் ஓட்டம் பிடித்தது.

இதற்குள்ளாக நரி திரும்பவந்தது. அதுவே ஓர் அழகான புதிய ஸ்லெட்ஜைத் தயாரித்து ஏறி உட்கார்ந்து அழைத்தது:

''விரைந்து வாராய், சின்னஞ்சிறு காளையே!''

ஆனால் இடத்தை விட்டு காளங்கன்று அசையவில்லை. நரி ஒரு குச்சியை எடுத்து காளங்கன்றுக்கு அடி கொடுக்கவே, அதன் பக்க வாட்டில் இருந்து கையளவு வைக்கோல் கீழே விழ, இரைச்சலுடன் சிட்டுக்குருவிகள் வெளியே பறந்தன! ''நீ கெடுதல்காரன், கெடுதல் காரன் ஓநாய்!'' என்று நரி கத்தியது. ''நீ பொறு, இதற்காக நான் உனக்குத் திரும்பச் செய்வேன்!''

அது சாலையில் கால்களை நீட்டிப் படுத்துக்கொண்டு அமைதியாகக் கிடந்தது. இதற்கிடையில் சில விவசாய வண்டியோட்டிகள், மீன் நிரப்பப்பட்ட வண்டித்தொடர்களை ஓட்டிக்கொண்டு வந்தார்கள். அசைவின்றி நரி அங்கே படுத்துக்கிடந்து, செத்தது போலப் பாசாங்கு செய்தது. விவசாயிகள் உற்றுப்பார்த்து மிகவும் அதிசயித்துப் போனார்கள். ''இந்த நரியை நாம் எடுத்துச்சென்று விற்கலாம், சகோதரர்களே,'' என்று சொன்னார்கள். நரியைக் கடைசி வண்டிக் தள்ளாகத் தூக்கி எறிந்து ஓட்டிக்கொண்டு போனார்கள். அவர்கள் திரும்பிப் பார்க்கவே இல்லை என்பதை நரி பார்த்து, ஒன்றன் பின்

ன்றாக மீனை சாலையில் வீசத் தொடங்கியது. பிறகு, வண்டியில் ாதியளவு இருக்குமாறு விட்டுவிட்டு, அதுவாகவே கீழே இறங்கியது. அந்த விவசாயிகள் ஓட்டிச்செல்லவே, நரி மீனை ஒன்று சேர்த்து, ட்கார்ந்து தின்னத் தொடங்கியது.

இதற்குள்ளாக ஓநாய் ஓடிவந்து சேர்ந்தது.

''வணக்கம், சகோதரி நரியே!'' என்று அழைத்தது.

''வணக்கம் உனக்கு, சகோதரன் ஓநாயே!''

''என்ன செய்து கொண்டிருக்கிறாய், சகோதரி நரியே?''

''மீன் தின்று கொண்டு இருக்கிறேன்.''

''எனக்கும் கொஞ்சம் தா!''

''போய் நீயே அவற்றைப் பிடி.''

''என்னால் முடியாது, அதை எப்படிச் செய்வதென்று எனக்குத் தெரியாது!''

''சரி, அது உன்னுடைய விவகாரம், அந்தளவு ஓர் எலும்பைக் கூட நீ என்னிடமிருந்து பெறமாட்டாய்!''

''அதை எப்படிப் பிடிப்பது என்பதையாவது குறைந்தது எனக்கு நீ சொல்ல மாட்டாயா?''

நரி தனக்குத்தானே சொல்லிக் கொண்டது: ''நீ பொறுப்பாய், சகோதரா! எனது காளங்கன்றை நீ தின்றுவிட்டாய், இப்போது அதற்காக நான் உனக்குத் திருப்பித் தருவேன்!''

பிறகு அது ஓநாய் பக்கம் திரும்பிச் சொன்னது: ''ஆற்றுக்குப் போய், உனது வாலை பனிக்கட்டித் துளைக்குள்ளாக விட்டு, முன்னும் பின்னுமாக லேசாக அசைத்துச் சொல்: 'வந்து மாட்டிக்கொள், மீனே, பெரியதும் சிறியதும். வந்து மாட்டிக்கொள், மீனே, பெரியதும் சிறியதும்.' அந்த வழியில் நீ விரும்பிய எல்லா மீனையும் பிடிப்பாய்.''

''எனக்குச் சொன்னதற்காக உனக்கு நன்றி,'' என்றது ஓநாய்.

ஆற்றுக்கு ஓடிப்போய், ஒரு பனிக்கட்டித் துளைக்குள்ளாகத் தனது வாலை விட்டு, லேசாக முன்னும் பின்னும் அசைத்துச் சொன்னது: ''வந்து மாட்டிக்கொள், மீனே, பெரியதும் சிறியதும்!'' கரையில் கோரைப் புற்கள் வழியாக நரி ஓநாயைப் பார்த்துச் சொன்னது: ''உறைந்து போ, உறைந்துபோ, ஓநாயினுடைய வாலே!'' இப்போது, வெளியே கடுமையான உறைபனி இருந்தது!

ஓநாய் தொடர்ந்து முன்னும் பின்னும் தனது வாலை அசைத்துச்

சொன்னது: ''வந்து மாட்டிக்கொள், மீனே, பெரியதும் சிறியதும்!'' மேலும் நரி தொடர்ந்து திரும்பச் சொன்னது: ''உறைந்து போ, உறைந்து போ, ஓநாயினுடைய வாலே!'' கடைசியில் அதனுடைய வால் பனியில் உறைந்து போகும் வரை ஓநாய் அங்கே மீனைப் பிடித்துக் கொண்டு தங்கியது. அவ்வாறு நிகழ்ந்த போது நரி கிராமத்திற்கு ஓடிச் சென்று கத்தியது:

''வாருங்கள், நல்ல மனிதர்களே, ஓநாயைக் கொல்லுங்கள்!''

கிராமத்தார்கள் தீக்கோல்களுடனும், கவர்முள்களுடனும், கோடரி களுடனும் ஓடி வந்தார்கள். அப்பாவி ஓநாய் மீது விழுந்து அதனைக் கொன்றார்கள். ஆனால் நரியைப் பொருத்த வரை, தனது குடிசையில் கதகதப்பாக இன்னமும் வாழ்ந்து வருகிறது.

கீல் பூசப்பட்ட சிறிய வைக்கோல் காளை

முன்னொரு காலத்தில் ஒரு கிழவனும் ஒரு கிழவியும் வசித்தார்கள். கிழவன் கீல் தயாரித்தான், கிழவி வீட்டிலேயே வேலை செய்துக் கொண்டிருந்தாள்.

ஆக, கிழவி அலட்டிக்கொள்ளவும் கவலைப்படவும் தொடங்கி கிழவனிடம் சொன்னாள்:

''எனக்கு ஒரு சிறிய வைக்கோல் காளை செய்து தா, கிழவா!''

''உனக்கு என்ன நேர்ந்து விட்டது, கிழவியே, வைக்கோல் காளை உனக்கெதற்கு?''

''நான் அதை மேய்ப்பேன்.''

செய்வதற்கு ஏதுமில்லை, ஆகவே கிழவன் ஒரு சிறிய வைக்கோல் காளை செய்து, அதன் விலாக்களைக் கீலால் பூசினான்.

காலையில் தன்னுடன் நூற்புக் கதிரையும் எடுத்துக்கொண்டு, அந்தச் சிறிய வைக்கோல் காளையை மேய்ச்சலுக்காகக் கிழவி ஓட்டிச் சென்றாள்.

ஒரு குன்றோரத்தில் அமர்ந்து நூற்கத் தொடங்கிய அவள் சொன்னாள்:

''புல்மேய், புல்மேய், சிறிய காளையே,
கீல் பூசப்பெற்ற உந்தன் உடம்புடனே!''

அவள் நூற்றுக்கொண்டே இருந்து கடைசியில் தூங்கிப் போனாள்.

திடீரென்று ஒரு பெரும் இருண்ட காட்டை விட்டு வெளியே ஒரு கரடி ஓடிவந்தது. அது நேராகக் காளையிடம் சென்று சொன்னது:

''நீ யார்?''

''கீல் பூசப்பட்ட சிறிய வைக்கோல் காளை நான்!''

''எனக்குக் கொஞ்சம் கீல் கொடு, ஏனெனில் எனது விலாவை நாய்கள் கிழித்துவிட்டன! அதன் மீது நான் கொஞ்சம் கீல் வைத்துக் கொண்டால் அது சீக்கிரம் குணமாகும்.''

ஆனால் வைக்கோல் காளை பதில் பேசாது அங்கேயே நின்றது.

ஆகவே கரடி கோபமடைந்து வைக்கோல் காளையினுடைய கீல் விலாப் பக்கம் பிடித்து, அதனுடன் நெருக்கமாக ஒட்டிக்கொண்டது.

கிழவி விழித்தெழுந்து உரக்கக் கத்தினாள்:

''கிழவா, கிழவா, வைக்கோல் காளை கரடி ஒன்றைப் பிடித்து விட்டது. சீக்கிரம் வா!''

கிழவன் கரடியை இழுத்து நிலவறைக்குள்ளாகத் தள்ளினான்.

மறுநாள், தன்னுடன் நூற்புக் கதிரையும் எடுத்துக்கொண்டு, வைக்கோல் காளையை மேய்ச்சலுக்காகக் கிழவி திரும்பவும் ஓட்டிச் சென்றாள். ஒரு குன்றோரத்தில் அமர்ந்து நூற்கத் தொடங்கிய அவள் சொன்னாள்:

''புல்மேய், புல்மேய், சிறிய காளையே,
கீல் பூசப்பெற்ற உந்தன் உடம்புடனே!''

அவள் நூற்றுக்கொண்டே இருந்து கடைசியில் தூங்கிப் போனாள்.

திடீரென்று ஒரு பெரும் இருண்ட காட்டை விட்டு வெளியே ஓர் ஓநாய் ஓடிவந்தது. அது காளையைப் பார்த்துச் சொன்னது:

''நீ யார்?''

''கீல் பூசப்பட்ட சிறிய வைக்கோல் காளை நான்!''

''சரி, பிறகு, என்னைக் கொஞ்சம் கீல் எடுத்துக்கொள்ள விடு, ஏனெனில் எனது விலாவை நாய்கள் கிழித்துவிட்டன!''

''எடுத்துக் கொள்!''

ஓநாய் வைக்கோல் காளையினுடைய விலாப் பக்கம் பிடித்து அதனுடன் நெருக்கமாக ஒட்டிக் கொண்டது.

கிழவி விழித்தெழுந்து கிழவனை அழைத்தாள். கிழவன் வந்து ஓநாயைப் பற்றிப் பிடித்து அதை நிலவறைக்குள்ளாக வீசினான்.

மூன்றாம் நாளும் கிழவி சிறிய காளையை மேய்ச்சலுக்காக வெளியே எடுத்துச்சென்றாள்.

நூற்றுக்கொண்டிருந்தவாறே தூங்கிப் போனாள்.

இதற்கிடையே ஒரு நரி ஓடிவந்து வைக்கோல் காளையைப் பார்த்து விட்டு கேட்டது:

''நீ யார்?''

''கீல் பூசப்பட்ட சிறிய வைக்கோல் காளை நான்.''

''சரி, எனக்கு அன்பு காட்டு, கொஞ்சம் கீல் எடுத்துக்கொள்ள விடு. நாய்கள் அநேகமாக என்னிடமிருந்து தோலை உரித்துவிட்டன!''

''எடுத்துக்கொள்!''

கொஞ்சம் கீல் எடுத்துக்கொள்ள நரி முயன்றது, அதுவும் கூட காளையினுடைய விலாவோடு நெருக்கமாக ஒட்டிக்கொண்டது.

கிழவி விழித்தெழுந்து கிழவனை அழைத்தாள். கிழவன் நரியையும் நிலவறைக்குள் வீசினான்.

ஆகவே இப்போது அங்கே மூன்று இருந்தன.

நிலவறைக் கதவருகே கிழவன் அமர்ந்து தனது கத்தியைத் தீட்டத் தொடங்கினான்.

''எதற்காக உனது கத்தியைத் தீட்டுகிறாய், கிழவா?'' என்று கரடி கேட்டது.

''ஏனென்றால் நான் உனது தோலை உரித்து, எனக்கும் என்னுடைய கிழவிக்கும் சட்டைகள் செய்யப் போகிறேன்!''

''அதைச் செய்ய வேண்டாம், கிழவனே! என்னைச் சுதந்திரமாகப் போகவிடு, உனக்கு ஏராளமான தேன் கொண்டுவருவேன்.''

''அப்ப சரி, நீ செய்வதைப் பார்க்கலாம்!'' அத்துடன் கிழவன் கரடியைச் சுதந்திரமாகப் போகவிட்டான்.

பிறகு அவன் நிலவறைக் கதவருகே மீண்டும் அமர்ந்து தனது கத்தியைத் தீட்டத் தொடங்கினான்.

''எதற்காக உனது கத்தியைத் தீட்டுகிறாய், கிழவா?'' என்று ஓநாய் கேட்டது.

''குளிர்காலத்திற்காக எனக்கு வெதுவெதுப்பான தொப்பி ஒன்று செய்ய உனது தோலை நான் உரிக்கப் போகிறேன்.''

‘‘என்னைச் சுதந்திரமாகப் போகவிடு! முழு ஆட்டு மந்தையை உனக்கு நான் ஓட்டிக்கொண்டு வருவேன்.’’

‘‘சரி, நீ செய்வதைப் பார்க்கலாம்!’’

ஓநாயைச் சுதந்திரமாகப் போகவிட்டுவிட்டு, தனது கத்தியைத் திரும்பவும் தீட்டத்தொடங்கினான்.

‘‘கிழவா, என்னிடத்தில் அன்பு காட்டி, உனது கத்தியைத் தீட்டிக் கொண்டிருப்பது ஏன் என்று என்னிடம் சொல்,’’ என்று நரி கேட்டது.

‘‘நான் உனது தோலை உரிக்கப் போகிறேன்,’’ என்று கிழவன் பதிலளித்தான். ‘‘ஏனெனில் நீ அடர்த்தியாக மென்மயிர் பெற்றிருக் கிறாய். அது என்னுடைய கிழவியினுடைய சட்டைக்கு அருமையான கழுத்துப்பட்டை செய்ய உதவும்.’’

‘‘ஐயோ, என்னைக் கொல்ல வேண்டாம், கிழவனே! என்னைச் சுதந்திரமாகப் போகவிடு, உனக்கு நிறைய கோழிகளும் வாத்துகளும் நான் ஓட்டிக்கொண்டு வருவேன்.’’

‘‘சரி, நீ செய்வதைப் பார்க்கலாம்!’’ அத்துடன் அவன் நரியைச் சுதந்திரமாகப் போகவிட்டான்.

இரவு வந்து சென்றது, விடிவதற்குச் சற்று முன்னர் கதவில் டொக்-டொக் என்று சப்தம் வந்தது.

கிழவி விழித்தெழுந்தாள்.

‘‘யாரோ கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார்கள், கிழவா!’’ என்று கத்தினாள். ‘‘போய் அது யார் என்று பார்.’’

கிழவன் கதவைத் திறக்க அங்கே ஒரு முழுத் தேன் கூட்டுடன் கரடி நின்றது.

கிழவன் தேனைப் பெற்று அதை அப்பால் வைத்தான். ஆனால் கதவில் திரும்பவும் டொக்-டொக் என்று சப்தம் வந்தது!

கிழவன் கதவைத் திறக்க அங்கே ஒரு முழு ஆட்டு மந்தையுடன் ஓநாய் நின்றது. அதையடுத்து கோழிகளையும், வாத்துகளையும் எடுத்துக்கொண்டு நரி வந்தது.

கிழவனும் கிழவியும் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். மேற்கொண்டு வேண்டும் என்று யாரும் கேட்க முடியாத அளவுக்கு அவர்கள் அந்தளவு பணக்காரர்களாயினர்.

பூனையும் சேவலும்

முன்னொரு காலத்தில் ஒரு பூனையும் ஒரு சேவலும் வாழ்ந்தன. அவை ஒன்றை ஒன்று மிகவும் நேசித்தன. பூனை தனது பிடிலை வாசிக்க, சேவல் பாடும், அவை இரண்டுக்குமாக உணவு பெற்றுவர பூனை வெளியே போனபோது சேவல் வீட்டைப் பார்த்துக் கொள்ளும்.

ஒவ்வொரு முறையும் வெளியே போகப் பூனை தயாராக இருக்கும் போது சேவலிடம் சொல்லும்:

''வீட்டிற்குள்ளாக யாரையும் நீ விடவோ, நீயாக வெளியே போகவோ கூடாது, சேவலே, யார் உன்னை அழைத்தாலும் பரவாயில்லை.''

''நான் விட மாட்டேன், நீ கவலைப்பட வேண்டாம்,'' என்று சேவல் பதிலளிக்கும், மேலும் வீட்டிற்குள்ளாகப் போய் பூனை வீட்டிற்கு வரும் வரை உள்ளேயே தங்கி இருக்கும்.

ஆகவே, ஒரு முறை நரி ஒன்று சேவலைப் பார்த்து, அதை வெளியே வரச்செய்து பிடிப்பதென்று தீர்மானித்தது. பூனை வீட்டில் இல்லாத போது அதன் வீட்டின் சன்னல் அருகே சென்று அழைத்தது:

''வெளியே வா, சேவலே, கோதுமை தானியங்களையும், சுத்தமானதும் இனிப்பானதுமான கொஞ்சம் தண்ணீரையும் உனக்குத் தருவேன்.''

ஆனால் சேவல் பதிலாகச் சொன்னது:

''சேவல் நானாக வெளிவர மாட்டேன்,
பூனைக்கு நானும் வாக்களித் ததனாலே!''

காரியமாற்றுவதற்கு இதுவல்ல வழி என்பதைக் கண்ட நரி ஓர் இரவு வீட்டின் அருகே சென்று, சேவல் பார்ப்பதற்காகச் சன்னலுக்குக் கீழே கொஞ்சம் கோதுமை மணிகளை வீசிவிட்டு ஒரு புதருக்குப் பின்னே ஒளிந்துகொண்டது.

இதற்குள்ளாக வழக்கம் போல பூனை வேட்டைக்கு வெளியே சென்றது. சேவல் சன்னலைத் திறந்து வெளியே பார்த்தது. அங்கே யாருமே இல்லை என்பதையும், ஆனால் தரையின் மீது நறுஞ்சுவையுள்ள கோதுமை மணிகள் கொஞ்சம் கிடந்தன என்பதையும் கண்டது. அவற்றைத் தின்ன ஆவல் கொண்ட சேவல் தனக்குத்தானே சொல்லிக் கொண்டது:

''நான் வெளியே போய் இந்த மணிகளைச் சிறிது நேரம் கொத்தித் தின்னலாம் என்று நினைக்கிறேன். சுற்றிலும் எவரும் இல்லை, ஆகவே யாரும் என்னைப் பார்க்கவோ என்னைப் பற்றி பூனையிடம் சொல்லவோ முடியாது.''

ஆனால் அது வாயிற்படியைத் தாண்டி கால் வைத்ததுமே, நரி அதன் கழுத்தைப் பற்றிப் பிடித்து அதனுடன் தனது வீட்டிற்கு ஓடியது! சேவலோ பூனையை அழைத்தது:

''காத்திட வேண்டுவன், பூனையே சோதரா!
கபடமாய் நரியும் கவர்ந்து செல்லுது,
எங்கோ அதனின் அடர்ந்த வாலுக்கு,
இங்கோ தடமும் இம்மியும் காணோம்.
நண்பா, நீயும் நாடாது போயின்
காண்பேன் நானும் கடைசி முடிவினை.''

அந்நேரம், நீண்ட தொலைவிற்கு அப்பால் இருந்த பூனையால் சேவலின் குரலைக் கேட்க முடியவில்லை. அது வீடு திரும்பியபோது, நரியைப் பின்தொடர்ந்து செல்வது அதற்கு மிகவும் சுணங்கி விட்டது. நரியை எட்டிப் பிடிக்க பூனை முயன்றது, ஆனால் முடியவில்லை, ஆகவே

வீட்டுக்குத் திரும்பி அழுது கதறியது. ஆனால் சற்று நேரம் சிந்தித்த பிறகு, தனது பிடிலையும், பூவேலைப்பாடு கொண்ட கோணி ஒன்றையும் எடுத்துக்கொண்டு நரியினுடைய வீட்டைத் தேடிப் புறப்பட்டது.

இந்த நரிக்கு நான்கு மகள்களும் ஒரு மகனும் இருந்தன. அன்றைய நாளில் வேட்டைக்கு வெளியே செல்வதற்கு முன்பு, சேவல் மீது ஒரு கண் வைத்திருக்குமாறும், இது திரும்பி வந்த உடனேயே சேவலைக் கொன்று தங்களுக்கு விருந்து தயாரிப்பதற்காக ஒரு பானை வெந்நீர் கொதிக்க வைக்குமாறும் அவற்றிடம் சொன்னது.

''நான் வெளியே போன நேரத்தில் யாரையும் வீட்டிற்குள் விடக்கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்,'' என்று சொன்னது.

நரி அப்பால் செல்லவும், பூனை வீடு வரை வந்து, சன்னலுக்குக் கீழே நின்று இசை மீட்டி பாடலைப் பாடத் தொடங்கியது:

''நரியின் வீடோ பெரியது, உயர்ந்தது,
நான்கு மகளிரும் அத்தனை அழகினர்,
மகனோ ஒருவன் பெயரோ பிலிப்கோ,
அவனோ அழகன் அப்படி வடிவினன்.
வாரீர் வெளியே, நரியின் பிள்ளையீர்,
கேளீர் இசையை, பாடுவேன் உமக்கே!''

ஆகவே, நரியினுடைய மூத்த மகள் தான் வெளியே போய், யார் வாசித்துக் கொண்டிருப்பது என்பதைப் பார்க்க வேண்டும் என உணர்ந்து மற்றவைகளிடம் சொன்னது:

''இங்கே வீட்டில் தங்கியிருங்கள், நான் போய் இத்தனை அருமையாய் வாசிப்பது யார் என்று பார்க்கிறேன்.''

அது வீட்டை விட்டு வெளியே வந்தது, பூனை அதை நெற்றியில் அடித்துக் கோணிக்குள் துரிதமாகப் போட்டுக் கொண்டு, மீண்டும் வாசிக்கவும் பாடவும் தொடங்கியது:

''நரியின் வீடோ பெரியது, உயர்ந்தது,
நான்கு மகளிரும் அத்தனை அழகினர்,
மகனோ ஒருவன் பெயரோ பிலிப்கோ,
அவனோ அழகன் அப்படி வடிவினன்.
வாரீர் வெளியே, நரியின் பிள்ளையீர்,
கேளீர் இசையை, பாடுவேன் உமக்கே!''

நரியினுடைய இரண்டாவது மகள் யார் வாசித்துக் கொண்டிருப்பது என்று பார்ப்பதற்காக வெளியே சென்றது, பூனை அதை நெற்றியில் அடித்துக் கோணிக்குள் துரிதமாகப் போட்டுக்கொண்டது. இதே போன்று நரியினுடைய இரு இளைய மகள்களுக்கும் நடந்தது.

அவைகளுடைய சகோதரன் பிலிப்கோ அங்கே வீட்டில் அமர்ந்து தனது சகோதரிகளுக்காகக் காத்திருந்தது, ஆனால் அவை திரும்பி வரவில்லை.

''நான் வெளியே சென்று அவைகளை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வரலாம்,'' என்று அது தனக்குத்தானே சொல்லிக் கொண்டது, ''இல்லாவிட்டால் நம்முடைய அம்மா திரும்பிவரும் போது எனக்குச் சரியான கசையடி கொடுக்கும்.''

அது வெளியே காலடி வைத்தது, பூனை அதையும் நெற்றியில் அடித்துக் கோணிக்குள் துரிதமாகப் போட்டுக்கொண்டது! பிறகு அது கோணியை ஒரு காய்ந்த வில்லோ மரத்தில் தொங்கவிட்டு விட்டு நரியினுடைய வீட்டிற்குள்ளாக ஓடியது. சேவலைக் கண்டு அதனை அவிழ்த்து விட்டது, அவை இரண்டும் நரியினுடைய உணவு எல்லாவற்றையும் தின்றுவிட்டு, கொதிநீர் இருந்த பானையைக் கவிழ்த்து விட்டு, எல்லாப் பாத்திரங்களையும் உடைத்துவிட்டு வீட்டுக்கு ஓடின. அதன் பிறகு பூனை சொன்ன மாதிரியே சேவல் செய்தது, ஒருபோதும் அதற்குக் கீழ்ப்படியாமலில்லை.

பூனையார்

முன்னொரு காலத்தில் ஒரு மனிதன் இருந்தான். அவனிடம் ஒரு பூனை இருந்தது, ஆனால் அந்தளவு கிழமாகிப் போனதால் அதனால் ஓர் எலியைக்கூடப் பிடிக்க முடியவில்லை.

''என்னுடைய இந்தக் கிழட்டுப் பூனை எனக்கெதற்கு?'' என்று அவன் நினைத்துக் கொண்டான். ''அதற்கு எப்படி உணவு கொடுப்பேன்? காட்டிற்கு அதை எடுத்துப்போய், அது தன்னைத்தானே பார்த்துக் கொள்ளுமாறு விட்டுவிட்டு வரலாம்!''

அவ்வாறே அவன் பூனையை காட்டிற்கு எடுத்துச்சென்று அங்கே அதை விட்டுவிட்டு வந்தான்.

விரைவிலேயே ஒரு நரி ஓடிவந்து பூனையைப் பார்த்தது.

''நீ யார்?'' என அப்பெண் நரி கேட்டது.

பூனை பதில் சொல்லியது:

''நான் திரு பூனையார்.''

''நாம் ஏன் திருமணம் செய்துகொள்ளக் கூடாது, பூனையாரே?'' என்றது நரி. ''நான் உனக்கு நல்ல மனைவியாக இருப்பேன்.''

நரியைத் திருமணம் செய்ய பூனை ஒப்புக்கொள்ளவே, நரி பூனையைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றது. அதை மகிழ்விக்க நரி மிகவும் பாடுபட்டது. அது ஒரு கோழிக்குஞ்சைப் பிடித்தால் அது

தானாகவே தின்னாது பூனையிடம் கொண்டுவரும், தான் பசியாக இருக்க நேர்ந்த போதும்.

ஒரு நாள் நரியைச் சந்தித்த முயல் ஒன்று சொன்னது:

''சகோதரி நரியே, நான் வந்து உன்னைப் பார்க்கப் போகிறேன்.''

''நீ அதைச் செய்யவே கூடாது,'' என்றது நரி. ''என் வீட்டிலே இப்போது திரு பூனையார் வசித்துக்கொண்டிருக்கிறார்: அவர் உன்னைக் கீறிக்கொல்லக் கூடும்.''

அப்பால் ஓடிப்போன முயல், நரி தன்னிடம் சொன்னதை ஓநாய், கரடி, காட்டுப் பன்றி இவற்றிடம் கூறியது. ஆகவே அவை எல்லாமே ஒன்று சேர்ந்து பூனையாரை எப்படிச் சந்திப்பது என்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கின.

''நாம் அதை விருந்துக்கு அழைக்கலாம்!'' என்றன.

உணவு வகைகளைப் பற்றிப் பேசிய பின் ஓநாய் சொன்னது:

''நான் போய் போர்ஷ்சுக்காக இறைச்சி கொண்டுவருகிறேன்.''

''நான் போய் பீட்கிழங்கும் உருளைக்கிழங்கும் கொண்டுவருகிறேன்,'' என்றது பன்றி.

''பலகாரத்திற்காக நான் தேன் கொண்டுவருகிறேன்,'' என்றது கரடி.

முயலைப் பொருத்த வரை, முட்டைக்கோசு கொண்டுவர ஓடிச் சென்றது.

இந்த எல்லா நல்ல பொருள்களையும் அவை கொண்டுவந்து அவற்றைச் சமைக்க ஆரம்பித்தன. ஆனால் ஒவ்வொன்றும் தயாராகி முடிந்த போது, அவற்றில் யார் போய் பூனையாரை அழைப்பது என்பதில் ஒத்துப்போக முடியவில்லை.

''அதற்காக நான் ஓடுமாறு கட்டாயப் படுத்தப்பட்டால் நான் என்ன செய்வேன்?'' என்றது கரடி. ''நான் கொழுத்தவன், திக்குமுக்காடிப் போவேன்.''

''ஒருவகையில் நானும் பாங்கற்றவன்,'' என்றது பன்றி.

''நான் வயதாகிப் போனவன், நன்றாகப் பார்க்கக் கூட முடியவில்லை,'' என்றது ஓநாய்.

ஆக எஞ்சியது முயல் மட்டுந்தான்.

நரியினுடைய வீட்டிற்கு அது ஓட்டமெடுத்தது, சன்னலை மூன்று முறை தட்டியது, நரி தாவிக்குதித்துச் செல்ல, தனக்கு முன்னால் பின்

னங்கால்களில் நின்றுகொண்டிருந்த முயலைப் பார்த்தது.

''உனக்கு என்ன வேண்டும்?'' என்றது நரி.

''தயவு செய்து, நரியே, ஓநாய், கரடி, பன்றி அத்துடன் நானும் இன்று எங்களுடன் உணவுண்ண நீங்களும் திரு பூனையாரும் வர வேண்டும் எனப் பெரிதும் விரும்புகிறோம்,'' என்றது முயல்.

''பாராட்டத்தக்கது!'' என்றது நரி. ''நான் நிச்சயமாக வருவேன், திரு பூனையாரும் என்னுடன் வருவார், ஆனால் நீங்கள் நால்வரும் அவசியம் ஒளிந்துகொள்ள வேண்டும், இல்லாவிடில் அவர் உங்களைக் கீறிக்கொல்லக் கூடும்!''

திரும்ப ஓடிய முயல், இது பற்றித் தனது நண்பர்களிடம் சொன்னது. ஓ, எந்தளவு அவை நடுங்கிப் போய்விட்டன! கரடி ஒரு மரத்தில் ஏறியது, ஓநாய் ஒரு புதருக்குப் பின்னே பதுங்கியது, முயல் அதற்குக் கீழே ஒளிந்தது, பன்றியும் சுள்ளிக்குக் கீழாக மறைந்து கொள்ள முயன்றது.

விரைவிலேயே நரி தனது அருகே பூனையாருடன் வந்து சேர்ந்தது. அதை மேசைக்கு அழைத்துச் சென்றது, உணவைப் பார்த்த போது பூனையார் மகிழ்வுற்றுச் சொன்னது: ''மியாவ், மியாவ், மியாவ்!''

நான்கு நண்பர்களும் தங்களுக்குள் சொல்லிக்கொண்டன:

''இந்தளவுக்கு மூர்க்கமான விலங்கு ஏதேனும் உண்டா! அவருக்குப் போதுமானது எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. இதே அளவில் போனால் நம்மையும் கூட அவர் சாப்பிடக் கூடும்!''

பூனையார் மேசையின் மீது ஏறி உணவை விழுங்கத் தொடங்கி யது. அது தனது வயிறு நிரம்பச் சாப்பிட்டவுடன் வாலைச் சுருட்டிக் கொண்டு படுத்துத் தூங்கியது.

அப்போது, அருகிருந்த சுள்ளியின் கீழே, தனது வாலை மட்டும் வெளியே நீட்டி பன்றி ஒளிந்து கொண்டது. கொசு ஒன்று பறந்து வந்து அதைக் கொட்டி விட்டது. பன்றியால் தன்னை அடக்கிக் கொள்ள முடியாமல், தனது வாலை அசைத்தது. அதைச் சுண்டெலி என நினைத்த பூனையார் அதனிடம் விரைந்து சென்று வாலைக் கடித் தது. பன்றியோ தாவிக்குதித்து தன்னால் எவ்வளவு முடியுமோ அவ் வளவு விரைவாக ஓடியது.

பூனையாரும் பயந்து போய் கரடி உட்கார்ந்து கொண்டிருந்த மரத்தின் மீது தாவியது. இதைப் பார்த்ததும், கரடி இன்னும் மேலே

ஏறியது, ஆனால் அது இருந்த கிளைகள் முறிய, நடுங்கியவாறு கீழே இருந்த ஓநாயின் மீது விழுந்தது! அவை இரண்டுமே தாவிக் குதித்து அப்பால் விரைந்தன. அவற்றைத் தொடர்ந்து முயல் அத்தனை விரைவாக ஓடியது, அதனுடைய கால்கள் அதை எங்கே எடுத்துச் சென்றன என்பதை அதனால் பிறகு சொல்ல முடியவில்லை!

சற்று நேரங் கழித்து அவை நான்கும் திரும்பவும் ஒன்றுசேர்ந்து அது பற்றிப் பேசிக்கொண்டன.

''திரு பூனையார் அவ்வளவு சிறியது, ஆனால் நம் நால்வரையும் அது அநேகமாகத் தின்றுவிட்டது!'' என்றன.

வெள்ளாடும் செம்மறியாடும்

முன்னொரு காலத்தில் ஒரு கிழவனும் அவனுடைய மனைவியும் வாழ்ந்தனர், அவர்கள் ஒரு வெள்ளாடும் செம்மறியாடும் வைத்திருந் தனர். வெள்ளாடும் செம்மறியாடும் நெருங்கிய நண்பர்கள், அவை ஒன்றின் பார்வையினின்று மற்றொன்று நீண்ட நேரம் விலகி இருக்க வில்லை. வெள்ளாடு காய்கறித் தோட்டத்திற்குச் சென்று முட்டைக் கோசு தின்னும், செம்மறியாடும் அதைப் பின்பற்றிச் செல்லும்; வெள்ளாடு பழத்தோட்டத்திற்குச் செல்லும், செம்மறியாடும் அதைப் பின்தொடர்ந்து செல்லும்!

''நாம் வெள்ளாட்டையும் செம்மறியாட்டையும் வெளியே துரத் தலாம், மனைவியே,'' என்று கிழவன் சொன்னான். ''நாம் அவ்வாறு செய்யாவிட்டால் நம் வீட்டில் உள்ளவைகளை அவை தின்னும்.'' இரு நண்பர்கள் பக்கமாகத் திரும்பி அவன் கத்தினான்: ''இப்போதே நீங்கள் வெளியேறலாம், வெள்ளாடே, செம்மறியாடே, மீண்டும் உங்களை நான் இங்கே பார்க்கும்படி செய்யாதீர்கள்!''

வெள்ளாடும் செம்மறியாடும் அவைகளாகவே ஒரு கோணிப்பை யைத் தயாரித்துக்கொண்டு, அதில் அவற்றினுடைய உடைமைகளைப் போட்டுக்கொண்டுத் தமது வழியில் புறப்பட்டன.

அவை மேன்மேலும் நடந்து ஒரு வயலை அடைந்தன, அங்கே,

அதன் மத்தியில் ஓர் ஓநாயினுடைய தலை கிடந்தது. இப்போது, செம்மறியாடு வலுவானதாக இருந்தது, ஆனால் மிகவும் துணிச்சலானதாக இல்லை, வெள்ளாடோ துணிச்சலானதாக இருந்தது ஆனால் மிகவும் வலுவானதாக இல்லை.

''ஓநாயினுடைய தலையை எடுத்துக்கொள், செம்மறியே, ஏனெனில் நீ வலுவாக இருக்கிறாய்,'' என்றது வெள்ளாடு.

''முடியாது, வெள்ளாடே, நீ எடுத்துக்கொள், ஏனெனில் நீ துணிச்சலாக இருக்கிறாய்,'' என்றது செம்மறியாடு.

ஆகவே அவை இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து ஓநாயினுடைய தலையைப் பிடித்து, கோணிப் பைக்குள்ளாகத் திணித்துக்கொண்டு, மேற்கொண்டு தங்கள் வழியில் சென்றன.

அவை மேன்மேலும் நடந்தன, இதற்கிடையில் முன்னதாக நெகிடி எரிந்து கொண்டிருப்பதைப் பார்த்தன.

''அந்தத் தீ எரியும் இடத்திற்கு நாம் போகலாம்,'' என்றது வெள்ளாடு. ''அதற்கு அருகே நாம் இரவைக் கழிக்கலாம், மேலும் ஓநாய்களிடமிருந்தும் பாதுகாப்பாக இருக்கலாம்.''

அவை நெகிடி வரை சென்றன, அந்தோ! —அதைச் சுற்றிலும் மூன்று ஓநாய்கள் அமர்ந்து கூழ் சமைத்துக்கொண்டிருந்தன.

''வணக்கம், நண்பர்களே!'' என்றன வெள்ளாடும் செம்மறியாடும்.

''வணக்கம்!'' என்று ஓநாய்கள் பதிலளித்தன. ''எங்களது கூழ் இன்னும் தயாராகவில்லை. அது சமையலாகும் போது நாங்கள் உங்களிடம் செயல்படத் தொடங்குவோம்.''

இப்போது, இது வெள்ளாட்டைக் கூட நடுங்கச் செய்தது, செம்மறியாட்டைப் பொருத்த வரை, ஓநாய்கள் மீது முதன் முதலாகப் பார்வையைச் செலுத்தியதிலிருந்து அதனது கால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன.

''வா, சகோதரா செம்மறியே, கோணியிலிருந்து ஓநாயினுடைய தலையை வெளியே எடு!'' ஒரு செயல் திட்டத்தை முடிவு செய்தபடி வெள்ளாடு கூறியது.

அதற்குச் சொல்லப்பட்டது போல செம்மறியாடு செய்தது.

''இது இல்லை, பெரியது!'' என்றது வெள்ளாடு.

செம்மறியாடு ஓநாயினுடைய தலையைக் கோணிக்குள்ளாகத் திரும்பப்போட்டு விட்டு, பிறகு அதைத் திரும்பவும் எடுத்தது.

''இல்லை, மிகப் பெரிய ஒன்றை வெளியே எடு!'' என்றது வெள் ளாடு.

அங்கே அமர்ந்திருந்த ஓநாய்கள் இப்போது வெள்ளாடும் செம் மறியாடும் போல ஒவ்வொரு துளியும் நடுங்கி, தப்பிப்போக மட்டுமே விரும்பின.

''அவை இரண்டும் கேலி செய்யப்படுவதற்கில்லை,'' என்றன அவை. ''அவற்றைப் பாருங்கள், கோணியிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாக ஓநாய்களுடைய தலைகளை எடுக்கின்றன!''

அது பற்றி அவை சிந்தித்தன, ஒன்று சொன்னது:

''இங்கே நாம் கூடியிருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது, மேலும் கூழ் மிக அருமையாகச் சமையலாகிக் கொண்டிருக்கிறது, அதற்குத் தேவையானதெல்லாம் அதிகமான தண்ணீர். நான் போய் கொஞ்சம் தண்ணீர் எடுத்து வரலாம்.'' மேலும் நினைத்தது: ''உங்கள் எல்லாருக் கும் கொள்ளை வரட்டும்!'' அது நடையைக் கட்டியது.

இரண்டாவது ஓநாய் அங்கே அமர்ந்திருந்தது, முதலாவது ஓநாய் செய்ததைத் தவிர வேறு எதையும் செய்ய விரும்பவில்லை.

''அந்தப் போக்கிரியைப் பாருங்கள்! பூமி அதை விழுங்கிவிட்டதைப் போல! கூழுக்கு அது ஒருபோதும் தண்ணீர் கொண்டு வராது,'' என்றது. ''ஒரு மிலாறு எடுத்துக்கொண்டு அதைத் திரும்ப ஓட்டிவரு வேன்!''

இவ்வாறு சொல்லிவிட்டு அது நடையைக் கட்டியது.

மூன்றாவது ஓநாய் அங்கே அமர்ந்து, அவை திரும்பி வருவதற்காகக் காத்திருந்தது, பிறகு சொன்னது:

''நான் போய் அவை இரண்டையும் திரும்பக்கூட்டி வருவேன்!''

அப்பால் ஓடிப்போய், தான் தப்பித்ததற்காகப் பெரு மகிழ்ச்சி கொண்டது.

''சீக்கிரம், சகோதரா செம்மறியே, இழப்பதற்கு நேரமில்லை. நாம் கூழைச் சாப்பிட்டுவிட்டு, உயிரைக் காப்பாற்ற ஓடிப்போகலாம்!'' என்று வெள்ளாடு கத்தியது.

இதற்கிடையில், திரும்பவும் ஒன்று சேர்ந்த மூன்று ஓநாய்களும், தாங்கள் செய்தது பற்றிச் சிந்திக்கத் தொடங்கின, அவற்றில் ஒன்று சொன்னது:

''வெள்ளாட்டுக்கும் செம்மறியாட்டுக்கும் நாம் எதற்காகப் பயப்பட

வேண்டும், சகோதரர்களே? நாம் திரும்பப் போய் அவற்றைத் தின்னலாம்!''

அதே இடத்திற்கு அவை திரும்பச் சென்றன, ஆனால் வெள்ளாடும் செம்மறியாடும் அங்கே இல்லை. கூழைச் சாப்பிட்டுவிட்டு, ஓர் ஓக் மரத்தில் ஏறிக்கொள்ளவே அவற்றிற்கு நேரமிருந்தது.

என்ன செய்வதென்று ஓநாய்கள் சிந்திக்கத் தொடங்கின, சற்று தூரம் நடந்து சென்று அவற்றைத் தேடின, அந்தோ! — ஒரு மரத்தின் மீது வெள்ளாடும் செம்மறியாடும் இருந்தன. அவை இரண்டில் மிகத் துணிவான வெள்ளாடு உச்சியில் ஏறியிருந்தது, அவ்வளவு துணிவு இல்லாத செம்மறியாடு தரைக்கு மிகச் சமீபத்தில் இருந்தது.

''இதோ பார், மயிரடர்ந்த ஓநாயே,'' என்று இரு இளம் ஓநாய்கள் தங்களை விட வயதானதும் மயிரடர்ந்ததுமான மூன்றாவது ஓநாயிடம் கூறின. ''கீழே படுத்து நட்சத்திரங்களைப் படித்து, இந்த இரண்டையும் நாம் எப்படிப் பிடிக்க வேண்டும் என்பதை எங்களிடம் சொல்!''

வயதான ஓநாய் தரையில் படுத்து நட்சத்திரங்களைப் படிக்கத் தொடங்கியது. இதைப் பார்த்த செம்மறியாடு அந்தளவு பயத்தால் நடுக்குற்று மரத்திலிருந்து கவிழ்ந்து ஓநாய்க்கு மேலாக விழுந்தது! வெள்ளாட்டைப் பொருத்த வரை, உண்மையில் மிகவும் துணிச்சலாக இருந்ததால் உரக்கக் கத்தியது:

''அந்தக் குறிகாரனை என்னிடம் ஒப்படை!''

இதைக் கேட்ட ஓநாய்கள் ஓட்டமெடுத்தன, அவைகளால் முடிந்தளவுக்கு விரைவாக ஓடியதால், அவைகளுக்குப் பின்னே புழுதி மேகங்கள் எழுந்தன.

இப்போது உலகத்தில் எந்தக் கவலையும் இல்லாத வெள்ளாடும் செம்மறியாடும் தாங்களாகவே ஒரு குடிசையைக் கட்டிக்கொண்டு, அப்போதிருந்து அங்கே வாழ்ந்து வருகின்றன.

சகோதரி நரி

ஒரு சமயத்தில் நரி கோழி ஒன்றைத் திருடியது. அதை எடுத்துக் கொண்டு ஓட்டமாய் ஓடியது, மேன்மேலும் ஓடியது, இரவு வருவதை அறிந்தது. சற்று முன்னால் குடிசை ஒன்று இருந்தது, நரி அதற்குள் நேராகச் சென்று, அங்கிருந்த சில ஆட்களைப் பார்த்துத் தலைவணங்கிச் சொன்னது:

''மாலை வணக்கம், நல்லவர்களே!''

''உனக்கும் மாலை வணக்கம், சகோதரி நரியே!''

''இரவுக்காக என்னை உள்ளே இருக்க விடுவீர்களா?''

''ஆனால், சகோதரி நரி, குடிசை சிறியது, உனக்குப் போதுமான இடம் இங்கு கிடையாது.''

''பரவாயில்லை! பெஞ்சுக்குக் கீழே சுருண்டு படுத்துக் கொண்டு எனது வாலால் என்னை மூடிக்கொள்வேன், இப்படித்தான் நான் இரவைக் கழிப்பேன்.''

''ஓ, அப்பச்சரி!'' என்று எசமானர்கள் சொன்னார்கள்.

''எனது கோழியை நான் எங்கே வைப்பேன்?''

''அடுப்புக்குக் கீழே.''

அதற்குச் சொல்லப்பட்டது போல சகோதரி நரி செய்தது. ஆனால் நடு இரவில் அமைதியாக எழுந்து, கோழியைத் தின்றுவிட்டுச் சிறகு

களை மறைத்துவைத்தது. மறுநாள் முன்னதாகவே எழுந்து தனது முகத்தைச் சுத்தமாக அழுத்தித் துடைத்துவிட்டு, தனக்கு விருந்தளித்தவர்களுக்குக் காலை வணக்கம் சொல்லி வாழ்த்தியது. பிறகு கேட்டது:

''எங்கே என்னுடைய கோழி?''

''அடுப்புக்குக் கீழே.''

''நான் பார்த்தேன், ஆனால் அது அங்கே இல்லை.''

கீழே உட்கார்ந்து அழத் தொடங்கியது.

''எனக்கென்று இருந்ததெல்லாம் அந்தக் கோழிதான்,'' என்று தேம்பியது. ''இப்போது அது போய்விட்டது! அதற்குப் பதிலாக நீ வீட்டின் எசமானனே, எனக்கு ஒரு வாத்தைக் கொடுத்தாக வேண்டும்.''

செய்வதற்கு எதுவுமே இல்லை, ஆகவே அவர்கள் நரிக்கு ஒரு வாத்தைக் கொடுத்தார்கள். சகோதரி நரி அதைத் தனது கோணிக்குள் போட்டுக்கொண்டு அங்கிருந்து ஓடியது.

மேன்மேலும் ஓடியது, இரவு வருவதை அறிந்தது. சற்று முன்னால் குடிசை ஒன்றைக் கண்டு அதற்குள்ளாகச் சென்று சொன்னது:

''மாலை வணக்கம், நல்லவர்களே!''

''உனக்கும் மாலை வணக்கம், சகோதரி நரி!''

''இரவுக்காக என்னை உள்ளே இருக்க விடுவீர்களா?''

''எங்களுடைய குடிசை சிறியது, உனக்குப் போதுமான இடம் இங்கு கிடையாது.''

''பரவாயில்லை! பெஞ்சுக்குக் கீழே சுருண்டு படுத்துக்கொண்டு எனது வாலால் என்னை மூடிக்கொள்வேன், இப்படித்தான் நான் இரவைக் கழிப்பேன்.''

''ஓ, அப்படிச் சரி!''

''ஆனால் எனது வாத்தை எங்கே வைப்பது?''

''கொட்டிலில், தாராக்களுடன்.''

அதற்குச் சொல்லப்பட்டது போல சகோதரி நரி செய்தது. ஆனால் நடு இரவில் அமைதியாக எழுந்து வாத்தைத் தின்றுவிட்டுச் சிறகுகளை மறைத்து வைத்தது. மறுநாள் முன்னதாகவே எழுந்து தனது முகத்தைச் சுத்தமாக அழுத்தித் துடைத்துவிட்டு, தனக்கு விருந்தளித்தவர்களுக்குக் காலை வணக்கம் சொல்லி வாழ்த்தியது. பிறகு கேட்டது:

''எங்கே என்னுடைய வாத்து?''

அவர்கள் கொட்டிலில் பார்த்தார்கள், ஆனால் வாத்து அங்கு இல்லை. வீட்டின் எசமானன் சொன்னான்:

''யாருக்குத் தெரியும், ஒருவேளை தாராக்களுடன் அதை நாங்கள் வெளியே விட்டிருக்கலாம்!''

சகோதரி நரி அழத் தொடங்கியது.

''எனக்கென்று இருந்ததெல்லாம் அந்த வாத்துதான், இப்போது அது போய்விட்டது!'' என்று சொல்லித் தேம்பியது. ''பதிலாக நீ எனக்கு ஒரு தாரா கொடுத்தாக வேண்டும்.''

செய்வதற்கு எதுவுமே இல்லை, ஆகவே அவர்கள் நரிக்கு ஒரு தாரா கொடுத்தார்கள். சகோதரி நரி அதைத் தனது கோணிக்குள் போட்டுக்கொண்டு தனது வழியில் புறப்பட்டது.

நரி மேன்மேலும் நடந்தது, அதோ இரவு வருவதை அறிந்தது. சற்று முன்னால் குடிசை ஒன்றைக் கண்டு அதற்குள்ளாகச் சென்று சொன்னது:

''மாலை வணக்கம், நல்லவர்களே! இரவுக்காக என்னை உள்ளே இருக்க விடுவீர்களா?''

''எங்களால் அது முடியாது, சகோதரி நரியே. எங்களது குடிசை சிறியது, உனக்குப் போதுமான இடம் இங்கு கிடையாது.''

''பரவாயில்லை! பெஞ்சுக்குக் கீழே சுருண்டு படுத்துக்கொண்டு எனது வாலால் என்னை மூடிக்கொள்வேன், இப்படித்தான் நான் இரவைக் கழிப்பேன்.''

''ஓ, அப்படியா, சரி.''

''என்னுடைய தாராவை எங்கே வைப்பேன்?''

''கொட்டிலில், ஆட்டுக்குட்டிகளுடன்.''

அதற்குச் சொல்லப்பட்டது போல சகோதரி நரி செய்தது, ஆனால் நடு இரவில் அமைதியாக எழுந்து, தாராவைத் தின்றுவிட்டுச் சிறகுகளை மறைத்து வைத்தது. மறுநாள் முன்னதாகவே எழுந்து தனது முகத்தைச் சுத்தமாக அழுத்தித் துடைத்துவிட்டு, தனக்கு விருந்தளித்தவர்களுக்குக் காலை வணக்கம் சொல்லி வாழ்த்தியது. பிறகு கேட்டது:

''எங்கே என்னுடைய தாரா?''

அவர்கள் கொட்டிலில் பார்த்தார்கள், ஆனால் தாரா அங்கு இல்லை.

''இது போல முன்னர் எனக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை,''

என்றது சகோதரி நரி. ''தாராவைத் தவிர எனக்கென்று எதுவும் இருந்ததில்லை, இப்போது அது போய்விட்டது!''

வீட்டின் எசமானன் சொன்னான்:

''யாருக்குத் தெரியும், ஒருவேளை ஆட்டுக்குட்டிகள் உனது தாராவை மிதித்துக்கொன்றிருக்கலாம்?''

''அது போல இருக்கலாம், ஆனால் பதிலுக்கு நீ எனக்கு ஓர் ஆட்டுக்குட்டி கொடுத்தாக வேண்டும்!''

அவர்கள் நரிக்கு ஓர் ஆட்டுக்குட்டி கொடுத்தார்கள், அதைத் தனது கோணிக்குள் போட்டுக்கொண்டு நரி தனது வழியில் ஓட்டம் பிடித்தது. அது மேன்மேலும் ஓடியது, இரவு வருவதை அறிந்தது. சற்று முன்னால் குடிசை ஒன்றைக் கண்டு அதற்குள்ளாகச் சென்று சொன்னது:

''இரவுக்காக என்னை உள்ளே இருக்க விடுவீர்களா, நல்லவர்களே!''

''எங்களால் அது முடியாது. எங்களுடைய குடிசை சிறியது, உனக்குப் போதுமான இடம் இங்கு கிடையாது.''

''பரவாயில்லை! பெஞ்சுக்குக் கீழே சுருண்டு படுத்துக்கொண்டு எனது வாலால் என்னை மூடிக்கொள்வேன், இப்படித்தான் நான் இரவைக் கழிப்பேன்.''

''ஓ, அப்படிச்சரி!''

''எங்கே எனது ஆட்டுக்குட்டியை வைப்பேன்?''

''அதை முற்றத்தில் விடு.''

அதற்குச் சொல்லப்பட்டது போல சகோதரி நரி செய்தது. ஆனால் நடு இரவில் அமைதியாக எழுந்து ஆட்டுக்குட்டியைத் தின்றது. மறுநாள் முன்னதாகவே எழுந்து தனது முகத்தைச் சுத்தமாக அழுத்தித் துடைத்துவிட்டு, தனக்கு விருந்தளித்தவர்களுக்குக் காலை வணக்கம் சொல்லி வாழ்த்தியது. பிறகு:

''எங்கே என்னுடைய ஆட்டுக்குட்டி?'' என்று கேட்டது.

கீழே உட்கார்ந்து அழத் தொடங்கியது.

''இது போல முன்னர் எனக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை!'' என்று தேம்பியது.

வீட்டின் எசமானன் சொன்னான்:

''யாருக்குத் தெரியும், ஒருவேளை என்னுடைய மருமகள் எருதுகளை மேய்ச்சலுக்கு ஓட்டியபோது அதை வெளியே விட்டிருக்கலாமே?''

''அதுபோல இருக்கலாம், ஆனால் எனது ஆட்டுக்குட்டிக்குப் பதிலாக நீ எனக்கு அந்த மருமகளைக் கொடுத்தாக வேண்டும்!'' என்றது சகோதரி நரி.

இதைக் கேட்டதும் அவர்கள் எல்லாரும் அழத் தொடங்கினார்கள்: வீட்டுக்காரனும் அழுதான், அவன் மனைவியும் அழுதாள், குழந்தைகளும் அழுதார்கள். அவன் மகளைப் பொருத்தவரை கோணிக்குள்ளாக ஒரு நாயை வைத்தான்.

சகோதரி நரி கோணியை எடுத்துக்கொண்டு புறப்பட்டது. நெடுகிலும் நடந்து போகையில் அது சொன்னது:

''ஒரு கோழிக்காக ஒரு வாத்து, வாத்துக்காக ஒரு தாரா, தாராக்காக ஓர் ஆட்டுக்குட்டி, ஆட்டுக்குட்டிக்காக ஓர் இளம் பெண்!''

நரி கோணியைக் குலுக்க, உள்ளே இருந்த நாய் 'கி-ர்!' என்றது.

சகோதரி நரி சொன்னது:

''மருமகள் அருவருப்பானவள். நாய் போல உறுமுகிறாள்! உள்ளுக்குள்ளாக உற்று நோக்கி அவளை ஒரு பார்வை பார்க்கலாமென்று நினைக்கிறேன்.''

நரி கோணியை அவிழ்த்தது — அந்தோ! நாய் வெளியே தாவியது. சகோதரி நரி அப்பால் துள்ளிப் பாய்ந்தது, நாய் அதைப் பின் தொடர்ந்து ஓடியது. காட்டின் உள்ளுக்குள்ளாக மேன்மேலும் நரி ஓடியது, அதனது குதிங்கால்களில் நாய் சென்றது! ஆனால் கடைசியாகத் தனது பொந்துக்குச் சென்று அதற்குள்ளாக ஒளிந்து நரி உட்கார்ந்து கொண்டது, நாய் அதற்கு மேலாக நின்றது, அதனால் உள்ளே போக முடியவில்லை. சகோதரி நரி கேட்டத் தொடங்கியது:

''என்னுடைய சிறிய காதுகளே, அந்த நாயிடமிருந்து தப்பிய போது நீங்கள் என்ன நினைத்தீர்கள்?''

சிறிய காதுகள் பதிலளித்தன:

''அஞ்சினோம், அருமை நரியே எந்தன் அன்பால்
உந்தன் தங்கத் தோலினை நாயும் கிழித்திடுமே!''

''நன்றி, சிறிய காதுகளே, இதற்காக ஜோடி தங்க வளையல்களை நீங்கள் பெறுவீர்கள்,'' என்ற சகோதரி நரி, மீண்டும் கேட்டது:

''என்னுடைய சிறிய கால்களே, அந்த நாயிடமிருந்து தப்பியபோது நீங்கள் என்ன நினைத்தீர்கள்?''

சிறிய கால்கள் பதிலளித்தன:

''அஞ்சினோம், அருமை நரியே, எந்தன் அன்பால்
உந்தன் தங்கத் தோலினை நாயும் கிழித்திடுமே!
ஆதலால் விரைந்தே ஏகினோம் நன்மைக்கே
நீயும் வாயிலை அடைந்திட உதவினோம்.''

''நன்றி, சிறிய கால்களே, அன்போடு நன்றி சொல்கிறேன்! இதற்காக வெள்ளிக் குதிகளுடன் ஒரு ஜோடி தங்கக் காலணிகளை நீங்கள் பெறுவீர்கள்,'' என்ற சகோதரி நரி, மீண்டும் கேட்டது:

''அந்தப் போக்கிரி நாயிடமிருந்து தப்பியபோது நீ என்ன நினைத்தாய், குட்டை வாலே?''

''விரைவாய் நானும் ஓடினேன், சகோதரி நரியே,
வெகு சீக்கிரமே குஞ்சத்தில் இருக்கக் கண்டேன்,
அப்போதிருந்து விரைவாய் நானும் போவதில்லை,
கடைசியில் நீயும் பிடிபட விரும்பினேன்!''

சகோதரி நரி மிகவும் கோபமடைந்து, பொந்துக்கு வெளியே தனது வாலை நீட்டிச் சொன்னது:

''இதோ, நாயே, எனது வாலை நீ வைத்துக் கொள்ளலாம், அதிலிருந்து கொஞ்சத்தை நீ கடித்துக்கொள்ள முடியும்!''

வாலின் மீது அத்தனை வலுவாய் நாய் தனது பற்களைப் பதிக்கவே, முழுமையாகவே அதைத் துண்டித்து விட்டது.

அதன் பிறகு சகோதரி நரி முயல்களிடம் சென்றது. வாலில்லாமல் அது இருப்பதைப் பார்த்த பிறகு அவை சிரிக்கத் தொடங்கின. நரி பேசியது:

''ஆமாம், நான் வாலில்லாமல் இருக்கிறேன். ஆனால் என்னால் சமாளிக்க முடியும். உங்களை விட என்னால் சிறப்பாக நடனமாட முடியும்!''

அவை கேட்டன:

''எப்படி?''

''இப்படித்தான்! இதற்காகச் செய்ய வேண்டியது உங்களுடைய வால்களை ஒன்றுசேர்க்க வேண்டியதுதான். உடனே நீங்கள் நடனமாடலாம்.''

''சரி. அப்படியே செய்!''

நரி அவற்றினுடைய வால்களை முடிச்சுப் போட்டது. பிறகு அருகிருந்த குன்று ஒன்றின் மேல் கத்தத் தொடங்கியது:

''காப்பாற்றிக் கொள்ளுங்கள், முயல்களே! பெரிய ஓநாய் இங்கே வந்து கொண்டிருக்கிறது!''

உடனே முயல்கள் நாலாபுறங்களிலும் பாய அவற்றின் வால்கள் அறுபட்டுப்போயின. பிறகு அவை ஒன்றையொன்று பார்த்தபோது வாலில்லாமல் இருந்ததைக் கண்டன.

ஆகவே, அவை சகோதரி நரி செய்ததற்குத் திருப்பிச் செய்யும் வழி பற்றிச் சிந்திக்கத் தொடங்கின. ஆனால் சகோதரி நரி அது பற்றிக் கேள்விப்பட்டு, தான் மிக மோசமாகக் காலங்கழிக்க வேண்டிவரும் என்பதை அறிந்தது. ஆகவே, காட்டை விட்டு அத்தனை தொலைவிற்கு ஓடியது, அதிலிருந்து அது பற்றிக் கேள்விப்படவே இல்லை. அப்போதிலிருந்து முயல்களுக்கு வாலே இல்லே.

நாய் சிர்கோ

ஒரு காலத்தில் சிர்கோ என்ற பெயருடைய நாயை ஒரு மனிதன் வைத்திருந்தான். அந்நாய்க்கு அதிக வயதாகி விட்டது. ஆகவே அந்த மனிதன் அதை வீட்டை விட்டுத் துரத்தினான். சிர்கோ வயல்வெளியில் சுற்றித்திரிந்து மிகுந்த கவலையையும், ஆழ்ந்த துயரத்தையும் உணர்ந்தது. ''எனது எசமானனுக்கு எவ்வளவு ஆண்டுகளாக நான் பணியாற்றினேன், அவனது உடைமையைக் காவல் செய்தேன்,'' என்று அது தனக்குத்தானே சொல்லிக் கொண்டது. ''இப்போது கிழப்பருவத்தில் ஒரு ரொட்டித்துண்டு எனக்குத் தர அவனுக்கு வருத்தமாயிருக்கிறது, என்னை வீட்டையும் விட்டுத் துரத்தி விட்டான்.'' இப்படி அது சுற்றியவாறு சிந்திக்கிறது... பிறகு பார்க்கிறது – ஓர் ஓநாய் வருகிறது. சிர்கோவிடம் சென்று ஓநாய் கேட்கிறது:

''ஏன் இங்கே சுற்றிக் கொண்டிருக்கிறாய்?''

''ஏனெனில் எனது எசமானன் என்னை வீட்டைவிட்டுத் துரத்தி விட்டான், இதோ நான் சுற்றிக் கொண்டிருக்கிறேன்.''

ஓநாய் சொல்கிறது:

''உனது எசமானன் திரும்பவும் உன்னை எடுத்துக் கொள்வதற்காக நான் எதுவும் செய்ய வேண்டுமா?''

சிர்கோ மகிழ்ந்தது.

''செய், அருமை நண்பனே! உனது உதவிக்கு எப்படியும் கைமாறு

செய்யும் வழியைக் கண்டு பிடிப்பேன்.''

''சரி, நான் சொல்வதைக் கேள். உனது எசமானனும் எசமானியும் வயலுக்கு அறுவடைக்கு வருவார்கள். அவர்கள் வந்ததுமே எசமானி தனது குழந்தையை செடியின் கீழே போடும் போது, நீ குழந்தைக்கு மிக அருகில் இருக்க வேண்டும். அது எங்கே இருக்கிறது என்பதை நான் அறிந்து கொள்ள வேண்டும். நான் ஓடிவந்து அந்தக் குழந்தையைத் தூக்கிச் செல்வேன், நீயோ என்னிடமிருந்து அதை எடுத்துக் கொள்ள முயல வேண்டும். பிறகு நான் பயந்தது போலப் பாசாங்கு செய்து அதை விட்டுவிடுவேன்.''

இதோ, கோதுமை அறுவடை செய்ய எசமானனும் எசமானியும் வயலுக்குச் சென்றார்கள். எசமானி செடியின் கீழே குழந்தையை விட்டுவிட்டு வேலையைத் தொடங்கக் கணவனுடன் சேர்ந்து கொள்ளச் சென்றாள். அவள் எதற்கும் கவலைப்படவில்லை.

இதோ, திடீரென்று அங்கே ஓநாய் ஓடிவருகிறது. குழந்தையைக் கைப்பற்றிக் கொண்டு, வயலின் குறுக்காக ஓடுகிறது.

சிர்கோ அதன் பின்னே ஓடோடிச் சென்று அதனை எட்டிப்பிடிக்கிறது, எசமானனோ திகிலடித்த குரலில் கத்தினான்:

''பிடி அதை, சிர்கோ!''

சிர்கோ ஓநாயை எட்டிப்பிடித்து, அதனிடமிருந்து குழந்தையைப் பறித்து எசமானனுக்கு முன் அதைப் போட்டது. பிறகு எசமானன் கோணியிலிருந்து கொஞ்சம் ரொட்டியையும் கொழுப்பையும் எடுத்து வந்து சொல்கிறான்:

''இதோ, சிர்கோ, சாப்பிடு! இது என்னுடைய குழந்தையைக் காப்பாற்றியதற்காக!''

அதே மாலையில் தங்களுடன் சிர்கோவையும் அழைத்துக்கொண்டு அவர்கள் வீடு செல்கிறார்கள். அங்கு வந்ததும் எசமானன் சொல்கிறான்:

''பிசைந்த மாவை வேகவை, மனைவியே, சங்கடப்பட வேண்டாம்.''

சரி, பிசைந்த மாவு வேகவைக்கப்பட்டன. எசமானன் மேசையின் முன்னர் சிர்கோவை அமர்த்தி, அதற்கு அருகில் அமர்ந்து சொல்கிறான்:

''வெந்ததுண்டுகளைப் பரிமாறு, மனைவியே, நாம் இரவு உணவைச் சாப்பிடுவோம்.''

எசமானி மேசையின் மீது வெந்த துண்டுகளைப் பரிமாறுகிறாள். எசமானன் ஒரு தட்டில் அவற்றை எடுத்து வைத்து குளிரச் செய்கிறான், ஏனெனில் சிர்கோ சுட்டுக் கொள்ளக் கூடும் என அஞ்சுகிறான்.

இதோ, சிர்கோ நினைக்கிறது: ''ஓநாய் எனக்குச் செய்த உதவிக்காக என்னால் முடிந்த எந்தப் பரிசும் அதற்கு நான் அளிக்க வேண்டும்.''

எசமானன் தனது மூத்த மகளைத் திருமணம் செய்து கொடுக்கத் தீர்மானித்திருந்த நேரம் அது. சிர்கோ வயலுக்குச் சென்று அங்கே ஓநாயைத் தேடிப்பிடித்து அதனிடம் சொல்கிறது:

''ஞாயிற்றுக்கிழமை மாலையில் எங்களது காய்கறித் தோட்டத்துக்கு வா. நான் உன்னை வீட்டிற்குள்ளாகச் செல்ல விடுவேன். நீ எனக்குச் செய்த உதவிக்குக் கைமாறு செய்வேன்.''

ஞாயிற்றுக்கிழமை வரும்வரை ஓநாய் காத்திருந்து, சிர்கோ கட்டளையிட்ட இடத்திற்குச் செல்கிறது. சரியாக அந்நாளிலே மணவிழா நடத்தப்பட்டது. சிர்கோ ஓநாயை வீட்டிற்குள்ளாகக் கூட்டிவந்து மேசைக்கு அடியில் அதை மறைத்து வைக்கிறது: பிறகு மேசையிலிருந்து ஒரு போத்தல் வோத்காச் சாராயமும், ஒரு பெரிய சாப்பாட்டுத் துண்டும் எடுத்து ஓநாய்க்குக் கொண்டுவருகிறது. விருந்தினர்கள் சிர்கோவை அடிக்க விரும்புகின்றனர். ஆனால் எசமானன் நாயைப் பாதுகாக்கிறான்.

''சிர்கோவை அடிக்காதீர்கள்! அது எனக்கு நன்கு சேவை செய்தது, அதனுடைய மரணம் வரை அதற்கு நன்மை செய்வேன்.''

சரி, சிர்கோ மேசையிலிருந்து மிக நொய்ந்த துண்டுகளை எடுத்து ஓநாயிடம் கொடுக்கிறது. ஓநாய் அந்தளவு மகிழ்ச்சியுறுமாறு சிர்கோ அதற்கு உணவும் சாராயமும் கொடுக்கிறது, பிறகு ஓநாய் சொல்கிறது:

''நான் பாட விரும்புகிறேன்!''

சிர்கோ பயப்பட்டது.

''பாடாதே,'' என்கிறது சிர்கோ. ''அது உனக்குக் கெடுதலாக முடியும். உனக்கு இன்னும் வோத்காச் சாராயம் கொடுப்பேன். ஆனால் நீ அமைதியாக இருக்க வேண்டும், அருள் செய்!''

ஓநாய் மேலும் வோத்காச் சாராயம் குடித்தது. பிறகு சொல்கிறது:

''இதோ, இப்போதே நான் பாடுவேன்!''

அதோ, அது மேசைக்குக் கீழே ஒரே ஊளையிட்டது... விருந்தினர்கள் தங்கள் இடங்களிலிருந்து குதித்தெழுகிறார்கள், இங்குமங்கும்

விழிக்கிறார்கள். மேசைக்குக் கீழே பார்க்கிறார்கள். அங்கோ — ஓநாய். அச்சத்தினால் சில விருந்தினர்கள் ஓடுகிறார்கள், ஆனால் சிலர் ஓநாயை அடிக்க விரும்புகிறார்கள். சிர்கோவோ ஓநாய்க்கு மேலாகப் படுத்துக்கொண்டது, அதைத் திண்ற வைப்பது போலப் பாசாங்கு செய்தது.

எசமானன் சொல்கிறான்:

''ஓநாயை அடிக்காதீர்கள். இல்லாவிட்டால் நீங்கள் சிர்கோவைக் கொலை செய்வீர்கள்! சிர்கோவே ஓநாய்க்கு நல்ல பாடம் கற்பிக்கும். அதைத் தொடாதீர்கள்!

சிர்கோ ஓநாயை வயல்வெளிக்குக் கூட்டிச் சென்று சொல்கிறது:

''நீ எனக்கு நன்மை செய்தாய், நானும் அதைச் செய்து விட்டேன்!''

அதோடு அவை விடை பெற்றுக்கொள்கின்றன.

சிங்கம் கிணற்றில் மூழ்கியது எப்படி

வெகு காலத்திற்கு முன் அடர்த்தியான காடுகளில் ஒரு சிங்கம் இருந்தது. அது பிரம்மாண்டமானதாகவும், அச்சுறுத்துவதாகவும் இருந்தது. அது கர்ஜித்தபோது எல்லா விலங்குகளும் அச்சத்தினால் ஆஸ்ப் மரத்தின் இலைகளைப் போல நடுநடுங்கின. அது இரைக்காக ஓடும் போது சந்திக்கின்ற ஒவ்வொன்றையும் கிழித்துத் துண்டுகளாக்கிப் போடும். காட்டுப் பன்றிகளின் கூட்டத்தின் மீது மோதுகிற போது அவற்றைத் திணற வைக்கும். ஆனால் ஒரே ஒரு பன்றியைத் தான் தின்னும். எனவே விலங்குகள் பயப்பட்டன. என்ன செய்வதென்று அவற்றிற்குத் தெரியவில்லை. அவை ஒன்று கூடி ஆலோசிக்கத் தொடங்கின.

இதோ கரடி பேசுகிறது:

‘‘கேளுங்கள், கனவான்களே! சிங்கம் நாள்தோறும் பத்து மிருகங்களை அழிக்கிறது. சில வேளைகளில் இருபதைக் கூட அழிக்கிறது, ஆனால் ஒன்றிரண்டுக்கு மேல் தின்பதில்லை. ஏனையன வீணே நாசமாகின்றன, ஏனென்றால் சிங்கம் நாள்தோறும் புதியவைகளைப்

பிடிக்கிறது. நேற்றைய விலங்குகளை அது சாப்பிடுவதில்லை. ஆகவே அதனிடம் தூதர்களை அனுப்பிக் காரணத்தை அறிவோம்...''

''போ, அதனுடன் பேச முயற்சி செய்!'' என்று ஓநாய் பதிலளித்தது. ''நமது பேச்சை அது கேட்க மாட்டாதே.''

''நாம் முயற்சி செய்யலாம். ஒருவேளை அது ஒரு முடிவைக் கொண்டு வரும்,'' எனக் கரடி வலியுறுத்தியது. ''ஆனால் நாம் யாரை அனுப்புவது?''

''நீயே போ, கரடி,'' என்றது ஓநாய். ''நம்மில் பெரியவனும் வலிமையானவனும் நீதான்.''

''என்னிடம் என்ன வலிமை? அதனுடன் சண்டையிட மாட்டேன், அது என்னைத் தாக்கும் போது என் வலிமைக்கு என்ன பயன்? ஓநாயே, நீ போனால் நல்லது, என்னைக் காட்டிலும் நீ அதிக விரைவான மிருகம்.''

''சரி, நான் விரைவான மிருகம் என்றால் என்ன அருத்தம்? சிங்கம் என்னைத் துரத்துகிறது என்றால் என்னால் ஓடிப்போக முடியுமா? வேறு ஏதாவது வழி கண்டு பிடிப்பது நல்லது. ஆனால் நமது வலிமையும் விரைவும் உதவிசெய்யாது.''

பிறகு மான் பேசுகிறது:

''கேளுங்கள், கனவான்களே! இந்த விஷயத்தில் ஓர் ஆராயும் முறையைக் கண்டு பிடிக்க வேண்டும். ஒரு பேச்சுவார்த்தையைத் தொடங்குவது பற்றிச் சிந்திப்பது அவசியமானது.''

''நல்லது, நீ அவ்வளவு புத்திசாலி என்றால் நீயாகவே போ.''

''நானே இந்தக் காரியத்தில் தலையிடப் போவதில்லை. சிங்கத்தோடு யாரும் இயல்பாகப் பேச முடியாது என்று மட்டும் சொன்னேன். அது நமது சகோதரனில்லை. அதனிடம் எப்படி அணுகுவது?''

''ஊம், யாரை நாம் அனுப்புவது?''

''ஒரு நரியை நாம் அனுப்புவோம். அது மிகத் தந்திரமானது. சிங்கத்திடம் இச்சகம் பேச முடியும், என்ன பிரச்சினை என்பதை அது சிங்கத்திடம் சொல்ல முடியும்.''

''நீ நன்கு கற்பனை செய்தாய்!'' என்று மகிழ்ந்தன மிருகங்கள். ''நரி ஆராயும் முறையைக் கண்டு பிடிக்கும்!''

அவை நரியை அழைத்தன, கரடி அதனிடம் பேசுகிறது:

''நரி, சிங்கத்திடம் நீ போக வேண்டும், பேச வேண்டும்.''

''நான் என்ன குற்றம் செய்தேன்? வேறு யாரேனும் அங்கே போகட்டும். யாரும் ஒப்புக் கொள்ளவில்லை என்றால் நாம் சீட்டுப் போட்டுப் பார்க்கலாம். யாருக்குச் சீட்டு விழுகிறதோ அது அங்கே மறுக்காமல் போக வேண்டும்.''

''இல்லை, நரியே, அது சரிப்பட்டு வராது. ஒரு வார்த்தையும் சொல்லத் தெரியாத ஒன்றுக்குச் சீட்டு விழுந்தால் முடிவு என்னவாகும்? பதற்றத்தோடு சிங்கத்திடம் பேசும், சிங்கமோ இன்னும் அதிகமாக நம்மைக் கோபித்துக் கொள்ளும். இல்லை, நரியே, நாங்கள் உன்னை அனுப்பத் தீர்மானித்து விட்டோம்.''

நரி துக்கப்பட்டது, என்ன செய்வதென்று அதற்குத் தெரியவில்லை. அது சிங்கத்திடம் போய்ப் பேசுவது அல்லது போய்ப் பேசாமலிருப்பது இரண்டுமே மோசமானது. அது தீவிரமாகச் சிந்தித்துப் பிறகு சொல்கிறது:

''சரி, நான் போகிறேன். இன்பத்தைத் தேட முயல்வேன். இது என் விதி போலத்தான் தோன்றுகிறது...''

நீண்ட நேரமாக நரி காட்டில் நடந்து சென்றது. சிங்கத்தின் அருகில் செல்ல பயந்தது. ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கமாகச் சென்றது. சிங்கத்தை எப்படி ஏமாற்றுவது எனச் சிந்தித்தது. நரி சாவுக்கு மிகவும் அஞ்சியது. திடீரென்று ஒரு கிணறு அதன் கண்ணிற்பட்டது. உடனே, உயிரோடு இருந்து இரத்த வெறிபிடித்த சிங்கத்தின் பற்களில் சிக்குவதற்குப் பதிலாக, மூழ்கி இறப்பது நல்லது என்று தீர்மானம் செய்தது.

அது கிணற்றுக்குச் சென்று சுற்றிலும் நடந்தது, வாசனை பார்த்தது, உள்ளாகப் பார்த்தது, மிக ஆழத்தில் தண்ணீரை உற்றுப் பார்த்தது. அப்போது ஒரு நரி தண்ணீரிலிருந்து மேலே பார்த்தது. அது தன்னுடைய சொந்தப் பிரதிபலிப்பு என்பதை அதனால் ஊகிக்க முடியவில்லை. தனது மூஞ்சியை அலைத்தது, மற்ற நரியும் இதையே செய்தது. தனது நாக்கை வெளியே நீட்ட மற்ற நரியும் அவ்வாறே செய்தது.

''ஓ, அங்கே என்னுடைய பிரதிபலிப்புத்தான்! சிங்கத்தை ஏமாற்ற முயற்சி செய்வேன். அதற்கு இது தெரியவில்லை என்றால் நான் அதை முட்டாளாக்குவேன்.''

நரி, கிணற்றிலிருந்து சிங்கத்தை நோக்கி நேராகப் புறப்பட்டது.

அது மிகவும் மகிழ்ச்சியடைந்து, கொஞ்சம் விரைவாக நடந்தது. இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. அரசனுடைய மாளிகைக்கு நரி நகரத் தொடங்கியது, சிங்கமோ குரூரமாகக் கர்ஜித்தது.

நரி மிகவும் மரியாதையான முறையில் தலைவணங்கிச் சொல்கிறது:

''மேன்மை தங்கிய பிரபுவே, நீங்கள் மரண தண்டனையை நிறைவேற்ற உத்தரவிட வேண்டாம். ஒரு வார்த்தை சொல்ல அநுமதியுங்கள். நான் இங்கே வந்தது ஏன் என்பதை உங்களிடம் சொல்வேன். உங்களுடைய் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவிப்பதற்காக காலையிலேயே இரண்டு முயல்களையும் என்னையும் விலங்குகள் அனுப்பின. நாங்கள் விரைவாக வந்து கொண்டிருந்தோம், ஆனால் உங்களைப் போலவே காணப்பட்ட ஒரு விலங்கை நாங்கள் சந்தித்தோம். அது 'நீங்கள் எங்கே போகிறீர்கள்?' எனக் கேட்கிறது. நான் சொல்கிறேன்: 'சிங்கத்துக்குப் பிறந்த நாள் வாழ்த்துக் கூற நாங்கள் போகிறோம்.' அந்த விலங்கோ எங்களிடம் ஒரே கூச்சல் போட்டது: 'வேறு ஒரு சிங்கம் அங்கு இருக்க முடியுமா? நான் தானே சிங்கம், எல்லாரும் என்னுடைய விருப்பத்திற்குத்தான் கீழ்ப்படிய வேண்டும். நான் உங்களைக் கடந்து போக விடமாட்டேன். நீங்கள் என்னுடையவர்கள்.' 'அது எப்படி இருக்க முடியும்?' என நான் வலியுறுத்திக் கேட்கிறேன். 'சிங்கம் எங்களுக்காகக் காத்திருக்கிறது, இன்று அதனுடைய பிறந்த நாள். போகாவிட்டால் அது எங்களைக் கோபித்துக் கொள்ளும். பிறகு எல்லா விலங்குகளையும் பழிவாங்கும்.' ஆனால் அது சொல்கிறது: 'அதனுடைய பிறந்த நாளில் எனக்கு என்ன இருக்கிறது! நான் விரும்பினால் அதைத் தின்பேன்.' 'அநுமதி பெற நீண்ட நேரத்திற்கு நான் குழைந்தேன். சிரமப்பட்டுத்தான் அதைச் செய்தேன்,'' என்று கூறியது.

இது சிங்கத்திற்கு அந்தளவு கோபமூட்டவே தனக்கு எந்தளவு பசி இருந்தது என்பதை மறந்து விட்டது. பிறகு இடிமுழக்கம் போலப் பேசியது:

''அந்த முரட்டுத்தனமான ஆசாமி எங்கே வசிக்கிறது?''

''அது அங்கே வசிக்கிறது. ஒரு கல்மாளிகையில்.''

சீற்றத்துடன் சிங்கம் குதித்து, அந்தக் காடு முழுமையுமே எதிரொலிக்குமாறு கர்ஜனை செய்தது. காட்டின் மறுபுறத்தில் எங்கோ ரொம்ப

தூரத்தில் மற்றொரு சிங்கம் கர்ஜித்துக்கொண்டிருப்பது போல அது இருந்தது.

''அது கர்ஜிப்பதைக் கேட்கிறீர்களா, மேன்மை தங்கிய பிரபுவே? அது உங்களைக் கேலி செய்கிறது,'' என்கிறது நரி.

சிங்கம் முன்னிலும் கோபமடைந்தது.

''அந்த ஈனனைச் சுக்கு நூறாகக் கிழிப்பேன்! என்னை எதிர்ப்பதற்கு எவ்வளவு துணிச்சல்! என்னை எப்படி அது எதிர்க்க முடியும்? இந்தக் காடு என்னுடையது. வா, உடனே, அது எங்கே வசிக்கிறது என்று எனக்குக் காட்டு.''

அவை கிணற்றுக்கு வந்தன. பிறகு சிங்கம் கேட்கிறது: ''அது எங்கே என்று எனக்குக் காட்டு.''

நரி சொல்கிறது: ''அங்கே அந்தக் கல்மாளிகையில் அது இருக்கிறது, ஆனால் நெருங்கி வர நான் பயப்படுகிறேன். என்னைத் தின்று விடக் கூடும் என்று அஞ்சுகிறேன். கிணற்றுக்குக் கீழே குனிந்து பார்த்தால் நீங்களே அதைப் பார்க்கலாம்.''

சிங்கம் கிணற்றுக்கு வந்து குனிந்து பார்த்தது. அங்கே மற்றொரு சிங்கம் அதையே பார்த்துக்கொண்டிருக்கிறது. தனது பற்களை இந்தச் சிங்கம் நெறித்தது, அந்தச் சிங்கமும் தனது பற்களை நெறித்தது. பிறகு அது ஒரு பெரிய கர்ஜனையை முழங்கிவிட்டு கிணற்றுக்குள்ளாகப் பாய்ந்தது. அங்கே ஒரு நீர்வாரியடிப்பு, தான் நீருக்குள் இருப்பதைக் கண்டது! கிணறு அகலமாகவும், அதனது கற் சுவர்கள் மிக எளிமையாகவும் இருந்ததனால் அதனால் வெளியே தாவி வரமுடியாது மூழ்கிப்போனது. இது எல்லாவற்றையும் கவனித்த நரி, இது பற்றி மற்ற விலங்குகளிடம் சொல்வதற்காக உடனே ஓடியது.

அவர்களை நரி நெருங்குகையில் முறுவலித்தது, தங்களுக்கு மகிழ்ச்சியான செய்தியை அது கொண்டு வருகிறது என்பதை அவை அறிந்தன.

''சிங்கத்தை நீ பார்த்துவிட்டாயா இல்லையா?'' என்று அதனிடம் அவை கேட்கின்றன.

''பார்த்தேன், பார்த்தேன். ஆனால் அதைப் பற்றி இப்போது நீங்கள் மறந்து விடலாம், ஏனெனில் அது செத்துவிட்டது. ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனெனில் நான் அதனை ஏமாற்றினேன்.''

‘‘அதை எப்படி நீ செய்தாய்?’’

எல்லாவற்றையும் பற்றி நரி அவற்றிடம் சொன்னது. அதைக் கேட்ட போது மகிழ்ச்சியினால் அவை நடனமாடத் தொடங்கின. எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தன என்பதை எந்த வாயாலும் சொல்ல முடியாது, எந்தப் பேனாவாலும் எழுத முடியாது!

அன்னம், நண்டு மற்றும் பைக் மீன்

ஓர் அன்னம் ஆற்றின் கரை நெடுகிலும் நீந்திப்போய்க் கொண்டிருந்தது. தனது கழுத்தைக் கோணலாக்கி, நீருக்குள்ளாகப் பார்த்தது. நீந்தி வந்த பைக் மீன் அதனருகே நின்று கேட்டது:

''ஆறு உறைந்து போகும்போது நீ எங்கே பறந்து போவாய்? தயவு செய்து சொல்!''

''எதற்காகக் கேட்கிறாய்?''

''குளிர்காலத்தில் மறைந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் பனிக்கட்டிக்குக் கீழாகப் புத்தம் புதிய காற்றில்லாமல் நான் மூச்சுத் திணறுகிறேன்.''

''குளிர்காலத்தில் வெதுவெதுப்பான நாடுகளுக்குப் பறந்துபோய் வசந்தம் வரும்வரை அங்கிருப்பேன்.''

''உன்னோடு என்னையும் கூட்டிச்செல்,'' என்றது பைக் மீன்.

''சரி, ஆகட்டும்! நீ விரும்பினால் சேர்ந்து பறக்கலாம், அப்படியே மகிழ்ச்சியாக இருக்கலாம்.''

இதைக் கேட்ட நண்டு சொன்னது:

''என்னையும் கூட அழைத்துச்செல்.''

''சரி. ஆகட்டும்! நீ எங்களோடு வரலாம், மகிழ்ச்சியாக இருக்கலாம்.

இலையுதிர்காலம் வரும்வரை காத்திருங்கள். எப்போது பறப்பதென்று உங்களுக்குச் சொல்கிறேன்.''

அவற்றால் நீரில் நீந்த முடிந்தால் பறக்கவும் முடியும் என்று அன்னம் நினைப்பது போலிருந்தது.

கோடைக்காலம் கடந்து, இலையுதிர்காலம் வந்தது. அன்னமும் சொன்னது:

''சரி, நண்பர்களே, வெதுவெதுப்பான நாடுகளுக்குப் புறப்பட இது தான் நேரம், தயாராகுங்கள். நாளை மதிய உணவுக்குப் பிறகு புறப் படுவோம்.''

பைக் மீன் இதுபற்றி நண்டிடம் கூறியது. நண்டு மேன்மேலும் சிந்தித்துச் சொன்னது:

''சகோதரியே, வறண்ட நிலத்தில் நாம் எப்படிப் போவது? உணவின்றி? வழியில் சாப்பிடுவதற்காகக் கடைசி வரை வருமாறு நாம் ஏதாவது எடுத்துச் செல்லலாம்.''

''எதற்குள்ளாக எல்லாவற்றையும் நாம் போட்டுக்கொள்வது?'' பைக் மீன் அதனிடம் கேட்டது.

''வண்டிக்குள்ளாக நாம் உணவைப் போட்டுக்கொள்ளலாம். நாம் அன்னத்தை அழைத்து மூவருமாக வண்டியைப் பூட்டிக் கொள்வோம்.''

ஆக, நண்டும் பைக் மீனும் வண்டியைப் பெறுவதில் வெற்றியடைந் தன. புல்லைக் கயிறாகத் திரித்து அன்னத்திற்காகக் காத்திருந்தன. மறுநாள் அன்னம் அவற்றிடம் பறந்துவந்து கேட்டது:

''ஆக, சகோதரர்களே, நீங்கள் தயாரா? ஏனெனில் நான் ஏற்கெனவே புறப்பட்டுவிட்டேன்.''

''நாங்கள் தயார்! நாங்கள் தயார்! தய்வுசெய்து வண்டியைச் செலுத்த உதவி செய். மூவரும் வண்டியில் பூட்டிக்கொண்டு புறப்படுவோம்.''

''சரி, அதை எனது காலில் கட்டுங்கள்.''

நண்டு அன்னத்தின் காலில் ஒரு புற்கயிற்றைக் கட்ட, மற்றொன்றைத் தனது கொடுக்கில் பிடித்துக்கொள்ள, மூன்றாவதைப் பைக் மீன் பற்களில் கவ்விக்கொண்டது.

''ஆக, சகோதரர்களே, சேர்ந்து இழுக்கலாம்!''

அப்போதுதான் நண்டு பின்னுக்கு நகர ஆரம்பித்தது. பைக் மீனோ அம்பு போல நீருக்குள் குதித்தது. அன்னமோ சிறகுகளை விரித்து

மேலே பறந்தது. எல்லாப் புற்கயிறுகளும் அறுந்துபோய், வண்டி அதே இடத்திலேயே நின்றது. அவற்றில் எது செய்தது சரி, தவறு என்பது யாருக்கும் தெரியாது. இதற்காக அவற்றை யாரும் குற்றம் சுமத்தவில் லை. தவளைகள் மட்டுமே அதிகம் சிரித்தன! தங்களுக்குப் பொறுப்பில் லாத காரியத்தை எதற்காக நண்டும் பைக் மீனும் செய்ய முன்வந்தன என்பது எல்லாவற்றுக்கும் வியப்பாக இருந்தது.

ஜார் ஆக்கப்பட்ட சிங்கம்

ஒரு நாள், காட்டின் விலங்குகளும் வயலின் விலங்குகளும், எல்லாரும் அஞ்சவும் கீழ்ப்படியவும் கூடிய ஒரு நியாயமான அரசனைப் பெற வேண்டும் எனத் தீர்மானித்து, அது பற்றிப் பேசவும், தங்களுக்குள் யாரை ஜார் ஆக்குவது என்பது பற்றி முடிவு செய்யவும் ஒரு கூட்டம் கூட்டின. அதற்கு மிகப் பெரியதும் மிக வலிமையானதும் வரத் தவறியதால், ஒரு ஜாரைத் தேர்ந்தெடுக்க அவற்றால் முடியவில்லை. பிறகு மற்றொரு கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. விலங்குகளில் மிகச் சிறியனவற்றிலிருந்து மிகப் பெரியன வரை வருகைதர உத்தரவிடப்பட்டது. சம்பந்தப்பட்ட விஷயம் ஒட்டுமொத்தமாகத் தீர்வு காணப்படலாம்.

குறிப்பிட்ட நாளில் விதிவிலக்கின்றி எல்லாமே வந்தன: யானை, சிங்கம், புலி, நீர்யானை, காண்டாமிருகம், கரடி, ஓநாய், மான், ஒட்டகம், நரி, முயல், காட்டுப் பன்றி, வரிக்குதிரை, வெள்ளாடு, செம்மறியாடு, குதிரை, பசு, நாய், பூனை, மரநாய், அணில், எலி, சுண்டெலி மற்றும் கழுதையும் கூட.

முதலில் முன்னுக்கு வந்து பேசியது மான்:

"நான் கூறுவதைக் கேளுங்கள், காட்டின் அதிபர்களே, நீங்கள் பெரியவர்களும் வலிமை மிக்கவர்களும் ஆவீர்கள். சிறியவர்களும் பணிவு

மிக்கவர்களுமாகிய நாங்கள் இங்கே வருமாறு உங்களை அழைத்ததைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம்! உங்களில் ஒருவரை நாங்கள் ஜார் ஆக்க விரும்புகிறோம்.''

யானை அடுத்துப் பேசியது:

''உங்கள் எல்லாருக்கும் மிக அருமையான கருத்து. நாம் ஒரு ஜாரை பெற்றிருக்கவேண்டிய நேரமிது. கொள்ளையையும் திருட்டையும் தடுத்து தவறு செய்பவர்களைத் தண்டிக்க வேண்டும். ஆகவே நீங்கள் எல்லாரும் நன்கு யோசித்து புத்திசாலித்தனமாகத் தீர்மானியுங்கள். உங்களில் மிகப் பெரியவனும் வலிமையானவனும் நான் தான், ஜாருக்காக இயற்கையான தேர்வு, ஆனால் என்னை விரும்புகிறீர்களா இல்லையா என்பதைச் சொல்ல வேண்டியது நீங்கள்தான். நீங்கள் முடிவு செய்கின்ற எதற்கும் நான் கட்டுப்படுவேன்.''

யானைத் தனது பேச்சை முடிப்பதற்கு முன்னரே சிங்கம் எழுந்து நின்றது.

''யானையை ஜார் ஆக்குவதா?'' என அது உரக்கக் கத்தியது. ''அது மிகவும் அருவருப்பானதும் மந்தமானதுமாகும். நான் விரைவும், வலிமையும் மிக்கவன், அழகானவனும் கூட. மற்றவர்களை எப்படி எனக்குக் கீழ்ப்பணிய வைக்க வேண்டும் என்பது தெரியும், ஆகவே சிறந்த ஜாராக உங்களால் வேறு யாரைப் பெறமுடியும்?''

அது புறப்படவிருந்த போது, விலங்குகளின் வட்டத்தின் வழியாக திடீரென்று நரி முன்னுக்குத் தள்ளிக்கொண்டுவந்து. ஒரு மரக்கட்டையின் மீது தாவிவந்து சொன்னது:

''ஜாராக விரும்பக்கூடிய சிங்கமாகிய உன்னையும் யானையாகிய உன்னையும் நாங்கள் எல்லாரும் அறிவோம், உங்களில் ஒருவர் பொருத்தமானவர் என்பதையும் நாங்கள் அறிவோம். ஆகவே, உங்களுக்குள் சச்சரவைத் தவிர்ப்பதற்காக, உங்களது முன்னிலையில் நாங்கள் வாக்களிக்காமல் இருப்பது நல்லது, சற்று தொலைவிற்குச் சென்றுவிடுகிறோம்.''

நரியினுடைய வார்த்தைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ''அருமை, அருமை!'' என்ற கூக்குரல்கள் எழுந்தன. அது சொன்னது போலவே நடப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. சிங்கமும் யானையும் அவை இருந்த இடத்திலேயே தங்கிவிட, மற்றவைகள் காட்டின் தொலைவிலுள்ள ஒரு பகுதிக்குப் பிரிந்து சென்றன.

ஆனால் இப்போது ஆரவாரம் எழுந்தது, விலங்குகளில் மெலிவான வையும், பாதுகாப்பு அற்றவையும் யானை ஜார் ஆக வேண்டும் என்று விரும்பின, மேலும் வலிமையான விலங்குகள் சிங்கம் சிறந்ததாக இருக்கும் என்று வலியுறுத்தலாயின.

சிங்கத்திற்குக் கோபமூட்ட நரி அஞ்சியது, ஏனெனில் சிங்கம் தனக்குச் சாதகமாகப் பொதுக் கருத்தைத் திரட்டும் படி அதைக் கேட்டுக்கொண்டது, இல்லாவிட்டால் அதற்காக அது விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்று எச்சரித்தும் இருந்தது. ஆகவே சிங்கத்திற்கு ஆதரவாக மற்ற எவரை விடவும் நரி அதிகம் பேசியது. தன்னை எல்லாரும் பார்க்கக்கூடும் என்பதற்காக ஒரு மரக்கட்டையின் மீது திரும்பவும் தாவி நின்று பேசியது:

''யானைக்காக வாக்களிக்கக் கூடியவர்கள் நம்மில் இருக்கிறார்கள். தவறு என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். உண்மை, அது புத்திசாலித்தனமானது வலிமையானது, தானும் மாமிச உணவு சாப் பிடாது மற்றவர்களையும் சாப்பிட அநுமதிக்காது. ஆனால் அது உடல் பருத்தது மெதுவாகச் செயல்படக்கூடியது, தங்களை ஒருபோதும் அதனால் பிடிக்க முடியாது என்பதை அறிந்து நமது எதிரிகளில் எவரும் அதற்குப் பயப்பட மாட்டார்கள், முன்னைக் காட்டிலும் அதிகமான குறும்பு செய்வார்கள். எல்லாரும் சிங்கத்திற்கு வாக்களியுங் கள்! அது ஒரு நிறைவான ஜாராக இருக்கும். ஏனெனில் அது யானை யைப் போலப் புத்திசாலியானது, ஓரளவுக்கு வலிமையானது, ஆனால், அதைப் போல் இல்லாமல், அத்தனை விரைவுடையது, அதனிடமிருந்து சாத்தானால் கூடத் தப்பி ஓட முடியாது.''

''நீ சொல்வதெல்லாம் சரிதான்,'' என்று மான் துணிந்து சொன் னது. ''ஆனால் புகார் செய்வதற்கு யாருக்கும் காரணமிருக்காது, நாம் சீட்டுக் குலுக்கலாம் என்று நான் யோசனை சொல்கிறேன்.''

''அருமையான யோசனை!'' என்று மற்றவைகள் ஒப்புக்கொண் டன. ''ஆனால் அதை நாம் எப்படிச் செய்ய முடியும்?''

''அது மிகவும் எளிமையானது. அங்கே ஒரு மரப்பொந்து இருக் கிறது. சிங்கத்திற்கு ஆதரவாக இருப்பவர் அதற்குள்ளாக ஒரு பயறும், யானைக்கு ஆதரவாக இருப்பவர் ஒரு கருவாலிக் கொட்டையும் எறியுங்கள்.''

''நல்லது! செய்வதற்கு அதுதான் வழி!''

கருவாலிக் கொட்டைகளையும் பயறுகளையும் ஒரு குவியலாகச் சேர்த்து ஒன்றாகக் கலந்தன, பிறகு நரி தனது பின்னங்கால்களில் நின்று கத்தியது:

''ஒவ்வொருவருக்கும் வாக்களிக்க நேரம்!''

ஒரு வரிசை விரைவாக உருவானது, விலங்குகளில் ஒவ்வொன்றும் பயறுகள் மற்றும் கருவாலிக் கொட்டைகளின் குவியலுக்குச் செல்லத் தொடங்கி, யாருக்காகத் தான் வாக்களிக்க விரும்புகிறது என்பதைப் பொருத்து, கருவாலிக் கொட்டையோ பயறோ எடுத்து பொந்துக்குள் வீசின. மாமிச விலங்குகள் சிங்கத்திற்காக வாக்களித்தன, புல், பெர்ரீ மற்றும் கிழங்குகளைத் தின்னும் விலங்குகள் யானைக்காக வாக்களித்தன.

இப்போது, குவியலில் கருவாலிக் கொட்டைகளை விட பயறுகள் அதிகமிருப்பதைப் பார்த்த நரி, இது யானைக்கு ஆதரவாக வாக்களிப்பு நடந்திருக்கிறது என்பதை அறிந்து வாக்காளர்களிடம் திருட்டுத்தனமாகச் சென்றது. அவை குவியலுக்கு மேலாகக் குனிந்த போது ஒவ்வொன்றைப் பார்த்தும் கண்ணைச் சிமிட்டும், மேலும் அது சிறிய விலங்காக இருந்தால் அதனது காதில் கிசுகிசுக்கும்: ''சிங்கத்திற்காக வாக்களிக்க வா! நீ வாக்கு அளிக்கவில்லை என்றால் ஒரு முட்டைப் பூச்சியைப் போல உன்னை அது நசுக்கிவிடும்.'' சிங்கத்தை எதிர்த்துக் கொள்ள அஞ்சிய எல்லாச் சிறிய விலங்குகளும் கீழ்ப்படிந்தன.

ஆனால் நரி அதை நிறுத்தவில்லை. யாரும் பார்த்துக்கொண்டிருக்கவில்லை என்பதைத் தனக்குப் பின்னால் திரும்பிப் பார்த்து கையளவு பயறுகளை அள்ளி பொந்துக்குள்ளாக வீசியது.

முடிவில், பயறுகளும் கருவாலிக் கொட்டைகளும் எண்ணப்பட்ட போது, அவை சம எண்ணிக்கையில் இருந்தது தெரிய வந்தது.

''இங்கே ஏதோ தவறு இருக்கிறது, நண்பர்களே,'' என்றது கரடி. நாம் திரும்பவும் வாக்களிக்க வேண்டியிருக்கிறது, மேலும் எவரும் ஒரு முறைக்கு மேல் வாக்களிக்காதபடி நாம் கவனத்துடன் பார்க்க வேண்டும்.''

அதை முடிப்பதற்கு நரி விடவில்லை.

''கூடாது, கூடாது, நாம் இரண்டாவது முறை வாக்களிக்கக் கூடாது, அது முடிந்து விடவில்லையே!'' என்று நரி கத்தியது. ''சிங்கத்திடமும் யானையிடமும் நாம் திரும்பவும் சென்று அவற்றினிடையே

ஒன்றை நம்மால் தேர்ந்தெடுக்க முடியவில்லை என்று கூறுவோம். அவற்றில் எது ஜாராக வேண்டும் என்பதை நாம் அந்த இடத்திலேயே தீர்மானிக்கலாம்.''

நரி சொன்னது போலவே விலங்குகள் செய்தன. சிங்கத்தையும் யானையையும் எந்த இடத்தில் அவை விட்டு வந்தனவோ அதே இடத்திற்குத் திரும்பச்சென்று வாக்களித்தது எப்படி என்பதை அவற்றினிடம் கூறின. மேலும் நரி முன்னுக்குச் சென்று, சிங்கத்தையும் யானையையும் பார்த்துப் பேசியது:

''எனது அருமை திரு சிங்கமே, எனது அருமை திரு யானையே, உங்கள் இருவரைப் பற்றியும் எந்தத் தெளிவான முடிவும் எடுக்க முடியாததால், நீங்கள் ஓட்டப்பந்தயம் ஓடுங்கள், வெற்றி பெறுபவர் ஜார் ஆக்கப்படுவீர்கள் என்று நான் முன்மொழிகிறேன்.''

''பகுத்தறிவற்றது! நினைத்துப்பார்க்க முடியாதது!'' என்றது யானை. ''என்னால் வேகமாக ஓட முடியாது, என் கருத்துப்படி ஜார் வேகமாக ஓட வேண்டியதில்லை. அவரிடம் தேவைப்படுவன புத்திசாலித்தனமும், நேர்மையான ஆட்சியுந்தான். தனது குடிமகன்களில் ஒருவன் குற்றமிழைத்துவிட்டு ஓடினால், அவனைப் பிடிப்பதற்கு அரசனால் எப்போதுமே வேறு ஒருவனை அனுப்ப முடியும்.''

''அப்படியா, சரி, உனக்கு ஓட விருப்பமில்லை என்றால், நீங்கள் குதிக்க முடியும்,'' என்றது நரி. ''யார் உயரமாகக் குதிக்கிறீர்களோ அவர் ஜார் ஆக்கப்படுவார்.''

''இல்லை. என்னால் குதிக்கவும் முடியாது, நான் மிகவும் கனமானவன்,'' என்றது யானை.

''சரி, பிறகு, சிங்கம் ஜார் ஆகட்டும்!'' சிங்கத்தை ஆதரித்தவர்கள் கத்தினார்கள்.

''நான் அதை மறுத்துக் கூறவில்லை, ஆனால் அது நியாயமாக இல்லை!'' யானை கூறியது. ''சிங்கத்தால் செய்ய முடிந்ததை என்னால் செய்ய முடியாது, மேலும் என்னால் செய்ய முடிந்ததை அதனால் செய்ய முடியாது. ஆனால் எங்களால் மற்போரிட முடியும். இது பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள்?''

''நல்ல எண்ணம்!'' என்றது நரி. யானையை ஏமாற்றுவதற்கான வழி குறித்து அது சிந்தித்து விட்டது. ''ஆனால் இப்போது அல்ல. இப்போது நாங்கள் எல்லாரும் களைத்து விட்டோம், மேலும் பசியாக

வும் இருக்கிறோம். நாளைக் காலை வரை அதை ஒத்திபோடுவது நல்லது. உங்களைக் கவனிக்க நாங்கள் வர மாட்டோம், அதாவது நம்மில் எஞ்சியவர்கள் என்று கூறுகிறேன். யார் வெற்றி பெற்றது என்பதைப் பார்க்க நாங்கள் பிறகு வருவோம்.''

இதற்கு எல்லாரும் ஒப்புக்கொண்டு, பிறகு கூட்டம் கலைந்தது.

இரவு வந்தது, யானைக்குத் தூக்கம் வந்துவிட்டது. காட்டிற்குச் சென்று ஓக் மரத்தில் சாய்ந்து தூங்கிப்போனது. யானைகள் எப்போதுமே தூங்குவது நின்று கொண்டுதான், ஏனெனில் அவை கீழே படுத்தால், அவற்றால் தாங்களாகவே திரும்ப எழுந்திருக்க முடியாது.

அப்போது தொலைவிலிருந்து நரி அதனைக் கவனித்துக் கொண்டிருந்தது, யானை தூங்கிவிட்டது என்பதைப் பார்த்ததும், அது பற்றிச் சிங்கத்திடம் சொல்வதற்காக ஓடியது.

''விரைந்து வாருங்கள், திரு சிங்கம், இழப்பதற்கு நேரமில்லை,'' என்று சொன்னது. ''யானை தூங்கிப்போனது, உங்களால் அதனுடன் சண்டையிட முடியும்.''

''என்னால் எப்படி அதைச் செய்ய முடியும்?'' என்று சிங்கம் வினவியது. ''அதைக் கொல்ல நான் முயன்றால் அது விழித்தெழுவது நிச்சயம்.''

''இல்லை, இல்லை. நீங்கள் அதைக் கொல்ல வேண்டும் என்பதாக நான் கருதவில்லை. என் மனத்தில் வேறு ஏதோ இருக்கிறது. அது தூங்கும்போது எப்போதுமே மரத்தில் சாய்ந்து கொள்கிறது, இல்லையா? ஆகவே, நாம் இரண்டு பேரும் மரத்தை அரிப்போம். மரம் சாய்ந்துவிடும், யானையும் அதனுடன் விழுந்து விடும், தரையில் அகலப் பரப்பி அது கிடப்பதைப் பார்த்து, சண்டையில் நீங்கள் வென்றுவிட்டீர்கள் என்று நாம் சொல்லும்போது, மற்றவைகள் நம்மை நம்பிவிடும்.''

''அருமையான எண்ணம்! ஆனால் காலைக்கு முன்னர் நாமாகவே மரத்தை விழ வைப்பது ஒருபோதும் முடியாது, பல்வலிதான் நமக்கு வரும். நீ போய் நமது உதவிக்கு யாரையாவது பார்.''

நரி அப்பால் ஓடியது, ஆனால் சீக்கிரத்திலேயே பன்னிரெண்டு ஓநாய்களைக் கூட்டிக்கொண்டு திரும்பவந்தது. அவை ஓக் மரத்தை மேன்மேலும் அரித்துக்கொண்டிருந்த போது விடிந்து விட்டது, மரமோ இன்னமும் நின்றது.

ஏதாவது செய்யப்பட்டாக வேண்டும், ஏனெனில் வெளிச்சம் வந்து கொண்டே இருந்தது, மேலும் எந்த நிமிடத்திலும் யானை விழித்தெழ முடியும்.

இது பற்றி நரி சிந்தித்து, பிறகு மூன்று கரடிகளை அழைத்து அவற்றினிடம் கூறியது:

''நமது ஜார் ஆகப்போகிற திரு யானை அந்த ஓக் மரத்தின் பொந்தில் தேனைக் கண்டது, தனக்காக அதை எடுத்து வைக்கும்படி உங்களிடம் சொல்லுமாறு தூங்கப்போவதற்குச் சற்று முன்னர் என்னிடம் கூறியது. ஏனெனில் அதனது காலை உணவிற்கு அதனை விரும்புகிறது. அது கட்டளையிட்டபடி நீங்கள் அவசியம் செய்ய வேண்டும், அல்லது உங்களை அது தண்டிக்கும்.''

கீழ்ப்படிவதற்குக் கரடிகள் மிகவும் மகிழ்ச்சியுற்று, மரத்தில் ஏறத் தொடங்கின. அவற்றைக் கவனித்தபடி நின்ற நரி, மரத்தின் உச்சியில் உயரே ஒரு காக்கைக் கூட்டைச் சுட்டிக்காட்டி அழைத்தது, தனது குரலைத் தாழ்வாக வைத்துக்கொள்ள முயன்றபடி:

''பொந்து மேலே இருக்கிறது, கரடிகளே!''

மரத்தின் உச்சிக் கொப்புக்கே கரடிகள் ஏறின, அந்தோ! -- அது முரிந்து பெரும் இரைச்சலுடன் கீழே விழுந்து, அவை மூன்றையும். கீழே சாய்த்துக்கொன்றது. யானையும் கூடக் கீழே விழுந்துவிட்டது. அது தரை மீது கிடந்தது, அதனது கால்கள் உயரே நின்றன, அசைக்க முடியவில்லை!

இதற்குள்ளாகத் தங்களது காலை உணவை முடித்துக்கொண்டுவிட்ட பிற விலங்குகள் இப்போது ஓடி வந்தன. தரை மீது யானை வீழ்ந்து கிடப்பதையும் அதற்கு மேலாகச் சிங்கம் நின்று கொண்டிருப்பதையும், சில எட்டுகள் தள்ளி நரி நிற்பதையும் அவை பார்த்தன.

''திரு சிங்கம் எவ்வளவு வலிமையானது என்பதைப் பாருங்கள்!'' தனது வாலை முறுக்கிக்கொண்டு நரி பேசியது. ''திரு யானையை வென்றது மட்டுமன்றி, இந்த மரத்தையும் கூடக் கீழே வீழ்த்தி விட்டது! அத்தகைய வலிமை வாய்ந்த மரம் முரிந்து விழுந்து விட்டது! அந்த மூன்று கரடிகளைப் பார்த்தீர்களா? அவை திரு யானைக்காக நிற்க முயன்றன, ஆனால் திரு சிங்கம் யானையிடமிருந்து அவற்றை அவ்வளவு வேகத்தோடு உதைத்துத்தள்ளியது, அந்த இடத்திலேயே அவை கொல்லப்பட்டன.''

விலங்குகள் அச்சத்துடன் நடுங்கின.

''சிங்கம் ஜார் ஆகட்டும்!'' ஒரே குரலில் அவை கத்தின.

ஆக, சிங்கம் ஜார் ஆயிற்று, ஓநாயைப் புல்தரைகளின் ஆளுநராகவும், புலியைக் காடுகளின் ஆளுநராகவும், நரியை வயல்களின் ஆளுநராகவும் ஆக்கியது.

மூன்று ஆளுநர்களும் சிங்கத்திற்கு நன்றி கூறி அதனுடன் செல்ல, அங்கே நின்ற பிற விலங்குகள் கூறின:

''அந்த மூன்றும் அந்தளவு மரியாதை செய்யப்பட்டது ஏன்? அதற்குத் தகுதியுடைய பலர் இருக்கின்றனர்.''

''உண்மையில், மிகவும் தவறான ஏதோ இருக்கிறது,'' என்றது மான். ''யானையை சிங்கம் வென்று விட்டது தந்திரத்தால் என்றும், அதற்குப் பின்னணியாக நரி இருந்தது என்றும் நான் உறுதியாகக் கருதுகிறேன். அதனது நட்பாதரவைப் பெறுவதற்கு ஓநாய்களும் கட்டாயம் சிங்கத்திற்கு உதவின. புலியைப் பொருத்த மட்டில் அது வித்தியாசமானது. அது பெரியது, வலிமை உடையது மேலும் ஆளுநருக்கான சரியான தேர்வு. சிங்கம் ஓநாயை மறக்க முடியவில்லை. ஏனெனில் அது அதனைப் பழிவாங்க ஒரு வழி கண்டுபிடித்துவிட முடியும். அது தன்னைப் போலவே வலிமையானது, என்பதை சிங்கம் அறியும்.''

''நீ சொல்வது சரி,'' என்றது கரடி. ''நாம் எல்லாரும் ஏமாற்றப்பட்டோம், யானையும் என் மூன்று சகோதரர்களும் ஏமாற்றப்பட்டன. மரத்தைக் கீழே சாய்த்தவைகள் அவைகளே என்பது உறுதி. அதற்காகத் தங்களது உயிர்களைக் கொடுத்தன. அற்பப் பதர்கள்.''

''இப்படித்தான் செய்யப்பட்டது, அது உண்மை.'' மற்றவைகள் கத்தின. ஆனால் அவற்றை நோக்கி நரி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தபோது வார்த்தைகள் அவற்றின் உதடுகளிலேயே உயிரிழந்தன.

''உஸ்!'' என்றது நரி. ''நீங்கள் பேசுவதை யாராவது ஒட்டுக்கேட்டால் நாம் சிக்கலில் மாட்டிக்கொள்வோம்.''

அது நெருங்கி வரவே அவை முழங்கால்களைத் தாழ்த்தி வணக்கம் செய்தன.

''இங்கே எதற்காக நீங்கள் எல்லாரும் கூடியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டது. ''கலகத்திற்கு நீங்கள் திட்டமிடவில்லையே?''

''ஓ, இல்லை! நாங்கள் நேற்றைய விஷயம் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருந்தோம். அத்தகைய ஒரு மகிழ்ச்சியான நாள்! அத்தகு

புத்திசாலித்தனமான ஜாரையும், அத்தகு அருமையான ஆளுநர்களையும் நமக்கு அனுப்பி வைத்தமைக்காகக் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்!''

''அது சரி, ஆனால் என்ன காரணமாக இருந்தாலும் நீங்கள் இந்தளவு எண்ணிக்கையில் கூட வேண்டியதில்லை. இரகசியக் கூட்டங்கள் சட்டத்தால் தடை செய்யப்பட்டிருக்கின்றன.''

அப்போதிலிருந்து விலங்குகள் ஒன்றை ஒன்று பிரிந்து இருந்தன. புல்லையும் கிழங்குகளையும் தின்று வாழக் கூடியவைகள் அமைதியான வாழ்க்கை நடத்தின, யாரையும் தொடவில்லை, ஆனால் மாமிச விலங்குகள் மெலிந்தவைகளையும் ஆதரவற்றவைகளையும் தொந்தரவு செய்து நிறையத் தொல்லை கொடுத்தன. மேலும் 'குற்றச்சாட்டிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள, தாங்கள் எதைச் செய்தாலும் தங்களது சொந்த விருப்பத்தின் பேரில் செய்யப்பட்டவை அல்ல என்றும், அதைச் செய்ய வேண்டி இருந்ததே காரணம் என்றும் அறிவித்தன. மேலும் எதற்காக அவை ஒரு முயலையோ வேறு சிறிய விலங்கையோ கொன்றன என்று விளக்குமாறு சிங்கம் கேட்டபோதெல்லாம் அவை அவ்வாறு செய்ததற்கான காரணம் முயல் ஜாரைக் கேலி செய்தது அல்லது ஜாரைக் கொல்வதற்குச் சதி செய்தது என்பதே அவற்றினது விடையாகும். இந்தப் பொய்களைச் சிங்கம் நம்பி ஆளுநர்களுடைய நம்பிக்கைக்குரிய பணிக்காக அவற்றிற்கு நன்கொடை அளித்தது.

இவ்வாறு அது சென்றது.

ஒரு நாள், எலி மற்றும் சிறிய விலங்குகளின் தனது உணவினால் களைப்படைந்த நரிக்கு வயல் வெளிகளில் வேறு எதுவும் காணப்படவில்லை, ஒரு மாற்றத்திற்காகக் கோழிக்குஞ்சையோ வாத்தையோ சுவை பார்க்க விருப்பங்கொண்டு சிங்கத்தைப் பார்க்கச் சென்றது அது.

''மேன்மைதங்கிய அரசே, தயவு செய்து நீங்கள் அநுமதித்தால் வயல்களின் ஆளுநர் பதவியிலிருந்து நான் விடுவிக்கப்பட விரும்புகிறேன்,'' என்றது. ''கோழிக்கூடுகளுக்குப் பொறுப்பாக வைக்கப்பட வேண்டும் என்பது என் தாழ்மையான விருப்பம், ஏனெனில் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் திருடர்களிடமிருந்தும் கோழிக்குஞ்சுகளைப் பாதுகாக்க நான் விரும்புகிறேன்.''

''கோழிக்குஞ்சுகளிடம் நீ சொன்னாயா?'' என்று வியப்போடு சிங்கம் கேட்டது. ''ஆனால் என்னுடைய அதிகாரங்கள் அந்தளவுக்குச்

செல்வதில்லை. கோழிக்குஞ்சுகள் பறவைகள், மேலும் பறவைகள் தங்கள் சொந்த ஜாரைக் கொண்டிருக்கின்றன. இந்தக் கொள்ளைக் காரர்கள் திருடர்கள் எல்லாம் யார் என்று நான் கேட்கலாமா?''

''மரநாய்களும் எலிகளும், மேன்மைதங்கிய அரசே. எல்லா நேரத் திலும் அவை கோழிகளையும் கோழிக்குஞ்சுகளையும் கொன்று வருகின் றன. அது பற்றி ஒரு வீட்டுச் சேவல் என்னிடம் கூறியது. அத்தகைய சிறிய உயிரினங்கள் திருடப்படவும், தாக்கிக் கொள்ளையடிக்கப்படவும் மேன்மைதங்கிய அரசர் அனுமதித்துக்கொண்டிருப்பதற்காக எல்லாரும் சிரித்துக்கொண்டிருந்தார்கள் என்று அது சொன்னது.''

சிங்கம் நரியை நம்பி, அது கோரிய பதவியை அதற்கு அளித்தது.

நரி பெருமகிழ்ச்சி கொண்டது. கிராமத்திற்கு மிகுந்த அவசரத் தோடு புறப்பட்டது, இருட்டியதுமே தனக்குப் பொறுப்பானவைகளைப் பார்வையிடச் சென்றது. அன்றைய நாளிலிருந்து இதை அது ஒவ் வொரு நாளும் செய்தது, ஒவ்வொரு முறையும் இரண்டு அல்லது மூன்று கோழிக்குஞ்சுகளைக் கொல்லும்.

ஆனால் ஒரு நாள், கோழிக்கூடுகளில் ஒன்றுக்குச் சொந்தக்கார னாகிய விவசாயி, நரிக்காகக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவன், அதனைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டான். நரி அந்நேரத்தில் கோழிக்கூட்டிற்குள்ளாகத் தவழ்ந்து கோழிக்குஞ்சுகளைத் தேடியபோது அவன் அதனது வாலைப் பற்றிப் பிடித்து உயிரோடு இருப்பதை விட செத்தது மாதிரி போகுமாறு அந்தளவுக்கு அடி கொடுத்தான். பிறகு அந்த மனிதன் நரியின் வாலை ஒரு கயிற்றோடு கட்டி, வேலிக் கம்பத்தில் தொங்கவிட்டு விட்டுப் படுக்கைக்குச் சென்றான்.

இதற்குள்ளாக, ஓரளவுக்கு மீண்டும் உயிர்பெற்ற நரி கயிற்றை இழுக்கவும், பிடுங்கவும் தொடங்கியது, ஆனால் அது விடவில்லை, ஆகவே தனது வாலைத் துண்டித்துக்கொள்ள பற்களால் கடிக்க, தாங்க முடியாத அளவுக்கு வலி கடுமையாக இருந்த போதிலும், விடுபட்டதும் திறந்த வெளியை நோக்கித் தலைதெறிக்க ஓடியது.

''நான் என்ன செய்யப் போகிறேன்?'' அது தனக்குத்தானே கேட்டது. ''மற்றவர்களுக்கு என்னை நான் எப்படிக் காட்டுவேன்? எனக்குக் கீழ்ப்படிய அவை மறுக்கும். எனக்குப் பின்னால் என்னைப் பற்றி அவை சிரிக்கும். அது பற்றி நான் பொருட்படுத்தவில்லை. சிங் கத்தைப் பற்றியே கவலைப்படுகிறேன். எனது வாலைப் பற்றி அது

கேட்டால் என்ன சொல்வேன்? வால் இல்லாத ஓர் ஆளுநர் — இந்த அவமானத்துடன் என்னால் உயிர்வாழவே முடியாது! இதை விட அந்த மனிதன் என்னைக் கொன்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும்!.. ஐயோ, செய்வதற்கு ஏதுமில்லை! எப்படியோ எனது வாழ்க்கையை நான் வாழ்ந்தாக வேண்டும். முயலினுடைய வீட்டிற்குச் சென்று எனது காயங்கள் ஆறுகின்ற வரை தங்கியிருக்கலாம் என்று நினைக்கிறேன்.''

இதைத் தீர்மானித்ததும், முயலினுடைய வீட்டிற்கு நேராகப் புறப்பட்டது.

''இரவுக்கு என்னை உள்ளே விடு, முயலே!'' என்று அழைத்தது. ''என்றாவது ஒரு நாள் பதிலுக்கு உனக்கு நான் நல்லது செய்வேன்!''

''என்னால் உன்னை உள்ளே விட முடியாது, இந்த வீட்டில் எனது குழந்தைகளைத் தவிர வேறு யாருக்கும் போதிய இடம் கிடையாது,'' என்று முயல் பதிலளித்தது.

''திற, நான் உனக்கு சொல்கிறேன்!'' என்று இப்போது மிக உரக்க நரி அழைத்தது. ''நான் யார் என்று உனக்குத் தெரியாதா? நான் வயல்களின் ஆளுநரும் கோழிக்கூடுகளின் மேற்பார்வையாளரும் ஆவேன். இவற்றின் பொறுப்பில் ஜாரே என்னை நியமித்தார்.''

முயல் அஞ்சிநடுங்கி கதவைத் திறந்தது, நரி உள்ளே வந்து, படுக்கையிலிருந்து முயலின் குழந்தைகளைத் தள்ளிவிட்டு விட்டு, அதன் மீது தானே சுருட்டிக்கொண்டு படுத்தது. முயல் எதுவும் சொல்லவில்லை, ஏனெனில் நரிக்குக் கோபமூட்ட அது விரும்பவில்லை.

இதற்குள்ளாகத் தனது குழந்தைகளுக்கு உணவு பொறுக்குவதற்காக முயல் வெளியே சென்றது, இந்நேரத்தில் மிகுந்த பசியை உணரத் தொடங்கிய நரி, அவற்றில் ஒன்றைப் பிடித்துத் தின்றது.

முயல் திரும்பி வந்தது, அந்தோ! — அதனது குழந்தைகளில் ஒன்று போய்விட்டது.

''எங்கே எனது சிறிய குழந்தை, மேன்மை சான்றீர்?'' என்று அது நரியிடம் கேட்டது.

''உனது குட்டிகளைப் பற்றி என்னிடம் கேட்க உனக்கு எவ்வளவு துணிச்சல், அவைகளினுடைய தாதி அல்ல நான்!'' நரி கத்தியது. ''அவற்றில் நூறு நீ பெற்றிருக்கிறாய், ஆகவே அவற்றை எண்ண வேண்டும் என என்னை எதிர்பார்க்காதே. ஜார் உன்னைத் தண்டிக்க வேண்டாம் என நீ விரும்பினால் நீயாகவே பணிவோடு நடந்து கொள்!''

முயல் குடிசையினின்றும் வெளியேறி, அதனது கண்களினின்றும் கண்ணீர் ஆறாய்ப் பெருக, திரும்பவும் தனது குழந்தைகளுக்காக உணவு தேடிப் புறப்பட்டது. சீக்கிரமே அது திரும்பிவந்தது, அந்தோ! — அதனது குழந்தைகளில் மற்றொன்று போய்விட்டது. அது பற்றி நரியிடம் அது எதுவும் சொல்லவில்லை, எஞ்சிய குழந்தைகளுக்கு உணவளித்துவிட்டு வெளியே சென்றது. அங்கே நின்று அழுதது, அப்போது அதனைக் கடந்துசெல்ல நேரிட்ட அதனது அண்டை வீட்டுக்காரனான மற்றொரு முயல் அதனைப் பார்த்து எதற்காக அழுது கொண்டிருக்கிறது என்று கேட்டது.

"என்னால் என்ன செய்ய முடியும்!" முதலாவது முயல் பதிலளித்தது. "இந்த நரி எனது வீட்டில் வசித்துக்கொண்டு எனது குழந்தைகளைத் தின்று வருகிறது. ஒரு வார்த்தை சொல்ல எனக்குத் துணிவில்லை, ஏனெனில் என்னைப் பற்றி ஜாரிடம் சொல்வதாக அது அச்சுறுத்துகிறது."

"நீயாகவே ஏன் ஜாரிடம் புகார் செய்யக் கூடாது?"

"அது என்ன நன்மை செய்யும்? நம்மைப் போன்றவர்களிடமிருந்து எந்தப் புகாரும் ஒருபோதும் சிங்கத்தைச் சென்றடைவதில்லை. அதனை அண்டியிருப்பவைகளே அதைத் தடை செய்யும். அவை நரியுடன் மிக நெருங்கிய பழக்கம் உள்ளவைகள், அதனோடு சேர்ந்து கொள்ளும். எனக்கு ஆதரவாக எவரும் ஒரு வார்த்தை பேசமாட்டார்கள்."

இரண்டாவது முயல் அப்பால் செல்லவும், முதலாவது முயல் தனது வீட்டுக்குத் திரும்பியது. அது கதவைத் திறந்தது — அந்தோ, கொடுமையிலும் கொடுமை! — அதனது குழந்தைகளில் கடைசியும் கூடப் போய்விட்டது. தன்னைத்தானே நரியிடம் காட்டிக்கொள்ள அந்தளவுக்குப் பயப்படவே, முயல் திரும்பவும் வயலுக்குச் சென்று, தரையில் அமர்ந்து கத்திக் கதறத் தொடங்கியது. அந்த நேரத்தில் அதனைக் கடந்து செல்ல நேரிட்ட ஓநாய், எதற்காக அழுது கொண்டு இருக்கிறது என்று கேட்டது.

"என்னால் என்ன செய்ய முடியும்!" என்று முயல் பதிலளித்தது. "நரி எனது வீட்டிற்குள்ளாக நுழைந்து எனது எல்லாக் குழந்தைகளையும் தின்றுவிட்டது. உள்ளே எனது முகத்தைக் காட்டக் கூட அந்தளவுக்கு நான் அஞ்சுகிறேன், ஏனெனில் அது என்னையும் கூடத் தின்று விடலாம்."

''கவலைப்படாதே, முயலே, நான் உன்னோடு வந்து அதனை வெளியே துரத்துகிறேன்.''

அவை வீட்டிற்குத் திரும்பிச்சென்று, வாசலில் நின்று ஓநாய் அழைத்தது:

''நீ யாராக இருந்தாலும் சரி, வீட்டை விட்டு வெளியே வா, முயலை அமைதியாக இருக்க விடு!''

''நான் வயல்களின் ஆளுநர்! அவ்வாறு என்னிடம் பேச யாருக்குத் துணிவிருக்கிறது?'' என்று நரி பேசியது.

''ஓ, அது நீதானா, நரியே,'' என்றது ஓநாய். ''அப்பாவி முயலை இத்தனை மோசமாக நடத்துவதற்காக நீயே வெட்கப்பட வேண்டும்! நானும் கூட ஆளுநர் தான், புல்தரைகளின் ஆளுநர். உடனடியாக முயலினுடைய வீட்டை விட்டு வெளியேற நான் உனக்கு உத்தரவிடு கிறேன். நீ செய்யவில்லை என்றால், நான் ஜாரிடம் சென்று, நீ என்ன செய்தாய் என்பதை அதனிடம் கூறுவேன். அது பெரிதும் மகிழ்ச்சியடை யும் என்று நான் சந்தேகிக்கிறேன்.''

''எனது விவகாரங்கள் உனக்குச் சம்பந்தப்பட்டதில்லை, ஓநாயே, ஆகவே குறுக்கிட வேண்டாம்!'' என்றது நரி.

இம்மாதிரி அநாகரிகமான முறையில் பேசியதனால் கோபமுற்ற ஓநாய், ஜாரைப் பார்க்கச் சென்றது.

''மேன்மைதங்கிய அரசே, நரி கோழிக்கூடுகளைக் கொள்ளையடித்து விட்டது என்பதை உங்களிடம் தெரிவிக்க வேண்டியது எனது வேத னைமிக்க கடமை,'' என்றது அது. ''கோழிக்குஞ்சுகளைப் பாதுகாப் பதற்குப் பதிலாக அவற்றை அது தின்றது. இதனது செயலினால் முயலும் துயருற்றுவிட்டது. இதனுடைய வீட்டை நரி எடுத்துக் கொண்டு விட் டது, இதனது எல்லாக் குழந்தைகளையும் கொன்று, முயலையும் கூட அநேகமாகக் கொன்றுவிட்டது. அப்பாவி முயலைத் தனிமையில் விட அதனிடம் நான் கூறினேன், ஆனால் இது என்னுடைய அல்லது வேறு யாருடைய வேலையோ அல்ல என்று அது சொன்னது, மேலும் அது என்ன செய்ய விரும்புகிறதோ அதனைச் செய்யும்.''

ஓநாய் சொன்னதைக் கேட்ட சிங்கம், நீதி மன்றத்திற்கு நரிதானே நேரில் வர வேண்டும் என்றும் அங்கு அது விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கும் உத்தரவுடன் மானை அனுப்ப அதற்கு உத்தரவிட்டது.

தான் அழைக்கப்பட்டது எதற்காக என்பதைக் கேட்டதும், என்ன செய்வதென்று நரி சிந்திக்கத் தொடங்கியது. சிங்கத்தை இளக வைக்கும் வழி குறித்து அது சிந்தித்து முடித்த போதே, மாளிகைக்குப் புறப் பட்டது. அதனுடைய வருகைப் பற்றி மதிப்பிட்ட சிங்கம், நரியை தன்முன்னர் அழைத்து வருமாறு உத்தரவிட்டது.

''சட்ட விரோதமான முறையில் நீ செயல்படுவது குறித்து நான் கேள்விப்பட்டது என்ன?'' சிங்கம் கர்ஜித்தது. ''முயலை இம்மாதிரி நடத்த எவ்வளவு துணிச்சல் உனக்கு? கோழிக்குஞ்சுகளை நீ தின்று விட்டு, பழியை மற்றவர்கள் மீது போட எவ்வளவு துணிச்சல் உனக்கு?''

சிங்கம் விளையாட்டுத்தனமான மன நிலையில் இல்லை என்பதை நரி கண்டது. அதற்கு முன்னர் முழங்காலிட்டுக் கீழே விழுந்து, தனது தலை தாழ்த்தி வணங்கியது.

''பொறுங்கள், மேன்மைதங்கிய அரசே, எனது சார்பாகப் பேச எனக்கு அநுமதிக்க வேண்டும்!'' என்று கத்தியது.

''மேற்கொண்டு கூறு!''

''மேன்மைதங்கிய அரசரே, என்னைப் பற்றி உங்களிடம் ஓநாய் தனது கோபத்தின் காரணமாக என்ன சொல்லியிருக்கும் என்பதை என்னால் நன்கு கற்பனை செய்ய முடியும். ஆனால், மேன்மைதங்கிய அரசரே, என்னை நம்புங்கள், குற்றவாளி அதுதானே தவிர நானன்று. முயலினுடைய குழந்தைகளைத் தின்றது அது தான், முயலுக்காக நான் பரிந்து பேசிய போது, அது எனது வாலை நறுக்கிவிட்டது. எனக்கு அது இழைத்த அவமானம் என்ன என்பதைச் சற்று பாருங்கள்! வாலின்றி ஒரு நரி, மேன்மைதங்கிய அரசரே, – இந்த அவமானத்துடன் நான் எப்படி உயிர்வாழ முடியும்? இப்போது எல்லாக் குற்றத்தையும் எனது தோள் மீது சுமத்த அது முயற்சித்துக் கொண்டிருக்கிறது!''

நிமிட நேரத்திற்கு சிங்கம் சிந்தனையில் ஆழ்ந்தது.

''இது வருந்தத்தக்கதுதான், உன்னை என்னால் நன்கு புரிந்து கொள்ள முடியும்,'' என்றது சிங்கம். ''ஆனால் உன்னை ஆளுநராகத் தொடர்ந்து நான் வைத்திருப்பேன் என்று எதிர்பார்க்காதே, மாறாக உன்னை அரண்மனைக் காவலுக்கு நியமிக்கிறேன். தகுந்த மாதிரி ஓநாய் தண்டிக்கப்படும்.''

அது ஓநாயை வரச் சொல்லியனுப்பிவிட்டு, அந்த விஷயம் குறித்துத் தானே சிந்திக்கத் தொடங்கியது. நரியும் ஓநாயும் இந்த இரண்டில்

எது குற்றவாளி என்பதை அதனால் தீர்மானிக்க முடியவில்லை, ஆனால் இரண்டுமே பொய் பேசுவதாக உணர்ந்தது. அவற்றில் ஒன்று சாக வேண்டும், ஆனால் எது என்பதுதான் கேள்வி. உண்மையில், நரி போக்கிரியே, ஆனால் அதனது தந்திரங்கள் வாயிலாக தான் ஜாராக நியமிக்கப்பட்டபோது அதை எப்படித் தண்டிக்க முடியும்? ஓநாய்க்கு அது குறைவாகவே கடன்பட்டிருக்கிறது. ஓக் மரத்தைக் கீழே சாய்க்க அதுதான் உதவியது என்பது உண்மை, ஆனால் எந்த முட்டாளும் அந்தளவுக்குச் செய்திருக்க முடியும்!''

இம்மாதிரியாகச் சிங்கம் காரணம் கண்டது. ஓநாய் அதற்கு முன் பாகக் கொண்டு வரப்பட்டபோது, தனது பாதங்களால் அதைப் பற்றிப்பிடித்து, நசுக்கிக்கொன்றது.

இது பற்றி மற்ற ஓநாய்கள் அறிந்தபோது கோபத்தோடு அவை ஒன்று கூடிப் பழிவாங்கத் துடித்தன. அவற்றினுடைய சகோதரனின் சாவுக்காக நரி விலை கொடுக்க வேண்டியிருந்தது, அது போலவே சிங்கமும். போரே ஒரு வழியாகத் தோன்றியது. கூட்டமாக அவை ஒன்றுசேர்ந்து, நரிகளை அவற்றினுடைய வீடுகளில் தாங்கின, கொள் ளையடித்தலும், சூறையாடலும், கொலை செய்தலும், இளையவர் அல்லது முதியவர் என்று கருணை காட்டாதவாறு நடந்தன.

தங்களுடைய கோழிக்குஞ்சுகளையும், ஆட்டுக்குட்டிகளையும், கன் றுக்குட்டிகளையும் இழந்ததனால் வேதனையுற்ற விவசாயிகள் திருடர் களைப் பிடிக்க வேண்டும் எனத் தீர்மானித்து, இதற்கு ஒரு முடிவு காண விரும்பினர். இல்லையெனில் இது ஒருபோதும் ஒரு முடிவுக்கு வந்திருக்காது. அவர்கள் சிங்கத்தை வலையில் மாட்டி கூண்டில் அடைத் தார்கள், ஓநாய்களுக்கும் அடி கொடுத்தார்கள், அது அந்தளவுக்கு பிற விலங்குகளை நடுக்குறச் செய்ததால் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் அவை ஒளிந்துகொண்டன. அதன் பிறகு கிராமப்புறத்தில் ஒழுங்கு நிலவி, திரும்பவும் அவை எல்லாம் அமைதியாக வாழ்ந்தன.

குட்டிக்குச்சி தெலெசிக்

ஒரு காலத்தில் ஒரு கிழவனும் கிழவியும் வாழ்ந்தார்கள். அவர்களுக்குக் குழந்தைகளும் கிடையாது, வயதான காலத்தில் அவர்களைப் பார்த்துக்கொள்ள ஆளும் கிடையாது. இது உண்மையில் அவர்களைப் பெரிதும் கவலைக்குள்ளாக்கியது.

ஒருநாள் கிழவி கிழவனிடம் சொன்னாள்:

''காட்டுக்குப் போய், ஒரு மரத்தை வெட்டி வா, கிழவா. நாம் ஒரு சிறிய தொட்டில் செய்து, அதில் நான் ஒரு மரக்குச்சியைப் போட்டு, தொட்டியை ஆட்டி, அந்த முறையில் என்னையே மகிழ்வித்துக்கொள்கிறேன்.''

முதலில் கிழவன் அதைச் செய்வதற்கு விரும்பவில்லை, ஆனால் கிழவி திரும்பத் திரும்ப அவனைக் கெஞ்சவே, இறுதியில் அவள் சொன்னது போலச் செய்தான். காட்டுக்குப் போய் ஒரு மரத்தை வெட்டி அதைக் கொண்டு ஒரு தொட்டில் செய்தான். அந்தத் தொட்டிலில் கிழவி ஒரு மரக்குச்சியைப் போட்டு, அதை ஆட்டத் தொடங்கி பாடினாள்:

''குட்டிக் குச்சியே தூங்காய் நன்றே,
கூழும் சமைத்து நானும் தருவேன்,

ஜெல்லியும் சமைத்து நானும் வருவேன்,
குட்டிக்குச்சி தெலெசிக் தூங்காய் நன்றே!''

மாலையில் படுக்கைக்குச் செல்கின்ற நேரம் வரையில் தொட்டிலைத் தொடர்ந்து ஆட்டிக்கொண்டே இருந்தாள்.

மறுநாள் காலையில், கிழவனும் கிழவியும் எழுந்து தொட்டிலில் பார்த்தபோது, அந்தோ! — மரக்குச்சிக்குப் பதிலாக அதில் சிறு பையன் இருந்தான்.

வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்கு அது அவர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது! இப்போது அவர்களுக்கு ஒரு மகன் இருந்தான், அவனை குட்டிக்குச்சி தெலெசிக் என அழைத்தார்கள்.

தெலெசிக் மிக விரைவாக வளர்ந்து அத்தனை அழகனாக மாறவே, அவனிடமிருந்து தங்களுடைய கண்களை எடுப்பதற்குக் கிழவனுக்கும் கிழவிக்கும் முடியவில்லை.

ஒரு நாள், தெலெசிக் இளைஞனாக வளர்ந்தபோது, கிழவனிடம் சொன்னான்:

''எனக்கு ஒரு தங்கப் படகும் வெள்ளித் துடுப்பும் செய்து தா, அப்பா, நான் மீன் பிடித்து அம்மாவுக்கும் உனக்கும் உணவளிப்பேன்.''

கிழவன் தங்கப் படகும் வெள்ளித் துடுப்பும் செய்து, படகை நீரில் விட, தெலெசிக் படகைச் செலுத்தி மீன் பிடித்தான். தனது பெரும் பகுதி நேரத்தை அவன் நீரிலேயே செலவிட்டான். கொஞ்சம் மீன் பிடித்து அதைத் தனது பெற்றோர்களிடம் கொடுப்பான், பிறகு மீண்டும் படகைச் செலுத்திக்கொண்டு போவான். படகில் வைத்துச் சாப்பிடுவதற்காக அவனுக்குக் கிழவி உணவு கொண்டுவந்து, இப்படி புத்திமதிசொல்வாள்:

''நான் உன்னைக் கூப்பிடுகிறபோது மட்டுமே கரைக்குப் படகைச் செலுத்த வேண்டும் என்பதை நீ அவசியம் நினைவில் கொள்ள வேண்டும், தெலெசிக். யாரோ அந்நியர் உன்னை அழைப்பதைக் கேட்டால், நீ அவசியம் படகைத் தள்ளிச் செலுத்திப்போக வேண்டும்!''

ஒருநாள் கிழவி தெலெசிக்கு உணவு சமைத்து, அதை நதிக் கரைக்குக் கொண்டுவந்து அழைத்தாள்:

''குட்டிக் குச்சி தெலெசிக்கே,
வாராய் விரைந்து, உனக்கே

உண்ண உணவும் பருகிட
நீரும் கொண்டு வந்தேன்!''

தெலெசிக் அவள் கூறுவதைக் கேட்டுக் கத்தினான்:

''தங்கப் படகே, நகன்றிடு,
வெள்ளித் துடுப்பே, செலுத்திடு,
கரைதனில் தாயும் எனக்காய்
காத்தே இருக்கின் றனளே!''

கரைக்கு வந்து நிறுத்தி, உணவையும் நீரையும் தின்று பருகி, வெள்ளித் துடுப்பால் படகைச் செலுத்தி, மீன் பிடிக்கத் திரும்பவும் கிளம்பினான்.

அப்போது தெலெசிக்கை அவனது அம்மா அழைப்பதைக் கேட்ட ஒரு பாம்பு, கரைக்கு ஊர்ந்து வந்து, தனது கரகரத்த குரலில் அழைத்தது:

''குட்டிக் குச்சி தெலெசிக்கே,
வாராய் விரைந்து, உனக்கே
உண்ண உணவும் பருகிட
நீரும் கொண்டு வந்தேன்!''

ஆனால் தெலெசிக் சுலபத்தில் ஏமாறவில்லை.

''இது என் அம்மாவினுடைய குரல் இல்லை!'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, உரக்கச் சொன்னான்:

''தங்கப் படகே, நகன்றிடு,
வெள்ளித் துடுப்பே செலுத்திடு,
கரைக்குத் தொலைவாய் என்னையே
எடுத்துச் செல்வாய் நீயுமே!''

தனது துடுப்பைச் செலுத்த, படகு அப்பால் சென்றது. சற்று நேரம் கரையில் காத்திருந்த பாம்பு, பிறகு ஊர்ந்து போய்விட்டது.

மற்றொரு முறை தெலெசிக்கின் தாயார் அவனுக்காகச் சிற்றுண்டி தயாரித்து, அதை ஆற்றின் கரைக்குக் கொண்டுவந்து அழைத்தாள்:

''குட்டிக் குச்சி தெலெசிக்கே,
வாராய் விரைந்து, உனக்கே
உண்ண உணவும் பருகிட
நீரும் கொண்டு வந்தேன்!''

அவள் அழைப்பதை தெலெசிக் கேட்டுக் கத்தினான்:

''தங்கப் படகே, நகன்றிடு,
வெள்ளித் துடுப்பே, செலுத்திடு,
கரைதனில் தாயும் எனக்காய்
காத்தே இருக்கின் றனளே!''

கரைக்கு வந்து நிறுத்தி, உண்டு பருகி விட்டு, தான் பிடித்திருந்த மீனை அம்மாவிடம் கொடுத்துவிட்டுத் திரும்பவும் கிளம்பினான்.

அந்தப் பாம்போ கரைக்கு ஊர்ந்து வந்து, தனது கரகரத்த குரலில் அழைத்தது:

''குட்டிக் குச்சி தெலெசிக்கே,
வாராய் விரைந்து, உனக்கே
உண்ண உணவும் பருகிட
நீரும் கொண்டு வந்தேன்!''

ஆனால் தன் அம்மா அழைக்கவில்லை என்பதை அறிந்த தெலெசிக், தனது துடுப்பைப் பலமாகப் போடத் தொடங்கிக் கத்தினான்:

''தங்கப் படகே, நகன்றிடு,
வெள்ளித் துடுப்பே, செலுத்திடு,
கரைக்குத் தொலைவாய் என்னையே
எடுத்துச் செல்வாய் நீயுமே!''

படகு அப்பால் சென்றது, தெலெசிக்கை ஏமாற்றும் அதனது முயற்சி பயனளிக்கவில்லை என்பதைக் கண்ட பாம்பு, ஆற்றை விட்டுப் புறப்பட்டு, கொல்லனிடம் சென்றது.

''கொல்லனே, கொல்லனே!'' எனக் கத்தியது. ''எனக்கு ஒரு புதிய தொண்டை அடித்துக்கொடு. தெலெசிக் அம்மாவினுடையதைப் போல அத்தனை மெல்லியதாக எனது தொண்டை இருக்க விரும்புகிறேன்.''

கொல்லன் அவ்வாறே செய்ய, பாம்பு ஆற்றுக்குச் சென்று அழைத்தது:

''குட்டிக் குச்சி தெலெசிக்கே,
வாராய் விரைந்து, உனக்கே
உண்ண உணவும் பருகிட
நீரும் கொண்டு வந்தேன்!''

தன்னை அழைப்பது அம்மா என்று எண்ணிய தெலெசிக் கத்தினான்:

''தங்கப் படகே, நகன்றிடு,
வெள்ளித் துடுப்பே, செலுத்திடு,
கரைதனில் தாயும் எனக்காய்
காத்தே இருக்கின் றனளே!''

அவன் கரைக்கு வந்து நிறுத்தவும், பாம்பு அவனைக் கைப்பற்றித் தனது வீட்டிற்குத் தூக்கிச் சென்றது.

''அலியோனா, குட்டிப் பாம்பே, கதவைத் திற!'' எனக் கத்தியது.

அலியோனா கதவைத் திறக்கவும் பாம்பு உள்ளே வந்தது.

''அலியோனா, குட்டிப் பாம்பே, அடுப்பைச் சூடாக்கு, செங்கல்கள் அதை விட்டு வெளியே உருண்டு வருமாறு அவ்வளவு சூடாக்கி தெலெசிக்கை எனக்காக வறுத்துக்கொடு,'' என்றது பாம்பு. ''நான் போய் விருந்தினர்களை அழைத்து வருகிறேன், நாம் விருந்து படைக்கலாம்.''

விருந்தினர்களை அழைக்க அது விரைந்து கிளம்பியது.

அலியோனா அடுப்பை மூட்டி, அந்தளவுக்குச் சூடாக்கிப் பிறகு சொன்னது:

''இந்த மண்வாரியில் உட்கார், தெலெசிக்.''

''எப்படிச் செய்வதென்று எனக்குத் தெரியாது,'' என்றான் தெலெசிக். ''எப்படி என்று எனக்கு நீ காட்ட வேண்டும்.''

''வா, இப்போது, இதில் உட்கார்!''

தெலெசிக் மண்வாரியில் தனது கையை வைத்தான்.

''இப்படியா?'' என்றான்.

''இல்லை! நான் சொல்வதை நீ கேட்கவில்லை? நீ அதன் மீது உட்கார வேண்டும்!''

தெலெசிக் மண்வாரியில் தனது தலையை வைத்தான்.

''இப்படியா?'' திரும்பவும் கேட்டான்.

''இல்லை!''

''பிறகு, இப்படியா?'' தனது காலை மண்வாரியில் வைத்தான்.

''இல்லை, முட்டாள்!''

''சரி, எப்படிச் செய்வதென்று எனக்குக் காட்டு.''

அதற்காக எதுவுமே செய்ய முடியவில்லை, ஆகவே அது மண்வாரியில் ஏறவும், தெலெசிக் அதனைக் கைப்பற்றி அடுப்புக்குள்ளாகத் திணித்து அடுப்புக் கதவை மூடினான். பிறகு குடிசையை விட்டுக் கிளம்பி, ஓர் உயரமான கருமுசுக்கொட்டை மரத்தின் மீது ஏறிக் காத்திருந்தான்.

சிறிது நேரம் செல்லவும், பாம்பு தனது பறவைநாக விருந்தினர் களுடன் பறந்து வந்தது.

''அலியோனா, குட்டிப் பாம்பே, கதவைத் திற!'' என அழைத்தது.

கதவு மூடியவாறே இருந்தது.

''அலியோனா, குட்டிப் பாம்பே, எங்கே போய்விட்டாய்? கதவைத் திற'' திரும்பவும் அழைத்தது.

ஆனால் அலியோனா பதிலளிக்கவில்லை.

''குட்டியே உன்னைக் கொள்ளை கொண்டுபோக! எங்கோ அது போய்விட்டது!'' பாம்பு கத்தியது.

பாம்பு கதவைத் திறந்து, தனது விருந்தினர்களை உள்ளே அழைத்து மேசையைச் சுற்றிலும் உட்கார வைத்தது. பிறகு அது அடுப்பினின்றும் உருவலை வெளியே எடுத்து, அது தெலெசிக் என எண்ணிக்கொண்டு, அதுவும் அதனது விருந்தினர்களும் அதை உண்ணத் தொடங்கின, வயிறு நிறையத் தின்றுவிட்டு, வெளியே முற்றத்திற்கு வந்து புல் மீது கிடந்தன.

''நாம் புல் மீது படுத்து உருளுவோம், ஏனெனில் சிறுவன் தெலெசிக் கின் அருமையான உணவைச் சாப்பிட்டிருக்கிறோம்!'' எனக் கத்தின.

தெலெசிக்கோ மரத்தின் உச்சியிலிருந்து சொன்னான்:

''ஆமாம், புல் மீது படுத்து உருளுங்கள், ஏனெனில் சிறுமி அலியோ னாவின் அருமையான உணவைச் சாப்பிட்டிருக்கிறீர்கள்!''

அவன் கூறுவதைக் கேட்டு, ஆனால் யார் சொன்னது என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் அவை திரும்பவும் கத்தின:

''நாம் புல் மீது படுத்து உருளுவோம், ஏனெனில் சிறுவன் தெலெசிக் கின் அருமையான உணவைச் சாப்பிட்டிருக்கிறோம்!''

மரத்தின் உச்சியிலிருந்து தெலெசிக் திரும்பவும் சொன்னான்:

''ஆமாம், புல் மீது படுத்து உருளுங்கள், ஏனெனில் சிறுமி அலியோனாவின் அருமையான உணவைச் சாப்பிட்டிருக்கிறீர்கள்!''

இப்போது இது அவற்றை நிறுத்தி, யார் சொன்னது என்பதைத் தேடச் செய்தது. அவை சுற்றிலும் பார்த்தன, கருமுசுக்கொட்டை மர உச்சியில் தெலெசிக் இருப்பதைக் கண்டு, மரத்தை நோக்கி விரைந்து, அதை அரிக்கத் தொடங்கின. அவற்றினுடைய பற்களை உடைத்துக்கொள்கின்ற வரை அவை மேன்மேலும் அரித்துக்கொண்டிருந்தன, ஆனால் அவற்றால் அதை முற்றாக அரிக்க முடியவில்லை. ஆகவே கொல்லனிடம் ஓடிச் சென்று கூறின:

''கொல்லனே, கொல்லனே, கருமுசுக்கொட்டை மரத்தை முற்றாக அரிக்க எங்களுக்குப் பற்களை அடித்துக்கொடு!''

கொல்லனும் அவற்றிற்கு உலோகப் பற்களை அடித்துக்கொடுக்க, அவை திரும்பவும் மரத்தைத் தொடர்ந்து அரித்துக்கொண்டிருந்தன. அவை அநேகமாக அதை அரித்தபோது, திடீரென்று வாத்துக் கூட்டம் பறந்து வந்தது. தெலெசிக் அவற்றைப் பார்த்து அழைத்தான்:

''சொந்த வீடும் காத்திருக்கு எனக்காய்!
உந்தனுடன் எடுத்துச் செல் பாங்காய்,
மேகத்திற்கு மேலே தூக்கிச் செல்வாய்,
வாயிற்படி வரவும் கீழே வைப்பாய்!''

வாத்துகள் திரும்பச் சொல்லின:

''எங்களுக்குப் பின்னால் பறந்து வருவன உன்னைக் காப்பாற்றட்டும்!''

பறவைநாகங்களோ திரும்பவும் மரத்தை மேன்மேலும் அரித்துக் கொண்டிருந்தன. அப்போது திடீரென்று மற்றொரு வாத்துக் கூட்டம் பறந்து வந்தது. தெலெசிக் அவற்றைப் பார்த்து அழைத்தான்:

''சொந்த வீடும் காத்திருக்கு எனக்காய்!
உந்தனுடன் எடுத்துச் செல் பாங்காய்,
மேகத்திற்கு மேலே தூக்கிச் செல்வாய்,
வாயிற்படி வரவும் கீழே வைப்பாய்!''

வாத்துகள் திரும்பச் சொல்லின:

''எங்களுக்குப் பின்னால் பறந்து வருவன உன்னைக் காப்பாற்றும்!''

அதற்குள்ளாக கருமுசுக்கொட்டை மரம் அரிக்கப்பட்டது, அது ...ர்ச்சிடவும் அலையவும் செய்தது. பறவைநாகங்கள் ஓய்வுக்காக ...த்தி, பிறகு திரும்பவும் மரத்தை அரிக்கத் தொடங்கும், இது ... முறை, இரு முறை, மூன்று முறை நடந்தது.

இதோ மூன்றாவது வாத்துக் கூட்டம் பறந்து வந்தது. தெலெசிக் ...ற்றைப் பார்த்து அழைத்தான்:

''சொந்த வீடும் காத்திருக்கு எனக்காய்!
உந்தனுடன் எடுத்துச் செல் பாங்காய்,
மேகத்திற்கு மேலே தூக்கிச் செல்வாய்,
வாயிற்படி வரவும் கீழே வைப்பாய்!''

ஆனால் வாத்துகள் திரும்பச் சொல்லின:

''எங்களுக்குப் பின்னால் பறந்து வருவன உன்னைக் காப்பாற்றும்!'' அவை அப்பால் பறந்து போயின.

உண்மையில் தெலெசிக் மிகவும் கவலையாய் உட்கார்ந்திருந்தான், ...னில் மரம் விழும் நிலையில் இருந்தது, அதனோடு தானும் ...ந்து கொல்லப்படுவோம் என்பதை அறிந்திருந்தான்.

திடீரென்று ஓர் இளம் வாத்து தனியே பறந்து வந்தது. மற்ற ...த்துகளுக்கு அது பின்தங்கி விட்டது, அது அவ்வளவு களைத்துப் ...னதால் சிரமத்துடன் பறந்தது.

தெலெசிக் அதைப் பார்த்து அழைத்தான்:

''சொந்த வீடும் எனக்காய் காத்திருக்கு!
சாந்தமிகு மனமோ உம்மிடம் இருக்கு,
விரைந்து எனையும் தூக்காது போனால்
விழுங்கிடும் எனையே பறவைநாகமே!''

...த்தோ தெலெசிக்கிடம் இரக்கம் கொண்டது.

''...றிக்கொள்!'' என்று அது கத்தியது, அதனது முதுகில் தெலெசிக் ...க்கொள்ள உதவி, பறந்து சென்றது. மிகவும் களைப்பாக இருக் ... வாத்தினால் மிகத் தாழ்வாகத்தான் பறக்க முடிந்தது. பறவை ...கள் அதைப் பின்தொடர்ந்து சென்று, தெலெசிக்கைப் பிடிக்க

முயன்றன, ஆனால் எவ்வளவு கடினமாக முயன்ற போதும், அவற்றால் முடியாது, சீக்கிரமே முயற்சியைக் கைவிட்டுவிட்டன.

தெலெசிக்கை வீட்டிற்குக், கொண்டுவந்த வாத்து, வீட்டின் அருகிருந்த திண்ணையில் அவனை வைத்துவிட்டு, முற்றத்தில் நடக்கவும், புல்லைக் கொத்தவும் தொடங்கியது.

திண்ணையில் உட்கார்ந்திருந்த தெலெசிக், வீட்டில் என்ன சொல்லப் படுகிறது என்பதைக் கேட்டான்.

அந்நேரத்தில் கிழவி பலகாரங்களைச் சுட்டுக்கொண்டிருந்தாள். அடுப்பிலிருந்து சிலவற்றை வெளியே எடுத்துச் சொன்னாள்:

''இதோ உனக்குப் பலகாரம், கிழவனே, இதோ எனக்கு!''

உட்கார்ந்து கொண்டிருந்த திண்ணையிலிருந்து தெலெசிக் கூவினான்:

''எனக்கு எங்கே, அம்மா?''

கிழவி அடுப்பிலிருந்து இன்னும் சில பலகாரங்களை வெளியே எடுத்துத் திரும்பவும் சொன்னாள்:

''இதோ உனக்குப் பலகாரம், கிழவனே, இதோ எனக்கு!''

தெலெசிக் திரும்பவும் கூவினான்:

''எனக்கு ஒன்று கொடுக்க நீ விரும்பவில்லையா, அம்மா?''

கிழவனும் கிழவியும் பேசுவதை நிறுத்திக் கவனித்தார்கள்.

''என்ன அது? யாரோ என்னைக் கூப்பிடுவதைப் போல, இல்லையா, கிழவனே?'' எனக் கிழவி கேட்டாள்.

''உனக்குத்தான் அப்படித் தோன்றியது,'' என்றான் கிழவன்.

கிழவி அடுப்பினின்றும் இன்னும் சில பலகாரங்களை எடுத்தாள்.

''இதோ உனக்கு ஒரு பலகாரம், கிழவனே, மற்றது எனக்கு!'' என்றாள்.

''எனக்கு ஒன்று கொடுக்க நீ விரும்பவில்லையா, அம்மா?'' என்று தெலெசிக் மீண்டும் கூவினான்.

''நீ என்ன வேண்டுமானாலும் சொல், ஆனால் என்னை யாரோ அழைப்பதைக் கேட்கிறேன்!'' என்றாள் கிழவி.

சன்னலுக்கு வெளியே உற்றுப்பார்த்தாள், அங்கே திண்ணையில் தெலெசிக் உட்கார்ந்திருந்தான்!

கிழவனும் கிழவியும் குடிசைக்கு வெளியே விரைந்து போய் தெலெசிக்கைப் பிடித்து குடிசைக்குள்ளாகத் தூக்கி வந்தார்கள். எவ்வளவு

_கிழ்ச்சியாக இருக்க முடியுமோ அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

வாத்து இன்னமும் முற்றத்தில் இருந்தது. கிழவி அதைப் பார்த்து ..._டுச் .சொன்னாள்:

''வெளியே முற்றத்தில் ஓர் இளம் வாத்து நிற்கிறது. நான் போய் அதைப் பிடித்துவந்து நமது விருந்துக்காக அதைப் பொறியல் செய் வேன்.''

''ஓ, அம்மா, அப்படிச் செய்யாதே!'' எனத் தெலெசிக் கத்தினான். _திலாக அதற்கு உணவிடு. ஏனெனில் அந்த வாத்து இல்லையென்றால் ...போது நான் உங்களுடன் இருக்கமாட்டேன்.''

ஆகவே அவர்கள் வாத்துக்கு உணவிட்டு, குடிக்கத் தண்ணீர் கொடுத் ...ர்கள், மேலும் சாப்பிடுவதற்காக அதன் சிறகின் மேல் கொஞ்சம் ...துமையும் போட்டார்கள். சாப்பிட்ட உணவினால் சக்தி மிக்கதாக ...ணர்ந்த வாத்து பறந்து போயிற்று.

உனக்கோ குட்டிக் கதை உண்டு,
எனக்கோ தேனும் அப்பமும் உண்டு!

மந்திர முட்டை

வானம்பாடி அரசனும் சுண்டெலி அரசியும் இருந்த காலத்தில் அவற்றினுடைய சொந்த நிலத்தில் கோதுமை பயிரிட்டன. கோதுமை முதிர்ந்ததும் அதை அறுவடை செய்து தங்களுக்குள் பங்கு போடத் தொடங்கின. எல்லாம் செய்து முடிக்கப்பட்ட போது, ஒரு சிறிய தானியம் மிஞ்சியது.

''அதை நான் வைத்துக்கொள்கிறேன்,'' என்றது சுண்டெலி.

''முடியாது, நான் வைத்துக்கொள்கிறேன்!'' என்றது வானம்பாடி.

''தானியத்தை நான் இரண்டாகக் கடிக்கிறேன், பிறகு நம் ஒவ்வொருவருக்கும் பாதி கிடைக்கும்,'' என்றது சுண்டெலி.

இதற்கு வானம்பாடி ஒத்துக்கொண்டது, ஆனால் சுண்டெலி எப் போது தானியத்தைத் தனது பற்களுக்கு இடையே வைத்ததோ, அப் போது தனது பொந்துக்குள்ளாக ஓடியது.

வானம்பாடி மிகவும் கோபமடைந்து பறவைகளை ஒன்றாக அழைத்து, சுண்டெலிக்கு எதிராக அவற்றைக் கூட்டிச்சென்றது. ஆனால் வெல்லப்பட முடியாததற்காகச் சுண்டெலி, விலங்குகளை அழைத்து தன்னுடைய சொந்தப் படையைத் திரட்டியது. இரு படைகளும் காட்டில் சந்தித்தன, முன்னர் ஒருபோதும் பார்த்திர முடியாதவாறு போர் மேற்கொள்ளப்பட்டது.

பகல் முழுக்க நடந்த சண்டை, இரு தரப்பும் ஓய்வு எடுத்துக்கொள்வதற்காக மாலையில் நிறுத்தப்பட்டது. பிறகு சுண்டெலி தனது படையைப் பார்வையிட்டு, அதில் எறும்புகள் இல்லாதிருப்பதைக் காணவும், உடனே தன்னோடு சேர்ந்து கொள்ளுமாறு அவற்றிற்கு உத்தரவிட்டது. எறும்புகள் ஓடிவந்து கொண்டிருந்தன, இருளின் மறைவில் மரங்களின் மீது ஏறி, பறவைகளுடைய சிறகுகளைக் கடித்துத் துண்டாக்குமாறு அவற்றிடம் அது கூறியது.

பொழுது விடியவும் வானம்பாடி கத்தியது:

''ஒவ்வொருவரும் திரும்பச் சண்டையிட நேரம் வந்து விட்டது!''

இது கேட்டு அவை எல்லாம் எழுந்தன, ஆனால் இப்போது தங்களது சிறகுகளை இழந்திருந்த பறவைகளால் பறக்க முடியவில்லை. அவை தரையின் மீது விழுந்தன, விலங்குகள் அவற்றின் மீது திடுமெனப் பாய்ந்து கொன்றன, ஆகவே சுண்டெலி போரில் வென்றது.

ஆனால் பறவைகளுக்கிடையே இருந்த கழுகு ஒன்று, பறப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதைப் பார்க்கவே, பறக்க முயலாது அசையாமல் மரத்திலேயே தங்கிவிட்டது. அது அங்கிருப்பதைப் பார்த்த வேடன் ஒருவன், தனது துப்பாக்கியைத் தூக்கி அதைச் சுடவிருந்தான், ஆனால் கழுகு சொன்னது:

''என்னைக் கொல்ல வேண்டாம், வேடனே! நீ எப்போதாவது தொல்லையில் இருக்கும்போது, நான் உனக்கு உதவி செய்வேன்.''

கழுகினுடைய வார்த்தைகள் கணநேரத்திற்கு மட்டுமே வேடனை நிறுத்தின, அவனோ கவனமாகக் குறிபார்த்து திரும்பச் சுடத் தயாரானான், ஆனால் தன்னைக் கொல்ல வேண்டாம் எனக் கழுகு அவனிடம் மன்றாடத் தொடங்கியது.

''என்னை உன்னோடு எடுத்துச்சென்று எனக்கு உணவு தா, அதற்கு நீ வருத்தப்பட மாட்டாய், வேடுவனே!'' என்றது கழுகு.

ஆனால் இதுவும் வேடனை நிறுத்தவில்லை, அவன் கழுகைச் சுடவிருந்தபோது கழுகு சொன்னது:

''என்னைக் கொல்ல வேண்டாம், வேடனே, உன்னோடு என்னை எடுத்துச்செல், எவ்வளவு பெரிய சேவை நான் உனக்குச் செய்வேன் என்பதை நீ காண்பாய்!''

வேடன் அதை நம்பினான். மரத்தின் மீது ஏறி கழுகை எடுத்துக் கொண்டு, அதைத் தன்னோடு கொண்டு சென்றான்.

கழுகு சொன்னது:

"உன்னுடன் என்னை வீட்டிற்கு எடுத்துச்செல். என்னுடைய இறக்கைகள் திரும்ப வளர்கின்ற வரை எனக்கு இறைச்சியைத் தவிர வேறு உணவு தர வேண்டாம்."

அப்போது வேடனிடம் இரண்டு பசுக்களும் ஒரு காளையும் இருந்தன. கழுகிற்கு உணவூட்ட வேண்டும் என்பதற்காக பசுக்களில் ஒன்றை அவன் வெட்டினான். ஓராண்டு முழுக்க கழுகிற்கு அந்த இறைச்சி வந்தது. எல்லாவற்றையும் அது தின்று முடித்துவிட்டபோது, வேடனிடம் அது சொன்னது:

"என்னைச் சற்று பறக்கவிடு, ஏனெனில் என்னுடைய இறக்கைகள் போதுமான அளவிற்கு வளர்ந்து விட்டனவா என்பதை நான் பார்க்க விரும்புகிறேன்."

வேடன் அதை விடுவித்தான், காலை முழுக்கப் பறந்து கழுகு பயிற்சி செய்தது, மதியம் திரும்பவும் வேடுவனிடம் வந்தது.

"நான் இன்னமும் களைப்பாக இருக்கிறேன்," என்றது. "எனக்காக உன்னுடைய மற்றொரு பசுவையும் நீ வெட்டியாக வேண்டும்."

வேடன் இரண்டாவது பசுவை வெட்டினான், ஓராண்டு காலத்தில் எல்லா இறைச்சியையும் கழுகு தின்றுவிட்டு, திரும்பவும் பறக்கச் சென்றது. அதில் அநேகமாக முழு நாளையும் செலவிட்டது, மாலை நெருங்கிக்கொண்டு வரவே, வேடனிடம் பறந்து வந்தது.

"நான் இன்னமும் போதுமான வலிமையுடன் இல்லை," என்றது. "எனக்காக உன்னுடைய காளையையும் நீ வெட்டியாக வேண்டும்."

அது பற்றி வேடுவனுக்கு இரு மனது இருந்தது. "கழுகு சொல்வது போல நான் செய்வதா இல்லையா?" அவன் தனக்குத்தானே கேட்டான்.

அது பற்றிச் சிந்தித்து, அவன் சொன்னான்:

"ஓ, சரி. எனது இரு பசுக்களையும் நான் கொடுத்துவிட்டேன், அதேபோல காளையையும் கூட நான் கொடுக்கலாம்!"

காளையை வெட்டி, கழுகுக்கு இறைச்சியைக் கொடுத்தான், ஓராண்டு காலத்தில் எல்லா இறைச்சியையும் கழுகு தின்றுவிட்டு, நேரடியாக மேகங்களை நோக்கி வானளாவப் பறந்தது! நீண்ட நேரத்திற்குச் சுற்றிச் சுற்றிப்பறந்தது, ஆனால் கடைசியில் திரும்பப் பறந்துவந்து, வேடனிடம் சொன்னது:

''நன்றி பல, வேடனே. நீ எனக்கு நன்றாக உணவூட்டி திரும்பவும் வலிமையடையச் செய்தாய். இப்போது என் முதுகின் மீது ஏறிக் கொள்!''

''ஏன் நான் ஏற வேண்டும்?'' என்று வேடன் வினவினான்.

''என் முதுகின் மீது ஏறு, பிறகு நீ காண்பாய்!'' என்றது கழுகு.

வேடன் அதனது முதுகின் மீது ஏறினான், கழுகு அவனை நேராக மேகங்கள் வரை தூக்கிச்சென்று, பிறகு அவனைக் கீழே தள்ளிவிட்டது. ஆனால் தரையிலிருந்து இன்னும் தொலைவு இருந்தபோது, அவனைப் பிடித்து வைத்துக்கொண்டது.

''என்ன, உனக்கு எப்படி இருந்தது?'' எனக் கேட்டது.

''உயிரோடு இருப்பதை விட அநேகமாக இறந்தது போலவே நான் உணர்ந்தேன்,'' என்று வேடன் பதிலளித்தான்.

''நீ முதல் தடவை என்னைக் கொல்லவிருந்தபோது, இந்த மாதிரி தான் நானும் உணர்ந்தேன். வா, இப்பொது, திரும்பவும் என் முதுகின் மீது ஏறு!''

இதைச் செய்வதற்கு வேடன் விரும்பவே இல்லை, ஆனால் கழுகின் முதுகில் ஏறுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்பதை அவன் அறிந்தான். மேகங்களின் திரண்ட கூட்டத்தை நோக்கிக் கழுகு அவனைத் தூக்கிச்சென்று முன்னர் அது செய்தது போலக் கீழே போட்டு, தரையிலிருந்து பன்னிரண்டு அடி தொலைவு அடிக்கும்போது மட்டுமே அவனை மீண்டும் பிடித்தது.

''என்ன, உனக்கு எப்படி இருந்தது?'' எனக் கேட்டது.

''என்னுடைய எலும்புகள் எல்லாம் மண்ணாக மாறியது போல நான் உணர்ந்தேன்,'' என்று வேடன் பதிலளித்தான்.

''நீ இரண்டாவது தடவை என்னைக் கொல்லவிருந்தபோது இந்த மாதிரிதான் நானும் உணர்ந்தேன்,'' என்றது கழுகு. ''வா, இப்போது, திரும்பவும் என் முதுகின் மீது ஏறு!''

வேடன் அதன் முதுகின் மீது ஏறினான், கழுகு அவனை மேகங்களை விட உயரமாகத் தூக்கிச்சென்று, கீழே உருட்டிவிட்டு, தரையின் மீது அவன் மோதிப் போவதற்குச் சற்று முன்னரே அவனைப் பிடித்தது.

''என்ன, உனக்கு எப்படி இருந்தது?'' எனக் கேட்டது.

''என்னிடத்தில் உயிரே எஞ்சியிருக்கவில்லை என்பது போல உணர்ந்தேன்,'' என்று வேடன் பதிலளித்தான்.

"நீ மூன்றாவது தடவை என்னைக் கொல்லவிருந்தபோது இந்த மாதிரிதான் நானும் உணர்ந்தேன்," என்றது கழுகு. "சரி, இப்போது நமக்குள் சரிக்குச் சரி ஆகிவிட்டது. ஆகவே என் முதுகின் மீது ஏறிக் கொள், என்னுடைய வீட்டைப் பார்த்து வருவதற்காக உன்னை நான் அழைத்துச் செல்வேன்."

அவர்கள் அப்பால் பறந்து போய் கழுகின் மாமாவினுடைய வீட்டை அடைந்தபோதுதான் நின்றார்கள்.

கழுகு வேடனிடம் சொன்னது:

"வீட்டிற்குள்ளாகச் செல், நீ என்னைப் பார்த்தாயா என்று அவை கேட்டால் இப்படிச் சொல்லு: நீங்கள் எனக்கு மந்திர முட்டையைத் தந்தால், நான் அதை இங்கு கொண்டுவருவேன்."

வேடன் வீட்டிற்குள்ளாகச் சென்றான், அவனிடம் அவை கேட்ட முதலாவது விஷயம்—அவன் தனது சொந்த விருப்பத்தின் பேரில் வந்து வந்தானா என்பதுதான்.

"ஓர் உண்மையான கஸாக் தனது சொந்த விருப்பம் அல்லாது எங்கும் போகவே மாட்டான்," என்று வேடன் பதிலளித்தான்.

"எங்களுடைய மருமகனைப் பற்றி ஏதேனும் நீ கேள்விப்பட்டாயா?" என்று அவனைக் கேட்டன. "போரின் போது மூன்று ஆண்டுகளுக்கு முன் சென்றது, அது பற்றி எங்களுக்கு எந்தத் தகவலும் இல்லை."

"நீங்கள் எனக்கு மந்திர முட்டையைத் தந்தால் மட்டுமே, நான் அதை இங்கே கொண்டுவருவேன்," என்றான் வேடன்.

"முடியாது, அதை எங்களால் தர முடியாது. நாங்கள் மருமகனை மீண்டும் பார்க்காமலிருப்பது நல்லது."

வெறுங்கையுடன் வேடன் கழுகிடம் திரும்பச் சென்று சொல்லப்பட்டதைச் சொன்னான்.

"நம்முடைய வழியை நாம் பார்க்கலாம்!" என்று கத்தியது அந்தக் கழுகு.

அவர்கள் பறந்து சென்று கழுகின் சகோதரனுடைய வீட்டை அடையும் வரை நிற்கவில்லை. அதனுடைய மாமாவிடமும் அத்தையிடமும் என்ன சொன்னானோ, அதையே வேடன் அதனிடமும் சொன்னான். ஆனால் கழுகினுடைய சகோதரனும் எந்த வகையிலும் மந்திர முட்டையை வேடனுக்குக் கொடுக்கவில்லை.

அவர்கள் கழுகின் அப்பாவினுடைய வீட்டிற்குப் பறந்து சென்று, அதை அடைந்தபோது கழுகு சொன்னது:

''வீட்டிற்குள்ளாகச் செல், அவை என்னைப் பற்றிக் கேட்கும் போது, நீ என்னைப் பார்த்து, அவற்றிடம் என்னைக் கொண்டுவர முடியும் என்பதைச் சொல்.''

வேடன் வீட்டிற்குள்ளாகச் சென்றான், அவனிடம் அவைகேட்ட முதலாவது விஷயம் — அவன் தனது சொந்த விருப்பத்தின் பேரில் அங்கு வந்தானா என்பது தான்.

''ஓர் உண்மையான கஸாக் தனது சொந்த விருப்பம் அல்லாது எங்கும் போகவே மாட்டான்,'' என்று வேடன் பதிலளித்தான்.

''எங்களுடைய மகனை நீ பார்த்தாயா? போரின் போது அது சென்று இப்போது மூன்று ஆண்டுகளாகி விட்டன, மேலும் அது உயிரோடு இருக்கிறதா செத்துவிட்டதா என்பது எங்களுக்குத் தெரியாது.''

வேடன் சொன்னான்:

''உங்களுடைய மகனை நான் பார்த்தேன், மேலும் நீங்கள் எனக்கு மந்திர முட்டையைத் தந்தால் மட்டுமே, அதை உங்களிடம் நான் கொண்டுவர முடியும்.''

''எதற்காக அது உனக்குத் தேவைப்படுகிறது?'' என்று சொன்னது கழுகின் அப்பா. ''பதிலாக உனக்கு நாங்கள் தங்கக் கோணிகள் கொடுப்போம்.''

''நான் மீட்புப்பணம் விரும்பவில்லை, மந்திர முட்டையைத் தவிர எதையும் நான் விரும்பவில்லை!'' என்று வேடன் சொன்னான்.

''நல்லது, எங்களுடைய மகனைக் கொண்டு வா, உனக்கு அது கிடைக்கும்!''

வேடன் கழுகினைக் கொண்டுவந்தான், கழுகைப் பார்த்ததும் அதனுடைய அம்மாவும் அப்பாவும் அத்தனை மகிழ்ச்சியடைந்ததால், அவை மந்திர முட்டையை வேடனுக்குக் கொடுத்தன.

''வீடு போய்ச் சேரும் வரை அதை மட்டும் உடைத்து விடாதே,'' என்றன, ''அதைச் சுற்றிலும் உயரமான வேலியைக் கட்டுவது நிச்சயமாக இருக்கட்டும்.''

வேடன் தனது வழியில் புறப்பட்டான், மேன்மேலும் நடந்தான். ஓ. எவ்வளவு தாகமாக இருந்தது அவனுக்கு! ஒரு கிணற்றுக்கு வந்

தான், ஆனால் வாளிக்கு மேலாக நீர் குடிக்கக் குனிந்தபோது, மந்திர முட்டை அதன் பக்கவாட்டில் தட்டி, உடைந்துபோனது. முட்டையை விட்டு வெளியே வந்ததெல்லாம் பசுக்களின் மந்தை தான்! தன்னிடமிருந்து அவை அப்பால் ஓடிப்போவதை எப்படி நிறுத்துவது என்பது தெரியாது, வேடன் முற்றிலும் தடுமாற்றம் அடைந்தான். அவன் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு விரைந்து, தனது குரலின் உச்சத்தில் கத்திக்கொண்டிருந்தான், ஆனால் எதுவும் செய்ய முடியவில்லை.

திடீரென்று பாம்பு ஒன்று அவனிடம் ஊர்ந்து வந்தது.

''நல்லவனே, முட்டைக்குள் திரும்பவும் பசுக்களை நான் போக வைத்தால், நீ எனக்கு என்ன தருவாய்?'' என்று அது மனிதக் குரலில் கேட்டது.

''நீ என்ன விரும்புகிறாய்?'' என்றான் வேடன்.

''நீ அப்பால் இருந்த வேளையில் உன்னுடைய வீட்டில் தோன்றியதை எனக்குத் தருவாயா?''

''நான் தருவேன்!''

பாம்பு பசுக்களை முட்டைக்குள் ஓட்டி, உடைந்த ஓட்டைத் திரும்பவும் ஒட்டி, முட்டையை வேடனிடம் கொடுத்தது.

வீட்டிற்கு வந்த வேடன், தான் வீட்டில் இல்லாது அப்பால் இருந்த வேளையில் தனக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான் என்பதை அறிந்த போது, நடுக்கத்தில் தனது தலையைப் பற்றிப் பிடித்தான்.

''என் மகனே, உன்னைத்தான் பாம்பிடம் கொடுப்பதாக நான் வாக்குக் கொடுத்தேன்!'' என்று அவன் கத்தினான்.

அவனும் அவனுடைய மனைவியும் சற்று நேரத்திற்குத் துயரப்படவும், வருத்தப்படவும் செய்து, பிறகு சொன்னார்கள்:

''செய்வதற்கு எதுவுமே இல்லை, அது பற்றி துயரப்படுவது எதுவும் செய்துவிடாது!''

ஆகவே அவர்கள் முட்டையைச் சுற்றி ஒரு வேலி கட்டி, பிறகு முட்டையை உடைத்து அதினின்றும் பசுக்கள் வெளிவருமாறு செய்தார்கள். மேலும் மந்தை அத்தனை பெரிதாக இருந்ததால் அவர்கள் நிலையுற்று பணக்காரர்களானார்கள்.

ஆண்டுகள் உருண்டோடின, அதை அவர்கள் அறியும் முன்பே அவர்களுடைய மகன் பெரிய மனிதனாக வளர்ந்து விட்டான்.

''என்னைப் பாம்பிடம் கொடுக்கப் போவதாக நீ அதனிடம் சொன்னாய், அப்பா, ஆகவே உன்னுடைய வாக்கை நீ அவசியம் காப்பாற்ற வேண்டும்!'' என்றான்.

ஆகவே அவன் பாம்பிடம் புறப்பட்டுச் சென்றான்.

''நான் உனக்குச் செய்வதற்காக மூன்று பணிகள் தருவேன்,'' என்றது பாம்பு. ''நீ அவற்றை செய்தால், வீட்டிற்குப் போக முடியும்; இல்லையென்றால், உன்னை நான் தின்றுவிடுவேன்!''

அந்தப் பாம்பினுடைய வீடு, கண்ணால் பார்க்க முடியாத அளவுக்கு பெரும் மரங்கள் வளர்ந்த நிலப்பரப்பால் சூழப்பட்டிருந்தது.

''புல்தரையைப் பார்த்தாயா?'' பாம்பு கேட்டது. ''ஒரே ஓர் இரவுக்குள்ளாக நீ மரங்களை வெட்டிச் சாய்த்து, அதை உழுது, கோதுமை நட்டு, அறுவடை செய்து, கட்டுகளாகக் கட்ட வேண்டும். நீ அவசியம் அதே கோதுமையிலிருந்து ரொட்டி சுட்டு, காலையில் நான் எழும் போது சாப்பிடுவதற்காக மேசையின் மேல் அதை வைக்க வேண்டும்.''

தலையைத் தொங்கப் போட்டபடி வேடனுடைய மகன் அப்பால் சென்று, ஒரு குளத்திற்கு வந்தான். அதற்கு அருகே ஒரு தூண் நின்றது, மயக்குகிற அத்தூணில் பாம்பினுடைய மகள் சிறைப்படுத்தப் பட்டிருந்தது.

தூணின் அருகே நின்று வேடனுடைய மகன் அழுதான், அதைக் கேட்ட பாம்பினுடைய மகள் அவன் ஏன் அழுதுகொண்டிருக்கிறான் எனக் கேட்டது.

''ஒரே இரவிலே என்னால் செய்ய முடியாதவற்றைச் செய்ய பாம்பு எனக்குக் கட்டளையிட்டது. நான் என்ன செய்ய முடியும்?''

''என்ன கட்டளை?''

வேடனுடைய மகன் எல்லாவற்றையும் அதனிடம் கூறினான். அது சொன்னது:

''என்னை மணந்துகொள், உன்னிடம் அது சொன்ன எல்லாவற்றையும் நான் செய்வேன்.''

''மிகவும் நல்லது.''

''சரி, இப்போது படுக்கைக்குச் செல், ஏனெனில் அதிகாலையில் அவசியம் எழுந்து, பாம்புக்கு ரொட்டியை எடுத்துச்செல்ல வேண்டும்.''

வேடனுடைய மகன் படுக்கச் சென்றான், அந்த பாம்பின் மகளோ [illegible]டிக்குச் சென்று சீழ்க்கை அடித்தது, அந்தோ! — மரங்கள் முறியவும்,

ஙங்கவும் தொடங்கின, புல்தரையில் நிலம் சுத்தமாக்கப்பட்டது, அதே நேரம் கோதுமை விதைக்கப்பட்டது. காலை இன்னும் விடியாத போது ரொட்டி சுடப்பட்டு, வேடனுடைய மகன் அதைப் பாம்பின் மகளிடமிருந்து பெற்று, பாம்பினுடைய குடிசைக்கு எடுத்துச்சென்று, மேசையின் மேல் வைத்தான்.

பாம்பு விழித்தெழுந்து, வெளியே முற்றத்திற்கு வந்தது. காட்டிற்குப் பதிலாக அங்கே வயலையும், அதில் கோதுமை அரிதாள் கட்டைகளை ... கூலக்குவியலுமாக இருந்ததைக் கண்டது.

''உனக்கு என்ன சொன்னேனோ அதைச் செய்துவிட்டாய்,'' என்று பாம்பு வேடனுடைய மகனிடம் சொன்னது. ''இப்போது இதோ உன்னுடைய இரண்டாவது பணி. அதோ தொலைவில் உள்ள மலைக்குக் கீழே ஒரு பெரும் பாதையை முதலில் தோண்டி, அதன் வழியாக நீப்பர் ஆறு ஓடுமாறு செய், பிறகு நீப்பரின் கரையில் சில பண்டசாலைகள் அமைத்து, கோதுமையால் அவற்றை நிரப்பு. உன் னோடு வர்த்தகம் செய்வதற்காக வணிகர்களை ஏற்றிக்கொண்டு படகுகள் வரும், கோதுமை எல்லாவற்றையும் நீ விற்க வேண்டும். இது சமயம் காலையில் நான் விழித்தெழும் நேரத்திற்குள் செய்யப்பட வேண்டும்!''

வேடனுடைய மகன் கற்தூணிடம் சென்று அழுது கதறினான்.

''நீ ஏன் அழுகிறாய்?'' என்று பாம்பின் மகள் அவனைக் கேட்டது.

தனக்குப் பாம்பு பணித்த பணி பற்றி அவன் அதனிடம் கூறினான். அது சொன்னது:

''படுக்கச் செல், எல்லாவற்றையும் நான் செய்வேன்.''

அது ஒரு சீழ்க்கையடித்தது, கண நேரத்தில் மலைக்குக் கீழே ஒரு பாதை துடையப்பட்டு, அதன் வழியாக நீப்பர் ஓடுமாறு அனுப்பப் பட்டது. மேலும் நீப்பர் கரை மேல் பண்டசாலைகள் கட்டப்பட்டன. காலை இன்னும் விடியாத போது, வேடனுடைய மகனை உசுப்பவும், வணிகர்கள் காத்துக் கொண்டிருப்பதையும், அவன் விரைந்து செய படகுகளில் சுமையேற்ற வேண்டியதை அவனிடம் சொல்லவும் பாம்பின் மகள் வந்தது.

பாம்பு விழித்தெழுந்து, அது கட்டளையிட்ட எல்லாமே செய்யப்பட் டிருப்பதைக் கண்டு, பெரிதும் வியப்புற்றது.

''இதோ உன்னுடைய மூன்றாவது பணி,'' என்று அது வேடனு

டைய மகனிடம் சொன்னது. ''அவசியமாக இந்த இரவில் நீ ஒரு தங்க முயலை பிடித்து, காலைக்குள்ளாக என்னிடம் அதைக் கொண்டுவர வேண்டும்.''

வேடனுடைய மகன் அப்பால் சென்று அழுது கதறினான், கற்தூணிடம் வந்தான். பாம்பு அவனுக்கு இட்ட மூன்றாவது பணி என்னவென்று பாம்பின் மகள் அவனைக் கேட்டது. அதை அதனிடம் அவன் சொன்னான், அது கூறியது:

''அது முன்னர் உனக்கு இட்ட பணியை விடக் கடினமானது! ஆனால் அதோ தொலைவில் உள்ள பாறைக்கு நாம் போவோம். வளையை விட்டு முயலை நான் விரட்டுவேன், நீயோ அதைப் பிடிக்க முயல வேண்டும். வளையை விட்டு எது வந்தாலும் சரி பிடிக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள், ஏனெனில் அதுவாகத் தான் இருக்கும்!''

அது வளைக்குள்ளாக இறங்கி முயலைத் துரத்த முயற்சி செய்தது, வேடனுடைய மகனோ அங்கே நின்று காத்துக்கொண்டிருந்தான்.

திடீரென்று வளையை விட்டு, 'கிஸ்' என ஒலியெழுப்பி, ஒரு விரியன் பாம்பு ஊர்ந்து வந்தது. வேடனுடைய மகன் அதைப் பிடிக்க முயலாதபடி, அப்பால் அதை ஊர்ந்து போக விட்டான். பிறகு சீக்கிரமே பாம்பின் மகள் வளையை விட்டு வெளியேறி அவனிடம் வந்தது.

''எனக்கு முன்னால் யாரும் வெளியே வரவில்லையா?'' எனக் கேட்டது.

''ஒரு விரியன் பாம்பு வந்தது, ஆனால் அது கடிக்கக் கூடும் என்று பயந்து அதைப் போக விட்டு விட்டேன்!''

''என்ன முட்டாள் நீ! அதுதான் தங்க முயல், விரியன் பாம்பு வடிவத்தில் சென்றது!

இப்போது நான் மீண்டும் போகப் போகிறேன். வளையை விட்டு யாரேனும் வெளியே வந்து, அங்கே தங்க முயல் ஏதுமில்லை என்று உன்னிடம் சொன்னால், அதை நம்பாது, விரைந்து அதைப் பற்றிப் பிடி!''

அது திரும்பவும் வளைக்குள்ளாக இறங்கி, முயலை வெளியே விரட்டத் தொடங்கியது, அந்தோ! — மிகவும் வயதான கிழவி அதை விட்டு வெளியே வந்தாள்.

''என்ன தேடிக் கொண்டிருக்கிறாய், மகனே?'' என்று அவள் வேடனுடைய மகனிடம் கேட்டாள்.

''தங்க முயலை, பாட்டி.''

''தேடுவதற்கு என்ன இருக்கிறது! அங்கே எந்தத் தங்க முயலும் இல்லை.''

கிழவி அப்பால் போய் விட்டாள், பாம்பின் மகள் வளையை விட்டு வெளியேறி வேடனுடைய மகனிடம் திரும்ப வந்தது.

''என்ன, முயலே இல்லையா? வளையை விட்டு யாருமே வெளியே வரவில்லையா?'' எனக் கேட்டது.

''மிகவும் வயதான கிழவியைத் தவிர வேறு யாரும் இல்லை. அவள் நான் என்ன தேடிக் கொண்டிருக்கிறேன் என்று கேட்டாள். என்ன என்று அவளிடம் நான் சொன்ன போது, அங்கே எந்தத் தங்க முயலும் இல்லை என்றாள், ஆகவே அவளைப் போக விட்டு விட்டேன்.''

''நீ அவளைப் போக விட்டிருக்கக் கூடாது, ஏனெனில் தங்க முயல் தான் கிழவியின் வடிவத்தில் வந்தது. இப்போது அதை உன்னால் எங்கும் கண்டுபிடிக்க முடியாது, ஆகவே நானே முயலாக மாறப் போகிறேன், நீ என்னைப் பாம்பிடம் எடுத்துச் சென்று அதற்கு முன்னால் ஒரு மேசையில் வைக்க வேண்டும். ஆனால் அது என்னைத் தொடாது பார்த்துக்கொள், ஏனெனில் அது தொட்டுவிட்டால் நான் யார் என்று அறிந்துகொள்ளும், பாம்பு உன்னையும் என்னையும் கொன்று விடும்.''

பாம்பின் மகள் ஒரு தங்க முயலாக மாறியது, வேடனுடைய மகன் அதைப் பாம்பிடம் எடுத்துச்சென்று, அதற்கு முன்னால் ஒரு மேசையில் வைத்தான்.

''இதோ உன்னுடைய தங்க முயல்,'' என்றான். ''இப்போது நான் உன்னை விட்டுப் போவேன்.''

''சரி, போ!'' என்றது பாம்பு.

வேடனுடைய மகன் அப்பால் சென்றான். எப்போது பாம்பு வீட்டை விட்டுச் சென்றதோ அப்போது பாம்பின் மகள், அதாவது கன்னி, தனது சொந்த வடிவத்தைத் திரும்பப் பெற்றது. அவள் வெளியே விரைந்து வேடனுடைய மகனுடன் சேர்ந்துகொண்டாள். அவர்களால் எவ்வளவு வேகமாக முடியுமோ அவ்வளவு வேகமாக ஓடினார்கள்!

பாம்பு திரும்பி வந்து, அது ஏமாற்றப்பட்டு விட்டது என்பதைப் பார்த்து, அவர்களுக்கும் பின்னே தனது கணவனை அனுப்பியது.

கன்னியும், வேடனுடைய மகனும் தங்களுக்குக் கீழே பூமி அதிர்வதையும் குமுறுவதையும் உணர்ந்தார்கள். கன்னி சொன்னாள்:

''நம்மைத் தொடர்ந்து அவை வந்து கொண்டிருக்கின்றன! நான் என்னை கோதுமை வயலாகவும், உன்னை வயதான காவல்காரனாகவும் மாற்றப் போகிறேன். ஓர் இளைஞனும் ஒரு கன்னியும் இதன் வழியாகக் கடந்து சென்றதை நீ பார்த்தாயா என்று அவை உன்னிடம் கேட்கும் போது, நீ பார்த்ததாக அவசியம் சொல்ல வேண்டும், ஆனால் அது கோதுமை நடப்பட்டுக் கொண்டிருந்தபோது என்று சொல்ல வேண்டும்.''

ஆண்பாம்பு வருவதில் நீண்ட நேரமாகவில்லை, அது நேராக வயதான காவல்காரனிடம் சென்றது.

''ஓர் இளைஞனும் ஒரு கன்னியும் இந்த வயல் வழியாகக் கடந்து சென்றதை நீ பார்த்தாயா?'' எனக் கேட்டது.

''பார்த்தேன்,'' என்று காவல்காரன் பதிலளித்தான்.

''எப்போது?''

''கோதுமை நடப்பட்டுக் கொண்டிருந்தபோது.''

''கோதுமை அறுவடைக்குத் தயாராக இருக்கிறது, ஆனால் அவர்கள் நேற்றுத்தான் ஓடிப்போனார்கள்.''

அதோடு அது திரும்பிப் போயிற்று.

கன்னியும் வேடனுடைய மகனும் தங்களுடைய உண்மையான வடிவத்தைத் திரும்பப் பெற்று மீண்டும் ஓடினார்கள்.

சிறிது நேரம் கழித்து ஆண்பாம்பு வீடு திரும்பியது.

''நீ அவர்களைப் பிடிக்கவில்லையா!'' என்றது பாம்பு. ''வழியில் நீ எவரையுமே சந்திக்கவில்லையா?''

''கோதுமை வயலைக் காவல் காத்துக்கொண்டிருந்த ஒரு கிழவனைத் தவிர யாரையும் சந்திக்கவில்லை. அதன் வழியாக ஓர் இளைஞனும் ஒரு கன்னியும் கடந்து சென்றதை அவன் பார்த்தானா என்று நான் கேட்டேன், அதற்கு அவன் தான் பார்த்ததாகவும், ஆனால் கோதுமை நடப்பட்டுக் கொண்டிருந்தபோது என்று சொன்னான். ஆகவே நான் திரும்பிவிட்டேன், ஏனென்றால் அறுவடைக்குத் தயாராகக் கோதுமை இருப்பதை நான் பார்த்தேன்.''

‘‘நீ காவல்காரனைக் கொன்று, கோதுமை வயலைக் காலில் போட்டு நசுக்கி இருக்க வேண்டும். ஏனெனில் கன்னியும் வேடனுடைய மகனும் அந்த வடிவத்தில் இருந்தார்கள். திரும்பவும் அவர்களைத் தேடிச்சென்று, இந்த முறை அவர்களைக் கொன்றுவிடு!’’

தப்பி ஓடியவர்களைப் பின் தொடர்ந்து ஆண்பாம்பு பறந்தது. தங்களுக்குக் கீழே பூமி அதிர்வதையும் குமுறுவதையும் கன்னி உணர்ந்து சொன்னாள்:

‘‘அது திரும்பவும் நம்மைப் பின் தொடர்ந்து நெருங்கி வந்துகொண்டிருக்கிறது! என்னை ஒரு பழைய, சிதைந்து போன கோட்டையாகவும் உன்னை ஒரு போர்வீரனாகவும் நான் போகப்போகிறேன். ஆண்பாம்பு உன்னிடம் அதன் வழியாக ஓர் இளைஞனும் ஒரு கன்னியும் சென்றதைப் பார்த்தாயா என்று கேட்கும்போது, நீ பார்த்ததாகவும், ஆனால் கோட்டை கட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது என்றும் நீ சொல்ல வேண்டும்.’’

ஆண்பாம்பு பறந்து வந்து, தனக்கு முன்னால் ஒரு போர்வீரன் இருப்பதைப் பார்த்து, நேரான அவனிடம் பறந்து சென்றது.

‘‘ஓர் இளைஞனும் ஒரு கன்னியும் இக்கோட்டை வழியாகச் சென்றதை நீ பார்த்தாயா?’’ என்று கேட்டது.

‘‘நான் பார்த்தேன், ஆனால் இக்கோட்டை கட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது,’’ என்று போர்வீரன் பதிலளித்தான்.

‘‘அது கட்டாயம் குறைந்தது ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இருக்க வேண்டும், ஆனால் அவர்கள் நேற்றுத்தான் ஓடிப்போனார்கள்.’’

அதோடு ஆண்பாம்பு திரும்பி வீட்டுக்குச் சென்றது.

‘‘ஒரு கோட்டையும் அதற்கு அருகே ஒரு போர்வீரனையும் பார்த்தேன். ஓடிப்போனவர்களைப் பற்றி அவனிடம் கேட்டேன்,’’ என்று அது தன் மனைவியிடம் சொன்னது, ‘‘இக்கோட்டை கட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது அவர்களைத் தான் பார்த்ததாக அவன் சொன்னான். நாம் தேடிய ஆட்கள் அவர்கள் அல்ல என்பதை அறிந்தேன், ஏனெனில் அக்கோட்டை குறைந்தது நூறாண்டு காலப் பழமை வாய்ந்தது.’’

‘‘நீ அப்போர்வீரனைக் கொன்று, அக்கோட்டையை உடைத்துப் போட்டிருக்க வேண்டும், ஏனெனில் வேடனுடைய மகனும், கன்னியும்

தான் அந்த வடிவத்தில் இருந்தார்கள்,'' என்றது பெண்பாம்பு. ''இப்போது நானே அவர்களைப் பின்தொடர்ந்து செல்வேன்!''

மின்னல் வேகத்தில் அது புறப்பட்டது, அத்தனை விரைவாக அது ஓடியதால் அதற்குக் கீழே நிலம் அதிரவும் குமுறவும் செய்தது, தரைக்கு மேலாகத் தனது கையை வைத்தபோது, அது சூடாக இருப்பதைக் கன்னி உணர்ந்தாள்.

''நாம் தொலைந்தோம், ஏனெனில் இந்த முறை நம்மைப் பின் தொடர்ந்து பெண்பாம்பே வருகிறது!'' என்று கத்தினாள் கன்னி. ''உன்னை ஓர் ஆறாகவும் என்னை ஒரு மீனாகவும் மாற்றப்போ கிறேன்.''

அவள் இதைச் செய்தாள். பெண்பாம்பு பறந்துவந்து ஆற்றைப் பார்த்தபோது, அது தன்னை ஒரு பைக் மீனாக மாற்றிக்கொண்டு, மீனைத் தொடர்ந்து சென்றது. ஆனால் ஒவ்வொரு முறையும் அதைப் பிடிக்க முயல்கையில் மீன் தனது கூர்முனையுடைய செதில்களை அது பக்கம் திரும்பி அப்பால் செல்ல தன்னை வேகப்படுத்தும். ஆகவே தனது துரத்துதலை பாம்பு விட்டுவிட்டு ஆற்றில் இருந்த எல்லா நீரை யும் குடிக்க முயற்சி செய்தது. மேன்மேலும் குடிக்கவே, அதனுடைய வயிறு முழுக்க நீர் நிறைந்து வெடித்துப்போய், செத்து விழுந்தது.

கன்னியும் வேடனுடைய மகனும் தங்களுடைய முறையான வடிவத் தைத் திரும்பப் பெற்றார்கள். கன்னி சொன்னாள்:

''இப்போது நாம் பயப்பட யாருமில்லை! உன்னுடைய வீட்டிற்கு நாம் போகலாம், உன்னுடைய குடும்பத்தினர்களை நீ சந்திக்கிற போது, நீ அவர்களை அவசியம் முத்தமிட்டுக் கட்டித்தழுவ வேண்டும். ஆனால் உன் மாமாவுடைய குழந்தையை மட்டுமே முத்தமிட வேண் டாம், ஏனெனில் அவ்வாறு செய்தால், என்னைப் பற்றி மறந்து விடுவாய்.''

அவனுடைய கிராமத்திற்கு அவர்கள் வந்தார்கள், கிராமத்தினர் ஒருவருக்குத் தன்னை வேலைக்காரியாக கன்னி அமர்த்திக்கொண் டாள். வேடனுடைய மகன் தனது வீட்டிற்குச் சென்று, தனது மாமா வுடைய குழந்தையைத் தவிர, எல்லாரையும் முத்தமிட்டுத் தழுவினான். ஆனால் பிறகு, இது தனது குடும்பத்தினரை மகிழ்விக்காது என்று நினைத்து, அதையும் கூட முத்தமிட்டான். உடனடியாக கன்னியைப் பற்றி மறந்தான்.

சுமார் அரையாண்டுக் காலம் செல்லவே, மணப்பதென்று அவன் ...டிவு செய்தான். அவனுக்காக ஓர் அழகிய மங்கையைப் பார்த்தான், தன்னைப் பாம்பினுடைய இறுக்கமான பிடிப்பிலிருந்து காப்பாற்றிய கன்னியை அவன் நினைத்துப்பார்க்கவே இல்லை.

மணவிழாவிற்கு முந்திய நாளில் கிராமத்திலிருந்த எல்லா இளம் பெண்களும், அவர்களில் அக்கன்னியும் உள்பட, ரொட்டி சுடுவதற்காக ...ன மகனுடைய வீட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் வேலைசெய்ய அமர்ந்தார்கள், கன்னி புறாக்களின் வடிவத்தில் இரண்டு ரொட்டிகள் தயாரித்தாள். அவற்றைத் தரை மீது அவள் வைத்தாள், அவை உயிர் பெற்று மென்மையாகக் கூவின.

``நான் அந்தப் புல்தரையை வேரோடு பிடுங்கி, அங்கே கோதுமை ...ரிட்டதும், பாம்பிடம் நீ எடுத்துச்செல்வதற்காக அதிலிருந்து ரொட்டி தயாரித்ததும் உனக்கு நினைவில்லையா?'' என்று பெண்புறாக் கேட்டது.

ஆண்புறாவோ பதிலளித்தது:

``இல்லை, அதில் எதுவும் எனக்கு நினைவில்லை!''

``உன்னோடு வர்த்தகம் செய்வதற்காகத் தங்களது படகுகளில் ...ணிகர்கள் வரக்கூடும் என்பதற்காக நான் மலைக்குக் கீழே பாதை ...டைந்து அதன் வழியாக நீப்பரை ஓடவிட்டது உனக்கு நினைவில் ...லையா?'' என்று பெண்புறாக் கேட்டது.

ஆண்புறாப் பதிலளித்தது:

``இல்லை, அதில் எதுவும் எனக்கு நினைவில்லை!''

``நாம் ஒன்றாகத் தங்க முயலை எப்படி வேட்டையாடினோம் ...ன்பது உனக்கு நினைவில்லையா?'' பெண்புறாத் திரும்பவும் கேட்டது.

ஆண்புறாப் பதிலளித்தது:

``இல்லை, அதில் எதுவும் எனக்கு நினைவில்லை!''

அந்நேரத்தில் வேடனுடைய மகன் எல்லாவற்றையும் நினைவு ...ந்தான். தனது மணமகளுக்கு அளித்த வாக்கை மீறி தான் உண்மை ...க் காதலித்தவளை மணந்தான். அதற்குப் பிறகு அவர்கள் ...ச்சியோடு வாழ்ந்தார்கள்.

இளம் மேய்ப்பன்

ஒரு சமயத்தில் மேய்ப்பன் ஒருவன் இருந்தான். ஆரம்ப ஆண்டு களிலிருந்தே ஆடுகளை மேய்த்ததைத் தவிர வேறொன்றும் அவ னுக்குத் தெரியாது.

ஒரு நாள் எட்டு பூட்* நிறையுள்ள கற்பாளம் ஒன்று அவனுக்கு அருகே வானத்திலிருந்து விழுந்தது. ஒரு மொம்மையைப் போல அதனுடன் அவன் விளையாடினான்: அதைத் தனது சாட்டையோடு கட்டி வைத்து, வானத்திற்குள்ளாக சுழற்றி வீசி விட்டு தூங்குவதற் காகக் கீழே படுப்பான். அன்றைய பொழுதின் இறுதியில், அவன் விழித் தெழுந்த போது, அது திரும்பப் பறந்து வந்து தரையின் மீது ஆழப் பதியும்.

கற்பாளத்துடன் விளையாடுவதற்காக மேய்ப்பனுடைய தாயார் அவனைத் திட்டினாள், ஆனால் அவளை அவன் பொருட்படுத்தவில்லை.

அப்போது இந்த நாட்டின் ஜார் வசித்த நகரமானது பறவைநாகம் ஒன்றால் சுற்றிவளைக்கப்படுமாறு நிகழ்ந்தது. முப்பது பூட் நிறையுள்ள கற்களைக் கொண்டுவந்த இப்பறவைநாகம் அவற்றைக் கீழே போட்டு ஒரு மாளிகை கட்டத தொடங்கியது. மேலும் ஜார் அவருடைய மக ளைத் தனக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கோரியது. நடுங்கிப் போய்விட்ட ஜார், தனது நாட்டின் எல்லா மூலை களுக்கும் கடிதங்கள் அனுப்பி, பறவைநாகத்தோடு அச்சமின்றி சண்டை

* பூட் — *36* பவுண்டுள்ள ருஷ்ய எடையளவு. — மொ-ர்.

போட்டு அதை வெட்டி வீழ்த்தும் வலிமைவாய்ந்த யாராவது இருக்கிறானா என எல்லாரையும் கேட்டுக்கொண்டார். ஆனால் அது போல ஒருவனை யாருமே கேள்விப்படவில்லை.

இந்தச் செய்தி மேய்ப்பனை அடைந்த போது அவன் தற்பெருமை யோடு சொன்னான்:

"அப்பறவைநாகத்தை எனது சாட்டையால் நான் கொல்ல முடியும்!"

அவன் கேலிபேசியிருக்கக் கூடும், ஆனால் அவன் கூறுவதைக் கேட்டவர்கள் அதைப் பற்றி ஜாரிடம் சொல்ல, அவனை உடனே அழைத்து வர ஜார் ஆள் அனுப்பினார்.

அவ்வளவு இளமையாக அவன் இருப்பது கண்டு ஜார் சொன்னார்:

"நீ சொன்னதை உன்னால் செய்ய முடியும் என்பதில் உறுதியாக இருக்கிறாயா? நீ மிகமிக இளைஞன்."

"பரவாயில்லை," என்றான் மேய்ப்பன்.

அப்படியே ஜார் அவனுடைய கட்டளையின் கீழ் பாடகர்கள் குழு ஒன்றையும் இசைவாணர்கள் குழு ஒன்றையும் அனுப்பினார். தான் குறைந்தது இருபது ஆண்டுகால இராணுவப் பணியில் இருந்தது போல அந்தளவு நம்பிக்கையுடன் மேய்ப்பன் உத்தரவுகளை உரக்கக் கத்தத் தொடங்கினான்.

இதைக் கவனித்த ஜார் வியப்பினால் கைகளை அகல விரித்தார்.

பறவைநாகத்தினுடைய மாளிகைக்குக் கல்லெறி தொலைவு வரை தனது படையினரை அழைத்துச்சென்ற மேய்ப்பன் கூறினான்:

"நீங்கள் இங்கேயே இருந்து, நான் முன்னே செல்வதைக் கவனியுங்கள். மாளிகைப் புகைப்போக்கியிலிருந்து புகை பெருகுவதைப் பார்த்தால், பறவைநாகத்தை நான் வென்றுவிட்டேன் என்பதை நீங்கள் அறியலாம்; அதிலிருந்து சுவாலைகள் பீறித் தெறிப்பதைப் பார்த்தால், அது என்னை வென்றுவிட்டது என்பது பொருள்."

அவர்களை அங்கே விட்டுவிட்டு, மாளிகைக்குத் தனியாகச் சென்றான்.

மேலும், இப்பறவைநாகம் அவ்வளவு வலிமைவாய்ந்தது, அதன் அருகே வர விரும்பிய எல்லாரையும் தனது தீ மூச்சால் வெறுமனே துரத்திவிட்டது. ஆக, மேய்ப்பனைப் பார்த்த போதும் அது மூச்சு விட்டது, ஆனால் இவன் ஓர் அடி கூட நகரவில்லை.

''எதற்காக இங்கே வந்தாய், எனது துணிவுமிக்க இளைஞனே?'' பறவைநாகம் கர்ஜித்தது. ''நீ என்னுடன் சண்டைபோட அல்லது சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறாயா?''

''உன்னுடன் சண்டைபோடவே நான் இங்கு உள்ளேன், பறவை நாகமே! உன்னைப் போன்றவர்களுடன் நான் ஒருபோதும் சமாதானம் செய்துகொள்ள மாட்டேன்!'' என்று மேய்ப்பன் பதிலளித்தான்.

''போய் ஓய்வெடு, கொஞ்சம் வலிமையைச் சேகரித்துக்கொண்டு, அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வா!'' என்று பறவைநாகம் சொன்னது.

''வேண்டாம், உள்ளபடியே என்னிடம் போதுமான வலிமைக்கு மேல் இருக்கிறது!''

''உன்னிடம் என்ன ஆயுதம் இருக்கிறது?''

''இந்தச் சாட்டையே.''

நீண்ட தோல்வார் எருமைத் தோலால் ஆனதும், அதன் நுனியில் எட்டுப் பூட் நிறையுள்ள கற்பாளம் இணைக்கப்பட்டிருந்ததுமான சாட்டையைப் பறவைநாகத்திடம் காட்டினான்.

''வா, என்னை அடி!'' பறவைநாகம் கத்தியது.

''இல்லை, நீ முதலிலே அடி!''

பறவைநாகம் அதற்குமேல் காத்திருக்கவில்லை. அது ஒன்பது அடி நீளமுள்ளதும் உறுதிவாய்ந்த எஃகில் செய்யப்பட்டதுமான தனது வாளால் மேய்ப்பனைத் தாக்கியதுமே, வாள் தூள்தூளாக உடைந்தது, காயமின்றி அப்படியே இருந்தான் மேய்ப்பன்.

''கவனமாக இரு! இப்போது என் முறைதான்!'' என்று கத்தினான்.

அந்தச் சாட்டையால் அத்தனை வலிமையான அடி பெற்றப் பறவைநாகம் அதே இடத்திலேயே செத்து வீழ்ந்தது.

மாளிகைப் புகைப்போக்கியிலிருந்து புகை பெருகுவதைக் கண்டதும், மேய்ப்பனுடைய ஆட்கள் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். இசைவாணர் கள் வாசிக்கத் தொடங்கினார்கள், பாடகர்கள் பாடினார்கள், மேய்ப்ப னைச் சந்திக்க ஜார் வெளியே வந்து, அவனது கையைப் பற்றி தனது மாளிகைக்குள்ளாக அழைத்துச்சென்றார். தன் மகளை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்து, இளம் ஜோடிக்கென்று சொந்த மாளிகை ஒன்றைக் கட்டிக்கொடுத்தார், அவர்கள் அதில் தங்கி மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

ஆனால் இது சில அண்டைய அரசுகளின் ஜார்களுக்கு வருத்தத்தைத் தந்தது. ஓர் இளவரசியைத் திருமணம் செய்ய ஒரு சாதாரண மேய்ப்பன் ஒருபோதும் அநுமதிக்கப்பட்டிருக்கக் கூடாது என்று கூறினர். அதைச் செய்ததற்காக ஜார் வருந்தி, மேய்ப்பனைக் கொல்வதற்குப் போதிய வலிமை வாய்ந்தவனை முன்னுக்கு வரும்படி கூறி தனது அரசின் எல்லா மூலைகளுக்கும் கடிதங்கள் அனுப்பினார். அத்தகைய இரு ஆட்கள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். ஜார் அவர்களை மேய்ப்பனிடம் அனுப்பினார்.

மேய்ப்பனுடைய மாளிகைக்கு அவர்கள் வரவும், அவர்களைச் சந்திப்பதற்காக அவன் வெளியே வந்து கேட்டான்:

''எது உங்களை இங்கே கொண்டுவந்தது, நல்லவர்களே? நீங்கள் என்னுடன் சண்டைபோட அல்லது சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறீர்களா?''

''உன்னுடன் சண்டையிட!'' என்று பதிலளித்தார்கள்.

அவர்கள் மேலும் காத்திருக்கவில்லை, சண்டை தொடங்கியது.

முதலாவது ஆள் தனது வாளால் மேய்ப்பனின் இடது தோள் மீது ஓங்கி அடித்ததுமே, வாள் தூள்தூளாய்ப் போனது; பிறகு இரண்டாவது ஆள் தனது வாளால் அவனது வலது தோள் மீது ஓங்கி அடித்தான், வாள் உடையவில்லை என்றாலும், அவனது சட்டையை மட்டுமே கிழிக்க முடிந்தது.

அதன் பிறகு மேய்ப்பனுடைய முறை வந்தது. அவன் முழுமையாக நிமிர்ந்து நின்று, இரு ஆட்களையும் பற்றிப் பிடித்து, அவர்களை ஒருவர் மீது ஒருவர் அத்தனை கடுமையாக நெருக்கவே, அவர்கள் நசுங்கிச் செத்துப்போனார்கள். அவர்களுடைய எலும்புகள் தரையில் சிதறி விழுந்தன. மேய்ப்பன் அவற்றில் சிலவற்றைச் சேகரித்துக் கொண்டு ஜாரிடம் எடுத்துச்சென்றான். அந்தளவு அவன் கோபமாக இருந்ததால், மரபுப்படி அரசனை விளிக்காமல் பேசினான்:

''இந்த எலும்புகளைப் பார்க்கிறீர்களா, ஜார்? உங்களுக்கும் கூட இது போலவேதான் இருக்கும் என்பதை குறைந்த அளவேனும் கவனத்தில் கொள்ளுங்கள்!''

இது அந்தளவு ஜாரை அச்சுறுத்தவே, அப்போதிலிருந்து அவர் மேய்ப்பனை அமைதியாக இருக்க விட்டார்.

தோல்பதனிடுவோன் கிரிலோ

கீவ் நகரத்தில் இளவரசர் ஒருவர் இருந்த காலத்தில், நகரத்துச் சுவர்களுக்கு அப்பால் பறவைநாகம் ஒன்று குடியிருந்து நகரமக்களின் கப்பத்தைப் பெற்றது: ஆணோ பெண்ணோ ஆண்டுதோறும் அதற்கு அவர்கள் கொடுக்க வேண்டியிருந்தது.

பறவைநாகத்திடம் செல்ல வேண்டிய முறை இளவரசருடைய மகளுக்கு வந்தது. அவளை அதனிடம் அனுப்பினார், ஏனெனில் நகரமக்கள் செய்தது போல அவரும் செய்ய வேண்டியிருந்தது.

இளவரசி அத்தனை அழகாக, வார்த்தைகளில் சொல்ல முடியாதவாறு இருந்தாள். பார்த்த மாத்திரத்தில் பறவைநாகம் அவளிடம் காதல் கொண்டது. இது இவ்வாறு இருக்கும் என்பதை அறிந்து இளவரசி தன்னைச் சிறைசெய்த பறவைநாகத்திடம் இனிமையாகப் பேசினாள்.

''பறவைநாகமே, எனக்குச் சொல், உன் மீது வெற்றியடையக் கூடிய மனிதன் இந்த உலகத்தில் எங்காவது இருக்கிறானா?'' என்று கேட்டாள். சில நாட்கள் அதனுடன் அவள் இருந்தபோது இது நடந்தது.

''அத்தகைய மனிதன் ஒருவன் கீவில் வசிக்கிறான், நீப்பர் நதியின் உயரமான கரையில்,'' என்று பறவைநாகம் சொன்னது. ''அவன்

தோல்பதனிடுபவன், ஒரே நேரத்தில் பன்னிரண்டு தோல்களுக்குக் குறையாமல் எப்போதுமே உரிக்கக் கூடிய அளவுக்கு வலிமையானவன். அவற்றை அவன் நீப்பரில் ஊறவைக்கிறான், நீரில் கிடந்த பிறகு அவை மிகவும் கனமாகி விடுகின்றன. ஓரிரு முறை அவற்றை நீருக் கடியில் கைப்பற்ற முயன்றேன்—ஆனால் அவன் எப்படியிருந்தாலும் சரி: தோல்களுடன் என்னைக் கூட ஏறக்குறைய கொண்டுசென்றான். நான் அதிகமாக பயப்படும் ஒரே மனிதன் இந்தத் தோல்பதனிடு வோன் தான்.''

இதைத் தெரிந்துகொண்ட இளவரசி தன்னைப் பற்றிய செய்தியை வீட்டுக்கு அனுப்புவது எப்படி, அப்பாவிடம் திரும்புவது எப்படி யென்று சிந்திக்கத் தொடங்கினாள். அவள் முற்றிலும் தனிமையில் இருந்தாள், கீவில் இருந்த போது அவள் ஊட்டிவளர்த்து, தன் னோடு கொண்டுவந்திருந்த புறாவைத் தவிர அவளுடன் யாருமில்லை. நீள யோசித்துத் தன் தந்தைக்கு எழுதுவதென்று முடிவு செய்தாள்.

''கீவ் நகரத்தில் கிரிலோ என்ற பெயருடைய தோல்பதனிடுவோன் இருக்கிறான்,'' என்று எழுதினாள், ''நீங்களாவது வேறுயாருமாவது பறவைநாகத்திடம் சண்டையிட்டு, சிறைவாசத்திலிருந்து மகிழ்ச்சியற்ற பெண்ணாகிய என்னை விடுவிக்க அவனிடம் வற்புறுத்த முயலுமாறு கெஞ்சிக்கேட்டுக் கொள்கிறேன். வார்த்தைகள் அவனை இளகச் செய்யவில்லை என்றால், பரிசுகள் கொடுங்கள். அவன் ஏதேனும் சொற்றொடர்களால் மனம் புண்படாதவாறு எல்லாரையும் நாகரிகப் பாங்காடு அவனோடு பேசச் சொல்லுங்கள். என்னுடைய வாழ்நாளின் கடைசிவரை உங்கள் இருவருக்காவும் நான் வழிபடுவேன், உங்களைக் கவனித்துக்கொள்ள இறைவனைக் கேட்டுக்கொள்வேன்...''

இதை எழுதிமுடித்து, கடிதத்தைப் புறாவினுடைய இறக்கையடியில் கட்டி, சன்னல் வழியாக அதை வெளியே பறக்க விட்டாள். புறா வானளாவப் பறந்து நேராக வீட்டிற்கு வந்தது. முற்றத்தில் ஓடி விளையாடிக் கொண்டிருந்த இளவரசருடைய குழந்தைகள், அதைப் பார்த்துக் கத்தினர்:

''அப்பா! அப்பா! இதோ அக்காவினுடைய புறா!''

இச்செய்தி இளவரசருடைய இதயத்தை மகிழ்ச்சியால் நிறைத்தது, அதைச் சிந்தித்துப் பார்ப்பதற்கு அவருக்கு நேரமிருந்த போதுதான் அது திரும்பவும் கணமாக மாறியது.

''என் மகள் பறவைநாகத்தால் கொல்லப்பட்டிருப்பாளோ?'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார்.

புறாவைத் தனது கை மீது வைத்துத் தடவிக் கொடுத்தார், அந்தோ! — அதனுடைய இறக்கையடியில் ஒரு குறிப்புக் கட்டப்பட்டிருந்தது. அதைப் படித்துவிட்டு உடனடியாக மூத்தவர்களை வரப் பணித்தார்.

''கிரிலோ என்ற பெயரில் தோல்பதனிடுபவன் கீவில் இருக்கிறானா?'' என்று கேட்டார்.

''இருக்கிறான், இளவரசே. நீப்பரின் உயர்ந்த கரை மேல் அவன் வசிக்கிறான்,'' என்று மூத்தவர்கள் பதிலளித்தனர்.

''அவன் புண்படாதவாறும், நாம் சொல்வது போலச் செய்யுமாறும் நாம் அவனிடம் எப்படி அணுகுவது?''

அதற்கு அவர்களால் பதிலளிக்க முடியாது, ஆகவே இது பற்றிக் கூடியோசித்து, கீவின் மிகவும் மூத்தவர்களைக் கிரிலோவிடம் அனுப்ப முடிவு செய்தார்கள்.

தூதுவர்கள் உடனேயே புறப்பட்டார்கள். அவர்கள் கிரிலோவினுடைய குடிசைக்கு வந்து, கதவைத் திறந்ததுமே மலைத்துப்போய் நின்றார்கள். அவர்களுக்கு முதுகைக் காட்டியவாறு தோல்பதனிடுபவன் தரை மீது அமர்ந்து, தனது வெறுங்கைகளுடன் ஒரே நேரத்தில் பன்னிரண்டு தோல்களை முறுக்கிக்கொண்டும் நெரித்துக்கொண்டும் இருந்தான். வேலை செய்கையில் அவனுடைய பனிவெள்ளைத் தாடியானது மேலும் கீழும் அசைந்தாடியதை அவர்கள் மேலெழுந்தவாறு பார்த்தார்கள்.

தூதுவர்களில் ஒருவர் இரும, கிரிலோ திடுக்குற்று தோல்களை அத்தனை வலுவாக முறுக்கவே, அவனுடைய கைகளில் அவை கிழிந்தன. அவன் திரும்பி கிழவர்களைப் பார்க்க, அவர்கள் தாழ்ந்து வணங்கி தாங்கள் யார், எதற்காக அனுப்பினார் என்பதை அவனிடம் சொல்லத் தொடங்கினார்கள். ஆனால் அவன் அவ்வளவு கோபமுற்றதால், அவர்களைப் பார்க்கவோ அவர்கள் சொல்வதைக் கேட்கவோ செய்யவில்லை. அவர்கள் மன்றாடினார்கள், கெஞ்சினார்கள், அவனுக்கு முன்னால் முழங்கால்களில் மண்டியிடவும் செய்தார்கள், ஆனால் எல்லாமே பயனளிக்கவில்லை.

என்ன செய்தாக வேண்டும்?

அவர்கள் மனச்சோர்வடைந்து இளவரசரிடம் திரும்பிச் சென்றார்கள். இளவரசர் நீண்ட நேரம் சிந்தித்து கீவின் மிகவும் இளைய ஆட்களைக் கிரிலோவிடம் அனுப்பத் தீர்மானித்தார்.

ஆனால் கிழவர்கள் செய்ததைக் காட்டிலும் இளைய தூதுவர்கள் கூடுதலாக எதுவும் வெற்றிபெறவில்லை. அவர்களுடைய முறையீடுகள் எல்லாவற்றையும் தோல்பதனிடுவோன் அமைதியாகக் கேட்டு அமர்ந்திருந்தான்.

இளவரசர் திரும்பவும் சிந்தித்தார், நீண்ட நேரம் சிந்தித்தார், பிறகு சில குழந்தைகளைக் கிரிலோவிடம் அனுப்பினார். குழந்தைகள் தோல்பதனிடுவோனுடைய குடிசைக்கு வந்து அவனுக்கு முன்னால் முழங்காலிட்டுப் பணிந்து முறையிடவும் அழவும் தொடங்கிய போது, அவனுங்கூட கண்ணீருக்குக் கலங்கிப் போனான்.

''அப்படியே சரி, உங்களுக்காக அதைச் செய்வேன்!'' என்றான்.

அவன் இளவரசரிடம் சென்று அவரிடம் பன்னிரண்டு பீப்பாய்க் கீலும், பன்னிரண்டு வண்டி சணற்கூளமும் கேட்டான். அதெல்லாம் கொண்டு வரப்பட்டபோது, தன்னைச் சுற்றிலும் சணற்கூளத்தை வரித்துக்கொண்டும் அதற்கு மேலாகக் கீல் பூசிக்கொண்டும், பத்துப் பூட் நிறையுள்ள கதாயுதத்துடன் பறவைநாகத்திடம் சண்டையிடச் சென்றான்.

''என்னோடு சண்டையிடுவதற்காக அல்லது சமாதானம் செய்து கொள்வதற்காக நீ வந்திருக்கிறாயா, கிரிலோ?'' என்று பறவைநாகம் கேட்டது.

''உன்னோடு சண்டையிட, நாசமாய்ப் போன வேதாளமே! உன்னைப் போன்றவர்களுடன் நான் ஒருபோதும் சமாதானம் செய்து கொள்ள மாட்டேன்!'' என்று கிரிலோ பதிலளித்தான்.

அவர்கள் சண்டையிடத் தொடங்கினார்கள், அவர்களுக்குக் கீழே தரை அதிரவும் குமுறவும் செய்தது. கிரிலோவைக் கடிப்பதற்காகப் பறவைநாகம் அவனிடம் விரைந்து செல்லும், அதனுடைய நச்சுப்பற்களில் கீல் ஒட்டிக் கொள்ளும்; திரும்பவும் அவனிடம் விரைந்து செல்லும், பற்களுக்கிடையே சணற்கூளம் வாய்நிறைய ஒட்டிக்கொள்ளும். கிரிலோ தன்னுடைய கதாயுதத்தால் பறவைநாகத்தை அடித்து அதைத் தரையில் வீழ்த்துவான்.

பறவைநாகம் அந்தளவு சூடாகிப் போகவே, அது நெருப்பில்

இருப்பது போல இருந்தது. குளிர்ந்த நீரில் மூழ்கி எழுவதற்காகவும் குடிப்பதற்காகவும் அது நீப்பருக்கு ஓடும், தோல்பதனிடுவோன் திரும் பவும் தன்னைச் சுற்றிச் சணற்கூளத்தை வரித்துக்கொண்டு அதன் மீது கீல் பூசிக்கொள்வான்.

ஒவ்வொரு முறையும் பறவைநாகம் நீரை விட்டு கிரிலோவிடம் விரைந்து வந்த போது, அவனும் தன்னுடைய கதாயுதத்தால் பறவை நாகத்தை அடிப்பான். அது திரும்பவும் அவனிடம் வரும், கிரிலோவும் எங்கினும் ஒலி எதிரொலிக்குமாறு அத்தனை பலமாக அதனைத் தாக்குவான்.

புகை மேகமாகப் போகின்ற வரையும், அவர்களைச் சுற்றி தீப் பொறிகள் பறக்கின்ற வரையும் அவர்கள் மேன்மேலும் சண்டையிட் டார்கள். கிரிலோவினுடைய அடிகள் வலுவாகவும் விரைவாகவும் வந்தன, கொல்லுலையில் கொழு போல பறவைநாகம் நெருப்பைக் கக்கியது. அது இருமவும், கடுமையாக ஒலியெழுப்பவும் செய்யவே, அதற்குக் கீழே நிலம் அதிர்ந்தது.

குன்றுகளிலிருந்து சண்டையைக் கவனித்த நகரமக்கள் உறைந்து விட்டது போல இருந்தார்கள்.

திடீரென்று ஒரு பெரும் இடிமுழக்கம் வந்தது! பூமி அதிர்ந்து நடுங்குமாறு பறவைநாகம் தரையில் விழுந்தது. குன்றுகளில் நின்ற நகரமக்கள் கைகளைத் தட்டி தோல்பதனிடுவோன் கிரிலோவை வாழ்த்தினார்கள்.

ஆக, பறவைநாகம் செத்துக் கிடந்தது. அதனைக் கொன்ற கிரிலோ இளவரசியை விடுவித்து அவளுடைய அப்பாவிடம் அழைத்துச் சென் றான்.

கிரிலோவுக்கு எப்படி தக்கவாறு நன்றி பாராட்டுவது என்று இளவரசருக்குத் தெரியவில்லை. அன்றைய நாளிலிருந்து கிரிலோ வசித்த கீவ் நகரத்தின் பகுதியானது தோல்பதனிடுவோன் நகர் என வழங்கலாயிற்று.

ஓ!

மிக மிக நீண்ட காலத்திற்கு முன்பு, நம்முடைய தந்தைமார்களும் பாட்டன்மார்களும் பிறந்ததற்கு முன்னால் கடந்துசென்ற நாள்களில் ஓர் ஏழை மனிதனும் அவனுடைய மனைவியும் வசித்தார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான், எந்தவகையிலும் பெருமைப்பட்டுக்கொள்ள முடியாத ஓர் இளைஞன், சோம்பேறியைத் தவிர வேறொன்றுமில்லை! சூட்டடுப்பு பெஞ்சின் மீது அமர்ந்து அரை குறையாக உடையணிந்து, தொடர்ந்து நாளுக்குநாள் தினைத் தானியங்களை வைத்துக்கொண்டு விளையாடினான், தன்னுடைய பெற்றோர்க்கோ தனக்கோ உதவ ஒரு விரலைக் கூட நகர்த்த மாட்டான். அவனுக்குக் கிட்டத்தட்ட இருபது வயதாகி விட்டது, ஆனால் சூட்டடுப்பு பெஞ்சின் மேல் உட்கார்ந்துகொண்டு கீழே இறங்கவே மாட்டான். அவனுக்கு முன்னால் உணவு வைக்கப்பட்டால் தின்பான்; ஆனால் வைக்கப்படவில்லை என்றால், தானாகவே அதைப் பெறுவதைக் காட்டிலும், அது இல்லாமலேயே இருப்பான்.

அது உண்மையிலேயே அவனுடைய அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பெருங்கவலையை ஏற்படுத்தியது.

‘‘உன்னை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்யப் போகிறோம், மகனே!’’ என்றார்கள். ‘‘மற்றவர்களுடைய குழந்தைகள்

தங்களுடைய பெற்றோர்க்கு உதவுகிறார்கள், ஆனால் நீ தின்ன மட்டும் செய்கிறாய்!''

அம்மாவும் அப்பாவும் நீண்ட நாள்களுக்குக் கவலைப்படவும் துயரப்படவும் செய்தார்கள். ஆக, ஒரு நாள் அம்மா சொன்னாள்:

''எதைப் பற்றி நீங்கள் சிந்திக்க முடியும், கணவரே? நமது மகன் பெரிய மனிதனாக வளர்ந்திருக்கிறான், ஆனால் எதையும் எப்படிச் செய்வதென்றே அவனுக்குத் தெரியவில்லை. வேலை செய்ய அல்லது ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள அவனை வெளியே அனுப்பலாம், அப்போதுதான் ஏதாவது செய்ய அவன் அறிந்துகொள்வான்!''

இதற்கு அப்பா ஒப்புக்கொண்டு, தன்னுடைய மகனை ஒரு தையல் காரனிடம் பயிற்சியாளனாக வைத்துக்கொள்ளும்படி ஒப்படைத்தார். ஆனால் இளைஞனோ மூன்று நாள்களுக்கு மட்டுமே தையல்காரனிடம் தங்கியிருந்தான். அவனிடமிருந்து ஓடிவந்து திரும்பவும் வீட்டை அடைந்து, சூட்டடுப்பு பெஞ்சின் மீது ஏறிக்கொண்டு, தினைத் தானியங்களை வைத்துக்கொண்டு மீண்டும் விளையாடத் தொடங்கினான்.

அவனுடைய அப்பா அவனைத் திட்டவும் விளாசவும் செய்தார், பிறகு செருப்புத்தைப்பவனிடம் அவனை அமர்த்தினார், ஆனால் அங்கிருந்தும் அவன் ஓடிவந்து விட்டான். அவனை மீண்டும் நையப்புடைத்து ஒரு கொல்லனிடம் அனுப்பினார், ஆனால் எல்லாமே வீணாயின, ஏனெனில் முன் போலத்தான் நடந்தது.

தந்தை முன்னிலும் அதிகக் கவலைப்பட்டார்.

''நான் என்ன செய்ய வேண்டும்?'' என்றார். ''இவனை வேறொரு நாட்டிற்குக் கூட்டிச்சென்று இவனுக்கு ஒரு தொழிலைக் கற்றுக் கொடுக்க யாரையாவது பார்க்கலாம் என நினைக்கிறேன் — ஒரு வகையில் அங்கிருந்து அவனால் அவ்வளவு சுலபமாக ஓடிப்போக முடியாது.''

தன் மகனைக் கூட்டிக்கொண்டு, மற்றொரு நாட்டிற்காக அவர் கிளம்பினார்.

அவர்கள் மேன்மேலும் நடந்தார்கள், நீண்ட நேரம் கடந்ததா குறுகிய நேரம் கடந்ததா என்பது யாருக்கும் தெரியாது, ஆனால் கடைசியில் மேலே வானத்தையும் கீழே பூமியையும் தவிர வேறு எதையும் காண முடியாத அந்தளவு அடர்ந்த, இருண்ட காட்டிற்கு

வந்தார்கள். களைப்பாக உணரவே, உட்கார்வதற்காக ஏதேனும் உண்டா எனச் சுற்றிலும் பார்த்தார்கள். பாதையோரத்தில் எரிந்து போன மரக்கட்டை ஒன்றைப் பார்த்த அப்பா சொன்னார்:

''அந்த மரக்கட்டையின் மேல் உட்கார்ந்து கணப்போதுக்கு ஓய்வு எடுக்கலாம்.''

மேலும், ''ஓ, எவ்வளவு களைப்பாக இருக்கிறது எனக்கு!'' என்ற வாறு மரக்கட்டையின் மீது அமர்ந்துகொண்டார்.

ஆனால் அவர் வாயினின்றும் வார்த்தைகள் வந்தவுடனேயே — அந்தோ பார்! — தனது கணுக்கால்வரை நீளமாகப் பளிச்சிடும் பச்சைநிறத் தாடி கொண்ட ஒரு குள்ளமான கிழவன் கட்டையினின்றும் வெளியே ஏறிவந்தான்.

''உனக்கு என்ன வேண்டும், நல்லவனே?'' எனக் கேட்டான்.

வியப்பில் தந்தை பின்னுக்கு அசைந்து — அவ்வளவு விநோதமானவன் எங்கிருந்து வர முடியும்! — சொன்னார்:

''உன்னிடமிருந்து எதையும் நான் விரும்பவில்லை!''

''அப்போது எதற்காக என்னை அழைத்தாய்?'' என்று குள்ள மான கிழவன் கேட்டான்.

''நீ யார்?''

''நான் ஓ, காட்டின் ஜார்! எதற்காக என்னை அழைத்தாய் என்று சொல்.''

''என்ன அதிசயம்! அது பற்றி நான் சிந்திக்கக் கூட இல்லை!''

''நீ சிந்திக்கவில்லையா? நீ 'ஓ!' என்றதை நான் கேட்டேன்.''

''ஆமாம், ஆனால் நான் களைப்படைந்தது காரணமாகத்தான்.''

''நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?'' ஓ கேட்டான்.

''சாலை எங்கெல்லாம் போகிறதோ,'' என தந்தை பதிலளித்தார். ''என்னுடைய இந்த அறிவற்ற இளைஞனுக்கு ஒரு தொழிலைக் கற்றுக்கொடுக்கவும், அவனுடைய தலைக்குள்ளாகக் கொஞ்சம் அறிவை வைக்கவும் கூடிய யாரேனும் ஒரு நபரைக் கண்டுபிடிக்க நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ஒருகால் என்னால் செய்ய முடியாததை அந்நியர்கள் செய்வார்கள். ஊரிலோ, அவனை நான் விட்டு வைத்திருந்த எல்லா ஆட்களிடமிருந்தும் ஓடிவந்து கொண்டே இருந்தான்.''

''அவனை ஏன் என்னிடம் நீ விடக் கூடாது?'' என ஓ கேட்டான்.

''அவனை ஒரு மனிதனாக்க என்னால் முடியும். ஆனால் அதை நான் ஒரு நிபந்தனையின் பேரில் செய்வேன்: ஓராண்டு கடந்த பிறகு, உன்னுடைய மகனை நீ அடையாளங் கண்டுகொண்டால் மட்டுமே அவனை உன்னுடன் அழைத்துச்செல்வாய். இல்லாவிட்டால் மேலும் ஓராண்டுக்கு அவன் என்னிடம் இருக்க வேண்டும்.''

''மிகவும் நல்லது, அது அப்படியே இருக்கட்டும்,'' என அப்பா சொன்னார், பிறகு தன் மகனை ஓவிடம் விட்டுவிட்டு வீடு திரும்பினார்.

கீழேயுள்ள உலகத்திற்கு ஓ அந்த இளைஞனை நேரடியாக அழைத்துச் சென்று, கோரைப் புற்களால் வேயப்பட்ட பச்சைநிறக் குடிசைக்கு அவனைக் கூட்டி வந்தான். குடிசையிலுள்ள ஒவ்வொன்றும் பச்சை நிறமாகவே இருந்தன: சுவர்கள், பெஞ்சுகள் மற்றும் ஓவினுடைய மனைவியும் குழந்தைகளும். ஓவினுடைய வேலையாட்களைப் பொருத்த மட்டில், அவர்கள் எல்லாருமே புல்லின் பசுமையைப் போல அவ்வளவு பச்சையான கூளிகளாக இருந்தனர்.

''உட்கார்ந்து ஏதாவது சாப்பிடு,'' என்று இளைஞனிடம் ஓ கூறினான்.

வேலையாட்கள் உணவு கொண்டுவந்தார்கள், அதுவும் பச்சை நிறமாகவே இருந்தது. இளைஞன் சிறிது உண்டான்.

''இப்போது,'' என்றான் ஓ, ''எனக்காக விறகு வெட்டி அதை வீட்டிற்குள்ளாகக் கொண்டுவா.''

வெளியே சென்ற இளைஞன் விறகு வெட்டினானா இல்லையா என்பது யாருக்கும் தெரியாது, ஆனால் அவன் புல்லின் மீது படுத்து தூங்கிப்போனான். அவன் எவ்வாறு வேலை செய்கிறான் என்பதைப் பார்ப்பதற்காக ஓ வந்தான். அங்கே அவன் படுத்திருப்பதைப் பார்த்து அவனைக் கட்டிப் போடச் சொன்னான். மேலும் கட்டைகள் கொண்டு வரும்படி தனது வேலையாட்களுக்கு உத்தரவிட்டான். அவற்றிற்கு மேலாக இளைஞனை இழுத்துப் போட்டு, கட்டைகளுக்கு நெருப்பு வைத்தான். இளைஞன் தணலாக எரிந்துபோனான். அவனுடைய சாம்பலை ஓ காற்றில் ஊதிவிட்டான். அவனது ஒரு சிறிய கங்கு மட்டுமே எஞ்சியிருந்தது, ஆனால் ஓ உயிர் நீர் கொண்டு அதன் மீது தெளித்த போது—அதிலிருந்து இளைஞன் உயிரோடு எழுந்து, முன் எனவிட அறிவுள்ளவனாக இருந்தான்.

திரும்பவும் மரம் வெட்டும்படி அவனிடம் ஓ கூறினான், ஆனால்

இளைஞனோ முன் போலவே தூங்கிப் போய்விட்டான். கட்டை களுக்கு இரண்டாவது முறையாக ஓ நெருப்பிட்டு, தணலாக அவனை எரிந்து, சாம்பலைக் காற்றில் தூவினான். எஞ்சிய ஒரு கங்கை உயிர் நீர் கொண்டு தெளிக்க, இளைஞன் உயிருடன் வந்தான்! மேலும், எதற்கும் லாயக்கற்றவனாக அவன் இருக்கவில்லை, எங்கும் காணக் கூடிய ஓர் இளைஞனைப் போல புத்திசாலியாகவும், வாயினால் சொல்ல முடிந்ததை விட அல்லது கதை சொல்வதை விட மிகவும் அழகானவனாகவும் இருந்தான்.

ஓராண்டு கடந்தது. அதன் முடிவில் இளைஞனுடைய அப்பா அவனைக் கண்டுபிடித்துத் திரும்பக் கொண்டுவருவதற்காக வீட்டை விட்டுக் கிளம்பினார்.

அதே காட்டிற்கு தந்தை வந்து, அதே மரக்கட்டையிடம் சென்று, அதன் மீது உட்கார்ந்து கொண்டு, ஓர் உறுமலுடன் சொன்னார்:

''ஓ!''

அந்தோ! — மரக்கட்டையினின்றும் வெளியே ஓ ஏறிவந்தான்.

''காலை வணக்கம், நல்லவனே!'' என்றான்.

''காலை வணக்கம் உனக்கும், ஓ!''

''எது உன்னை இங்கே கொண்டுவந்தது?''

''என் மகனுக்காக நான் வந்திருக்கிறேன்.''

''இப்போது கூட வா. உன் மகனை நீ அடையாளங் கண்டுகொண் டால், உன்னுடன் அவனைக் கூட்டிப் போகலாம். இல்லாவிட்டால் மேலும் ஓராண்டுக்கு அவன் எனக்காக வேலை செய்ய வேண்டும்.''

ஓவைப் பின்தொடர்ந்து அப்பா அவனுடைய குடிசைக்குச் சென் றார். அவர்கள் அங்கே சென்றவுடனேயே, ஓ தினைச் சாக்கை எடுத்து வந்தான். தினையைத் தரை மீது பரத்திப் போட்டான். பெரும் எண்ணிக்கையில் சேவல்கள் ஓடிவந்து அதைக் கொத்தத் தொடங்கின.

''இந்தச் சேவல்களில் உன் மகன் எது என்று இப்போது எனக்குச் சொல்,'' என்றான்.

அப்பா அவற்றை உற்றுப்பார்த்தார், ஆனால் அவருக்கு எல்லாச் சேவல்களுமே ஒன்று போலக் காணப்பட்டன, அவருடைய வாழ்நாள் பூ பூக்க அவற்றைப் பிரித்துச் சொல்வது அவரால் முடியாது.

''ஆகவே நீ வீட்டுக்குப் போ!'' என்றான் ஓ. ''உன் மகன் இங்கே தங்கியிருந்து மேலும் ஓராண்டுக்கு எனக்குச் சேவை செய்வான்.''

அப்பா வீட்டுக்குச் சென்றார். ஆனால் இரண்டாமாண்டு முடிந்த உடனேயே அதே காட்டிற்கு, அதே மரக்கட்டையிடம் திரும்ப வந்தார்.

''ஓ!'' என்று உறுமலுடன் சொன்னார்.

அந்தோ! —அவருக்கு முன்னால் ஓ இருந்தான்.

''என்னைப் பின்தொடர், இந்த முறை உன் மகனை உன்னால் அடையாளங் காண முடிகிறதா பார்!'' என்றான்.

அவரை ஆட்டுக் கொட்டிலுக்கு அழைத்துச்சென்றான், ஆனால் தந்தைக்கு ஆடுகள் எல்லாமே ஒன்று போலக் காணப்பட்டன. திரும்பத் திரும்ப உற்றுப்பார்த்தும், அவர் வாழ்நாளில் தன்னுடைய மகன் ...ரென்று அவரால் சொல்ல முடியாது.

''ஆகவே வீட்டுக்குப் போ! மேலும் ஓராண்டுக்கு உன் மகன் என்னுடன் தங்கியிருப்பான்,'' என்றான் ஓ.

எவ்வளவு துயரமாக இருக்க முடியுமோ அவ்வளவு துயரமாக அப்பா வீடு சென்றார், ஆனால் ஆண்டு முடிந்த போது காட்டுக்குத் திரும்பவும் புறப்பட்டார். அவர் மேன்மேலும் நடந்தார், வெண்பனி போல வெள்ளையான தாடியுடனும், வெள்ளையாக எல்லாமே உடை...னும் இருந்த கிழவன் அவரை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

''வணக்கம், நல்லவனே!'' என்றான்.

''உங்களைத்தான், கிழவரே!''

''எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?''

''ஓவைப் பார்த்து என் மகனைத் திரும்பப் பெற.''

''உன்னிடமிருந்து உனது மகனை அவனால் எப்படிக் கொண்டு போக முடிந்தது?''

''அது ஒரு நீண்ட கதை.''

ஓவுடன் தான் செய்துகொண்ட பேரம் பற்றிக் கிழவனிடம் அப்பா கூறினார்.

''ஒரு மோசமான காரியம்!'' என்றான் கிழவன்.

''ஆமாம், எனக்குத் தெரியும்,'' என்றார் அப்பா. ''என் மகனைத் திரும்பப் பெறுவதற்காக நான் என்ன செய்ய வேண்டும் என்பதை என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. ஆனால் ஒருகால் நீங்கள் ஏதாவது யோசித்துப்பார்க்க முடியும்?''

''என்னால் முடியும் என நினைக்கிறேன்,'' என்றான் கிழவன்.

''ஐயோ, தயவு செய்யுங்கள், நான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள். என் மகன் எப்படி இருந்தாலும் அவன் என்னுடைய சொந்தக் குருதியும் சதையும் ஆவான். அவனைத் திரும்பப் பெற விரும்புகிறேன்.''

''அப்ப சரி, நான் சொல்வதைக் கேள்,'' என்றான் கிழவன். ''நீ ஓவினுடைய குடிசைக்குப் போனதும், அவன் புறாக் கூட்டத்தை வெளியேவிட்டு, அவை தின்னத் தானியத்தைப் பரத்திப் போடுவான். தானியத்தைக் கொத்தாது, ஒரு பேரிக்காய் மரத்திற்குக் கீழே நின்று தனது சிறகுகளைச் சுத்தம் செய்து கொண்டிருக்கும் ஒரு புறாதான் உன்னுடைய மகன்.''

அப்பா கிழவனுக்கு நன்றி சொல்லிவிட்டு மேலே நடந்தார்.

மரக்கட்டையிடம் வந்து ''ஓ!'' என்றார். ஓ தோன்றி தனது பாதாள வீட்டிற்கு அவரை அழைத்துச் சென்றான். தரையில் கோதுமை தானியங்களைப் பரத்திப்போட்டு புறாக்களைக் கூப்பிட்டான். எல்லாமே ஒன்று போலவே காணப்பட்டவை பறந்து வந்தன.

''இந்தப் புறாக்களில் உன்னுடைய மகன் யாரென்று இப்போது எனக்குச் சொல்,'' என்றான் ஓ. ''எஞ்சியவைகளினின்றும் அவனைத் தனியாக உன்னால் காட்ட முடிந்தால் அவன்தான் உன்னுடையவன்; ஆனால் உன்னால் முடியவில்லை என்றால், அவன் என்னுடையவன்!''

புறாக்களை அப்பா உற்றுப்பார்த்தார். கோதுமையைக் கொத்துவதிலேயே எல்லாப் புறாக்களும் சுறுசுறுப்பாக இருக்க, அவற்றில் ஒன்றே ஒன்று மட்டும், மற்றவைகளிடமிருந்து பிரிந்து, ஒரு பேரிக்காய் மரத்திற்குக் கீழே நின்று தனது சிறகுகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்தது.

''அதுதான் என் மகன்!'' அதைச் சுட்டிக்காட்டி அப்பா கத்தினார்.

''உண்மைதான்! அது அவனே, உன்னோடு அவனை வீட்டிற்கு அழைத்துப் போக முடியும்,'' என்றான் ஓ.

அவனைப் போன்ற ஒருவனை உலகில் எங்குமே காண முடியாதவாறு புறாவை அத்தனை அழகான இளைஞனாக அவன் மாற்றினான்.

அப்பா பெருமகிழ்ச்சியுற்றார், மகனும் அப்படியே. அவர்கள் ஒருவரையொருவர் தழுவி முத்தமிட்டுக் கொண்டார்கள்.

''வா, மகனே, இப்போது நாம் வீடு செல்லலாம்,'' என்றார் தந்தை.

அவர்கள் நெடுகிலும் நடந்து செல்கையில் இந்த மூன்றாண்டுகளில் நடந்த எல்லாவற்றையும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர்.

அவர்கள் எவ்வளவு ஏழையாக இருந்தார்கள் என்பது பற்றித் தன் மகனிடம் அப்பா புகார் செய்தார்.

''நாம் என்ன செய்யப் போகிறோம், மகனே?'' என்றார். ''நான் ஏழை, நீயும் அப்படித்தான், ஒவுக்காக நீ மூன்றாண்டுகள் வேலை செய்தாலும் எதுவும் சம்பாதிக்கவில்லை.''

''கவலைப்பட வேண்டாம், அப்பா, பரவாயில்லை,'' என்றான் மகன். ''இளம் பிரபுக்கள் நரி வேட்டைக்குக் காட்டிற்குச் செல்வார்கள், அவர்களைப் பார்க்கும் போது நானே ஒரு வேட்டை நாயாக மாறிக்கொண்டு ஒரு நரியைப் பிடிப்பேன். என்னை வாங்க அவர்கள் விரும்புவார்கள், நீங்கள் என்னை முந்நூறு ரூபிள்களுக்குக் கொடுக்கலாம். நமக்குப் போதுமான பணம் கிடைக்கும். ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள், என்னுடைய கழுத்துப் பட்டையை அவர்களிடம் தந்து விடாதீர்கள்!''

அவர்கள் நடையைத் தொடர்ந்தார்கள். காட்டின் விளிம்புக்கு அவர்கள் வந்த போது சில நாய்கள் ஒரு நரியைத் துரத்துவதைப் பார்த்தார்கள். ஆனால் அவற்றின் பார்வையினின்றும் நரி மறையவே இல்லை என்றாலும் அவற்றால் அந்த நரியைச் சிறிதும் முந்திச் செல்ல முடியவில்லை.

மகன் உடனே தன்னை ஒரு வேட்டை நாயாக மாற்றிக்கொண்டு, நரியைப் பின்தொடர்ந்து சென்று சீக்கிரமே அதைக் கொண்டு வந்தான்.

பிரபுக்கள் காட்டை விட்டு வெளியே விரைந்து வந்தார்கள்.

''அந்த நாய் உன்னுடையதா?'' அப்பாவிடம் அவர்கள் கேட்டார்கள்.

''ஆமாம், என்னுடையது தான்!'' என்று அப்பா பதிலளித்தார்.

''எங்களுக்கு அதை விற்றுவிடு!''

''எனக்கு மறுப்பில்லை.''

''அதற்காக நீ எவ்வளவு விரும்புகிறாய்?''

''முந்நூறு ரூபிள்கள். ஆனால் கழுத்துப் பட்டை இல்லாமல், நினைவிருக்கட்டும்!''

''உன்னுடைய பழைய கழுத்துப் பட்டை எமக்கு எதற்காக

வேண்டும்? முலாம் பூசிய ஒன்றை நாம் வைத்துக்கொள்வோம். பணத்தைப் பெற்றுக்கொண்டு நாயை எங்களிடம் தா!''

அவர்கள் பணத்தை எண்ணிக் கொடுத்துவிட்டு, நாயைப் பெற்றுக் கொண்டு, மற்றொரு நரியைப் பின்தொடர விட்டார்கள். நரியை நோக்கி நாய் நேரடியாகக் காட்டிற்குள் துரத்தியது, தன்னுடைய பழைய வடிவத்தைப் பெற்றுக்கொண்டு அப்பாவிடம் திரும்ப வந்தான்.

அப்பாவும் மகனும் மேலும் நடந்து செல்கையில் அப்பா சொன்னார்:

''நம்மிடம் உள்ள இந்தப் பணம் நீண்ட நாள்களுக்கு வராது, மகனே. சில வீட்டு விலங்குகளும், தொழிற்கருவிகளும் வாங்கி ஓரள வுக்கு வீட்டை அமைக்கத்தான் அது போதுமானது.''

''கவலைப்பட வேண்டாம், அப்பா,'' என்றான் மகன். ''இன்னும் சற்று தள்ளி மேலும் சில இளம் பிரபுக்கள் கவுதாரி வேட்டையாடிக் கொண்டிருப்பார்கள். நான் ஓர் இராசாளியாக மாற்றிக்கொள்வேன், என்னை வாங்க அவர்கள் விரும்புவார்கள், என்னை முந்நூறு ரூபிள் களுக்கு நீங்கள் கொடுக்கலாம். ஒன்று மட்டும் நினைவு வைத்திருங்கள், என்னுடைய உறையை அவர்களிடம் கொடுத்து விடாதீர்கள்!''

ஒரு வயலை அவர்கள் கடந்த போது சில இளம் பிரபுக்கள் கவுதாரி வேட்டையாடுவதைக் கண்டார்கள். பிரபுக்கள் ஓர் இராசாளியை அவிழ்த்துவிட்டார்கள், ஆனால் அதன் பார்வையினின்றும் கவுதாரி மறையவில்லை என்றாலும் அதனால் முந்திச்செல்ல முடியவில்லை. பிறகு மகன் தன்னை ஓர் இராசாளியாக மாற்றிக்கொண்டு கவுதாரி களில் ஒன்றைப் பிடித்தான். பிரபுக்கள் இதைப் பார்த்துவிட்டு அப்பா விடம் ஓடிவந்தார்கள்.

''இந்த இராசாளி உன்னுடையதா?'' எனக் கேட்டனர்.

''ஆமாம்,'' அப்பா பதிலளித்தார்.

''அதை எங்களிடம் விற்றுவிடு!''

''எனக்கு மறுப்பில்லை.''

''அதற்காக நீ எவ்வளவு விரும்புகிறாய்?''

''முந்நூறு ரூபிள்கள், ஆனால் உறையில்லாமல், நினைவிருக்கட்டும்!''

''உன்னுடைய பழைய உறை எங்களுக்குத் தேவையில்லை, நல்லதாக ஒன்று நாம் தயாரித்துக்கொள்வோம்!''

சற்று நேரத்திற்கு அவர்கள் பேரம் பேசினார்கள், ஆனால் இறுதி யில் அப்பா கேட்ட பணத்தை அவரிடம் கொடுத்தார்கள். பிறகு

அவர்கள் ஒரு கவுதாரியைப் பின்பற்றிச் செல்ல இராசாளியைப் பறக்க விட்டார்கள். ஆனால் அது காட்டை அடைந்ததுமே, தன் னுடைய சுய உருவத்தை அடைந்து அப்பாவுடன் திரும்பச் சேர்ந்து கொண்டான்.

''இப்போது நமக்கு வாழ்வதற்குப் போதுமானது இருக்கிறது!'' என்றார் அப்பா.

''பொறுங்கள், அப்பா, நாம் இன்னும் அதிகம் பெறுவோம்!'' என்றான் மகன். ''நாம் ஒரு சந்தைக்குப் போவோம், நான் ஒரு குதிரையாக மாறுவேன், நீங்கள் என்னை விற்பீர்கள். நான் ஓர் ஆயிரம் ரூபிள்களுக்குப் போவேன், ஆனால் நினைவிருக்கட்டும், என் னுடைய கடிவாளத்தை விற்றுவிடாதீர்கள்!''

அவர்கள் ஒரு சிறிய நகரத்திற்கு வந்தார்கள். அங்கே மிகப் பெரிய சந்தை ஒன்று நடந்து கொண்டிருந்தது. மகன் தன்னை ஒரு குதிரையாக மாற்றிக்கொண்டான். அந்தளவுக்கு அது முரட்டுத்தன மாக இருக்கவே, அதைப் பார்த்த எல்லாருமே அருகே வர அஞ்சினார் கள். அதன் கடிவாளத்தைப் பற்றி அப்பா அதை நெடுகிலும் கூட்டிச் சென்றார், ஆனால் துள்ளுவதினின்றும், தனது குளம்புகளால் தரையில் உதைவதினின்றும் அரைப்பதினின்றும் குதிரையை அவரால் நிறுத்த முடியவில்லை. வியாபாரிகள் அதைப் பார்த்து நெருங்கி வந்து பேரம் பேசத் தொடங்கினார்கள்.

''அதற்கு நான் ஆயிரம் ரூபிள்கள் விரும்புகிறேன்!'' என்றார் அப்பா. ''ஆனால் கடிவாளம் இல்லாமல், நினைவிருக்கட்டும்.''

''விலையைப் பாதியாகக் குறை, உன்னுடைய பழைய கடிவாளத்தை நீயே வைத்துக்கொள்ளலாம், அதற்கு நாம் வெள்ளிக் கடிவாளம் செய்வோம்!'' என்றனர் வியாபாரிகள்.

''நான் கேட்டதும் ஓராயிரம், நான் பெற விரும்புவதும் ஓராயிரம்!''

அந்நேரத்தில் அப்பாவையும் அவரது குதிரையையும் சுற்றி நின்று கொண்டிருந்த கூட்டத்தில் ஒரு ஜிப்ஸி சேர்ந்து கொண்டதையும் அவனுக்கு ஒரு கண் குருடு என்பதையும் அப்பா கண்டார்.

''குதிரைக்காக என்ன விரும்புகிறாய்?'' ஜிப்ஸி கேட்டான்.

''ஆயிரம் ரூபிள்கள். நான் கடிவாளத்தை வைத்துக்கொள்வேன்,'' என அப்பா கூறினார்.

''மிகவும் அதிகம். கடிவாளத்துடன் ஐந்நூறு, எப்படி?''

''கிடையாது!''

''பிறகு, அறுநூறு.''

''கிடையாது!''

அவர்கள் பேரம் பேசத் தொடங்கினார்கள், ஆனால் அப்பாவோ அவர் குறிப்பிட்ட தொகையிலிருந்து ஒரு கோப்பெக் அளவுக்குக் கூட குறைப்பதாக இல்லை.

''ஓ, அப்ப சரி, நீ ஆயிரத்தைப் பெற்றுக்கொள்,'' என்றான் ஜிப்ஸி கடைசியில். ''ஆனால் கடிவாளத்தையும் நான் விரும்புகிறேன்.''

''உனக்கு அது கிடைக்காது!''

''பாரு, கடிவாளம் இல்லாமல் ஒரு குதிரை விற்கப்படுவதாக யாரேனும் கேட்டிருக்கிறார்களா! அதை எப்படி நான் ஓட்டிச் செல்வேன்?''

''அது உன்னுடைய விவகாரம்.''

''கூடுதலாக ஐந்து ரூபிள் வாங்கிக்கொள், சச்சரவு வேண்டாம்!''

''ஓ, அப்ப சரி!'' என்ற அப்பா, தனக்குத்தானே சிந்தித்தார்:

''கடிவாளத்திற்காக ஐந்து ரூபிள் என்பது நல்ல பேரம், அது முப்பது கோப்பெக்குக்கு மேலே போகாது!''

அப்படியே அப்பா பணத்தை எடுத்துக்கொண்டு வீடு சென்றார், ஜிப்ஸியோ, அவன் உண்மையில் ஜிப்ஸியே அன்று, ஓ தான் அந்த மாறுவேடத்தில் வந்தவன், குதிரையைப் பெற்றுக்கொண்டு சவாரி சென்றான்.

குதிரை மரங்களுக்கு மேலாக ஆனால் மேகங்களுக்குக் கீழாகப் பறந்து, சீக்கிரமே ஓவை அவனுடைய நாட்டிற்குக் கொண்டுவந்தது. அவர்கள் காட்டின் வழியாக வந்தார்கள், ஓ குதிரையை இலாயத்தில் நிறுத்திவிட்டு வீட்டிற்குள்ளாகச் சென்றான்.

''அந்தப் போக்கிரி என்னிடமிருந்து தப்பிப் போய்விடவில்லை!'' என்று தன் மனைவியிடம் சொன்னான்.

நண்பகல் வரவும் ஓ குதிரையின் கடிவாளத்தைப் பற்றி ஆற்றுக்கு அழைத்துச்சென்றான். நீருக்கு மேலாகக் குனிந்த குதிரை நீர் பருகு வதற்குப் பதில், கெண்டை மீனாக மாறி அப்பால் நீந்திச் சென்றது. ஓ நீண்ட நேரம் சிந்திக்கவில்லை, பைக் மீனாக உருமாறி கெண் டையைத் தொடர்ந்து சென்றான். கெண்டையைப் பிடிப்பதற்கு இருந்தான், ஆனால் அதுவோ மிக விரைவாகவும், லாவகமாகவும்

நீந்திச் சென்றது. அப்போது பைக் மீன் எவ்வளவு நெருங்க முடியுமோ அவ்வளவு நெருங்கி வந்து சொன்னான்:

''தயவுசெய்து, கெண்டையே, பேசுவதற்காகத் திரும்பி என்னைப் பார்!''

''இவ்வாறாகவே நீ சொல்வதை என்னால் கேட்க முடியும்!'' என்று கெண்டை பதிலளித்தது. பைக் கெண்டைக்குப் பின்னால் நீந்திச் சென்றாலும் அதனால் பிடிக்க முடியவில்லை.

கரைவரை நீந்திச் சென்ற கெண்டை, இளவரசி துணி துவைப் பதைக் கண்டு பொன்மணி மோதிரமாக மாறியது. மோதிரத்தைக் கண்ட இளவரசி, நீரினின்றும் அதை வெளியே எடுத்து தன் தந்தையிடம் காட்டுவதற்காக வீட்டிற்குக் கொண்டுவந்தாள்.

''நான் கண்டுபிடித்த அழகான மோதிரத்தைப் பாருங்கள்!'' என்றாள்.

அப்பா மோதிரத்தைப் பாராட்டினார், மேலும் அது அத்தனை அழகாக இருக்கிறதென்று நினைத்த இளவரசிக்கு, அதை எந்த விரலில் அணிவது என்று தெரியவில்லை!

சிறிது நேரம் சென்றது, ஒரு கிழ வியாபாரி ஜாரைப் பார்க்க விரும்புவதாக சேவகர்கள் தெரிவித்தனர்.

ஜார் தனது அறையை விட்டு வெளியே வந்தார்.

''உனக்கு என்ன வேண்டும், கிழவனே?'' என்று அந்த வியாபாரியிடம் கேட்டார்.

அந்த வியாபாரி, வியாபாரியின் வேடத்தில் வந்துள்ளவன் ஓவே தவிர வேறு யாருமில்லை, பதில் சொன்னான்:

''நான் ஒரு கப்பலில் கடலைக் கடந்து கொண்டிருந்தேன், மேன்மைதங்கிய மன்னரே, தற்செயலாக என் மன்னருக்கு எடுத்துச்சென்ற பொன்மணி மோதிரம் ஒன்றை நீருக்குள்ளாகப் போட்டுவிட்டேன். உங்களுடைய மக்களில் யாரேனும் அதைக் கண்டார்களா என்பதைக் கேட்பதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்.''

''என் மகள் கண்டாள்,'' என்றார் ஜார்.

அவர் இளவரசியை அழைத்தார். தன்னிடம் மோதிரத்தைத் தரும்படி ஓ அவளிடம் கெஞ்சத் தொடங்கினான், தன் மன்னரிடம் அதைக் கொடுக்காவிட்டால் தன்னுடைய உயிரை வாங்கிவிடும் என்றான்.

ஆனால் இளவரசி இந்த மோதிரத்தைக் கொடுக்க விரும்பவில்லை, மேலும் எதனாலும் அவளுடைய மனத்தை மாற்ற முடியவில்லை.

ஓவின் முறையீடுகளுடன் ஜாரும் சேர்ந்துகொண்டார்.

''அந்தக் கிழவனிடம் அவனது மோதிரத்தைக் கொடு, மகளே,'' என்றார். ''அதை ஒப்படைக்காததற்காக அவன் தண்டிக்கப்பட வேண்டும் என நீ விரும்பாதே!''

''அப்படியானால் நம்மில் யாரும் அதை வைத்துக்கொள்ள வேண்டாம்!'' என இளவரசி கத்தி, மோதிரத்தைத் தரையில் வீசியெறிந்தாள். அந்தோ பார்! — அது கோதுமை தானியங்களாக உடைந்து எல்லாப் பக்கமும் உருண்டன.

ஓ உடனேயே ஒரு சேவலாக மாறி தானியங்களைக் கொத்தத் தொடங்கினான். எல்லாவற்றையும் தின்றான், ஆனால் ஒன்று மட்டும் உருண்டுபோய் இளவரசியினுடைய செருப்புக்குக் கீழே இருந்ததை அவன் பார்க்கவில்லை. பிறகு அவன் சன்னல் வழியாக வெளியே பறந்து தனது சொந்த நாட்டிற்குச் சென்றான்.

இளவரசி அப்பால் நகர்ந்தாள். கோதுமை தானியம் ஓர் அழகிய இளைஞனாக மாறிட, பார்த்த மாத்திரத்தில் அவனிடம் அவள் காதல் கொண்டு, அவனை மணந்துகொள்ள விடுமாறு ஜாரிடமும் ஜாரினாவிடமும் மன்றாடத் தொடங்கினாள்.

''அவனிடத்தில் மட்டுமே நான் மகிழ்ச்சியாக இருப்பேன், வேறு எந்த மனிதனிடமும் அன்று!'' என்றாள்.

ஒரு சாதாரண இளைஞனைத் தன் மகள் மணந்துகொள்ள விடுவதற்கு முதலில் ஜார் தயங்கினார், ஆனால் அது பற்றி மனைவியோடு கலந்து பேசி சம்மதித்தார். ஜாரும் ஜாரினாவும் இளம் ஜோடியை வாழ்த்தினார்கள், ஒரு பெரிய திருமண விருந்தை நடத்தினார்கள். அதற்கு உலகத்தின் பாதிப்பேர் அழைக்கப்பட்டார்கள்.

நானுங்கூட அங்கே இருந்து என் பங்கிற்கு பீரும் ஒயினும் பெற்றுக் கொண்டேன். ஆனால் அது எல்லாமே என் தாடி வழியாகக் கீழே ஓடிவிட்டது, ஒரு துளிகூட என் வாய்க்குள்ளாகப் போகவில்லை.

ஆதலால் தானே ஆயிற்று எந்தன்
அருமை தாடியும் பனிபோல வெள்ளை!

உருளும் பட்டாணி

ஒரு சமயத்தில் ஒரு மனிதர் இருந்தார், அவருக்கு ஆறு மகன்களும் ஒலியோன்கா என்ற ஒரு மகளும் இருந்தனர். ஒரு நாள் மகன்கள் உழுவதற்குப் புறப்படுகையில் தங்களது சிற்றுண்டியை வயலுக்குக் கொண்டுவரும்படி சகோதரியிடம் சொன்னார்கள்.

''உங்களை அங்கே நான் எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்று ஒலியோன்கா கேட்டாள்.

''நமது குடிசையிலிருந்து நாங்கள் இருக்கப்போகிற வயல் வரை கோடு ஒன்றை கிழித்துச் செல்வோம்,'' என்று அவர்கள் கூறினார்கள்.

அத்துடன் அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்.

அந்த வயலுக்கு அப்பால் காட்டில் ஒரு பறவைநாகம் வசித்து வந்தது. அது சகோதரர்கள் கிழித்துச் சென்ற கோட்டை மண் போட்டு நிறைத்துவிட்டு, தனது வீட்டின் வாசலுக்குக் கொண்டு செல்லுமாறு வேறொரு கோட்டைக் கிழித்து வைத்தது. தனது சகோதரர்களுக்குச் சிற்றுண்டி எடுத்துக்கொண்டு ஒலியோன்கா அதைப் பின்தொடர்ந்து, நேராகப் பறவைநாகத்தினுடைய முற்றத்தைச் சென்றடைந்தாள். பறவைநாகம் அவளைப் பிடித்துக் கொண்டுவிட்டது.

மாலையில் வீட்டிற்கு வந்த சகோதரர்கள் தங்களுடைய தாயாரிடம் சொன்னார்கள்:

''நாங்கள் பகல் முழுக்க உழுது கொண்டிருந்தோம். சாப்பிடுவதற் காக எங்களுக்கு எதுவுமே ஏன் நீங்கள் அனுப்பவில்லை, அம்மா?''

''ஆனால் நான் அனுப்பினேன்!'' என்று தாயார் பதிலளித்தாள். ''உங்களுடைய சிற்றுண்டியுடன் ஒலியோன்காவை நான் வயலுக்கு அனுப்பி வைத்தேன்! ஒருவேளை அவள் வழியைத் தவற விட்டிருப் பாள்.''

''நாம் போய் அவளைத் தேடி அழைக்க வேண்டும்,'' என்றனர் சகோதரர்கள்.

உடனே புறப்பட்ட அவர்கள் பறவைநாகம் கிழித்திருந்த கோட் டைப் பின்தொடர்ந்து அதனுடைய வீட்டை அடைந்தார்கள். அவர் கள் படலை வழியாக நடந்து செல்கையில் சந்திப்பதற்காக அவர் களுடைய சகோதரி ஓடிவந்து கொண்டிருந்தாள்!

''ஓ, எனது சகோதரர்களே, எனது அருமைச் சகோதரர்களே, உங்களை நான் எங்கே ஒளித்து வைப்பேன்?'' என்று கத்தினாள். ''பறவைநாகம் இப்போது வெளியே போயிருக்கிறது, ஆனால் அது திரும்பிவரும் போது உங்களைத் தின்றுவிடுமே!''

அந்தோ! — அவர்களை நோக்கிப் பறவைநாகம் பறந்து வந்து கொண்டிருந்தது.

''மனித வாசனையை நுகர்கிறேன், பல மனிதர்களின் வாசனையை நுகர்கிறேன்!'' என்று கூவிற்று. ''சரி, அருமை இளைஞர்களே, என் னோடு சண்டையிடவா அல்லது சமாதானம் செய்துகொள்ளவா நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள்?''

''சண்டையிடத்தான் போகிறோம்!''

''அப்படியானால், இரும்புக் களத்திற்குப் போகலாம்.''

ஆகவே அவர்கள் இரும்புக் களத்திற்குச் சென்றார்கள். ஆனால் இச்சண்டை நீண்ட நேரம் நீடிக்கவில்லை, ஏனெனில் பறவைநாகம் ஒரே அடியில் அவர்களைத் தாக்கி இரும்புக் களத்துள் அழுத்தி விட்டது. பிறகு பாதி உயிர் போன அவர்களை வெளியே இழுத்து, ஆழமான இருட்டறைக்குள்ளாகத் தள்ளியது.

தங்களுடைய மகன்கள் திரும்புவதற்காக அம்மாவும் அப்பாவும் காத்திருந்தார்கள். அந்தோ, அவர்கள் காத்திருந்தது வீணாயிற்று.

ஒரு நாள் துணி துவைக்க அம்மா ஆற்றுக்குச் சென்றாள். வழியில் தன்னை நோக்கி ஒரு சிறு பட்டாணிக் கடலை உருண்டு வரக் கண்

டாள். அவள் அதை எடுத்துத் தின்றுவிட்டாள். உரிய காலத்தில் அவளுக்கு ஒரு மகன் பிறந்தான். அவளும் அவளது கணவனும் உருளும் பட்டாணி என்று அவனுக்குப் பெயரிட்டனர்.

உருளும் பட்டாணி மிக விரைவாக, மேன்மேலும் வளர்ந்தான். வயதில் சிறியவனே என்றாலும் உருவில் பெரியவனாகவும் வலிமை யுள்ளவனாகவும் இருந்தான்.

ஒரு நாள் அவனும் அவனுடைய அப்பாவும் கிணறு வெட்டிக் கொண்டிருந்தபோது, அவர்களுடைய மண்வாரிகள் ஒரு கல்லில் மோதின. அது மிகப் பெரிய பாறை, அதைத் தூக்கத் தமக்குத் துணையாய் அண்டை அயலவர்களை அழைத்து வர அப்பா சென்றார். ஆனால் அவர் திரும்ப வருவதற்குள் உருளும் பட்டாணி தானாகவே அப்பாறையைத் தூக்கி வெளியே எறிந்துவிட்டான். அண்டை அயலவர் கள் அதைக் கண்டு வியந்ததோடு பீதியும் அடைந்தார்கள், ஏனெனில் அவர்களில் யாரையும் விட உருளும் பட்டாணி பன்மடங்கு வலிமை யுடையவனாக இருந்தான். உண்மையில், அவர்கள் அந்தளவு நடுக்க முற்றதால் அவனைக் கொல்லவும் விரும்பினார்கள். ஆனால் உருளும் பட்டாணி அப்பாறையைக் காற்றிலே எறிந்து மீண்டும் பிடித்துக் காட்டினான். அதைக் கண்டு அவர்கள் ஓடிப் போனார்கள்.

அப்பாவும் மகனும் திரும்பவும் வெட்டச் சென்றார்கள். ஒரு பெரிய இரும்புத் துண்டு கிடைக்கும் வரைத் தோண்டினார்கள். உருளும் பட்டாணி அதை வெளியே தூக்கி மறைத்து வைத்தான்.

சிறிது காலம் சென்றது. தனக்கு ஆறு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர் என்பது உண்மையா என்று தனது பெற் றோர்களை உருளும் பட்டாணி கேட்டான்.

''அது உண்மைதான்,'' என்று பெற்றோர்கள் சொன்னார்கள். ''ஆனால் ஒரு முறை சென்றவர்கள் திரும்பிவரவே இல்லை.'' அவ்வாறு தொடங்கி முழுக் கதையையும் அவனிடம் சொன்னார்கள்.

''அவர்களைத் தேடிப் போவேன்,'' என்று உருளும் பட்டாணி சொன்னான்.

போக வேண்டாம் என்று அப்பாவும் அம்மாவும் அவனிடம் கெஞ்சத் தொடங்கினார்கள்.

''அதைச் செய்ய வேண்டாம், மகனே,'' என்று சொன்னார்கள். ''உன்னுடைய சகோதரியைத் தேடி உனது சகோதரர்கள் புறப்பட்டக

சென்று திரும்பி வரவே இல்லை! அவர்களோ ஆறு பேர் இருந்தார்கள், ஆனால் நீ தனியாக இருக்கிறாய்.''

''நான் போகத்தான் செய்வேன்,'' என்றான் உருளும் பட்டாணி. ''என்னுடைய சொந்தச் சதையும் குருதியுமான அவர்களை நான் விடுவிக்காமல் இருக்க முடியாது!''

மேலும் கிணறு வெட்டும்போது கிடைத்த இரும்புத் துண்டைக் கொல்லனிடம் எடுத்துச் சென்றான்.

''எனக்கு ஒரு கதாயுதம் அடித்துக் கொடு, எவ்வளவு பெரியதாக இருக்குமோ அவ்வளவு நல்லது!'' என்றான்.

அத்தனை பெரியதாகவும் கனமாகவும் ஒரு கதாயுதத்தைக் கொல்லன் அடித்துக் கொடுத்தான், உலைக்களத்திலிருந்து வெளியே யாராலும் தூக்க முடியாத அளவுக்கு அது இருந்தது. ஆனால் உருளும் பட்டாணி அதைச் சுலபமாகத் தூக்கி விண்ணோக்கி வீசி எறிந்தான்.

''இப்போது நான் தூங்கப் போகிறேன்,'' என்று தன் தந்தையிடம் கூறினான். ''பன்னிரண்டு நாள் அவகாசத்தில் கதாயுதம் திரும்பப் பறந்து வருகின்ற போது என்னை எழுப்புங்கள்.''

அவன் படுக்கைக்குச் சென்று பன்னிரண்டு நாள்களுக்குத் தூங்கினான். பதிமூன்றாவது நாளன்று கதாயுதம் திரும்பப் பறந்து வந்தது. தந்தை அவனை எழுப்ப, உருளும் பட்டாணி விரைந்து எழுந்து ஒரு விரலை நீட்டினான். கதாயுதம் அதில் மோதி இரண்டாக உடைந்தது.

''இத்தகைய மட்டமான கதாயுதத்துடன் எனது சகோதரர்களையும் சகோதரியையும் தேடி என்னால் போக முடியாது, மற்றொன்றை நான் பெற்றாக வேண்டும்,'' என்ற உருளும் பட்டாணி உடைந்த கதாயுதத்தை எடுத்துக்கொண்டுக் கொல்லனிடம் சென்றான்.

''இதிலிருந்து ஒரு புதிய கதாயுதம் எனக்கு அடித்துக் கொடு,'' என்றான். ''என் பலத்துக்கு ஏற்றதாய் இருக்கும்படி அடித்துத் தா!''

முதலாவதைக் காட்டிலும் பெரிய கதாயுதம் ஒன்றை கொல்லன் அவனுக்கு அடித்துக் கொடுத்தான். அதை உயரே விண்ணோக்கி எறிந்துவிட்டு, உருளும் பட்டாணி படுக்கைக்குச் சென்று மற்றொரு பன்னிரண்டு நாள்கள் தூங்கினான். பதிமூன்றாவது நாளன்று கதாயுதம் [illegible]யை அதிர செய்யும் கணீரெனப் பேரிரைச்சலுடன் வேகமாய்ப் பறந்து வந்தது. அம்மாவும் அப்பாவும் உருளும் பட்டாணியை எழுப்

பினர். அவன் குதித்தெழுந்து நின்று தனது விரலை நீட்ட, கதாயுதம் அதில் மோதி, சிறிது வளைந்ததே தவிர உடையவில்லை.

''மெய்யாகவே இதோ ஓர் அருமையான கதாயுதம்!'' என்று உருளும் பட்டாணி சொன்னான். ''எனது சகோதரர்களையும் சகோதரியையும் தேடி இப்போது என்னால் போக முடியும். அம்மா, எனக்குக் கொஞ்சம் ரொட்டி சுடுங்கள், கொஞ்சம் ரொட்டி வற்றல்களும் தயாரித்துத் தாருங்கள், நான் பயணம் புறப்பட்டுப் போவேன்.''

தனது கதாயுதத்தையும், பைநிறைய ரொட்டியும், ரொட்டி வற்றல்களும் எடுத்துக்கொண்டு, தனது அம்மாவிடமும் அப்பாவிடமும் பிரியாவிடை பெற்று வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

பறவைநாகத்தினுடைய பழைய கோட்டைப் பின்தொடர்ந்து சீக்கிரமே நடுக்காட்டிற்குள் சென்று, சுற்றிலும் வேலியிடப்பட்டிருந்த ஒரு பெரிய வீட்டை அடைகின்ற வரை மேன்மேலும் நடந்தான். அவன் முற்றத்திற்குள்ளாகவும், பிறகு வீட்டிற்குள்ளாகவும் சென்று அங்கே தனது சகோதரி ஒலியோன்காவைக் கண்டான். பறவைநாகம் வெளியே போயிருந்ததால் அவள் தனிமையில் இருந்தாள்.

''காலை வணக்கம், என்னரும் நங்கையே!'' என்றான் உருளும் பட்டாணி.

''உனக்கும் காலை வணக்கம், நல்ல இளைஞனே! எதற்காக இங்கே வந்தாய்? பறவைநாகம் விரைவில் திரும்பி வந்து உன்னைத் தின்றுவிடும்.''

''வரட்டும் பார்க்கலாம்! ஆனால் நீ யார், ஏன் இங்கிருக்கிறாய்?''

''என்னுடைய அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நான் ஒரே மகள். பறவைநாகத்தால் நான் களவாடப்படும் வரை அவர்களுடன் வாழ்ந்து வந்தேன். என்னுடைய ஆறு சகோதரர்களும் என்னை விடுவிக்க முயன்றார்கள், ஆனால் வெற்றி பெறவில்லை.''

''உன்னுடைய சகோதரர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?'' என்று உருளும் பட்டாணி கேட்டான்.

''பறவைநாகம் அவர்களை ஓர் இருட்டறைக்குள்ளாகத் தள்ளிற்று. மேலும் அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா இறந்து விட்டார்களா என்பது கூட எனக்குத் தெரியாது.''

''ஒருவகையில் உன்னை நான் விடுவிக்க முடியும்,'' என்றான் உருளும் பட்டாணி.

''என்னுடைய சகோதரர்கள் ஆறு பேர் முயன்றும் அவர்களால் முடியவில்லை, ஆகவே உன்னால் எப்படி முடியும்?''

''நாம் என்ன செய்ய முடியும் என்பதைப் பார்க்கலாம்!'' என்றான் உருளும் பட்டாணி. பிறகு காத்திருப்பதற்காகச் சன்னல் அருகே அமர்ந்தான்.

இதற்கிடையே பறவைநாகம் திரும்பப் பறந்து வந்தது. அது வீட்டிற்குள்ளாக நுழைந்ததும் மோப்பம் பிடித்து விட்டுச் சொன்னது:

''ஒரு மனித வாசனை!''

''உண்மையில்தான், ஏனெனில் இதோ நான் இருக்கிறேன்!'' என்று முன்னே வந்தவாறு உருளும் பட்டாணி சொன்னான்.

''ஓகோ, இளைஞனே! எதற்காக இங்கே வந்தாய்? என்னுடன் சண்டையிட அல்லது சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறாயா?''

''உன்னுடன் சண்டையிட விரும்புகிறேன்!''

''நல்லது, அப்படியானால் இரும்புக் களத்திற்கு போகலாம்!''

''சரி போகலாம்!''

இருவரும் இரும்புக் களத்திற்கு வந்தார்கள். பறவைநாகம் உருளும் பட்டாணி பக்கம் முகத்தைத் திருப்பியது.

''நீ முதலில் தாக்கு!'' என்றது.

''இல்லை, நீயே தாக்கு!'' என்றான் உருளும் பட்டாணி.

உடனே பறவைநாகம் திடுமெனப் பாய்ந்து உருளும் பட்டாணிக்கு அத்தகைய அடி கொடுக்கவே, இரும்புக் களத்துள் கணுக்கால் ஆழத்திற்குப் புதைந்து போனான். ஆனால் உருளும் பட்டாணி மின்னல் வேகத்தில் மீண்டும் வெளியே வந்து தன்னுடைய கதாயுதத்தால் பறவைநாகத்திற்கு பதிலடி கொடுக்க முழங்கால் ஆழத்திற்கு அதை இரும்புக் களத்துள் அழுத்தினான். பறவைநாகம் வெளியே இழுத்துக் கொண்டு, மீண்டும் உருளும் பட்டாணியை ஓங்கி அடித்து முழங்கால் ஆழத்துக்கு இரும்புத் தரைக்குள் அழுத்தியது. ஆனால் உருளும் பட்டாணி நடுங்கக் கூடியவன் அன்று. இடுப்பளவு ஆழத்திற்குப் போகுமாறு பறவைநாகத்தைத் தாக்கி, பிறகு மற்றொரு அடி கொடுத்து அதே இடத்திலேயே அதைக் கொன்றான்.

அதன் பிறகு இருட்டறையை நோக்கிச் சென்று, பாதி உயிர் போன நிலையில் இருந்த தனது சகோதரர்களை விடுவித்தான்.

தன்னுடன் அவர்களையும் தனது சகோதரி ஒலியோன்காவையும் கூட்டிக்கொண்டு, பறவைநாகத்தின் வீட்டிலிருந்த எல்லாத் தங்கம் வெள்ளியையும் எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான். ஆனால் தான் அவர்களுடைய தம்பியே என்பதை அவன் அவர்களிடம் சொல்லவே இல்லை.

நெடு நேரம் நடந்தார்களோ என்னவோ யாருக்கும் தெரியாது. ஆனால் இதற்கிடையே ஓய்வெடுப்பதற்காக ஓக் மரத்தின் கீழே அமர்ந்தார்கள். பறவைநாகத்தோடு சண்டைபோட்ட பிறகு உருளும் பட்டாணி அத்தனை களைப்பாக இருக்கவே, உடனேயே தூங்கிப் போய்விட்டான். மேலும் அவனுடைய ஆறு சகோதரர்களும் அது பற்றித் தங்களுக்குள் பேசிக்கொண்டு சொன்னார்கள்:

''நாம் ஆறு பேரும் பறவைநாகத்தைக் கொல்ல முடியாத போது, இங்குள்ள இளைஞன் தன்னந்தனியாய் அதைக் கொன்றுவிட்டானே என்று தெரியவரும் போது நாம் சிரிப்புக்கு ஆளாவோம். மேலும் அவன் பறவைநாகத்தினுடைய எல்லாச் செல்வத்தையும் கூடவே எடுத்துக் கொள்வான்.''

ஆகவே உருளும் பட்டாணி தூங்கிக்கொண்டும் உதவியற்றும் இருக்கும் போது ஓக் மரத்தோடு அவனைக் கட்டிப்போட்டு, கொடிய விலங்கினால் அவன் தின்னப்பட அங்கேயே விட்டுச் செல்வதென்று தீர்மானித்தார்கள்.

எப்போது சொன்னார்களோ அப்போது செய்து முடித்தார்கள். உருளும் பட்டாணியை மரத்தோடு கட்டிப்போட்டு, அங்கேயே விட்டு விட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள்.

உருளும் பட்டாணி தூங்கினான், எதையும் உணரவில்லை. ஒரு பகலும் ஓர் இரவும் அவன் தூங்கினான், விழித்த போது தான் ஓக் மரத்தோடு கட்டப்பட்டிருப்பதைக் கண்டான். ஆனால் அவன் குலுக்கித் தூக்கி எறிந்தான், அந்தோ! — ஓக் மரத்தை அப்படியே வேருடன் பிடுங்கியெடுத்துத் தோளில் தாங்கியவாறு வீட்டுக்குச் சென்றான்.

வீட்டையடைந்ததும், தங்களுடைய தாயாரிடம் தனது சகோதரர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டான்.

''நாங்கள் வீட்டை விட்டுப் போன பிறகு, உங்களுக்கு வேறு குழந்தைகள் பிறந்தனவா, அம்மா?'' என்று கேட்டார்கள்.

''ஆமாம், உண்மைதான்!'' என்று தாயார் பதிலளித்தாள். ''எனக்கு

ஒரு மகன் உண்டு, உருளும் பட்டாணி என்று பெயர், உங்களைத் தேடத்தான் சென்றான்.''

''அவ்வாறானால் ஓக் மரத்தோடு நாம் கட்டிப்போட்டது அவனைத் தான். வாங்க, போய் அவனை அவிழ்த்துவிடுவோம்!''

ஆனால் உருளும் பட்டாணி தான் சுமந்து கொண்டிருந்த ஓக் மரத்தை அலைத்து, அதைக் குடிசையின் கூரைமீது அத்தனை வலிமை யாகத் தாக்கவே, குடிசை தகர்ந்து தரையிலே விழுந்துவிடுவது போலா கிவிட்டது.

''எங்கே இருக்கிறீர்களோ அங்கே இருங்கள், எனது சகோதரர் களே, ஏனெனில் நீங்கள் எப்படிப்பட்டவர்களோ அப்படிப்பட்டவர்கள், சிறந்தவர்கள் இல்லை!'' என்று கத்தினான். ''நானாகவே புறப்பட்டுப் போய், பரந்த உலகத்தைச் சுற்றி வருவேன்.''

தனது கதாயுதத்தைத் தோள் மீது போட்டுக்கொண்டு அவன் புறப்பட்டுச் சென்றான்.

அவன் மேன்மேலும் நடந்தான், முன்னே இரண்டு மலைகளைப் பார்த்தான். அவற்றிற்கு நடுவே தனது கைகளையும் கால்களையும் மலைகளுக்கு எதிராக வைத்து அவற்றை அப்பால் தள்ள முயன்றபடி ஒரு மனிதன் நின்றான்.

''காலை வணக்கம், நண்பனே!'' என்று உருளும் பட்டாணி அழைத்தான்.

''காலை வணக்கம் உனக்கும்!'' என்று அந்த மனிதன் பதிலளித்தான்.

''நீ என்ன செய்கிறாய்?''

''கடந்து போகிறவர்களுக்காக ஒரு பாதை ஏற்படுத்த மலைகளை அப்பால் நகர்த்திக் கொண்டிருக்கிறேன்.''

''எங்கே செல்கிறாய் நீ?''

''உலகத்தைப் பார்க்கவும் எனது அதிர்ஷ்டத்தைத் தேடவும்.''

''அதைச் செய்யத்தான் நானும் புறப்பட்டிருக்கிறேன். உன்னுடைய பெயரென்ன?''

''மலை நகர்த்தி. உன்னுடை பெயர்?''

''உருளும் பட்டாணி. நாம் சேர்ந்து போகலாம்!''

''நல்லது, அப்படியே செய்வோம்!''

அவர்கள் நெடுகிலும் ஒன்றாகச் சென்று மேன்மேலும் நடந்தார்கள். வேரோடு ஓக் மரங்களைப் பிடுங்கிக்கொண்டிருந்த ஒரு மனிதனை

அவர்கள் காட்டில் கண்டார்கள். அவன் மரத்திற்கு ஒரு குலுக்கல்தான் கொடுக்க வேண்டியிருந்தது, அது வெளியே வந்தது!

''காலை வணக்கம், நண்பனே!'' என்று உருளும் பட்டாணியும் மலை நகர்த்தியும் அழைத்தனர்.

''காலை வணக்கம் உங்களுக்கும், நல்லவர்களே!'' என்று அந்த மனிதன் திரும்பச் சொன்னான்.

''நீ என்ன செய்கிறாய்?''

''இங்கு நடந்து செல்ல விரும்பக்கூடிய எவருக்கும் ஒரு பாதை அமைக்க ஓக் மரங்களைப் பெயர்த்தெடுக்கிறேன்.''

''எங்கே செல்கிறாய் நீ?''

''எனது அதிர்ஷ்டத்தைத் தேடி.''

''நாங்களும் அதற்காகவே புறப்பட்டிருக்கிறோம். உன்னுடைய பெயரென்ன?''

''ஓக் முரிப்பான். உங்களுடையன?''

''உருளும் பட்டாணியும் மலை நகர்த்தியும். நாம் சேர்ந்து போகலாம்!''

''நல்லது, அப்படியே செய்வோம்!''

மூன்று பேரும் ஒன்றாகச் சென்று மேன்மேலும் நடந்தார்கள். நதிக்கரையில் ஒரு மனிதன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார்கள். அவன் மீசைகளிலேயே மிக நீளமானவற்றைக் கொண்டிருந்தான். நீர் விலகியும் உருண்டு ஓடியும் ஆற்றுப் படுகையின் மீது நடந்து போக விரும்பக் கூடிய எவருக்கும் பாதை விட அவற்றில் ஒன்றை அவன் முறுக்க வேண்டியதுதான்.

''காலை வணக்கம், நண்பனே!'' என்று அவர்கள் அவனிடம் கூறினார்கள்.

''காலை வணக்கம் உங்களுக்கும், நல்லவர்களே!''

''நீ என்ன செய்கிறாய்?''

''ஆற்றைக் கடந்து செல்வதற்காக நீரை விலகச் செய்கிறேன்.''

''எங்கே செல்கிறாய் நீ?''

''எனது அதிர்ஷ்டத்தைத் தேடி.''

''நாங்களும் அதற்காகவே புறப்பட்டிருக்கிறோம். உன்னுடைய பெயரென்ன?''

''மீசை முறுக்கி. உங்களுடைய பெயர்களென்ன?''

''உருளும் பட்டாணி, மலை நகர்த்தி, ஓக் முரிப்பான். நாம் சேர்ந்து போகலாம்!''

''நல்லது, அப்படியே செய்வோம்!''

அவர்கள் சேர்ந்து சென்றனர். அவர்களுடைய பயணம் மிகவும் எளிதாகிவிட்டது, ஏனெனில் அவர்களுடைய வழியில் ஒவ்வொரு மலையையும் மலை நகர்த்தி அப்பால் நகர்த்தினான், ஒவ்வொரு காட்டிலும் ஓக் முரிப்பான் மரங்களைப் பெயர்த்து அகற்றினான், ஒவ்வொரு ஆற்றிலும் மீசை முறுக்கி வெள்ளத்தைப் பிளந்து விலக்கினான்.

அவர்கள் மேன்மேலும் நடந்து ஒரு பெரிய காட்டின் மத்தியில் நின்ற ஒரு சிறிய குடிசைக்கு வந்தார்கள். அவர்கள் உள்ளே நுழைந்தார்கள், அந்தோ! — அங்கே ஒருவருமே இல்லை.

''இங்குதான் நாம் இரவைக் கழிக்கப் போகிறோம்!'' என்றான் உருளும் பட்டாணி.

நால்வரும் இரவும் பொழுதைக் குடிசையில் கழித்தார்கள். காலையில் உருளும் பட்டாணி சொன்னான்:

''மலை நகர்த்தி, நீ குடிசையில் தங்கி, உணவு தயார் செய், நாங்கள் மூவரும் வேட்டைக்குப் போகிறோம்.''

அவர்கள் அப்பால் செல்லவும், மலை நகர்த்தி ஒரு பெரும் விருந்து சமைத்து விட்டு, தூங்குவதற்காகக் கீழே படுத்தான்.

திடீரென்று கதவை 'டொக்-டொக்' என்று கையினால் தட்டும் ஓசை வந்தது.

''கதவைத் திற!'' என்று யாரோ அழைத்தான்.

''கதவுகளைத் திறப்பதற்கு நான் உன்னுடைய வேலைக்காரன் அன்று!'' என்று மலை நகர்த்தி பதிலளித்தான்.

கதவு திறந்தது, அதே குரல் மீண்டும் அழைத்தது:

''என்னை உள்ளே தூக்கிச் செல்!''

''நீ என்னுடைய எசமானன் அன்று, ஆகவே உத்தரவு போடாதே!'' என்றான் மலை நகர்த்தி.

அந்தோ! — மிகச் சிறிய உருவங்கொண்ட கிழவன் குடிசைக்குள் ஏறி வந்தான். அவனுடைய தாடி அத்தனை நீளமாக இருந்ததால் தரையின் மேல் இழுபட்டது. கிழவன் மலை நகர்த்தியின் மயிரைப் பிடித்துப் பற்றி சுவரில் இருந்த ஆணிமீது தொங்கவிட்டான். பிறகு அங்கு சாப்பிட இருந்த அனைத்தையும் தின்றுவிட்டும், குடிக்க இருந்த அனைத்

தையும் குடித்துவிட்டும் மலை நகர்த்தியின் முதுகிலிருந்து ஒரு நீண்ட தோலை உரித்தெடுத்துக் கொண்டு வெளியே போய்விட்டான்.

ஆணியில் தொங்கிய மலை நகர்த்தி அது தளர்ந்து போகும் வரை நெளியவும் திரும்பவும் செய்தான், பிறகு புதிதாக உணவு தயாரிக்க முற்பட்டான். அவனுடைய நண்பர்கள் திரும்பி வருகின்ற வரை அவன் வேலையில் ஈடுபட்டிருந்தான்.

''உணவு தயாரிப்பதில் ஏன் இத்தனை சுணக்கம்?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

''சற்றுத் தூங்கிப்போய் அதைப் பற்றி மறந்துவிட்டேன்,'' என்றான் மலை நகர்த்தி.

எல்லாரும் வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கச் சென்றார்கள். மறுநாள் காலை உருளும் பட்டாணி சொன்னான்:

''ஓக் முரிப்பான், நீ இன்று குடிசையில் தங்கியிரு, எஞ்சிய நாங்கள் வேட்டைக்குப் போகிறோம்.''

மூவரும் அப்பால் செல்லவும், ஓக் முரிப்பான் ஒரு பெரும் விருந்து சமைத்துவிட்டு, தூங்குவதற்காகக் கீழே படுத்தான்.

திடீரென்று கதவை 'டொக்-டொக்' என்று தட்டும் ஓசை வந்தது.

''கதவைத் திற!'' ஒரு குரல் அழைத்தது.

''கதவுகளைத் திறப்பதற்கு நான் உன்னுடைய வேலைக்காரன் அன்று!'' என்று ஓக் முரிப்பான் பதிலளித்தான்.

''என்னை உள்ளே தூக்கிச் செல்!'' என்று அதே குரல் மீண்டும் அழைத்தது.

''நீ என்னுடைய எசமானன் அன்று, ஆகவே உத்தரவு போடாதே!'' என்றான் ஓக் முரிப்பான்.

அந்தோ! — மிகச் சிறிய உருவங்கொண்ட கிழவன் குடிசைக்குள் ஏறி வந்தான். அவனுடைய தாடி அத்தனை நீளமாக இருந்ததால் தரையின் மேல் இழுபட்டது. கிழவன் ஓக் முரிப்பானின் மயிரைப் பிடித்துப் பற்றி சுவரில் இருந்த ஆணிமீது தொங்கவிட்டான். பிறகு அங்கு சாப்பிட இருந்த அனைத்தையும் தின்றுவிட்டும், குடிக்க இருந்த அனைத்தையும் குடித்துவிட்டும் ஓக் முரிப்பானின் முதுகிலிருந்து ஒரு நீண்ட தோலை உரித்தெடுத்துக் கொண்டு வெளியே போய்விட்டான்.

ஆணியில் தொங்கிய ஓக் முரிப்பான் அது தளர்ந்து போகும் வரை நெளியவும் திரும்பவும் செய்தான், பிறகு புதிதாக உணவு தயாரிக்க

முற்பட்டான். அவனுடைய நண்பர்கள் திரும்பி வருகின்ற வரை அவன் வேலையில் ஈடுபட்டிருந்தான்.

''விருந்து தயாரிப்பதில் ஏன் இத்தனை சுணக்கம்?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

''நான் தூங்கிப்போய் விட்டேன், சற்று முன்னர் தான் விழித்தெழுந் தேன்,'' என்றான் ஒக் முரிப்பான்.

என்ன நடைபெற்றிருக்கும் என்பதை ஊகித்த மலை நகர்த்தி எதுவும் சொல்லவில்லை.

மூன்றாம் நாளன்று குடிசையில் தங்கிய மீசை முறுக்கிக்கும் இதே போலத்தான் ஆயிற்று.

உருளும் பட்டாணி சொன்னான்:

''விருந்து தயாரிப்பதில் நீங்கள் மூன்று பேருமே மிகவும் சுணங்கிப் போகிறீர்கள். சரி, போனது போகட்டும். நாளைக்கு நீங்கள் வேட்டைக்குப் போங்கள், நான் குடிசையிலே தங்கிவிடுகிறேன்.''

காலை விடிந்ததும் உருளும் பட்டாணி வீட்டிலேயே தங்கிவிட அவனுடைய மூன்று நண்பர்களும் வேட்டைக்குச் சென்றார்கள். ஒரு பெரும் விருந்து சமைத்துவிட்டு, ஒரு குட்டித் தூக்கம் போடுவதற்காக அவன் கீழே படுத்த நேரத்தில் கதவை 'டொக்-டொக்' என்று தட்டும் ஓசை கேட்டது.

''கதவைத் திற!'' என்று குரல் அழைத்தது.

உருளும் பட்டாணி கதவைத் திறந்த போது, அவனுக்கு முன்னே மிகச் சிறிய உருவங்கொண்ட கிழவன் நின்றான். அவனுடைய தாடி தரை மீது இழுபடக் கூடிய அளவுக்கு நீளமானது.

''என்னை உள்ளே தூக்கிச் செல்!'' என்று சிறுத்த கிழவன் கூறினான்.

உருளும் பட்டாணி .அவனைப் பற்றி, குடிசைக்குள்ளாகத் தூக்கி வந்து, கீழே தரை மீது விட்டான். கிழவனோ சுற்றிச் சுற்றி நடனமாடத் தொடங்கி, துள்ளி எகிறிக் கொண்டிருந்தான்.

''உனக்கு என்ன வேண்டும்?'' என்று உருளும் பட்டாணி கேட்டான்.

''எனக்கு வேண்டியது என்னவென்பதை நீ சீக்கிரம் காண்பாய்!'' என்றான் கிழவன். தனது கையை நீட்டி உருளும் பட்டாணியுடைய மயிரைப் பற்றிப் பிடிக்க விருந்தான், ஆனால் உருளும் பட்டாணி ''ஓ, நீ இந்த மாதிரியான ஆளா!'' என்று கூவி, அவனுடைய தாடியைப் பற்றினான். பிறகு, ஒரு கோடரியை எடுத்துக்கொண்டு, கிழவனை

வீட்டிற்கு வெளியே இழுத்துச் சென்றான். ஓக் மரத்தை இரண்டாகப் பிளந்து, கிழவனுடைய தாடியைப் பிளவுக்குள் விட்டு இறுக்கமாய் அகப்பட்டுக் கொள்ளும்படி செய்தான்.

''என்னுடைய மயிரைப் பிடிக்க முயன்றாயே, தாத்தா,'' என்றான். ''ஆகவே நான் திரும்பி வரும் வரை இங்கேயே இரு!''

திரும்பக் குடிசைக்குச் சென்ற போது, அவனுக்காக மூன்று நண்பர்களும் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''விருந்து தயாரா?'' எனக் கேட்டனர்.

''ஆமாம், அது தயாராக இருக்கிறது, நீண்ட நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறது,'' என்று உருளும் பட்டாணி பதிலளித்தான்.

அவர்கள் அமர்ந்து உண்ணத் தொடங்கினார்கள். அவர்கள் உண்டு முடித்த பிறகு அவன் சொன்னான்:

''வெளியே வாங்க, மிகவும் அதிசயமான காட்சியை உங்களுக்குக் காட்டுவேன்.''

அவர்களை வெளியே அழைத்துச் சென்றான், ஆனால் என்ன விநோதம்! — அங்கே ஓக் மரமோ கிழவனோ கிடையாது. ஏனெனில் கிழவன் ஓக் மரத்தை வேரோடு பிடுங்கி அதைத் தன்னுடன் இழுத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

பிறகு உருளும் பட்டாணி தனக்கு ஏற்பட்ட எல்லாவற்றையும் தனது நண்பர்களிடம் கூறினான். அவனுடைய நண்பர்கள் தங்களுடைய பங்குக்கு கிழவன் தம் சிண்டைப் பிடித்து ஆணியில் தொங்க விட்டதையும், முதுகுகளிலிருந்து நீளமாய்த் தோல்களை வெட்டியதையும் ஒப்புக்கொண்டார்கள்.

''இக்கிழவன் இப்படிப்பட்டவன் என்றால், அவனைப் போய்த் தேடிப் பிடிப்பது நல்லது,'' என்று உருளும் பட்டாணி கூறினான்.

ஆகவே, இக்கிழவன் ஓக் மரத்தை இழுத்துச் சென்றிருந்த தடம் பின்பற்றிச் செல்ல அவர்களுக்குச் சுலபமானதாக இருந்தது. அத்தடம் அவர்களை பூமியில் ஒரு குழிக்கு இழுத்துச் சென்றது. அதன் அடி கண்ணுக்குத் தெரியாதபடி அவ்வளவு ஆழமாய் இருந்தது.

உருளும் பட்டாணி மலை நகர்த்தி பக்கம் திரும்பினான்.

''குழிக்குள் இறங்கு, மலை நகர்த்தி!'' என்றான்.

''ஐயோ, நான் இறங்க மாட்டேன்!'' என்று மலை நகர்த்தி பதிலளித்தான்.

''நீ என்ன சொல்வாய், ஒக் முரிப்பான்? அல்லது நீ, மீசை முறுக்கி?''

ஆனால் ஒக் முரிப்பானோ, மீசை முறுக்கியோ குழிக்குள் இறங்கு கின்ற அபாயத்தை ஏற்க முன்வரவில்லை.

''ரொம்ப சரி, நான் இறங்குகிறேன்!'' என்றான் உருளும் பட்டாணி. ''ஆனால் எனக்கு ஒரு கயிறு தேவைப்படும். நாம் ஒன்று பின்னலாம்!''

அவர்கள் ஒரு கயிறு பின்னினார்கள். அதன் ஒரு முனையைத் தனது இடுப்பைச் சுற்றி உருளும் பட்டாணி கட்டிக் கொண்டான்.

''இப்போது என்னைக் கீழே விடுங்கள்!'' என்றான்.

மூவரும் அவனைக் குழிக்குள் இறக்கத் தொடங்கினார்கள். அதற்கு அவர்களுக்கு நீண்ட நேரம் எடுத்துக்கொண்டது, ஏனெனில் குழி யினுடைய அடிப்பகுதியை அடைவது கீழுலகையே அடைய முயல்வது போல இருந்தது. கடைசியில் அவனைக் கீழே இறக்க, உருளும் பட்டாணி இடத்தைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டான். அவன் நடந்து போகை யில், விரைவிலேயே ஒரு பெரிய மாளிகை குறுக்கிட்டது. அவன் அதற்குள் சென்றான். மாளிகையில் உள்ள ஒவ்வொன்றும் மின்னவும் பளிச்சிடவும் செய்தது, ஏனெனில் தங்கத்தையும் இரத்தினக் கற்களை யும் கொண்டு கட்டிய மாளிகை அது. அறைவிட்டு அறையாகச் சென் றான், திடீரென்று ஓர் இளவரசி அவனை நோக்கி ஓடிவந்தாள். அவளுடைய அழகைச் சித்திரிக்க வல்ல பேனாவோ, அவள் புகழைப் பாட வல்ல நாவோ உலகத்தில் எங்குமே இல்லை! — அவள் அத்தனை அழகாக இருந்தாள்.

''இங்கு ஏன் வந்தாய் நீ, நல்ல இளைஞனே?'' எனக் கேட்டாள்.

''தரைமீது புரளத் தாடி கொண்ட குறளிக் கிழவனை நான் தேடிக் கொண்டிருக்கிறேன்,'' என்று உருளும் பட்டாணி சொன்னான்.

''இங்குதான் இருக்கிறான் அந்தக் கிழவன், ஒக் மரத்திலிருந்து தன்னுடைய தாடியை வெளியே இழுக்க முயன்று கொண்டிருக் கிறான்,'' என்றாள் இளவரசி. ''ஆனால் நீ அவனிடம் போகாதே, ஏனென்றால் மற்றவர்களைக் கொன்றது போல உன்னையும் கொல் லுவான்.''

''அவன் என்னைக் கொல்ல முடியாது,'' என்று உருளும் பட்டாணி சொன்னான். ''அவனுடைய தாடியைப் பிளவுக்குள்ளாக மாட்டியதே நான்தான். ஆனால் நீ யார்?''

''நான் ஓர் இளவரசி, ஓர் அரசனின் மகள். இக்கிழவன் என்னைத் தூக்கி வந்து இங்கு கைதுசெய்து வைத்திருக்கிறான்!''

''நான் உன்னை விடுவிப்பேன், அஞ்ச வேண்டாம்! என்னை அவனிடம் அழைத்துச் செல்.''

இளவரசி உருளும் பட்டாணியைக் கிழவனிடம் அழைத்துச் சென்றாள், அந்தோ! — பிளவை விட்டுத் தனது தாடியை வெளியே இழுத்து விட்ட அவன் அதைத் தடவிவிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். உருளும் பட்டாணியைப் பார்த்ததுமே கோபத்தால் சிவந்து போனான்.

''எதற்காக இங்கே வந்தாய்? என்னுடன் சண்டையிடவா அல்லது சமாதானம் செய்துகொள்ளவா?'' என்று கேட்டான்.

''உன்னோடு சண்டையிட இங்கே வந்திருக்கிறேன்!'' என்றான் உருளும் பட்டாணி. ''உன்னைப் போன்றவர்களுடன் நான் ஒரு போதும் சமாதானம் செய்து கொள்ள மாட்டேன்.''

அவர்கள் சண்டையிடத் தொடங்கினார்கள். நெடுநேரம் பயங்கரப் போர் நடைபெற்றது. கடைசியில் உருளும் பட்டாணி தன்னுடைய கதாயுதத்தால் ஒரேமூச்சில் தாக்கி கிழவனைக் கொன்றுவிட்டான்.

பிறகு உருளும் பட்டாணியும் இளவரசியும் மாளிகையிலிருந்து எல்லாத் தங்கத்தையும் மணிக்கற்களையும் எடுத்து, மூன்று கோணிகள் நிறைய அவற்றை நிரப்பி, பாதாள அரசுக்குள்ளாக உருளும் பட்டாணி கீழே இறங்கிய குழியை நோக்கிச் சென்றார்கள்.

அங்கே வந்து நின்று கொண்டு உருளும் பட்டாணி தன் நண்பர்களுக்குக் குரல் கொடுத்தான்.

''எனது சகோதரர்களே, இன்னமும் அங்கே இருக்கிறீர்களா?'' என்று கூவினான்.

''இருக்கிறோம்!'' என்று பதில் வந்தது.

கோணிகளில் ஒன்றை உருளும் பட்டாணி கயிற்றோடு கட்டினான்.

''அதை மேலே இழுங்கள், சகோதரர்களே!'' என்று கூவினான். ''கோணி உங்களுடையது!''

அவர்கள் கோணியை மேலே இழுத்து, கயிற்றைத் திரும்பவும் குழிக்குள் விட்டார்கள். உருளும் பட்டாணி இரண்டாவது கோணியை அதனோடு கட்டினான்.

''இதை மேலே இழுங்கள்! இதுவும் கூட உங்களுடையதுதான்'' என்று கூவினான்.

மூன்றாவது கோணியையும் அது போல உயரே அனுப்பினான், பிறகு இளவரசியைக் கயிற்றோடு கட்டினான்.

''இளவரசி என்னுடையவள்!'' என்று கூவினான்.

மூன்று நண்பர்களும் இளவரசியை வெளியே இழுத்தார்கள். இப்போது உருளும் பட்டாணி மட்டுமே குழியின் அடியில் எஞ்சினான்.

''அவனை நாம் மேலே இழுத்தபின் கயிற்றை விட்டு விடுவோம்!'' என்றனர். ''அவன் கீழே விழுந்து கொல்லப்படுவான், இளவரசி நம்முடையவளாவாள்.''

ஆனால் அவர்களுடைய சதித்திட்டத்தை ஊகித்துக்கொண்ட உருளும் பட்டாணி ஒரு பெரிய கல்லைக் கயிற்றோடு கட்டி, ''இப்போது என்னை மேலே இழுங்கள்!'' என்று கூவினான்.

அவர்கள் கயிற்றைப் பாதி உயரத்துக்கு இழுத்து பிறகு அதை விட்டு விட்டார்கள். ஒரு பேரிரைச்சலுடன் கல் கீழே வந்தது!

''என்ன அருமையான நண்பர்கள் எனக்கு!'' என்று கூறிய உருளும் பட்டாணி, குழிக்கு அடியில் இருந்த நாட்டில் சுற்றித்திரியப் புறப்பட்டான்.

நடந்தான், மேன்மேலும் நடந்தான், திடீரென்று வானம் மப்புமந்தாரமாகி, மழையும் ஆலங்கட்டியுமாகப் பெய்யத் தொடங்கியது. ஓர் ஓக் மரத்தின் கீழாக அவன் ஒளிந்து கொண்டான். மேலும் அவன் அங்கே நிற்கையில் மரத்தின் உச்சியில் கூட்டினுள் இருந்த கழுகுக் குஞ்சுகளின் கிறீச்சொலி வந்து கொண்டிருப்பதைக் கேட்டான். உடனே மரத்தின் மீது ஏறி, தனது கோட்டைக் கழற்றி, அதனால் குஞ்சுகளை மூடினான்.

மழை நின்றதும், இளஞ்குஞ்சுகளினுடைய தந்தையாகிய பெரிய கழுகு கூட்டுக்குப் பறந்து வந்தது.

''இளங்குஞ்சுகளே, உங்களைப் போர்த்தியது யார்?'' என்று கேட்டது.

''அவனை நீ தின்ன மாட்டாய் என்று உறுதி கூறினால் நாங்கள் கூறுவோம்,'' என்று இளங்குஞ்சுகள் பதிலளித்தன.

''நான் தின்ன மாட்டேன், பயப்பட வேண்டாம்!''

''சரி, மரத்தின் அடியில் உட்கார்ந்து கொண்டிருக்கும் மனிதனைப் பார்க்கிறாயா? அவன் தான் போர்த்தியவன்.''

மரத்தை விட்டுக் கழுகு, உருளும் பட்டாணியிடம் கீழே பறந்து சென்றது.

''நீ விரும்பிய எதையும் என்னிடம் கேள், அதை நான் செய்கிறேன்!'' என்று கழுகு அவனிடம் சொன்னது. ''கூட்டில் நான் இல்லாதபோது, இத்தகைய கடும் மழையிலே இப்பொழுதுதான் முதன் முறையாக என்னுடைய குழந்தைகள் எதுவும் மூழ்கிப்போகாமல் முடிந்தது.''

''என்னுடைய நாட்டிற்கு என்னைத் தூக்கிச் செல்,'' என்றான் உருளும் பட்டாணி.

''நீ எனக்கு அளித்திருக்கும் பணி சுலபமானதன்று, ஆனால் ஆறு பீப்பாய் இறைச்சியையும், ஆறு பீப்பாய் நீரையும் நம்முடன் எடுத்துச் சென்றால், அதை என்னால் செய்யக் கூடும்,'' என்றது கழுகு. ''நான் என் தலையை வலப்பக்கம் திருப்புந்தோறும் எனது வாய்க்குள்ளாக ஒரு துண்டு இறைச்சியை நீ வீச வேண்டும். மேலும் ஒவ்வொரு முறையும் நான் இடப்பக்கம் தலையைத் திருப்புந்தோறும் கொஞ்சம் நீர் கொடுக்க வேண்டும். அதை நீ செய்யாவிடில், அங்கே நான் ஒருபோதும் சென்றடைய முடியாது, ஏனெனில் வழியிலேயே நான் இறந்து போவேன்.''

இருவரும் ஆறு பீப்பாய் இறைச்சியும், ஆறு பீப்பாய் நீரும் எடுத்துக் கொண்டார்கள். உருளும் பட்டாணி அவற்றைக் கழுகின் முதுகின் மேல் வைத்து தானும் ஏறிக் கொண்டான். அவர்கள் பறந்து சென்றார்கள்! எப்பொழுதெல்லாம் கழுகு தனது தலையை வலப்பக்கம் திருப்பியதோ அப்பொழுதெல்லாம் உருளும் பட்டாணி அதன் வாய்க்குள்ளாகக் கொஞ்சம் இறைச்சியைப் போட்டான், எப்பொழுதெல்லாம் அது இடப்பக்கம் திருப்பியதோ அப்பொழுதெல்லாம் அதற்குக் கொஞ்சம் நீர் கொடுத்தான்.

அவர்கள் நீண்ட நேரம் பறந்தார்கள். உருளும் பட்டாணியினுடைய நாட்டை வந்தடைய இன்னும் சிறிது தூரமே இருந்த போது கழுகு தனது தலையை திரும்பவும் வலப்பக்கம் திருப்பியது. உருளும் பட்டாணி பீப்பாய்க்குள்ளாக உற்றுப்பார்த்து, அங்கே சிறு துண்டு கூட எஞ்சியிருக்கவில்லை என்பதைக் கண்டு, தன் காலிலிருந்து ஒரு துண்டை வெட்டியெடுத்து அதற்குக் கொடுத்தான்.

''சற்று முன்னர் நான் சாப்பிட்டது என்ன? அது மிகச் சுவையாக

இருந்தது,'' என்று கழுகு கேட்டது.

''எனது சொந்தச் சதையில் ஒரு துண்டு,'' என்று பதிலளித்த உருளும் பட்டாணி தனது காலைச் சுட்டிக்காட்டினான்.

கழுகு எதுவும் சொல்லவில்லை, ஆனால் துண்டை வெளியே துப்பிவிட்டு, எங்கோ பறந்து சென்று உயிர் தண்ணீர் கொண்டு வந்தது. உருளும் பட்டாணியினுடைய காலிலிருந்து வெட்டப்பட்ட துண்டை காயமுற்ற இடத்தில் வைத்து அதின் மீது உயிர் தண்ணீரைத் தெளித்தது. என்னே விந்தை! கால் மீண்டும் சரியாகிவிட்டது.

அதன் பிறகு கழுகு வீட்டிற்குப் பறந்து செல்ல, உருளும் பட்டாணியும் தனது மூன்று நம்பிக்கையற்ற நண்பர்களைத் தேடிச் சென்றான்.

இதற்கிடையில் மூவரும் இளவரசியினுடைய அப்பாவின் மாளிகைக்குச் சென்று அங்கே வசித்து வந்தனர். மேலும் அவர்கள் தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டனர். ஏனெனில் ஒவ்வொருவருமே இளவரசியை மணக்க விரும்பினார்கள், மற்றவர்களுக்கு அவளை விட்டுக் கொடுக்க முன்வரவில்லை.

அங்குதான் உருளும் பட்டாணி அவர்களைக் கண்டுபிடித்தான். அவர்கள் அவனைப் பார்த்த போது நடுக்கத்தால் வெளிறிப் போனார்கள்.

''துரோகிகள் கருணைக்கு அருகதையற்றவர்கள்!'' என்று உருளும் பட்டாணி கத்தி, தனது கதாயுதத்தால் அவர்களைத் தாக்கிக் கொன்றான்.

சீக்கிரமே இளவரசியை மணந்து கொண்டான். அதன் பிறகு அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்.

பறவைநாகம் கொல்லும் இவான்

வெகு காலத்திற்கு முன்னால், பழைய காலத்தில் அஞ்சத்தக்க பறவைநாகம் ஒன்று ஒரு கிராமத்திற்கு வந்து கிராமமக்களைத் தொடர்ந்து தின்று வந்தது. ஒரே ஒரு கிழவன் மட்டும் உயிரோடு விடப்பட்ட ஒரு நாளும் கடைசியில் வரவே, பறவைநாகம் தனக்குத் தானே சொல்லிக்கொண்டது:

''நாளை வரை காலை உணவுக்காக நான் இவனை விட்டுவைப் பேன்.''

அதே குறிப்பிட்ட நாளில் ஓர் ஏழை இளைஞன் அந்தக் கிராமத்தின் வழியாகச் செல்லும்படி நேர்ந்து, கிழவனுடைய குடிசைக் கதவைத் தட்டி, இரவுக்காகத் தங்கிக்கொள்ள விடுமாறு கெஞ்சினான்.

''உனக்கு வாழ்க்கை சலித்துப் போய் விட்டதா?'' கிழவன் கேட் டான்.

''ஏன் இம்மாதிரி நீ சொல்கிறாய்?'' அந்த இளைஞன் திருப்பிக் கேட் டான்.

கிராமத்திலுள்ள எல்லா மக்களையும் பறவைநாகம் தின்றுவிட்ட தையும், மறுநாள் அது தன்னைத் தின்னப்போவதையும் பற்றி கிழவன் அவனிடம் சொல்ல, இளைஞன் கூறினான்:

''பரவாயில்லை, அதற்குப் புரையேறும்!''



அடுத்த நாள் காலை பறவைநாகம் கிராமத்திற்குப் பறந்துவந்து மகிழ்ச்சியடைந்தது:

''நல்லது! நேற்று ஒரே ஒரு மனிதனே இருந்தான், இன்று இரண்டு பேராகிவிட்டனர்.''

''புரையேறுவதில் கவனமாக இரு!'' என்று இளைஞன் சொன்னான்.

அவனை வியப்புடன் பறவைநாகம் உற்றுப்பார்த்தது.

''என்னை விட நீ வலிமையானவனா?'' என்று கேட்டது.

''நிச்சயமாக, அப்படியேதான்!''

''உனது வலிமை எங்கேயிருக்கும்? அதை நான் நம்பவில்லை. நான் என்ன செய்ய முடியும் என்பதைச் சற்றுப்பார்!''

ஒரு கல்லை எடுத்து, பறவைநாகம் அத்தனை கடினமாக அதைக் கசக்கவே, அது தூசியாக உடைந்தது.

''பரவாயில்லை!'' என்றான் இளைஞன். ''கல்லினின்றும் நீர் கொட்டுகிற மாதிரி கசக்க முயற்சி செய்.''

அவன் துணியால் சுற்றப்பட்டதும், ஒரு கல்லைப் போலக் காணப் பட்டதுமான பாலடையை எடுத்துக் கசக்கிவிட்டான் — அதை விட்டு நீர் ஓடியது.

''அப்படியே கசக்க வேண்டும்!'' என்றான்.

''சரி, நீ வலிமையானவன் என்பதை இப்போது நான் பார்த்துக் கொண்டேன்!'' என்றது பறவைநாகம். ''வா, என்னுடைய நண்பனாக இரு.''

''அப்ப சரி, நான் சொன்னபடி நீ செய்தால்!''

பறவைநாகத்தினுடைய வீட்டிற்கு சேர்ந்து புறப்பட்டார்கள். அவனுடைய பெயர் என்ன என்று பறவைநாகம் இளைஞனிடம் கேட்டது.

''பறவைநாகம் கொல்லும் இவான் என்று அழைக்கப்பட்டேன்!'' இளைஞன் பதிலளித்தான்.

இதோ பறவைநாகம் முற்றிலும் பயப்பட்டு, ''அவன் என்னைக் கொன்றுவிட்டால் என்னாவது?'' என்று நினைத்தது.

சிற்றுண்டி நேரம் வரவே, பறவைநாகம் சொன்னது:

''சிற்றுண்டி சமைக்க ஒரு காளையைக் கொண்டுவா, இவான்!''

பறவைநாகத்தினுடைய மந்தை மேய்ந்து கொண்டிருந்த வயலுக்கு இவான் சென்று, காளைகளை அவற்றினுடைய வால்களால் ஒன்றாகச்

கட்டத் தொடங்கினான். பறவைநாகம் பொறுமையோடு காத்திருந் தது, பிறகு அவனுக்கு இத்தனை நேரம் பிடித்துக் கொண்டிருப்பது எதற்காக என்று பார்க்க ஓடிவந்தது.

''என்ன செய்து கொண்டிருக்கிறாய், இவான்?'' என்று கேட்டது.

''ஒரு காளையுடன் தொல்லைப்பட நான் விரும்பவில்லை, எல்லா வற்றையும் ஒரேயடியாக வீட்டிற்குக் கொண்டுவருவேன்!'' என்று இவான் பதிலளித்தான்.

''உன்னைக் கொள்ளை கொண்டுபோக! இவ்வாறாக எனக்கு உந்தையில்லாமல் நீ விடப்போகிறாய்!'' பறவைநாகம் கத்தியது.

அது ஒரு காளையைக் கொன்று, அதன் தோலை உரித்து, உடலை யும் தோலையும் வீட்டிற்கு இழுத்து வந்து, தோலை இவானிடம் கொடுத்தது.

''இதோ, இந்தத் தோலை எடுத்துக்கொண்டு, அது நிறைய நீர் கொண்டுவா!'' என்றது.

இவானால் செய்ய முடிந்ததெல்லாம் தோலைத் தூக்கிச் செல்வது தான். அதைக் கீழே கிணற்றுக்குள் விட்டாலும், அவனால் அதை வெளியே இழுக்க முடியவில்லை. ஆகவே ஒரு மண்வாரி தயாரித்து கிணற்றைச் சுற்றிலும் தரையைத் தோண்டத் தொடங்கினான்.

இதற்கிடையே அவன் என்ன செய்திருக்கிறான் என்பதைப் பார்ப் பதற்காகப் பறவைநாகம் ஓடிவந்தது.

''என்ன செய்து கொண்டிருக்கிறாய், இவான்?'' என்று கேட்டது.

''ஒரு தோலில் நீர் எடுத்துக்கொண்டுத் தொல்லைப்பட நான் விரும்பவில்லை. ஒரேயடியாக வீட்டிற்குக் கிணறு முழுவதையும் கொண்டுவருவேன்!''

''உன்னைக் கொள்ளை கொண்டுபோக!'' என்று பறவைநாகம் கத்தியது, இவானுடைய பெரும் வலிமையால் நடுக்குற்று, தானே தோலில் நீரை இழுத்துக் கொண்டு வீடு சென்றது.

''இப்போது கொஞ்சம் விறகுக் கட்டை கொண்டுவா,'' என்று இவானிடம் சொன்னது. ''காய்ந்து போன ஒரே ஓர் ஓக் மரத்தை இழு. அது போதுமானதாக இருக்கும்.''

கோபப்படுவது போல இவான் பாசாங்கு செய்தான்.

''நான் மாட்டேன்! இழிவான ஓர் ஓக் மரத்துடன் நான் தொல் லைப்படப் போவதில்லை!'' என்றான். ''குறைந்தது இருபதாவது

கொண்டுவருமாறு நீ என்னிடம் சொல்லியிருக்க வேண்டும்!''

பறவைநாகம் சிற்றுண்டியைச் சமைத்து, அதை ஓசையோடு விரைவாக உண்ணத் தொடங்கியது. ஆனால் இவான் அதனோடு சேர்ந்து கொள்ள வரவில்லை. அவன் எவ்வளவு குறைவாகச் சாப்பிட்டான் என்பதை பறவைநாகம் பார்த்தால், வலிமைக்கு அப்பாற்பட்டவன் என்பதை அது ஊகித்துக் கொண்டுவிடும் என்பது அவனுக்குத் தெரிந்தது. பறவைநாகமே பெரும்பாலான இறைச்சியைத் தின்று முடித்துவிட்டு, பானையில் எதுவும் எஞ்சி இருக்காத போதே அவன் மேசை முன் அமர்ந்து ஓரிரு கரண்டிகள் நிறையப் பரிமாறிக் கொண்டான்.

''அது போதுமானதில்லை!'' என்றான்.

''அப்படியா, என் தாயார் வீட்டுக்கு நாம் போகலாம். அவள் நமக்குக் கொழுக்கட்டைகள் செய்வாள்!'' என்று பறவைநாகம் சொன்னது.

''நாம் போகலாம்!'' என்ற இவான் தனக்குத்தானே எண்ணிக் கொண்டான்: ''இப்போது, அதுதான் எனது முடிவாக இருக்கும்!''

அவர்கள் பறவைநாகத்தினுடைய தாயாரின் வீட்டிற்கு வந்தார்கள். அங்கே உண்ணப்படுவதற்காகக் காத்துக்கொண்டு குறைந்தது இருபது பீப்பாய் கொழுக்கட்டைகள் இருந்தன!

மேசையின் முன்னர் இவானும் பறவைநாகமும் உட்கார்ந்தனர். ஒன்றன் பின் ஒன்றாகக் கொழுக்கட்டைகளைப் பறவைநாகம் விழுங்கத் தொடங்கியது, ஆனால் இவானோ தின்பது போலப் பாசாங்கு செய்து தன்னுடைய மார்பு உடையிலும், சட்டைப் பைகளிலும் கொழுக்கட்டைகளை நிரப்பிக் கொண்டிருந்தான். இருபது பீப்பாய்களும் வெகு சீக்கிரமே காலியாக, பறவைநாகம் எழுந்து நின்று சொன்னது:

''நம்மில் யார் வலிமையானவன் என்பதைப் பார்க்க நாம் ஒரு கல் மீது அமர்ந்து சுழற்றலாம்!''

''நாம் போகலாம்!'' என்று இவான் ஒப்புக்கொண்டான்.

வயலில் ஒரு பெரிய கல்லை அவர்கள் கண்டனர், பறவைநாகம் அந்தளவுக்கு சுழற்றியதால், அதிலிருந்து தீப்பொறிகள் பறந்தன!

''பரவாயில்லை!'' என்றான் இவான். ''அதிலிருந்து நீர் வெளியே ஓடுகிறவாறு நீ சுழற்ற முயல்.''

அவன் ஒரு கல்லைப் பற்றிப்பிடித்து வைத்து அழுத்தினான், அ

தோ! — அவனுடைய உடையிலிருந்த கொழுக்கட்டைகள் நசுங்கிப் போய், அவற்றினின்றும் நீர் பாய்ச்சியது.

''பார்த்தாயா? அதைச் செய்ய வேண்டிய வழி அதுதான்!'' என் றான்.

பறவைநாகம் அச்சத்தால் நடுங்கியது.

''வா, இவான், நம்மில் யாரால் உரக்கச் சீட்டியடிக்க முடிகிறது என்று பார்க்கலாம்!'' என்றது. அது அத்தனை அழுத்தமாகச் சீழ்க்கை அடிக்கவே மரங்கள் தரையை நோக்கி வளைந்தன.

''இப்போது நான் என்ன செய்வது?'' இவான் தனக்குத்தானே கேட்டுக்கொண்டான்.

சுற்றிலும் உற்றுப்பார்த்து, தரையின் மீது ஓர் இரும்புத் துண்டு கிடப்பதைப் பார்க்கவும் சொன்னான்:

''உன்னுடைய கண்களை இறுக்கமாக மூடிக்கொள், பறவைநா கமே, ஏனென்றால் அத்தனை உரக்க நான் சீழ்க்கையடிக்கப் போ கிறேன், உன்னுடைய தலையை விட்டுக் கண்கள் வெளியே பிதுங்கி விடக் கூடும்!''

பறவைநாகம் கண்களை மூடியது, இரும்புத் துண்டை இவான் எடுத்து, வலியால் புரண்டு நெளியுமாறு பறவைநாகத்திற்கு அத்தகைய ஓர் அடி கொடுத்தான்.

''நீ சொன்னது சரி, என்னுடைய கண்கள் ஏறக்குறைய தலையை விட்டுப் பிதுங்கி வந்து விட்டன!'' என்று பறவைநாகம் சொன்னது.

இவானைப் பற்றி அது அவ்வளவு பயப்படவே அவனுடன் ஒரே வீட்டில் வசிக்கின்ற எண்ணத்தை வெறுத்து, கிராமத்தின் ஓரத்தில் அவனுக்கு ஒரு வீட்டைக் கட்டிக்கொடுத்தது. அதன் பிறகு அதுவும், அதனுடைய அம்மாவும் தலைகளை ஒன்றுசேர்த்து வைத்து இவானை எப்படிச் சாகடிக்கலாம் என்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கின.

''அவனையும் சேர்த்து அவனுடைய வீட்டை நாம் கொளுத்தி விடுவோம்!'' என்றன.

ஆனால் இவான் அவை சொன்னதை ஒட்டுக் கேட்டு வெளியே ஒளிந்துகொண்டான்.

அவனுடைய குடிசையை அவை கொளுத்தின, அவனோ உடனேயே அது எங்கே இருந்ததோ அங்கே வந்து நின்று, தனது ஆடைகளினின்றும் சாம்பலைத் தட்டுவது போலப் பாசாங்கு செய்தான்.

பறவைநாகம் அவனைப் பார்த்துத் திடுக்கிட்டு நின்றது.

''என்ன, இன்னமும் நீ உயிரோடு இருக்கிறாய், இவான்!'' என்று கத்தியது.

''ஏன் கூடாது!'' என்றான் இவான். ''ஆனால் இந்த இரவில் நான் வசதிக்குறைவாக தூங்கினேன். ஓர் உண்ணி என்னைக் கடித்த தாகவே நினைத்தேன்.''

''இவானை விட்டு அப்பால் நான் விலகி இருப்பது நல்லது, நெருப்பும் சுவாலையும் கூட அவனை ஒன்றும் செய்யவில்லை!'' என்று பறவை நாகம் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு போய்விட்டது. அந்தப் பகுதிகளில் திரும்பவும் அது காணப்படவே இல்லை.

பறக்கும் கப்பல்

ஒரு காலத்தில் ஒரு கிழவனும் கிழவியும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு மூன்று பையன்கள் இருந்தனர்: அவர்களில் இருவர் புத்திசாலியான இளைஞர்கள், மூன்றாமவன் ஒரு முட்டாள். புத்திசாலி மகன்களைக் கிழவர்கள் அன்போடு நேசித்தார்கள். அம்மா ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர்களுக்குத் தூய வெண்ணிறச் சட்டைகள் கொடுத்தாள். ஆனால் முட்டாளை எப்போதுமே ஏசவும், கிண்டல் செய்யவும் செய்தார்கள். அழுக்கான சட்டையைத் தவிர எதையும் அணியாத முட்டாள் திணை காயப்போட்டிருந்த சூட்டடுப்பு பெஞ்சின் மேல் நாள் முழுவதும் உட்கார்ந்திருந்தான்; உணவு கொடுக்க அவர்கள் மறந்துவிட்டால், பட்டினி கிடந்தான்.

ஒரு நாள், ஜார் எல்லாரையும் விருந்துக்கு வரும்படி அழைக்கிறார் என்றும், கப்பல் ஒன்றைக் கட்டி காற்றில் பறந்து அதில் மாளிகைக்கு வரக்கூடியவருக்குத் தன்னுடைய மகளை மணமுடித்துக் கொடுக்கிறார் என்றும் செய்தி இந்தக் கிராமத்தை அடைந்தது.

இரண்டு புத்திசாலி சகோதரர்களும் என்ன செய்வதென்று சிந்திக்கத் தொடங்கினார்கள்.

‘‘நாம் விருந்துக்கு அவசியம் போக வேண்டும், ஏனெனில் — யாருக்குத்

தெரியும்! — ஒருவேளை நமது அதிர்ஷ்டத்தை அங்கே நாம் பெறக் கூடும்,'' என்றனர்.

அது பற்றி அவர்கள் பேசி தங்களுடைய தாயிடமும் தந்தையிடமும் கூறினர்:

''ஜாருடைய விருந்துக்கு எங்களைப் போக விடுங்கள்! அது விஷயங் களை மோசமாக்கி விடாது, மேலும் — யாருக்குத் தெரியும்! — ஒரு வேளை எங்களுடைய அதிர்ஷ்டத்தை அங்கே நாங்கள் அடையக் கூடும்.''

போக வேண்டாமென்று அவர்களைப் பெற்றோர்கள் மன்றாடினர், ஆனால் அவர்கள் கேட்கவில்லை.

''நாங்கள் போகிறோம், அது தான் முடிவு!'' என்று சொன்னார் கள். ''நாங்கள் கேட்பதெல்லாம் உங்களுடைய வாழ்த்துத்தான்.''

ஒன்றும் செய்ய முடியவில்லை, ஆகவே பெற்றோர் அவர்களை வாழ்த்தினார்கள், தாயார் அவர்களுக்கு வழியில் சாப்பிடுவதற்காக வெள்ளை ரொட்டி, வறுத்த பன்றி, ஒரு குடுவையில் உக்ரேனியன் ஒத்கா கொடுத்தாள். அவர்களும் புறப்பட்டுச் சென்றார்கள்.

சூட்டடுப்பு பெஞ்சின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்த முட்டாளும் அழைக்கப்பட்டான்:

''எங்கே என்னுடைய சகோதரர்கள் சென்று விட்டார்களோ, அங்கே நானும் போகிறேன்!''

முதலில் கிழவனும் கிழவியும் சிரிக்க மட்டுமே செய்தார்கள், பிறகு அவனைத் திட்டத் தொடங்கினார்கள், ஆனால் அவனுடைய மனத்தை எதனாலும் மாற்ற முடியவில்லை. ஆகவே அவனைக் கைவிட்டு அவர் கள் சொன்னார்கள்:

''மிகவும் நல்லது, போ, ஆனால் மீண்டும் திரும்பி வராதே அல்லது நீ எங்களுடைய மகன் என்று யாரிடமும் சொல்லாதே!''

பையில் போட்டுக்கொள்வதற்கு குடுவையில் தண்ணீரும் நாள்பட்ட கறுப்பு ரொட்டியும் கிழவி அவனுக்குக் கொடுத்து வீட்டிலிருந்து அவனை அனுப்பி வைத்தாள்.

முட்டாள் புறப்பட்டு மேன்மேலும் நடந்தான், தனது இடுப்புவரை நீண்ட பனிவெள்ளை தாடியுடன் இருந்த கிழவனை அவன் திடீரென்று சந்தித்தான்.

''வாழ்த்துகள், தாத்தா!'' என்றான் முட்டாள்.

''உனக்கும் வாழ்த்துகள், என் மகனே!'' என்று கிழவன் பதிலளித்தான்.

''எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள், தாத்தா?''

''தொல்லையில் இருக்கும் மக்களைக் காப்பாற்றிக் கொண்டு பூமியைச் சுற்றித்திரிகிறேன். நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?''

''ஜாருடைய விருந்தில் கலந்துகொள்ள மாளிகைக்கு.''

''காற்றில் பறந்து செல்லக்கூடிய கப்பலை உன்னால் கட்ட முடியுமா?''

''முடியாது, என்னால் இயலாது!''

''பிறகு நீ மாளிகைக்குப் போய்க்கொண்டிருப்பதில் என்ன பயன்?''

''யாருக்குத் தெரியும்! அது விஷயங்களை மோசமாக்கி விடாது. ஒருவேளை அங்கே என்னுடைய அதிர்ஷ்டத்தை நான் அடைவேன்.''

''உட்கார், நாம் ஓய்வெடுத்துக் கொள்ளலாம், கொஞ்சம் தின்னலாம். உன்னுடைய பையிலே நீ என்ன வைத்திருக்கிறாய்?''

''கொஞ்சம் கறுப்பு ரொட்டியைத் தவிர எதுவுமில்லை, தாத்தா. அது அவ்வளவு நாள்பட்டது, உங்களால் அதை மெல்லக்கூட முடியாது.''

''பரவாயில்லை, நாம் அதைத் தின்னலாம்!''

முட்டாள் தனது பையைத் திறந்த போது, கறுப்பு ரொட்டி வெள்ளையிலும் வெள்ளையாகவும், பிரபுக்கள் மட்டுமே தின்னக் கூடியதாகவும், முன்னர் ஒருபோதும் அவன் தின்னாததாகவும் திடீரென்று மாறி இருந்தது.

''முதலில் குடிக்காமல் நாம் தின்ன முடியாது!'' என்று கிழவன் சொன்னான். ''நீ கொஞ்சம் ஓத்கா வைத்திருக்கவில்லையா?''

''எங்கிருந்து அதை நான் பெற முடியும்? என்னிடம் இருப்பதெல்லாம் ஒரு குடுவைத் தண்ணீர் தான்!''

''அதையும் நாம் பார்க்கலாம்!''

முட்டாள் குடுவையை எடுத்து ஒரு வாய் பருகினான், அந்தோ அதிலிருந்த தண்ணீர் ஓத்காவாக மாறியிருந்தது.

''அதற்கு நீ என்ன சொல்கிறாய்?'' என்றான் கிழவன்.

தங்களுடைய கோட்டுகளை அவர்கள் புல்லின் மேல் பரத்தி அவற்றின் மீது அமர்ந்து தின்னத் தொடங்கினார்கள். அருமையான உணவு உட்கொண்டார்கள், அவனுடைய உணவைத் தன்னுடை

பகிர்ந்து கொண்டதற்காகக் கிழவன் முட்டாளுக்கு நன்றி சொல்லிப் பேசினான்:

''இப்போது, என் மகனே, காட்டுக்குப் போய் மிகப் பெரிய ஓக் மரத்தைக் கண்டுபிடித்து, அதைக் கோடரியால் மூன்று முறை தட்டு. நீயாகவே தரை மீது விழுந்து, யாராவது உன்னை எழச் சொல்லும் வரை அப்படியே படுத்திரு. இதற்கிடையில் உன்னுடைய பறக்கும் கப்பல் கட்டப்பட்டு விடும், அதற்குள்ளாக நீ ஏறி, எங்கெல்லாம் போக விரும்புகிறாயோ அங்கெல்லாம் பறக்க முடியும். ஆனால் வழியில் நீ யாரைச் சந்தித்தாலும் அவர்களையும் உன்னுடன் கூட்டிக்கொள்ள வேண்டும் என்று நினைவில் வைத்துக்கொள்!''

கிழவனுக்கு முட்டாள் நன்றி சொன்னான், ஒருவருக்கொருவர் பிரியாவிடை கூறிக்கொண்டு பிரிந்து சென்றார்கள். அதே சாலை நெடுகிலும் கிழவன் மேலும் போனான், முட்டாள் காட்டுக்குச் செல்லும் பாதையில் சென்றான்.

மிகப் பெரிய ஓக் மரத்தைக் கண்ட அவன் அதை மூன்று முறை கோடரியால் தட்டி, தானாகவே தரையில் விழுந்து தூங்கிப் போனான்.

சற்று நேரம் சென்றது, யாரோ அவனை எழுப்ப முயல்வதை உணர்ந்தான்.

''நண்பனே, எழுந்திரு, உன்னுடைய சிறந்த அதிர்ஷ்டத்தைச் சந்திப்பாய்!'' என்று யாருடைய குரலோ பேசியது.

முட்டாள் துடுக்குற்று விழித்துக் கண்களைத் திறந்தான், அந்தோ! — வெள்ளிக் பாய்மரங்களும், காற்றில் அலைந்த, பட்டுக் கப்பற்பாய்களும் கொண்ட தங்கக் கப்பல் ஒன்றை அவனுக்கு முன்னால் கண்டான் — பறப்பதற்காகத் தயாரிக்கப்பட்டது போலக் காணப்பட்டது.

முட்டாள் கப்பலுக்குள்ளாக ஏற, அது தரையை விட்டு மேலே எழும்பி காற்றில் பறந்தது. பூமிக்கு உயரமாக, ஆனால் மேகங்களை விடத் தாழ்வாக அது பறந்தது. தன்னைச் சுற்றிலும் கூர்ந்து பார்த்த முட்டாள், கண்ட எல்லாவற்றையும் நம்ப முடியவில்லை.

மேன்மேலும் கப்பல் பறந்தது, திடீரென்று தன்னுடைய காதைத் தரைமீது வைத்து எதையோ கேட்டுக்கொண்டிருப்பது போலக் காணப் பட்ட ஒரு மனிதனை முட்டாள் கண்டான்.

''ஏய், யாரங்கே, நல்லவனே!'' முட்டாள் கூப்பிட்டான்.

''ஏய், நீயா!''

''என்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

''ஜாருடைய மாளிகையில் விருந்தினர்கள் குழுமி விட்டனரா என்று கேட்கிறேன்.''

''அங்குதான் போய்க் கொண்டிருக்கிறாயா?''

''ஆமாம்!''

''என்னோடு சேர்ந்துகொள், உன்னை அங்கே அழைத்துச்செல்வேன்!''

கூர்ங்காதன் கப்பலுக்குள்ளாக ஏற, அவர்கள் அப்பால் பறந்து சென்றார்கள்!

சிறிது நேரம் சென்றது, ஒரு காலைத் தனது காதோடு சேர்த்துக் கட்டிக் கொண்டு, மற்றொரு காலால் சாலையில் நொண்டிச் சென்ற ஒரு மனிதனை அவர்கள் கண்டார்கள்.

''ஏய், அங்கே, நல்லவனே!'' என்று கத்தினார்கள்.

''ஏய், நீங்களா!''

''எதற்காக ஒற்றைக் காலில் நொண்டிக் கொண்டிருக்கிறாய்?''

''ஏனென்றால் இரண்டு கால்களையும் நான் பயன்படுத்தி இருந்தால் உலகத்தின் ஊடாக நேராகச் சென்றிருக்கக் கூடும், அதைச் செய்வதற்கு நான் விரும்பவில்லை!''

''எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?''

''மாளிகைக்கு, ஜாருடைய விருந்தில் கலந்துகொள்ள.''

''எங்களோடு சேர்ந்துகொள். உன்னை அங்கே நாங்கள் கூட்டிச் செல்கிறோம்!''

விரைகாலன் கப்பலுக்குள்ளாக ஏற, அவர்கள் அப்பால் பறந்து சென்றார்கள்!

சிறிது நேரம் சென்றது, பறவையோ விலங்கோ பார்வையில் படாத போதிலும், தனது வில்லில் அம்பைக் குறிவைத்திருந்த ஒரு வேடனை அவர்கள் கண்டார்கள்.

''ஏய், அங்கே, நல்லவனே!'' என்று முட்டாள் அழைத்தான். ''எதை எய்ய விரும்புகிறாய்? பார்வையில் எந்த விலங்கும் இல்லையே.''

''உன்னால் எதையும் பார்க்க முடியாது, ஆனால் என்னால் முடியும்!''

''என்ன வேட்டையைப் பார்க்கிறாய்?''

''ஒரு பறவை. இங்கிருந்து நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள

ஒரு காய்ந்த பேரியின மரத்தில் அது உட்கார்ந்து கொண்டிருக்கிறது.''

''எங்களோடு சேர்ந்துகொள்!''

கூர்ங்கண்ணன் கப்பலுக்குள்ளாக ஏற, அவர்கள் அப்பால் பறந்து சென்றார்கள்!

சிறிது நேரம் சென்றது, தனது தோளின் மீது ரொட்டிச் சாக்கைத் தூக்கிக்கொண்டு சென்ற ஒரு மனிதனை அவர்கள் கண்டார்கள்.

''ஏய், அங்கே, நல்லவனே!'' என்று அவர்கள் அழைத்தார்கள்.

''ஏய், நீங்களா!''

''எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்?''

''எனது சிற்றுண்டிக்கு ரொட்டி பெற.''

''ஏற்கெனவே உன்னிடம் சாக்கு நிறைய இல்லையா?''

''ஆமாம், ஆனால் அது ஒரு சிறு துளிதான், இது எனது ஒரு வேளைச் சாப்பாட்டிற்குக் கூடப் போதாது!''

''எங்களோடு சேர்ந்துகொள்!''

பெருந்தீனியன் கப்பலுக்குள்ளாக ஏற, அவர்கள் அப்பால் பறந்து சென்றார்கள்!

சிறிது நேரம் சென்றது, கீழே ஓர் ஏரியையும் அதன் கரையில் எதையோ தேடிக் கொண்டிருப்பது போலக் காணப்பட்ட ஒரு மனிதனையும் அவர்கள் கண்டார்கள்.

''ஏய், அங்கே, நல்லவனே!'' அவர்கள் அழைத்தார்கள்.

''ஏய், நீங்களா!''

''என்ன தேடிக் கொண்டிருக்கிறாய்?''

''தண்ணீர். என்னால் எதையும் காண முடியவில்லை, நான் மிகவும் தாகமாக இருக்கிறேன்.''

''உனக்கு அருகே ஓர் ஏரி இல்லையா?''

''ஆமாம், ஆனால் தண்ணீர் ஒரு மடக்குக்குப் போதுமானது மட்டுமே இருக்கிறது!''

''எங்களோடு சேர்ந்துகொள்!''

மிடாக்குடியன் கப்பலுக்குள்ளாக ஏற, அவர்கள் அப்பால் பறந்து சென்றார்கள்!

சிறிது நேரம் சென்றது, உலர்புல் கட்டு ஒன்றை தூக்கிக்கொண்டு சென்ற ஒரு மனிதனை அவர்கள் கண்டார்கள்.

''ஏய், அங்கே, நல்லவனே!'' என்று அவர்கள் அழைத்தனர். ''உலர் புல்லை எங்கே எடுத்துக்கொண்டு போகிறாய்?''

''கிராமத்திற்கு.''

''அங்கே உலர்புல் கிடையாதா?''

''இருக்கிறது, ஆனால் எனது உலர்புல் வித்தியாசமானது.''

''வித்தியாசமானதா? எப்படி வித்தியாசமானது?''

''இவ்வுலர்புல்லைச் சுற்றிலும் பரத்திப் போட்டால் வெதுவெதுப்பான கோடைக்கால நாளின் போது கூட, உறைபனி படிந்து, பனி ஆகத் தொடங்கும்.''

''ஏன் எங்களோடு நீ சேர்ந்துகொள்ளக் கூடாது?''

''சேர்ந்துகொள்ள எனக்கு மறுப்புக் கிடையாது!''

உறையப்பன் கப்பலுக்குள்ளாக ஏற, அவர்கள் அப்பால் பறந்து சென்றார்கள்!

சிறிது நேரம் சென்று விறகுக் கட்டைத் தோளில் சுமந்து கொண்டு வந்த ஒரு மனிதனை அவர்கள் கண்டார்கள்.

''அங்கே, நல்லவனே!'' என அழைத்தனர்.

''நீங்களா!''

''விறகை எங்கே எடுத்துக்கொண்டு போகிறாய்?''

''காட்டுக்கு.''

''அங்கே போதுமான விறகா இல்லை?''

''அங்கே இருக்கிறது, ஆனால் என்னுடையது வித்தியாசமானது''

''வித்தியாசமானதா? என்ன சொல்கிறாய்?''

''இந்த விறகைச் சுற்றிலும் பரத்திப்போட்டால் ஒரு பே... படையே அந்த இடத்தில் தோன்றும்.''

''ஏன் எங்களோடு நீ சேர்ந்துகொள்ளக் கூடாது?''

''சேர்ந்துகொள்ள எனக்கு மறுப்புக் கிடையாது!''

விறகுதூக்குவோன் கப்பலுக்குள்ளாக ஏற, அவர்கள் அப்பால் பறந்து சென்றார்கள்!

அது அவர்களுக்கு நீண்ட நேரம் எடுத்துக்கொண்டதா ... யாருக்கும் தெரியாது, ஆனால் இறுதியில் அவர்கள் ஜாருடைய ... கையை அடைந்தார்கள். வெளிமுற்றத்தில் எல்லாவகையான ... களும் வைக்கப்பட்ட மேசைகள் இருந்தன, உக்ரேனிய ஒத்கா ... பீர் பீப்பாய்கள் உருண்டன, மனம் விரும்பியவற்றை ஒருவ...

ணவும், குடிக்கவும் முடியும்! விருந்திற்காகப் பேரரசில் பாதி திரண்டிருந்தது: முதியவரும் இளைஞரும், பணக்காரப் பிரபுக்களும் பிச்சைக் காரர்களும், கிராமப்புறச் சந்தையில் போல.

முட்டாளும் அவனுடைய நண்பர்களும் ஜாருடைய மாளிகைக்கு முன்னர்ச் சரியாக வந்து, கப்பலை விட்டு வெளியேறி, விருந்துண்பவர்களோடு சேர்ந்துகொள்ளச் சென்றனர்.

சன்னலுக்கு வெளியே பார்த்த ஜார் மலைப்புற்றுப் போனார்: ''தங்கக் கப்பலில் கிராமத்தான் வருகிறானா எப்படி!''

ஜார் முட்டாளை உற்றுப்பார்த்தார். அவனுடைய கோட்டில் ஒட்டுக்களையும், முழங்கால்களைக் காட்டிய காற்சட்டையில் இருந்த ஓட்டைகளையும் பார்த்து, மனக்குழப்பத்தோடு தனது தாடியைப் பற்றினார்.

''அத்தகைய ஒரு கந்தலுடுத்திய கீழ் மகனுக்கு எனது மகளை நான் எப்படி மணம் முடித்துக் கொடுக்க முடியும்!'' என்று நினைத்தார்.

தனது வாக்குறுதியை விட்டு எப்படிப் பின்வாங்குவது என்று அறியாமல், முட்டாளுக்குச் சில பணிகள் கொடுக்கத் தீர்மானித்தார்.

தனது வேலையாளிடம் கூறினார்:

''அவனிடம் போய், பறக்கும் கப்பலில் அவன் வந்தான் என்பது அற்பக் காரியம், இந்த விருந்து முடிவதற்கு முன்னர் அவன் எனக்கு உயிர் நீர் கொண்டுவரவில்லை என்றால், இளவரசியை அவன் திருமணம் செய்து அடைய முடியாதது மட்டுமன்றி, அவனது தலையும் சீவப்படும் என்று சொல்.''

கூர்ங்காதன் ஜார் சொன்னவைகளைக் கேட்டு அது பற்றி முட்டாளிடம் சொன்னான்.

மற்ற விருந்தினர்களைப் போன்று முட்டாளும் ஒரு பெஞ்சின் மீது அமர்ந்து, உண்ணவோ குடிக்கவோ முடியாத அளவுக்கு அத்தனை சோகமாக இருந்தான்.

அவனது அத்தகைய நிலையைக் கண்ட விரைகாலன் கலவரமடைந்தான்.

''ஏன் நீ சாப்பிடவில்லை?'' என்று கேட்டான்.

''உணவு எனது தொண்டையில் ஒட்டிக் கொள்கிறது!'' என்று முட்டாள் சொன்னான். ''இந்த விருந்து முடிவதற்கு முன்னர் உயிர்

நீர் தனக்குக் கொண்டுவரும்படி ஜார் எனக்கு உத்தரவிட்டிருக்கிறார், அதை நான் எங்ஙனம் செய்ய முடியும்!''

''கவலைப்பட வேண்டாம். உனக்காக அதை நான் கொண்டு வருவேன்!''

அந்நேரத்தில் ஜாருடைய தகவலுடன் வேலையாள் வந்து சேர்ந் தான். தனக்கு ஜார் கட்டளையிட்டபடி தான் செய்யப் போவதாக அவரிடம் கூறும்படி முட்டாள் அவனுக்குச் சொன்னான்.

வேலையாள் அப்பால் செல்ல, விரைகாலன் தனது காலைக் காதி லிருந்து அவிழ்த்துவிட்டு ஓரெட்டு எடுத்துவைக்க அது உலகின் பாதி குறுக்காக அவனை எடுத்துச் சென்றது. நிமிடத்திற்குள்ளாக உயிர் நீரை இரு குடுவைகளில் நிரப்பினான். சற்று களைப்பாக உணரவே தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்:

''இங்குள்ள ஆலைக்கு அருகே உட்கார்ந்து ஓய்வு எடுக்கலாம் என்று நினைக்கிறேன், விருந்து முடிவதற்கு முன்னால் திரும்பிப் போக எனக்கு நிறைய நேரமிருக்கிறது!''

ஆலைக்கு அருகே உட்கார்ந்து ஓய்வு எடுப்பதற்கு முன்பே தூங்கிப் போய்விட்டான்.

விருந்து ஏறத்தாழ முடிந்துவிட்டது, ஆனால் அவன் காணப்பட வில்லை. உயிருடன் இருப்பதைக் காட்டிலும் செத்தவனைப் போல முட்டாள் அங்கே உட்கார்ந்து, அது தான் தனக்கு முடிவு என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்!

கூர்ங்காதன் தரையில் தனது காதை வைத்துக் கேட்டான்.

''விரைகாலன், அவனைக் கொள்ளை கொண்டுபோக, ஆலைக்கு அருகே தூங்கிக் கொண்டிருக்கிறான்!'' என்றான்.

''இப்போது நாம் என்ன செய்யப் போகிறோம்?'' கேட்டான் முட்டாள். ''அவனை நாம் எப்படி உசுப்புவது?''

''கவலைப்படாதே, அதை நான் செய்கிறேன்!'' என்றான் கூர்ங் கண்ணன்.

தனது வில்லை வளைத்து ஓர் அம்பு விட்டான், அந்தோ! — அது அந்தளவு வேகத்தோடு ஆலையைத் தாக்கியதால் மரச் சிராய்கள் சுற்றிலும் மழையாய் விழுந்தன. விரைகாலன் விழித்து அரண் மனைக்குப் புறப்பட்டான், விருந்து முடியவிருந்த நேரத்தில் அங்கே நீருடன் இருந்தான்.

ஜார் மகிழ்ச்சியடையாது, முட்டாளுக்கு மற்றொரு பணியைச் சொல்லத் தீர்மானித்தார்.

"முட்டாளிடம் சொல்," என்று தனது வேலையாளிடம் கூறினார், "அவனும் அவனுடைய நண்பர்களும் ஒரே மூச்சில் பன்னிரண்டு வறுத்த எருதுகளையும் நாற்பது ரொட்டிகள் நிறைந்த சூட்டடுப்புகளையும் தின்றால் தான் அவன் இளவரசியை மணம் செய்துகொள்ள முடியும். அவர்கள் தின்னவில்லை என்றால், அவனது தலை வெட்டப்படும்!"

ஜார் என்ன சொன்னார் என்பதைக் கூர்ங்காதன் கேட்டு அது பற்றி முட்டாளிடம் கூறினான்.

முட்டாள் கண்ணீர் சிந்தவிருந்தான்.

"இப்போது நான் என்ன செய்யப் போகிறேன்? ஒரே நேரத்தில் யாரால் அந்தளவு சாப்பிட முடியும்!" என்றான்.

"கவலைப்பட வேண்டாம், உங்களில் எவருடைய உதவியுமில்லாமல் எல்லாவற்றையும் நானே தின்ன முடியும்!" என்றான் பெருந்தீனியன்.

அந்நேரத்தில் ஜாருடைய தகவலுடன் வேலையாள் வர, உணவைக் கொண்டுவரும்படி அவனிடம் முட்டாள் கூறினான்.

பன்னிரண்டு எருதுகள் வறுக்கப்பட்டன, நாற்பது ரொட்டிகள் நிறைய சூட்டடுப்புகள் சுடப்பட்டன, எல்லாவற்றையும் பெருந்தீனியன் ஒரே நேரத்தில் காலி செய்து முடித்தான்.

"இன்னொரு சுற்றும் என்னால் சாப்பிட முடியும்!" என்றான். "நான் இன்னமும் பசியாக இருக்கிறேன்."

முன்னைக் காட்டிலும் குறைவாகவே ஜார் மகிழ்ச்சியடைந்து முட்டாளுக்கு மூன்றாவது கட்டளையிடத் தீர்மானித்தார்.

"முட்டாளும் அவனுடைய நண்பர்களும் ஒரே மூச்சில் நாற்பது பீப்பாய்த் தண்ணீரும் அதிகளவு பீரும் குடிக்கட்டும்!" என்று அவர் தனது வேலையாளிடம் சொன்னார். "அவர்கள் குடிக்கவில்லை என்றால் முட்டாளுடைய தலையை நான் வெட்டி எறிவேன்!"

கூர்ங்காதன் அவர் சொன்னதைக் கேட்டு அது பற்றி முட்டாளிடம் கூறினான். அவன் கண்ணீர் பெருக்கினான்.

"அழ வேண்டாம், எல்லாவற்றையும் நானே குடித்து மேலும் கேட்பேன்!" என்றான் மிடாக்குடியன்.

ஜாருடைய வேலையாட்கள் நாற்பது பீப்பாய் நீரையும் அதிகளவு பீரையும் உருட்டி வந்தார்கள், மிடாக்குடியன் கடைசித் துளி வரை

எல்லாவற்றையும் குடித்துக் காய வைத்தான்.

''என்னால் இன்னும் குடிக்க முடியும், நான் இன்னமும் தாகமாக இருக்கிறேன்!'' என்றான்.

தனது திட்டத்தினால் எதுவும் ஆகவில்லை என்பதைக் கண்ட ஜார் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்:

''அந்தப் போக்கிரியைக் கொள்ளை கொண்டுபோக! நான் அவனைச் சாகடிக்க வேண்டும், இல்லாவிட்டால் அவன் என்னுடைய மகளுக்கு அழிவாக இருப்பான்!''

ஒரு வேலையாளை முட்டாளிடம் அனுப்பித் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னால் குளியல் வீட்டில் அவன் நீராவிக் குளியல் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஜார் விரும்புவதாகச் சொல்லச் சொன்னார். மற்றொரு வேலையாளை இரும்புக் குளியல் வீட்டைச் செந்தழலாக எரிகிற வரை சூடாக்குமாறு அடுப்பு மூட்டுவோனுக்கான உத்தரவுடன் அனுப்பினார்.

''அந்த முட்டாள் அங்கே வெந்து போகட்டும்!'' என்றார்.

தனக்குச் சொல்லப்பட்டது போல அடுப்பு மூட்டுவோன் செய்தான், குளியல் வீடு கொழுந்து விட்டு எரிகின்ற வரை சூடாக்கினான். சாத்தானும் கூட அங்கே வெந்து போய்விடும்.

ஜார் விரும்பியதை முட்டாளுக்குச் சொல்ல, அவனும் உறையப்பனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு குளியல் வீட்டிற்குக் கிளம்பினான். அவர்கள் உள்ளே கால் வைத்தபோது, வெப்பமானது ஒரு வகையில் தாங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது. ஆனால் உறையப்பன் தான் கொண்டுவந்திருந்த உலர்புல்லை தரைக்கு மேலாகப் பரத்தினான். அது அவ்வளவு குளிர்ச்சியாக மாற, தன் மீது ஒரு வாளித் தண்ணீரை ஊற்றிக்கொண்ட முட்டாள் சூட்டடுப்பின் மீது விரைந்து ஏறி சீக்கிரமே தூங்கிப் போய்விட்டான்!

பொழுது விடிந்ததும், அங்கே அவனுடைய சாம்பலை மட்டுமே காண நினைத்துக்கொண்ட வேலையாட்கள் குளியல் வீட்டைத் திறந்தார்கள். அந்தோ! — அங்கே முட்டாள் சூட்டடுப்பின் மீது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான், அவனை உசுப்பப் பெரும் பாடுபட்டார்கள்.

''என்ன மாதிரியான தூக்கம் தூங்கினேன்!'' என்று சொல்லி குளியல் வீட்டை விட்டு வெளியேறினான்.

வேலையாட்கள் புறப்பட்டு இது பற்றி ஜாரிடம் சொன்னார்கள்.

கூட்டடுப்பின் மீது முட்டாள் தூங்கியதைத் தாங்கள் பார்த்ததையும், குளிர்காலம் முழுக்கவே சூடாக்கப்படாதது போல குளியல் வீடு அவ்வளவு உறைந்து குளிராக இருப்பதையும் தெரிவித்தார்கள்!

ஜாருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நீண்ட நேரம் யோசித்து பிறகு சொன்னார்:

''படை ஒன்றை முட்டாள் திரட்டி அரண்மனைக்கு முன்னால் அதை நிறுத்தட்டும். காலைக்குள்ளாக அது செய்யப்பட்டால், என்னுடைய மகளை அவனைத் திருமணம் செய்து கொள்ள விடுவேன். இல்லையென்றால், அவனுடைய தலையைச் சீவி விடுவேன்!''

அதே வேளையில் அவர் சிந்தித்தார்: ''முட்டாளைப் போன்ற ஒரு சாதாரணக் கிராமத்தானால் எங்கிருந்து ஒரு பெரும் படையைத் திரட்ட முடியும்? நான் ஜார், அதை நான் செய்ய முடியும் என்று எனக்கு நம்பிக்கையில்லை!''

பிறகு தனது வேலையாளை முட்டாளிடம் அனுப்பி அவனிடம் கோரப்பட்டது என்ன என்பதைச் சொல்லுமாறு கூறினார்.

ஆனால் வேலையாள் வருகின்ற வரை கூர்ங்காதன் பொறுத்திருக்காது அது பற்றி முட்டாளிடம் கூறினான், அவனோ அங்கே உட்கார்ந்து அழுது கதறினான்.

''இப்போது நான் என்ன செய்யப் போகிறேன்?'' என்று புலம்பினான். ''ஒரு படையை என்னால் எப்படித் திரட்ட முடியும்!''

தனது நண்பர்கள் காத்துக் கொண்டிருந்த பறக்கும் கப்பலில் ஏறிச் சென்று, அவர்களிடம் கூறினான்:

''முன்னர் என்னைச் சிக்கலினின்றும் நீங்கள் விடுவித்தீர்கள், எனது சகோதரர்களே! திரும்பவும் நீங்கள் அதை அவசியம் செய்ய வேண்டும். ஏனெனில் நீங்கள் அதைச் செய்யவில்லை என்றால் அதுவே என்னுடைய முடிவாகும்!''

''கவலைப்பட வேண்டாம், நான் உனக்கு உதவுவேன்!'' என்று விறகுதூக்குவோன் சொன்னான்.

அந்நேரத்தில் ஜாரினுடைய வேலையாள் அவரது செய்தியுடன் வந்து கூற, முட்டாள் சொன்னான்:

''அவர் கட்டளையிட்டது போல நான் செய்வேன் என்று ஜாரிடம் சொல், ஆனால் தனது வாக்கை அவர் காப்பாற்றவும், இந்த முறை என்னை இளவரசியைத் திருமணம் செய்ய விடாதும் போனால், அவர்

மீது போர் தொடுத்து அவளைப் பலாத்காரத்தினால் தூக்கிச் செல்வேன் என்று அவரை எச்சரி!''

இரவு வந்தது. விறகுதூக்குவோன் விறகுக் கட்டை தூக்கிக் கொண்டு வயலுக்குச் சென்றான். கட்டைகளைச் சுற்றிலும் பரத்திப் போடத் தொடங்கினான். ஒவ்வொன்றும் தரையில் அடிபடவும் ஒரு போர்வீரனாக மாறியது, ஆகவே சீக்கிரமே ஒரு முழுப் படையுமே அங்கே இருந்தது!

மறுநாள் காலை ஜார் விழித்தெழுந்ததும், அணிவகுப்பு இசையானது அவர் காதில் விழுந்தது.

''இவ்வளவு அதிகாலையில் இசையா?'' என்று கேட்டார்.

''தங்கத்தாலான பறக்கும் கப்பலில் வந்த அந்தக் கிராமத்தான் தான் திரும்பவும், மேன்மை சான்றீர்!'' என்று அவரது வேலையாட்கள் கூறினார்கள். ''மாளிகைக்கு முன்னால் தனது படைவீரர்களுக்கு அவன் பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறான்.''

எதுவும் செய்வதற்கில்லை என்பதைக் கண்ட ஜார், தனது படைக்குத் தலைமை தாங்கி மாளிகைக்கு ஏற்கெனவே புறப்பட்டுவிட்டிருந்த முட்டாளை அழைத்துவரும்படி தனது வேலையாளை அனுப்பினார். ஒரு வெண் புரவியில் அமர்ந்தும், மின்னுகின்ற பட்டும் வெல்வெட்டும் அணிந்திருந்த முட்டாள் அத்தனை அழகனாக மாறியிருந்தான். எந்தக் கதையாலும், எந்த நாக்காலும் சொல்ல முடியாது!

மாளிகைக் கதவருகே தனது ஆட்களை நிறுத்தி, தனக்காகச் சற்றுக் காத்திருக்குமாறு கூறி அவன் உள்ளே சென்றான்.

அணைத்தவாறு ஜார் அவனைச் சந்தித்தார். அவனைத் தன்னுடைய அருமை மருமகன் என்று அழைத்து தனக்கு அருகிலே உட்கார வைத்துக்கொண்டார். பிறகு இளவரசி தோன்றினாள், முட்டாளைப் பார்த்த போது அவள் பெருமகிழ்ச்சியுற்றாள், ஏனெனில் தனக்கு மணமகனாக வேண்டும் என்று எந்தப் பெண்ணும் ஆசைப்படக் கூடிய அளவுக்கு அவன் அத்தனை அழகனாக இருந்தான்!

விரைவிலேயே அவர்கள் திருமணம் செய்துகொண்டார்கள். அந்த மணவிழாவைக் கொண்டாட நடைபெற்ற அத்தகைய விருந்தை உலகம் ஒருபோதும் கண்டதில்லை! இதோடு அது முடிந்தது.

விவசாயியின் மகன் இவான்

ஒரு காலத்தில் ஜார் மன்னர் ஒருவரும் அவருடைய மனைவியும் வாழ்ந்தார்கள். இளமையாயிருந்த போது அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை, ஆனால் பின்னைய ஆண்டுகளில் ஒரு மகன் பிறந்ததனால் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மகன் நல்ல பருவம் அடையவும், அவனுக்கு ஒரு மனைவியைத் தேட அதுதான் நேரம் என்று அவர்கள் முடிவு செய்தார்கள், ஆனால் மகன் சொன்னான்:

''நெருப்பைத் தின்னவும், சுவாலையைக் குடிக்கவும் செய்கிற, ஓடுகிற போது பூமியை குமுறவும் அதிரவும், ஓக் மரம் இலைகளை உதிர்க்கவும் செய்கிற ஒரு குதிரையை நீங்கள் எனக்குத் தருகின்ற வரை நான் திருமணம் செய்ய மாட்டேன்!''

சிறந்த, வீரமிக்க தனது படைவீரர்களை ஜார் வரச்செய்து அத்தகைய ஒரு குதிரையைப் பார்த்தோ கேட்டோ இருக்கிறார்களா எனக் கேட்டார், ஆனால் அவர்கள் எல்லாருமே இல்லை என்று சொன்னார்கள். பிறகு அவர் தனது ஆட்சிப்பரப்பின் எல்லா மூலைகளுக்கும் அத்தகைய கடிதங்களை அனுப்பினார்: ''அம்மாதிரியான ஒரு குதிரையைப் பற்றி யாரேனும் கேள்விப்பட்டிருந்தாலோ, பெற முடியும் என நினைத்தாலோ அவன் அரண்மனைக்கு வரும்படி அழைக்கப்பட்டிருந்தான்.''

அக்கடிதம் தொலைதூரக் கிராமத்தை எட்டியது.

''சற்று யோசி!'' என்றான் அவளிடம். ''குதிரை எங்கே காணப்படும் என்பதை அறிந்ததாகச் சொல்லும் மனிதன் ஜாரையே பார்க்க அரண்மனைக்குப் போவான்!''

மேலும், இவான் என்ற விவசாயியின் மகன் சொன்னான்:

''இக்குதிரை எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியும்!''

''முட்டாளாகாதே!'' என்றான் தந்தை. ''படலைக்கு வெளியே நீ நடந்துபோக வேண்டியது தான், பக்கத்து வீட்டுக்காரர்களுடைய பையன்கள் உன்னைச் சாத்திவிடுவார்கள். நீயோ அந்தக் குதிரையைப் பற்றி அலட்டிக் கொள்கிறாய்!''

ஆனால் மகனோ உடையணிந்தவாறு சொன்னான்:

''என்னுடன் வெளியே முற்றத்திற்கு வாருங்கள், அப்பா, உங்களுக்கு எதையோ காட்ட விரும்புகிறேன்.''

அவர்கள் வெளியே சென்றார்கள். மகன் ஓக் மரம் ஒன்றை ஒரு கையினால் பற்றி அதைத் தரை நோக்கி வளைத்தான். அச்சத்துடன் வெளிறிப் போய், கண்கள் வெளியே பிதுங்கிக் கொண்டிருக்கத் தந்தை நின்றான்.

''இப்போது உன்னை நம்புகிறேன், மகனே!'' என்றான்.

கிராமத்தலைவருடைய வீட்டுக்கு அவர்கள் சென்றார்கள். இவானை முற்றத்தில் விட்டுவிட்டுத் தந்தை மட்டும் உள்ளே சென்று, தலைவரிடம் சொன்னார்.

''ஜார் விரும்பும் குதிரையை என் மகனால் பெற முடியும்,'' என்றான்.

இதைக் கேட்டதும் அவர்கள் எல்லாரும் அவனிடம் சத்தம் போடத் தொடங்கி, இத்தகைய பொய்களைப் பரப்பிக் கொண்டிருப்பதற்காக அவனும் அவனுடைய மகனும் சிறையில் தள்ளப்பட நேரிடும் என்றார்கள்.

அவ்வாறே அப்பாவும் மகனும் சிறையில் தள்ளப்பட்டு, அடைத்து வைக்கப் பட்டார்கள். மாவட்டத் தலைவர் இதுபற்றிச் சிந்தித்து, பிறகு சொன்னார்:

''அந்த இருவரும் அவர்கள் விரும்பியதைப் போய் பேசட்டும், நமக்கு எதுவுமில்லை. அதற்காக அவர்கள் விலை கொடுக்குமாறு செய்யப்படுவார்கள், நாமல்ல!''

அப்பாவும் மகனும் விடுதலை செய்யப்பட்டார்கள். மேலும் மகனுடைய பீத்தலை அறிவிக்கிற தகவல் ஒன்று ஜாருக்கு அனுப்பப்பட்டது.

தகவலைப் படித்த ஜாருக்கு, தன்னுடைய திறமையான ஆட்கள் செய்ய முடியாததை சாதாரண விவசாயியின் மகன் செய்ய முடியும் என்பதை நம்புவது கஷ்டமாக இருந்தாலும், அவனை வரவழைக்க முடிவு செய்தார்.

''நான் விரும்பும் குதிரையை உண்மையாகவே உன்னால் கொண்டு வர முடியுமா?'' என அவனிடம் ஜார் கேட்டார்.

''என்னால் முடியும்,'' இவான் பதிலுரைத்தான்.

''உன்னுடைய பணியைச் சுலபமாக்க உனக்குத் தேவையானது ஏதேனும் உண்டா?''

''எனக்கு ஒரு நல்ல குதிரையும், ஒரு நல்ல கதாயுதமும் தேவை.''

தன்னுடைய தலைமைக் குதிரைக்காரனுக்கு ஜார் ஒரு குறிப்பு எழுதி அதை இவானிடம் தந்து சொன்னார்:

''இந்தக் குறிப்பை என்னுடைய குதிரைக்காரனிடம் எடுத்துச்செல், அவனை வயலில் நீ காணலாம், மேலும் உனக்காக ஒரு நல்ல குதிரையை அவன் பொறுக்கித் தருவான்.''

இவான் குதிரைக்காரனைக் கண்டுபிடித்து அவனிடம் அந்தக் குறிப்பைக் கொடுக்க, அவன் அதைப் படித்துவிட்டுச் சொன்னான்:

''தண்ணீர் காட்டுவதற்காக நான் குதிரைகளை ஓட்டும் வரை காத்திரு, அவற்றில் நீ விரும்பிய ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.''

தண்ணீர் காட்டுவதற்காகக் குதிரைக்காரன் குதிரைகளை ஓட்டுகையில், இவான் அவற்றைத் தெரிவு செய்யத் தொடங்கினான். ஆனால் ஒரு குதிரையை அதனுடைய வாலாலோ பிடரி மயிராலோ அவன் பிடித்த அக்கணமே வாலோ பிடரியோ பிடுங்கிக்கொண்டுவந்தது. இந்த முறையில் அவன் பல குதிரைகளைப் பாழாக்கினான், மேலும் கொன்று தோலை எடுக்க வேண்டியிருந்தது, ஆனால் ஒன்றும் அவனுக்குப் பொருந்தி வராதது கண்டு, திரும்பிவிட முடிவு செய்தான். அப்போது வானம் மப்பும் மந்தாரமாகிக் கொண்டுவந்து, மழை வருவது போலக் காணப்பட்டது. குடிசையருகே உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு கிழவி இவானைப் பார்த்துச் சொன்னாள்:

''இளைஞனே, ஏழைக் கிழவிக்கு உதவி செய்! என்னைப் பற்றிக் கவலைப்பட யாருமில்லை. மழை பெய்தால் தாங்காது என்று நினைக்கிறேன்.''

தன்னோடு கொண்டுவந்திருந்த குதிரைத் தோல்களை மழை வராமல் தடுப்பதற்காக குடிசையின் கூரைக்கு மேலாக இவான் போர்த்தி விட்டு, தனக்கு உதவி செய்தமைக்குப் போதியளவு நன்றி பாராட்ட முடியாத கிழவிக்குப் பிரியாவிடை தந்து விட்டுப் புறப்பட்டுப் போனான்.

மாளிகைக்குத் திரும்பி அவன் ஜாரைச் சந்தித்தான், விரும்பிய குதிரையை அவனால் காண முடியவில்லை என்பதை அறிந்து ஜார் வியப்புற்றார்.

''என்னுடைய லாயங்களுக்குப் போ, ஒருகால் உன்னுடைய விருப் பத்திற்கேற்ற ஒன்றை அங்கே காண முடியும்!'' என்றார்.

அங்கும் அவனால் ஒரு குதிரையைக் காண முடியவில்லை.

இரவு வந்தது. ஸ்டெப்பிக்குள்ளாக இவான் சென்று, ஒரு பலத்த விசிலடித்தான், அந்தோ, பார்! — அவனை நோக்கி ஒரு குதிரை ஓடி வந்து கொண்டிருந்தது.

''என்னை அழைத்தீரா, எசமானரே?'' எனக் கேட்டது.

''ஆமாம், புறப்படுவதற்கு இதுதான் நமக்கு நேரம்.''

''நீங்கள் விரும்பினால் நான் தயாராக இருக்கிறேன்!''

இக்குதிரையை ஜாருடைய லாயங்களுக்குள்ளாக இவான் செலுத்திய போது அது அந்தளவு பெரிதாக இருந்ததால் கதவுகளும் சுவர்களும் அவனால் நெருக்கித் தள்ளப்பட்டுக் கீழே சரிந்தன. எனினும், அவன் உள்ளே நுழைந்து குதிரையைத் தாமணிக் கயிற்றால் இறுக்கமாகக் கட்டினான். மேலும் சிறந்ததும் தேர்வு செய்யப்பட்டதுமான கோதுமை கொண்டு அதனுடைய தீனிப் பையை நிரப்பிய பிறகு படுக்கச் சென்றான்.

அதிகாலையில் எழுந்த ஜார் விவசாயியினுடைய மகன் இவானை எழுப்புவதற்காகத் தனது வேலையாட்களை அனுப்பினார். தன் னுடைய கனவில் அவன் விரும்பிய குதிரையை இவான் பார்க்க வில்லையா எனக் கேட்டு வரும்படி சொன்னார்.

ஜார் கட்டளையிட்டபடி வேலையாட்கள் செய்தார்கள். இவான் சொன்னான்:

''ஏற்கெனவே நான் குதிரை வைத்திருக்கிறேன், அது இப்போது லாயத்தில் இருக்கிறது.''

மேலும் ஜார் அந்தக் குதிரையைப் பார்த்த போது நடுக்குற்றார்,

ஏனெனில் அத்தகைய பெரிய குதிரையை முன்னர் ஒருபோதும் அவர் பார்த்ததில்லை.

''இப்போது எனக்கு காட்டிலிருந்து கொண்டுவர இரண்டு ஜோடிக் காளைகள் வேண்டிய அளவுக்குப் பெரிய கதாயுதம் தேவை,'' என்றான் இவான்.

கதாயுதம் கொண்டுவரப்பட்டது, அதை வானத்தை நோக்கிச் சுழற்றி வீசி விட்டு, அவன் படுக்கைக்குச் சென்றான். ஒரு பகலும் ஓர் இரவும் தூங்கினான், பிறகு மற்றொரு பகலுக்குத் தூங்கி எழுந்து கதாயுதம் தன்னை நோக்கிப் பறந்துவருவதைப் பார்த்தான்... அவன் ஒரு விரலை உயர்த்த, கதாயுதம் அதில் மோதி துண்டுகளாக உடைந்தது.

''இக்கதாயுதம் சரியில்லை!'' என்றான் இவான். ''எனக்கு மற்றொன்று செய்யுங்கள். காட்டிலிருந்து அதைக் கொண்டுவர நான்கு ஜோடிக் காளைகள் வேண்டிய அளவுக்குப் பெரிதாக வேண்டும்.''

ஆகவே அவர்கள் நூறுவயதுள்ள ஓக் மரத்தை வெட்டி அதைக் கொண்டு ஒரு பெரிய கதாயுதம் செய்தார்கள். காட்டிலிருந்து அதை நான்கு ஜோடிக் காளைகள் கொண்டுவந்தன. இவான் அதை மேல் நோக்கிச் சுழற்றி வீசி விட்டு படுக்கச் சென்றான். மூன்று பகலும் மூன்று இரவும் அவன் தூங்கி எழுந்தான். கதாயுதம் அவனை நோக்கி இரைச்சலுடன் பறந்து வருவதைப் பார்த்தான். அவன் நடு விரலை உயர்த்த கதாயுதம் அதில் மோதி தரையில் ஐந்தடி ஆழத்திற்குள்ளாகப் புதைந்தது.

''இக்கதாயுதம் சரிதான்,'' என்றான் இவான்.

அவன் புறப்படத் தயாரானான், மேலும் ஜார் சொன்னதாவது:

''என் மகன் வைத்துக்கொள்ள நான் விரும்பும் குதிரையைக் கொண்டுவந்தால், இவான், நீ எதைக் கேட்டாலும் அது கிடைக்கும். சொல்லாலோ செயலாலோ உனக்கு ஒருபோதும் நான் தீங்கு செய்ய மாட்டேன் என்ற என்னுடைய வார்த்தையை நம்பலாம்.''

இவான் குதிரையை ஓட்டிச் சென்றான், ஆனால் யாரோ விவசாயியின் மகன் இவானால் தான் விரும்பிய குதிரையைக் கொண்டுவர முடியும் என்பதை ஜார் நம்பவில்லை. ஆகவே தனது படைவீரர்களில் உயர்குலத்தைச் சேர்ந்த இருவரை, அவனுக்குப் பின்னே அனுப்பி வைத்தார்.

''விவசாயியினுடைய் மகன் இவானை முந்திச் சென்று, அவன் எங்கு போனாலும் அவனுடனே செல்லுங்கள்,'' என அவர்களுக்குச் சொன்னார்.

ஜாரினுடைய இரு போர்வீரர்களும் இவான் வரை சென்று அவனை வாழ்த்தினார்கள். மேலும் அவர்கள் யாரென்று இவான் கேட்டான்.

''ஜார் எங்களை அனுப்பினார். நீ எங்கெல்லாம் போகிறாயோ, அங்கெல்லாம் நாங்களும் போக வேண்டும்!'' என்றார்கள்.

''நல்லது, நம்மிடையே ஓர் ஒழுங்கு இருக்க வேண்டுமானால், நம்மில் ஒருவன் அதிகாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது, எஞ்சியவர்கள் அவன் சொல்கிறபடி அவசியம் செய்ய வேண்டும்!'' என்றான் இவான்.

''நான் அதிகாரத்தை எடுத்துக்கொள்கிறேன்!'' எனக் கத்தினான் முதலாவது போர்வீரன்.

''இல்லை, நான் எடுத்துக்கொள்வேன்!'' மற்றவன் கத்தினான்.

ஆனான் விவசாயியின் மகன் இவான் சொன்னான்:

''இல்லை, எனது நண்பர்களே, அது சரிப்பட்டு வராது! கதாயுதங்களை ஒவ்வொருவராக வீசி எறிவோம், யாருடையது அதிகத் தொலைவு போகிறதோ அவன் அதிகாரத்தை எடுத்துக்கொள்வான்.''

இது ஒப்புக்கொள்ளப்பட்டு, போர்வீரர்களில் முதலாமவன் முன்னுக்கு வந்து தன்னால் முடிந்தளவுக்குக் கதாயுதத்தைச் சுழற்றி வீசினான். அது பார்வையினின்றும் மறைந்து விட்டது. அவர்கள் மூவரும் அதன் பின்னே சாலை நெடுகிலும் குதிரையில் சென்றார்கள். அவர்கள் ஒரு நாள் சவாரி செய்து, பிறகு இருண்டாம் நாளும் சென்று, மூன்றாம் நாளும் கடந்த பிறகே கதாயுதம் சாலையில் கிடந்த இடத்தை வந்தடைந்தார்கள்.

பிறகு இரண்டாவது போர்வீரன் தனது கதாயுதத்தைச் சுழற்றி வீச, அதன் பின்னே அவர்கள் ஒரு நாளும், இரண்டாவது, மூன்றாவது நாளும் பயணம் செய்து, கடைசியில் ஒரு வார காலத்திற்குப் பயணம் செய்த பிறகே கதாயுதம் கிடந்த இடத்தை அடைந்தார்கள்.

அதன் பிறகு தன்னுடைய கதாயுதத்தைச் சுழற்றி வீசும் முறை விவசாயியின் மகன் இவானுக்கு வந்தது. அவன் வீசி முடித்த போது, மூவரும் அதற்குப் பிறகு சவாரியைத் தொடர்ந்தார்கள். ஒரு வார

காலமும், பிறகு இன்னொரு வாரமும், மூன்றாவது வாரமும் சவாரி செய்தும் இன்னமும் அது பற்றிய எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

அவர்கள் சவாரியைத் தொடர்ந்தார்கள். மேலும் ஒரு வார காலம் பயணம் செய்த பிறகு, சுற்றிலும் செப்புச் சுவர்களும் அதற் குள்ளாகச் செல்லும் செப்புப் பாலமும் கூடிய ஒரு பெரிய வீட்டை வந்தடைந்தார்கள். அந்தோ! – வீட்டிற்கு அருகிலே இவானுடைய கதாயுதம் தரை மேல் கிடந்தது. அது சுவருக்கு மேலாகப் பறந்து, வீட்டின் ஒரு மூலையைக் கீழே விழ வைத்துவிட்டது.

பறவைநாகங்களின் குடும்பத்திற்குச் சொந்தமான வீடுதான் அது. ஆனால் பறவைநாகங்கள் வீட்டில் இல்லை.

யாரும் அங்கே இல்லை என்பதைக் கண்டு, விவசாயியின் மகன் இவான் முதலாவது வீரனுக்குப் பாலத்தைக் காக்குமாறும் இரண் டாவது வீரனைக் குதிரைகளிடம் இருக்குமாறும் உத்தரவிட்டு, அவன் வீட்டில் தூங்கப் போவதாகச் சொன்னான்.

அவர்கள் எல்லாருமே தங்களுடைய குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றார்கள். பாலத்தைக் காவல்காத்த மனிதன் களைப்பாக உணர வே, ஓய்வுக்காகக் கீழே படுத்தான். இவான் விழித்து பாலத்திற்கு நள்ளிரவில் வந்த போது, அவன் அயர்ந்து தூங்குவதைக் கண்டான்.

திடீரென்று பூமி அதிரவும் குமுறவும் தொடங்கி, ஆறுதலைப் பறவைநாகம் வீட்டை நோக்கிக் குதிரையில் வந்தது. தனது குதிரை யிடம் அது சொல்வதை இவான் செவிமடுத்தான்:

‘‘கனைக்காமல் நில், ஏனெனில் நம்முடைய வலிமையை எதிர்க்க இங்கே யாருமே இல்லை. விவசாயியின் மகன் இவான் மட்டுமே இருக்கிறான், ஆனால் அவன் இன்னமும் இளைஞன். இங்கிருந்து வெகு தொலைவில் இருக்கிறான். ஓர் அண்டங்காக்கை கூட அவனுடைய எலும்புகளை இங்கே கொண்டுவராது.’’

‘‘ஓர் அண்டங்காக்கை எலும்புகளைக் கொண்டுவராது, ஆனால் ஒரு நல்ல மனிதன் தானாகவே வருவான். இதோ நான், பறவை நாகமே!’’ என்று விவசாயியின் மகன் இவான் கூறினான்.

‘‘நீ இங்கே எதற்கு வந்திருக்கிறாய்: சண்டையிடவா சமாதானம் செய்யவா?’’ எனப் பறவைநாகம் கேட்டது.

‘‘உன்னோடு சண்டையிட! உன்னைப் போன்றவர்களுடன் நான் சமாதனம் செய்து கொள்வேன் என்று நினைக்கிறாயா?’’

''சரி, நீ முதலில் அடி!''

''இல்லை, நீ அடி! இந்த ஆட்சிப் பரப்பில் மற்ற எவரையும் விட நீ வயதானவன், இல்லையா?''

ஆறுதலைப் பறவைநாகம் இவான் மீது திடீரெனப் பாய்ந்து தாக்கியது, ஆனால் அவன் இலேசாக அசைய மட்டுமே செய்தான். மேலும் இப்போது இவான் தனது கதாயுதத்தால் பறவைநாகத்தைத் தாக்கினான், அந்தோ! —பறவைநாகத்தினுடைய ஆறு தலைகளுமே தரையில் உருண்டன. பிறகு அவன் பறவைநாகத்தைத் துண்டுதுண்டாக வெட்டி, அதனுடைய எலும்புகளை எரித்து, சாம்பலைக் காற்றில் வீசி எறிந்துவிட்டு, வீட்டிற்குத் திரும்பிச் சென்றான்.

காலை வரவே, பாலத்தைக் காவல்காக்குமாறு விடப்பட்டிருந்த மனிதனிடம், ''ஆக, நீ நன்றாகக் காவல்காத்தாயா?'' என இவான் கேட்டான்.

''மிக நன்றாக, என்னைக் கடந்து ஒரு பறவையால் கூடப் பறந்து வர முடியாது,'' என்று அந்த மனிதன் பதிலளித்தான்.

பகல் மறைந்து இரவு வரவே, விவசாயியின் மகன் இவான் முதலாவது வீரனை லாயங்களையும் இரண்டாவது வீரனைப் பாலத்தையும் காவல்காக்குமாறு உத்தரவிட்டான்.

இரண்டாவது மனிதனும் தூங்கிப் போய்விட்டான், ஆனால் இவான் நேரத்தில் எழுந்து, வெளியே சென்று பாலத்திற்கு அருகே நின்றான். திடீரென்று பூமி அதிரவும் குமுறவும் தொடங்க, ஒன்பது தலைப் பறவைநாகம் குதிரையில் வந்து கொண்டிருந்தது.

''கனைக்காமல் நில்!'' என்று தனது குதிரையிடம் பறவைநாகம் சொன்னது. ''நம்முடைய வலிமையை எதிர்க்க இந்த நாடு பூராவிலுமே எந்த சக்தியும் கிடையாது. விவசாயியின் மகன் இவான் மட்டுமே இருக்கிறான், ஆனால் அவன் இன்னமும் இளைஞன், இங்கிருந்து வெகு தொலைவில் இருக்கிறான். ஓர் அண்டங்காக்கைக் கூட அவனுடைய எலும்புகளை இங்கே கொண்டுவராது.''

''ஓர் அண்டங்காக்கை எலும்புகளைக் கொண்டுவராது, ஆனால் ஒரு நல்ல மனிதன் தானாகவே வருவான்,'' என இவான் கத்தினான். ''இதோ நான், பறவைநாகமே!''

''நீ இங்கே எதற்கு வந்திருக்கிறாய்: சண்டையிடவா சமாதானம் செய்யவா?''

''சமாதானம் செய்வதற்கு அன்று, சண்டையிடவே இங்கே நான் வந்தேன்!''

''சரி, முதலில் நீ அடி!''

''இல்லை, நீ அடி! உலகின் இந்தப் பகுதியில் மற்ற எவரை விடவும் நீ வயதானவன்.''

ஒன்பது தலைப் பறவைநாகம் அதற்கு மேல் காத்திருக்கவில்லை. அது இவான் மீது திடீரெனப் பாய்ந்து, பலமாக அடித்து கணுக்கால் அளவு ஆழத்திற்கு தரைக்குள் அவனை அழுத்தியது. ஆனால் இவான் பறவைநாகத்தை ஒரே ஒரு முறை தாக்கி, அதனுடைய தலைகளில் ஏழை வெட்டி வீழ்த்தினான், இரண்டாவது முறை தாக்கி எஞ்சிய இரண்டு தலைகளை வெட்டி வீழ்த்தினான். பிறகு அவன் அதைத் துண்டுதுண்டாக வெட்டி, அதனுடைய எலும்புகளை எரித்து, சாம்பலைக் காற்றில் வீசி எறிந்துவிட்டு, வீட்டிற்குத் தூங்குவதற்காகத் திரும்பிச் சென்றான்.

காலை வரவே, பாலத்தைக் காவல்காக்குமாறு விடப்பட்டிருந்த மனிதனிடம், ''ஆக, நீ நன்றாகக் காவல் காத்தாயா?'' என இவான் கேட்டான்.

''மிக நன்றாக, என்னைக் கடந்து ஒரு சுண்டெலி கூட ஓடிவர முடியாது,'' என்று அந்த மனிதன் பதிலளித்தான்.

மூன்றாவது இரவில் இவான் இரண்டு போர்வீரர்களையும் வீட்டிற் குள்ளாக அழைத்து, தனது கையுறையைச் சுவரில் தொங்கப் போட்ட வாறு சொன்னான்:

''இந்த முறை பாலத்தைக் காவல்காக்க நானே செல்கிறேன். நீங்களோ என்னுடைய கையுறையைக் கவனிக்க வேண்டும். அதிலிருந்து வியர்வை ஓடுவதை நீங்கள் பார்த்தால், குடித்து மகிழ்ச்சியடையுங்கள்: அதிலிருந்து குருதி வடிவதைப் பார்த்தால், எனது குதிரையை விட்டு விடுங்கள்.''

பாலத்திற்குக் கீழே நின்று காத்திருந்தான், நள்ளிரவுக்குச் சற்று முன்னர் பூமி அதிரவும் குமுறவும் தொடங்கியது, ஓக் மரங்களினின்று இலைகள் விழுந்தன. இதோ பறவைநாகங்களில் மிக வயதானது குதிரையில் வந்து கொண்டிருந்தது. நெருப்பைத் தின்னவும் சுவாலை யைப் பருகவும் செய்யும் குதிரை மீது அது அமர்ந்திருந்தது, பாலத்தை நெருங்கவும் குதிரையிடம் சொன்னது:

''கனைக்காமல் நில். விவசாயியினுடைய மகன் இவானைத் தவிர, நம்முடைய வலிமையை எதிர்க்க இந்த உலகம் முழுவதிலும் எந்தச் சக்தியும் கிடையாது. மேலும் இவான் இன்னமும் இளைஞனாகவே இருக்கிறான், அடுப்பின் அருகில் சோம்பிக்கிடப்பதை விட வேறு எதற்கும் இலாயக்கில்லாதவன். இங்கே அவன் வரமாட்டான், மேலும் ஓர் அண்டங்காக்கைக் கூட அவனுடைய எலும்புகளை இங்கே கொண்டுவராது.''

விவசாயியின் மகன் இவான் சொன்னான்:

''ஓர் அண்டங்காக்கை எலும்புகளைக் கொண்டுவராது, ஆனால் ஒரு நல்ல மனிதன் தானாகவே வருவான். இதோ நான், பறவை நாகமே!''

''நீ இங்கே எதற்கு வந்திருக்கிறாய்: சண்டையிடவா சமாதானம் செய்யவா?'' எனப் பறவைநாகம் கேட்டது.

''சமாதானம் செய்வதற்கு அன்று, சண்டையிடவே இங்கே நான் வந்தேன்!''

''சரி, முதலில் நீ அடி!''

''இல்லை, நீ அடி! பூமியில் மற்ற எவரை விடவும் நீ வலிமையான வன், இல்லையா?''

அதற்கு மேல் எதையும் கேட்பதற்காகப் பறவைநாகம் காத்திருக்க வில்லை. இவானிடம் விரைந்து அந்த அளவு பலமாக அவனைத் தாக்கவே, இவான் வெளிறிப் போனான். ஆனால் அவன் பின்வாங்க வில்லை, தொடர்ந்து சண்டையிட்டான். கடைசியில் பறவைநாகத் தினுடைய பன்னிரண்டு தலைகளில் மூன்று மட்டுமே அதனது தோள் களில் எஞ்சியிருந்தன. ஆனால் பறவைநாகம் இடுப்பளவு ஆழ்த்திற்கு இவானைத் தரையில் அழுத்தியது, மேலும் அவனுடைய வலிமை குறையத் தொடங்கியது.

''சரி அப்படியானால் நாமும் ஓய்வு எடுக்கலாம்,'' என்றது பறவை நாகம்.

அவர்கள் ஓய்வெடுக்கத் தொடங்கிய போது, விவசாயியின் மகன் இவான் தனது கதாயுதத்தைத் தூக்கி எறிந்தான். அது லாயத்தை மோதி சுவரை விழவைத்தது. அவனுடைய குதிரை கயிற்றை அறுத்துக் கொண்டு இவானிடம் ஓடிவரவே, குளம்புகளால் பூமியை உட்பக்க மாகச் சரிக்கத் தொடங்கியது.

இரண்டு போர்வீரர்களும் எழுந்து இவானுடைய கையுறையிலிருந்து குருதி ஓடுவதைக் கண்டார்கள், ஆனால் அவனுக்கு உதவ அவர்கள் அஞ்சினார்கள்.

''நம்முடைய உயிர்களை எதற்காகப் பணயம் வைக்க வேண்டும்?'' என்றார்கள்.

இதற்கிடையே குதிரை இவானைச் சுற்றிருந்த தரை முழுவதையும் குடைந்த போது, பறவைநாகத்திடம் இவான் சொன்னான்:

''இதுதான் உனக்கு முடிவு, பறவைநாகமே, ஏனெனில் உன்னைக் கொல்லப் போகிறேன்!''

''எனக்குத் தெரியும்,'' என்றது பறவைநாகம். ''ஆனால் சாவதற்கு முன்னால் நான் உனக்கு ஒன்று சொல்வேன், இவான்: மந்திரக் குதிரையை என்னிடமிருந்து நீ எடுத்துச்சென்றாலும், ஜாரிடம் அதை உன்னால் எடுத்துச் செல்ல முடியாது. ஏனெனில் என் அம்மா, ஜார் ஹெரோடு என் அப்பா மற்றும் எனது மூன்று சகோதரிகள் உன்னையும் இந்த இரண்டு போர்வீரர்களையும் எப்படியிருந்தாலும் கொல்வார்கள்.''

பறவைநாகத்தினுடைய எஞ்சிய மூன்று தலைகளையும் வெட்டிய இவான், பறவைநாகம் என்ன சொல்லியது பற்றி சிந்தனையில் மூழ்கினான். இதற்கிடையில் முன்னர் இவானால் குதிரைத் தோல்கள் கொண்டு தனது குடிசை காப்பாற்றப்பட்ட, உலகத்தில் நடப்பதை அறியும் ஆற்றல்மிக்க அக்கிழவி இவான் ஆபத்தில் இருப்பதை உணர்ந்து தனது சிறிய நாயை அவனிடம் அனுப்பினாள்.

நாய் இவானிடம் சொன்னது:

''நீங்கள் ஜாருடைய அரண்மனைக்குப் போகும் போது, சாலையின் வலப்பக்கத்தில், கண்ணாடி போல அவ்வளவு தெளிவான நீரூற்றைக் காண்பீர்கள். உங்கள் நாக்கு அண்ணத்தோடு ஒட்டிக்கொள்ளும் அளவு நீங்கள் தாகத்தை உணர்ந்தாலும், அதைக் குடிக்காதீர்கள். உன்னுடைய கதாயுதத்தால் அதைக் குறுக்காக அடி, நீ என்ன பார்ப்பாயோ அதைப் பார்ப்பாய். பிறகு நீங்கள் மேலும் போகும் போது, ஒரு காட்டத்திமரத்தையும், அதற்குக் கீழே உணவும் மதுவும் வைக்கப்பட்ட மேசையையும் பார்ப்பீர்கள். நீங்கள் எவ்வளவு பசியாக இருந்தாலும், எதையும் தொட்டுவிடாதீர்கள். உன்னுடைய கதாயுதத்தால் மேசையின் குறுக்காக அடி, நீ என்ன பார்ப்பாயோ அதை

பார்ப்பாய்! அதற்கு இன்னும் தள்ளி மற்றொரு காட்டத்திமரத்தை யும், அதற்குக் கீழே படுக்கையும் பார்ப்பீர்கள். உங்களுக்கு மிகவும் தூக்கமாக இருந்தாலும், அதன் மீது படுத்து விடாதீர்கள். அதற்கு மாறாக உனது கதாயுதத்தால் குறுக்காக அடி, நீ என்ன எதிர் பார்ப் பாயோ அதை பார்ப்பாய்!''

கிழவியினுடைய நாய் சொன்னவற்றைக் கேட்ட இவான், பறவை நாகத்தினுடைய மந்திரக் குதிரையை எடுத்துக்கொண்டு, ஜாரினுடைய இரண்டு போர்வீரர்களுடன் ஜார் அரண்மனைக்குப் புறப்பட்டான். மேன்மேலும் அவர்கள் சவாரி செய்து மிகவும் தாகத்தை உணர்ந்தார் கள். சாலையின் வலப்பக்கத்தில் ஒரு நீரூற்றைக் கண்டார்கள். இரு போர்வீரர்களும் நீர் குடிப்பதற்கு விரும்பினார்கள், ஆனால் இவான் சொன்னான்:

''பொறுங்கள், முதலில் அந்த நீரூற்றை நான் ஒரு பார்வை பார்க் கிறேன்!''

தனது கதாயுதத்தால் நீரை அடித்தான், அந்தோ! — அது குருதியுடன் சிவப்பாக மாறியது. அந்த நீரூற்று, நீரூற்றே அல்லவென்பதையும், ஆனால் பறவைநாகத்தினுடைய சகோதரி இந்த வடிவத்தில் இருப் பதையும் கண்டான்.

அவர்கள் சவாரியைத் தொடர்ந்தார்கள், பறவைநாகத்தினுடைய எஞ்சிய இரு சகோதரிகளையும் இவான் கொன்றான். அவர்களில் ஒருத்தி உணவும் மதுவும் வைக்கப்பட்ட மேசையாகவும், மற்றொருத்தி படுக்கையாகவும் உருமாறியிருந்தார்கள். திடீரென்று வானம் இருள டைந்து, மேலே ஒரு மேகம் தவழ்ந்து செல்வதைக் கண்டார்கள். ஆனால் அது மேகமே அன்று என்பதையும், பறவைநாகத்தினுடைய வயதான தாய் என்பதையும் அறிந்தார்கள். அவளது மேல் உதடு வானத்தையும் கீழ் உதடு பூமியையும் தொட்டுக் கொண்டிருந்தன.

விவசாயியின் மகன் இவான் சொன்னான்:

''வாருங்கள், சகோதரர்களே, அந்தப் பெண் பறவைநாகத்தை ஒன்றுசேர்ந்து நாம் சண்டையிடலாம், ஏனெனில் தனியாக என்னால் அதை வெற்றிகொள்ள முடியாது!''

ஆனால் ஜாருடைய இரண்டு போர்வீரர்களும் நடுக்குற்று அப்பால் ஓடிவிட்டார்கள்.

''ஐயோ, நான் தொலைந்தேன்!'' என்று எண்ணினான் இவான்,

ஆனால் அருகே ஒரு கொல்லன் பட்டறை இருந்ததை நினைவுகூர்ந்து, அதை நோக்கிப் பாய்ந்தோடிச் சென்றான். இரண்டு போர்வீரர்களும் திரும்பி வந்து, அவனைப் பின்தொடர்ந்தார்கள்.

பட்டறை வரை அவர்கள் குதிரைகளை ஓட்டிச் சென்று, தங்களை உள்ளே விடுமாறு கொல்லர்களை அழைத்தார்கள். கொல்லர்கள் பட்டறையினுடைய பன்னிரண்டு இரும்புக் கதவுகளைத் திறந்து விட்டார்கள். அவற்றின் ஊடாக அவர்கள் கடந்து சென்று, அவர்களுக்குப் பின்னே கதவுகள் அவைகளாகவே மூடிக் கொண்டன. ஆனால் பெண் பறவைநாகம் பட்டறைக்குப் பறந்து வந்து, தனது அனல் நாவால் கதவுகளை நக்கத் தொடங்கியது.

விவசாயியின் மகன் இவான் நிலைமை மோசமாகி விட்டது என்பதைப் பார்த்து கொல்லர்களிடம் சொன்னான்:

''சீக்கிரமாக, இந்தப் பட்டறை அளவுக்குப் பெரிய ஒரு கலப்பையும் ஒரு பற்றுக்குறடும் எனக்கு உருக்கி அடித்துத் தாருங்கள்!''

கொல்லர்கள் வேலை செய்யத் தொடங்கினார்கள். அவர்களுக்குச் சிறிதளவுதான் நேரமிருந்தது, ஏனெனில் பெண் பறவைநாகம் ஏற்கெனவே கதவுகளின் பெரும்பாலானவற்றை எரித்துவிட்டது. ஆனால் அவர்கள் விரைவாக இருந்தார்கள், பத்தாவது கதவை எரிக்க அது தொடங்கிய நேரத்தில் கலப்பையும் பற்றுக்குறடும் தயாராகி விட்டன.

பெண் பறவைநாகம் கடைசிக் கதவை எரித்துவிட்டு உள்ளே தலையை நுழைத்தது. இவான் அதனுடைய உதட்டைப் பழுக்கக் காய்ந்த பற்றுக்குறடால் பற்றி, தனது முழு பலத்துடன் அதை நெரித்தான். பிறகு அதைக் கலப்பைபோடு பூட்டி, வெளியே வயலுக்குள்ளாக வலிந்து இழுத்து, நிலத்தை உழத் தொடங்கினான். உழுத மண் வீடுகளைப் போலப் பெரிதாக உயர்ந்தது. அப்பெண் பறவைநாகம் வெடித்துப் போகின்றவரை மேன்மேலும் உழுதான். அப்போது அவன் அதைக் கடலில் வீசி எறிந்தான், தனது குதிரையைப் புல்வெளியிற் சுதந்திரமாக விட்டு, இரண்டு போர்வீரர்களையும் துரத்தினான்.

''போய்த் தொலைங்க, கோழைகளே!'' என்று கத்தினான். ''நீங்கள் உயர் குருதி கொண்டிருக்கலாம், ஆனால் எனக்கு அதிகமான தொல்லை தந்து விட்டீர்கள். உங்களிடமிருந்து வேறு எதையும் பெறவில்லை.''

பிறகு அவன் பறவைநாகத்தினுடைய மந்திரக் குதிரையில் பாய்ந்து சென்றான்!

விரைவிலேயே ஒரு கிழவனைச் சந்தித்தான், ஆனால் அவனுக்கு வாழ்த்துச் சொல்லாமல் கடந்து சென்றான், ஆனால் அது பற்றிச் சிந்தித்துத் திரும்பி வந்தான்.

''நான் இளைஞன், வயதானவருக்குரிய மரியாதையை நான் காட்டி யிருக்க வேண்டும்,'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

கிழவனை நெருங்கிச்சென்று சொன்னான்:

''என்னை மன்னித்துவிடுங்கள், தாத்தா, நான் உங்களை வணங்கி யிருக்க வேண்டும், செய்யத் தவறி விட்டேன்.''

''ஓர் இளைஞன் எப்போதுமே தன்னை விட மூத்தவரை முதலில் வணங்க வேண்டும், இதை எப்போதும் மறந்துவிடாதே,'' என்றான் கிழவன். ''இப்போது நான் சொல்வதைக் கேள். நீ சவாரி செல்கையில் மரக்கட்டைக் காலுடன் கூடிய ஒரு கிழவனைச் சந்திப்பாய். அவன் உன்னை நிறுத்திக் கூறுவான்: 'நீ அருமையான குதிரை வைத்திருக் கிறாய், இளைஞனே, ஆனால் நீ என்னை முந்திச்செல்லமுடியாது!' ஆகவே, நினைவில் கொள், முதலாவது, அவனோடு நீ எந்தவகையிலும் பந்தயம் வைக்கக் கூடாது, இரண்டாவது, வழியில் எவரையாவது நீ சந்தித்தால், அவர்களை உன்னுடன் ஏற்றிக்கொள்.''

இவான் சவாரி சென்றான். ஒரு குள்ளமான கிழவன் மரக்கட்டைக் காலுடன் அவனை நோக்கி நொண்டியபடி வந்தான். ஆனால் கிழவன் சொன்னதை நினைவு கூர்ந்து, அவ்வாறே அவனிடம் மறுத்துப் பேசினான்.

ஆனால் அவன் இதைச் சொன்னதுமே குள்ளமான கிழவன் தனது மரக்கட்டைக் காலை இவானுடைய அங்கவடிக்குள்ளாகத் திணித்து, இவானுடைய தோள் வழியாக ஓர் அம்பைச் செலுத்தி, சேணத்திலி ருந்து அவனைக் கீழே சாய்த்து, அவனுடைய குதிரை மீது தாவி மின்னலாய் மறைந்து போனான். அந்தக் கிழவன் பறவைநாகத்தி னுடைய அப்பாவாகிய ஜார் ஹெரோடைத் தவிர வேறு யாருமில்லை.

விவசாயியின் மகன் இவான் சீற்றத்தோடு இருந்தான்:

''உன்னைக் கொள்ளை கொண்டுபோக, ஜார் ஹெரோடு!'' எனக் கத்தினான். ''பொறு, நீ எங்கிருந்தாலும் உன்னைக் கண்டுபிடிப் பேன்.''

தனது கதாயுதத்தைத் தூக்கி, அவனுக்குப் பின்னே ஏவினான். ஆனால் அவனுடைய காயம் தீயைப் போல எரிந்தது, தன்னுடைய

வலிமைத் தன்னை விட்டு நீங்குவதாக உணர்ந்தான்.

''ஜார் ஹெரோடின் அம்பு நுனை நஞ்சு தடவப்பட்டிருந்தது!'' அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

தலையைத் தொங்கப் போட்டவாறு நடந்த விவசாயியின் மகன் இவான், தரையைத் தொடுமாறு நீண்ட தாடியுடன் இருந்த ஒரு கிழவனைச் சந்தித்தான். அவர்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்திக் கொண்டார்கள். இவான் எங்கே போய்க் கொண்டிருக்கிறான் என் பதை அறிந்த கிழவன் தானும் அவனுடன் வருவதாகக் கூறினான்.

''நீ யார்?'' இவான் கேட்டான்.

''என் பெயர் நாய் வேடன், எல்லா நாய்களும் எனக்குப் பயப்படும்,'' என்றான் கிழவன்.

இவான் அவனை வியப்புடன் உற்று நோக்கினான், ஆனால், முதலாவது கிழவனுடைய அறிவுரையை நினைவு கூர்ந்து, எதுவும் சொல்லவில்லை.

இருவரும் ஒன்றுசேர்ந்து சென்றார்கள், சீக்கிரமே உறைபனி என்ற பெயருடைய மற்றொரு கிழவன் அவர்களோடு சேர்ந்துகொண்டான்.

அவர்கள் மேலும் சென்றார்கள், இப்போது அவர்கள் மூன்று பேர், வழியில் மற்றொரு கிழவனைச் சந்தித்தார்கள். அவனும் சேர்ந்து கொண்டான்.

''என் பெயர் கடல் அறுப்பான், என்னால் கடலைக் அறுத்து அலை களைக் கட்டுகளாகக் கட்ட முடியும்,'' என்றான்.

அவர்கள் மேலும் நடந்தார்கள், இப்போது அவர்கள் நான்கு பேர் இருந்தனர், வழியில் அவர்களோடு மேலும் ஐந்து கிழவர்கள் சேர்ந்துகொண்டனர், அவர்களுடைய பெயர்கள்: வயிறுமுட்டத் தின்றும் மேலும் விரும்புவான், வயிறுமுட்டக் குடித்தும் மேலும் விரும்புவான். ஓடுவான் நிற்கவே மாட்டான், நீண்ட சாட்டை மற்றும் தொலை தூரம் பார்ப்பான்.

இப்போது அவர்கள் ஒன்பது பேரும் ஜார் ஹெரோடின் நாட்டிற்கு ஒன்றுசேர்ந்து புறப்பட்டு, சீக்கிரமே அதனது எல்லைகளைக் கடந்தார் கள்.

அவர்களைப் பார்த்து ஜார் ஹெரோடு வியப்புற்றது, ஏனெனில் அதனுடைய நாட்டை நெருங்கி வர முன்னர் எவரும் முயன்றதில்லை. ஆனால் இப்போது அதனுடைய நிலத்தில் வந்து கொண்டிருந்தார்கள்

அது வேலையாட்களை அழைத்து இவானுக்கும் அவனது நண்பர்களும் எதிராக, தங்களது முரட்டுக்குணத்திற்காக எவ்விடத்திலும் அறிந்திருந்த தனது இருதலை நாய்களில் ஏழாயிரத்தை ஏவி விடச் சொன்னது. இருண்ட மேகத்தைப் போல நாய்கள் அவர்களுக்கு எதிரே வந்தன. விவசாயியின் மகன் இவான் சொன்னான்:

''நாய்கள் நம்மைத் துண்டாகக் கிழித்து விடும். நான் மிகவும் தளர்ச்சியாக இருப்பதால் என்னால் நகரவே முடியாது!''

''நாய்கள் எல்லாம் எனக்குப் பயப்படும் என்பதை நீ மறந்து விட்டாய்!'' என்றான் நாய்வேடன்.

அவன் நாய்களுக்கு எதிரே சென்று அவை எல்லாவற்றையும் கொன்றான்.

இப்போது இவானும் அவனுடைய நண்பர்களும் போக முடிந்தது. அவர்கள் ஜார் ஹெரோடின் காப்பரணை நோக்கிச் சென்றார்கள். மிகப் பெரியதான இரும்பு வாயிலைத் திறந்து முற்றத்திற்குள் சென்ற உடனேயே அவர்களுக்குப் பின்னால் இவ்வாயில் மூடப்பட்டது. இரும்புச் சுவர்களால் ஆன கூண்டுக்குள்ளாக அவர்கள் இருப்பதைக் கண்டார்கள். மேலும் ஜார் ஹெரோடு நெருப்பு மூட்டி அவர்களை உயிரோடு எரிக்கும்படி தனது வேலையாட்களுக்கு உத்தரவிட்டது.

ஆனால் உறைபனி என்று அழைத்துக்கொண்ட கிழவன் சுவர்களில் தனது குளிர்ந்த மூச்சுக் காற்றை ஊதினான். சுவர்களுக்குக் கீழே வேலையாட்கள் விறகுகளைக் குவித்துப் பெருந் தீயை வளர்த்தாலும், உள்ளுக்குள்ளாக வெண்ணிற உறைபனியால் மூடப்பட்டது.

இது பற்றி எந்தச் சந்தேகமும் இல்லாத ஜார் ஹெரோடு, விறகுகளை எரித்து முடித்த போது தனது வேலையாட்களிடம் சொன்னது:

''இப்போது வாயிலைத் திறந்து, விவசாயியின் மகன் இவானின் சாம்பலை வெளியே பெருக்கித் தள்ளலாம்.''

வேலையாட்கள் வாயிலைத் திறந்தார்கள், அந்தோ! — அவர்களுக்கு முன்னால் இவானும் அவனுடைய நண்பர்களும் உயிரோடும் நலமோடும் இருந்தனர்.

''எங்களிடம் மிகக் குறைவான அன்பையே நீங்கள் காட்டினீர்கள், ஜார் ஹெரோடு. அந்தளவு குளிராக இருந்த ஓர் அறையில் எங்களைப் போட்டு விட்டதால் உறைந்து செத்துப் போனோம்,'' என்றான் இவான்.

''எப்படியிருந்தாலும்,'' என்றது ஜார் ஹெரோடு, ''உன்னுடைய தலையை நான் வெட்டப் போகிறேன், விவசாயியின் மகன் இவானே! என் அம்பில் நனைக்கப்பட்ட நஞ்சு உன்னுடைய வலிமையை அழித்து விட்டது, உன்னால் சண்டையிட முடியாது.'' ஆனால், தனக்குத்தானே நினைத்து, ''அவனைக் கொல்ல இன்னும் நேரமிருக்கும், முதலில் அவனோடு நான் கொஞ்சம் கேலி செய்யலாம்!'' மேலும் பேசியது:

''உன்னையும் உனது ஆட்களையும் ஒரு பணியில் நான் ஈடுபடுத்தப் போகிறேன். நீங்கள் அதை நிறைவேற்றினால், உங்களை விடுவிப் பேன்; நீங்கள் நிறைவேற்றவில்லை என்றால், உங்களுடைய தலைகளை வெட்டுவேன். நீங்கள் கடலை அறுத்து, அலைகளைக் கட்டுகளாகக் கட்ட வேண்டும், இவை எல்லாமே ஓர் இரவுக்குள் செய்யப்பட வேண்டும்!''

ஜார் படுக்கைக்குச் சென்றது. கடல் அறுப்பான் என்று கூறிக் கொண்ட கிழவன் உடனடியாக வேலையில் இறங்கினான், காலையில் கடல் முழுவதும் அறுக்கப்பட்டு அலைகள் கட்டுகளாகக் கட்டப்பட்ட தைக் கண்ட ஜார் ஹெரோடு பெரிதும் வியப்புற்றுச் சொன்னது:

''நீ ஓய்வெடுக்க முடியும் என எண்ணிவிடாதே, ஏனெனில் உன்னை மற்றொரு பணியில் நான் ஈடுபடுத்தப் போகிறேன். எனக்குச் சொந்த மாக ஏராளமான கால்நடைகள் உள்ளன, ஆனால் அவை எல்லாவற் றையும் வெட்டி இறைச்சியை வறுக்கச் செய்து, அதை எல்லாவற்றையும் தின்ன வேண்டும். அதை நீங்கள் உண்டு விட்டால் உங்களை நான் விடுவிப்பேன்; நீங்கள் உண்ணாவிட்டால், உங்களைச் சாகடிப்பேன்!''

ஜார் ஹெரோடின் கைதிகளில் மூலிகைகள் மற்றும் வேர்கள் பற்றி அறிந்த ஓர் அழகிய இளம் பெண்ணும் இருந்தாள். இவானைக் குணப் படுத்துவதை இப்பெண் ஏற்றுக்கொண்டாள். இடற்கிடையில் ஜார் ஹெரோடு ஆயிரக்கணக்கான சாராயப் பீப்பாய்களை முற்றத்திற்கு உருட்டி வரச் செய்யவும், வைக்க இடமில்லாதபடி அதிகமான இறைச்சிப் பானைகளை வைக்கவும் செய்தது.

இவானும் அவனுடைய நண்பர்களும் மேசையின் முன்னர் அமர்ந்து உண்ணத் தொடங்கினார்கள். ஆனால் ஒரு காளையின் வறுவல் அவர் களுக்குப் போதுமானதற்கும் அதிகமாக இருந்தது, அவர்களால் அதிகம் சாப்பிட முடியவில்லை. அவர்கள் அங்கே அமர்ந்து கவலைப்படவும் துயரத்தில் ஆழவும் செய்தார்கள்.

''இந்த உணவு முழுவதையும் நம்மால் மூன்று ஆண்டுகளில் கூட உண்ண முடியாது!'' என்றான் இவான்.

ஆனால், இப்போது தங்களோடு இன்னமும் சேர்ந்துகொள்ளாத மற்ற இருவரை அவர்கள் நினைவு கூர்ந்து—வயிறு முட்டத்தின்றும் மேலும் விரும்புவான், வயிறு முட்டக்குடித்தும் மேலும் விரும்புவான்—அவர்களை அழைத்தார்கள். அவர்கள் நல்ல பசியோடு தின்னத் தொடங்கி எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக உணவையும் சாராயத்தையும் விழுங்கி ஒரு சக்கையளவு மிஞ்சாமல் செய்தார்கள்.

இவானாலும் அவனது நண்பர்களாலும் எதையும் செய்ய முடியாது எனக் கற்பனை செய்வது கஷ்டமாக இருப்பதை ஜார் ஹெரோடு கண்டு, அவர்களைக் கொல்லவிருந்தது. ஆனால் பிறகு வேடிக்கையைச் சற்று நீடிக்க முடிவு செய்தது.

''உங்களுக்காக மேலும் ஒரு பணி வைத்திருக்கிறேன்,'' என்றது. ''நாளைக்கு நீங்கள் கடற்கரைக்குப் போய், எனக்காகக் கொஞ்சம் கடல் நீர் கொண்டுவாங்க! என் மகள் விரைகாலியை விட நீங்கள் வேக மாகச் செய்ய முடிந்தால் உங்களை நான் விடுதலை செய்வேன்; இல்லையென்றால், உங்களை நான் கொல்ல வேண்டிவரும்!''

இரவு கழிந்து பொழுது புலர்ந்தது, ஜார் ஹெரோடுடைய மகள் விரைகாலி தனது துரிதக் காலணிகளையும், அணிந்தவரைக் காணாது செய்கிற தொப்பியையும் அணிந்துகொண்டு, ஒரு வாளி எடுத்துக் கொண்டு, கடற்கரைக்கு விரைந்து ஓடினாள். இவானும் அவனுடைய நண்பர்களும் தங்களுடன் இருந்த ஓடுவான் நிற்கவே மாட்டான் என்பவனை உடனேயே கடற்கரைக்கு அனுப்பினார்கள். ஒரு வாளி நிறைய கடல் நீரை எடுத்துக்கொண்டு விரைகாலிக்கு முன்னதாக அவன் திரும்ப ஓடிவந்து கொண்டிருந்தான்! ஆனால் விரைகாலி அவனைப் பார்த்து கையளவு தூக்கப் பொடியை அவனுடைய கால் களுக்குக் கீழாக எறிய, அவன் தரையில் விழுந்து சீக்கிரமே தூங்கிப் போனான்.

விவசாயியின் மகன் இவானும் அவனுடைய நண்பர்களும் விரை காலி தங்களை நோக்கி ஓடி வருவதைக் கண்டு திகைத்து நின்றார்கள், ஏனெனில் ஓடுவான் நிற்கவே மாட்டான் எங்கும் பார்வையில் படவில் லை. ஆனால் தொலைதூரம் பார்ப்பான் தொலைவில் உற்றுப்பார்த்து,

அவன் தூங்கிப் போனதைக் கண்டு, நீண்ட சாட்டையை அழைக்க, அவனோ தனது சாட்டையால் ஓடுவான் நிற்கவே மாட்டானை அடித்தான். மேலும் ஓடுவான் நிற்கவே மாட்டான் குதித்தெழுந்து நின்று, வாளியைப் பற்றிக்கொண்டு விரைகாலிக்கு முன்னதாகத் திரும்ப வந்துசேர்ந்தான்.

இவானாலும் அவனுடைய நண்பர்களாலும் செய்ய முடியாதது எதுவுமே இல்லை என்பதைக் கண்ட ஜார் அவர்களை சூட்டடிப்புக் களத்திற்கு அழைத்துப்போகும்படி வேலையாட்களிடம் கூறியது. ஆனால் அவர்கள் விவசாயியின் மகன் இவானை வெளியே கொண்டு சென்ற போது இந்த இளம் கைதி அவனது காயம் ஆறிவிட்டது எனச் கிசுகிசுத்ததைக் கேட்டான். ஜார் ஹெரோடு அவனுடைய தலையை வெட்டுவதற்காகத் தயாரான போது, இவான் அதைப் பிடித்து காப்பரணின் தூபி முனை மீது வீசி எறிந்தான்! அதனுடைய கூ முனை ஜாரின் உடல் வழியாகப் பாய்ந்து, ஜார் இறந்தது.

பிறகு இவான் தன்னிடமிருந்து ஜார் ஹெரோடு எடுத்துக்கொண்ட குதிரையை வெளியே கொணர்ந்து, தன்னுடைய உயிரைக் காத்த பெண்ணுடன் தனது நாட்டிற்குப் பறப்படத் தயாரானான். அவ களுடன் கிழவர்களும் சேர வேண்டும் என அவன் விரும்பினான் ஆனால் கிழவர்கள் சொன்னார்கள்:

''உனக்கு நாங்கள் தேவைப்பட்ட பொழுது உன்னுடைய உதவிக்கு நாங்கள் வந்தோம், இவான், ஆனால் இப்போது நாங்கள் போ வேறு நல்லவர்களுக்கு உதவி செய்வோம்.''

அவர்கள் இவானைக் கட்டித்தழுவி விடை பெற்றார்கள்.

இவானும் அந்தப் பெண்ணும் அவனுடைய நாட்டிற்கு வந்தார் நெருப்பைத் தின்னவும் சுவாலையைப் பருகவும் செய்யும் குதிரை இவான் ஜாரிடம் எடுத்துச்சென்றான். ஆனால் இவானுக்குப் பின் அனுப்பப்பட்ட ஜாரினுடைய இரு போர்வீரர்களும், தன் இவான் அழைத்து வந்திருந்த பெண்ணைப் பார்த்துவிட்டு, இவானு பின்னே அரண்மனைக்கு விரைந்தனர்.

''இவான் என்ன, ஒரு சாதாரண விவசாயியின் மகன்,'' என்ற ''அத்தகைய அழகிய பெண்ணை மணப்பது அவனுக்குச் சரியல்ல உ குருதி கொண்ட ஒருவன் மட்டுமே அவளுக்குப் பொருத்தமான கண னாக முடியும்.''

இவான் சீற்றமடைந்தான்.

''ஓ, ஜார், வெகுமதியாக நான் எதைக் கேட்டாலும் தருவதாக வும், வார்த்தையாலேயோ செயலாலேயோ என்னை ஒருபோதும் துன்புறுத்த மாட்டேன் என்று உறுதி தந்ததை நீங்கள் மறந்து விட் டீர்களா?'' என்றான். ''நான் மூன்று பறவைநாகங்களையும் அவற்றின் மொத்தக் குடும்பத்தையும் கொன்றழித்தேன், மேலும் உங்களுடைய உறுதிமொழிகளை நீங்கள் காப்பாற்றுகின்ற முறை இதுதான் என்றால், உங்களையும் உங்களுக்குப் பிரியமான எல்லாரையும் எனது கதாயுதத் தின் ஓர் அடியால் கொல்வேன்!''

தனது கதாயுதத்தை அவன் அலைக்க, மரங்கள் எல்லாம் தரை யோடு வளைந்தன, மேலும் ஜாரினுடைய அரண்மனை அலைந்து ஆடியது.

நடுக்குற்றுப் போன ஜார் மற்றொரு வார்த்தை சொல்லவில்லை. விவசாயியின் மகன் இவான் தான் காதலித்த பெண்ணை மணந்து அதன் பிறகு எப்போதும் மகிழ்ச்சியாக வாழ்ந்தான். ஆனால் ஒருபோ தும் அவன் ஜாருடைய அல்லது பிரபுவுடைய வார்த்தையை எந்தவகை யிலும் நம்பவில்லை.

ஒரு லின்டன் மரமும் பேராசைக் கிழவியும்

ஒரு காலத்தில் ஒரு கிழவனும் அவனுடைய மனைவியும் வாழ்ந்தார்கள். அவர்கள் மிக ஏழையாக இருந்தனர். ஒரு நாள் கிழவி தனது கணவனிடம் கூறினாள்:

‘‘நீ காட்டுக்குப் போய் ஒரு லின்டன் மரத்தை வெட்டுவது நல்லது, ஏனெனில் நமது அடுப்பு எரிந்து கொண்டிருக்க நமக்கு ஏதாவது கிடைக்கும்.’’

‘‘ரொம்ப சரி, நான் போகிறேன்,’’ என்றான் கிழவன். ஆகவே, தனது கோடரியை எடுத்துக்கொண்டு காட்டிற்குச் சென்றான்.

கிழவன், காட்டிற்கு வந்து, ஒரு லின்டன் மரத்தைத் தேர்ந்தெடுத்து, அதை வெட்டுவதற்காகத் தனது கோடரியை உயர்த்தினான். ஆனால் திடீரென்று லின்டன் மரம் மனிதக் குரலில் பேசுவதைக் கேட்டான்:

‘‘ஓ, தயவுசெய், என்னை வெட்டிவிடாதே, நல்ல மனிதனே! என்றைக்காவது நீ சிக்கலான நிலையில் இருக்கும்போது, நான் உனக்கு உதவி செய்வேன்.’’

கிழவன் அந்தளவு நடுங்கிப்போய்த் தனது கோடரியைக் கீழே நழுவவிட்டான். சிறிது நேரம் சிந்தனை செய்தபடி நின்று விட்டு வீடு சென்றான்.

வீடு திரும்பியதும், தனக்கு என்ன நேர்ந்தது என்பதைத் தன் மனைவியிடம் கூறினான். கிழவி சொன்னாள்:

''என்ன முட்டாள் நீ! உடனே அந்த லின்டன் மரத்திடம் சென்று, ஒரு குதிரையும் வண்டியும் கேள். நமது வாழ்நாளில் நாம் போதுமான அளவு நடக்கவில்லையா?''

''நல்லது, நீ விரும்பியபடியே கிடைக்கும்,'' என்றான் கிழவன். ஆகவே தனது தொப்பியை மாட்டிக்கொண்டு காட்டுக்குச் சென்றான்.

லின்டன் மரத்திடம் சென்று அவன் சொன்னான்:

''லின்டன் மரமே, லின்டன் மரமே! எங்களுக்கு ஒரு குதிரையும் வண்டியும் நீ கொடுக்க வேண்டும் என்று எனது கிழவி சொன்னாள்.''

''ரொம்ப சரி, வீட்டுக்குப் போ,'' என்றது லின்டன் மரம்.

கிழவன் வீட்டிற்குத் திரும்பியபோது, தனது வீட்டின் முன்னே ஒரு குதிரையும் வண்டியும் இருப்பதைக் கண்டான்.

''பார்,'' என்றாள் கிழவி, ''இப்போது நாமும் பெரிய மனிதர்களே. ஆனால் நம்முடைய வீடு விழுந்து கொண்டிருக்கிறது. காட்டுக்குத் திரும்பிப்போய், ஒரு புதிய வீட்டை லின்டன் மரத்திடம் கேள். ஒருவேளை அது திரும்பவும் நமக்கு உதவக் கூடும்.''

கிழவன் காட்டிலிருந்து திரும்பிய போது, தன்னுடைய இடத்தை அவனால் அடையாளம் காண முடியவில்லை. பழைய வீட்டுக்குப் பதிலாக அங்கே புதிய அழகான வீடு இருந்தது. குழந்தைகளைப் போல வயதானவர்கள் அத்தனை மகிழ்ச்சியோடு இருந்தார்கள்.

''லின்டன் மரத்திடம் போய், சில கால்நடைகள் வேண்டுமென்று நீ கேட்டால் என்ன? பிறகு வேறெதுவும் நமக்குத் தேவைப்படாது.''

ஆகவே, கிழவன் காட்டிற்குச் சென்று சில கால்நடைகளை லின்டன் மரத்திடம் கேட்டான்.

''ரொம்ப சரி,'' என்றது லின்டன் மரம், ''வீட்டுக்குத் திரும்பப் போ.''

கிழவன் வீடு திரும்பியபோது, தனது முற்றத்தில் நிறையக் கால்நடைகள் இருப்பதைக் கண்டான். அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்து சொன்னான்:

''சரி, இப்போது நமக்கு எதுவும் தேவைப்படாது!''

''இல்லை, நீ மறுபடியும் அங்கே போக வேண்டும், கொஞ்சம் பணம் கேள்,'' என்று அவன் மனைவி பதிலளித்தாள்.

திரும்பவும் கிழவன் காட்டிற்குச் சென்று, லின்டன் மரத்திடம் பணம் கேட்டான்.

''ரொம்ப சரி,'' என்றது லின்டன் மரம், ''வீட்டுக்குத் திரும்பப் போ.''

கிழவன் வீடு திரும்பியபோது, தனது மனைவி பணத்தை எண்ணி அதை மேசையின் மேல் குவியல்களாகக் கூட்டிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

''இப்போது நாம் எவ்வளவு பணக்காரர்கள், பார்!'' என்றாள் கிழவி. ''ஆனால் இது போதுமானதில்லை. இப்போது நாம் பணக் காரர்கள், ஆகவே எல்லா மக்களும் நமக்குப் பயப்பட வேண்டும். திரும்பவும் லின்டன் மரத்திடம் போய், எல்லா மக்களும் நமக்குப் பயப்படுமாறு ஏதாவது செய்யும்படி அதனிடம் கேள்.''

கிழவன் லின்டன் மரத்திடம் சென்று, அவ்வாறு செய்யும்படி கேட் டான்.

''ரொம்ப சரி,'' என்றது லின்டன் மரம், ''வீட்டுக்குத் திரும்பப் போ.''

கிழவன் வீட்டிற்குத் திரும்பிய போது, தனது வீட்டைச் சுற்றி நிறையக் காவலர்கள் இருப்பதைக் கண்டான். ஆனால் அவன் மனைவி இன்னமும் திருப்தியடையவில்லை.

''கேள்,'' தனது கணவனிடம் சொன்னாள். ''இப்போது நமது கிராமத்திலுள்ள எல்லா மக்களையும் நமக்காக வேலை செய்யும்படி வைக்க வேண்டும். இப்போது இதற்கு மேல் எதுவும் நமக்கு வேண் டாம், எல்லாமே நம்மிடம் இருக்கிறது.''

திரும்பவும் கிழவன் லின்டன் மரத்திடம் வந்து, தனது மனைவி விரும்பியதை அதனிடம் கேட்டான். லின்டன் மரம் நீண்ட நேரம் மௌனமாக இருந்து, பிறகு சொன்னது:

''ரொம்ப சரி, வீட்டுக்குப் போ, கடைசி முறையாக நீ விரும்பியதை நான் செய்கிறேன்.''

கிழவன் வீடு திரும்பியபோது, அங்கே பாழடைந்த தனது பழைய வீட்டையும் அதனருகே தன் மனைவி உட்கார்ந்து கொண்டிருப்பதையும் கண்டான்.

தங்களுக்காக எல்லா மக்களையும் வேலை செய்ய வைக்கவேண்டும் என்று விரும்பிய அவர்களை இப்படித்தான் லின்டன் மரம் தண்டித்தது.



கிழவனுடைய மகளும் கிழவியினுடைய மகளும்

ஒரு காலத்தில் ஒரு கிழவனும் அவனுடைய மனைவியும் இருந்தனர். அவர்களுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவனுடைய மனைவி அதிக காலம் வாழ்ந்தாளா இல்லையா என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் அவளுக்குச் சாவதற்கான நேரம் வந்தபோது, தனது கணவனிடம் கூறினாள்:

"கணவரே, நான் சாகிறபோது, நீ மறுபடியும் மணம் செய்ய விரும்பினால், அண்மையில் தனது மகளுடன் வசிக்கும் விதவையை மணந்து கொள்ளாதே, ஏனெனில் அவள் உனக்கு மனைவியாக இருந்தாலும், நமது குழந்தைக்குத் தாயாக இருக்க மாட்டாள்."

"நான் அவளையோ வேறு எவளையோ மணக்க மாட்டேன்," என்றான் கணவன்.

மனைவி இறந்து போனாள், கிழவன் அவளைப் புதைத்து விட்டு, தான் மட்டும் ஒரே மகளுடன் வாழ்ந்தான். சிறிது காலம் சென்றது. ஒருநாள் கிராமத்தின் வழியாகச் செல்லுமாறு நேர்ந்தபோது, தனது மனைவி மணந்துகொள்ள வேண்டாம் என எச்சரித்திருந்த விதவையின் வீட்டிற்குள் போவதென்று முடிவு செய்தான். தான் மீண்டும் மணமுடித்துக்கொள்ள மாட்டேன் என்று முன்னர் கூறியிருந்தான். ஆனால் தனது வாக்குறுதி பற்றி மறந்து விட்டு, விதவை வீட்டிற்கு

சென்றான், பிறகு மற்றொரு முறை, பிறகு தன்னை மணந்து கொள்ளும்படி அவளிடம் கேட்டான்.

விதவை பெருமகிழ்ச்சியுற்று, நீண்ட காலமாகவே தான் அவனது திருமண விருப்பத்திற்குக் காத்துக்கொண்டிருந்ததாகச் சொன்னாள். அதன்படி அவளும் கிழவனும் மணமுடித்துக்கொண்டு, தனக்கு உடைமை யாயிருந்த வீட்டு விலங்குகளை எடுத்துக்கொண்டு, தன் மகளையும் கூட்டிக்கொண்டு, அவனுடைய வீட்டிற்குள்ளாகக் குடிபெயர்ந்தாள்.

நான்கு பேரும் இப்போது ஒன்றாக வாழ்ந்தார்கள், கிழவனும் கிழவியும் அவர்களுடைய இரு மகள்களும், அவனுடையவளும், அவளு டையவளும். ஆனால், மாற்றாந்தாயாகிய கிழவி கிழவனுடைய மகளை வெறுத்து, அவளை எந்நேரமும் திட்டவும், இடித்துக்காட்டவும் செய் தாள். சிறுமிகள் அடிக்கடி சச்சரவிட்டுக்கொண்டார்கள், ஏனெனில் அவர்களுக்கிடையே எந்த அன்பும் இருக்கவில்லை, மேலும் கிழவியி னுடைய மகள்தான் எல்லாவற்றையும் ஆரம்பித்தாள்.

அவர்கள் கிராமக் கூட்டத்திற்குச் செல்லும்போது கிழவனுடைய மகள் அங்கே உட்கார்ந்து சணல் நூற்றுக்கொண்டிருப்பாள், அதே வேளை கிழவியினுடைய மகள் இளைஞர்களுடன் இரவு முழுக்க சரசமாடியவாறு சணலைச் சிக்கல் படுத்திக் கொண்டும், அறுத்துக் கொண்டுமிருப்பாள். காலையில், அவர்கள் வீட்டிற்குத் திரும்புகின்ற போது ஒரு வேலியருகே வருவார்கள், அவளது கைகளில் ஒன்றுமில் லாததால் சுலபமாகத் தாவிக் குதித்துக் கிழவனுடைய மகளிடம் கூறுவாள்:

''இதோ, சகோதரி, நீ தாவி ஏறுகின்றபோது, துணியை நான் பிடித்துக்கொள்கிறேன்!''

கிழவனுடைய மகள் வேலிக்கு மேலாக ஏறிக் கொண்டிருக்கிற நேரத்தில், துணியுடன் அவள் வீட்டிற்குள்ளாக ஓடி, தனது அம்மா விடம் கிழவனுடைய மகள் இரவு முழுக்க இளைஞர்களுடன் சரசமாடி, தனது சணலை எரிய விட்டுவிட்டதாகக் கூறுவாள்.

''நானோ எல்லா நேரமும் மும்முரமாக நூற்றுக்கொண்டிருந்து விட்டு, பிறகு வீட்டிற்கு விரைந்தேன்,'' என்று சொல்வாள். ''அம்மா. அவள் எவ்வளவு சோம்பேறி பார்!''

கிழவனுடைய மகள் வீட்டுக்கு வந்த உடனேயே மாற்றாந்தாய் அவள் மீது பாய்ந்து அடிப்பாள், பிறகு கிழவனிடம் கூறுவாள்:

''உனது மகளைப் போல இத்தகைய ஒரு சோம்பேறிச் சிறுமி பிறக்கவே இல்லை. அவள் எந்த வேலையும் சரியாகச் செய்யவே இல்லை. அது எல்லாமே உன்னுடைய பிழை, ஏனென்றால் அது பற்றி நீ எதுவுமே செய்யவில்லை!''

ஆனால் மாற்றாந்தாய் என்னவெல்லாம் சொன்னாலும் சரி, அவளை எவ்வளவுக்கு நையாண்டி செய்தாலும் சரி, கிழவனுடைய மகள் ஓசை செய்யாதபடியும், வாய் மூடியும் இருந்தாள். மாற்றாந் தாய்க்கும், அவளது மகளுக்கும் கிழவன் தன் மகளை அன்போடு நேசிப்பதையும், அவளிடம் பிரியமாக இருப்பதையும் காண மேலும் எரிச்சலூட்டியது. ஆகவே அவளை வீட்டை விட்டுத் துரத்தவும், ஒரேயடியாக அவளைத் தொலைத்துக் கட்டவும் என்ன செய்வதென்று அவர்கள் இருவரும் சிந்திக்கத் தொடங்கினார்கள்!

மாற்றாந்தாய் தனது கணவனைத் திட்டவும், குழப்பவும் தொடங்கி, திரும்பத் திரும்பக் கூறினாள்:

''உன் மகள் வெறுமனே அசமந்தம். வேலை செய்யவில்லை, தூங்க மட்டுமே செய்கிறாள் அல்லது விளையாட்டில் நேரத்தைப் போக்கு கிறாள். அவளிடம் இத்தனை அன்பாகவும் பிரியமாகவும் இருப்பதற்குப் பதிலாக யாருக்காவது அவளை நீ வேலை செய்ய வைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும், பிறகு ஏதேனும் ஓர் அளவுக்கு அவள் வளரக் கூடும்!''

''அவளை நான் எங்கே கூட்டிச்செல்வது? அவளை யார் வேலைக்கு வைத்துக்கொள்வார்கள்?'' என்று கிழவன் கேட்டான்.

''எங்காவது கூட்டிப்போ, அவளை இனிமேல் இங்கே நான் பார்க்கக் கூடாது. அவ்வளவுதான்!''

அவள் கூறுவதைக் கேட்பது அவனை நோயாளி ஆக்கின்றவரை அவனைத் தொடர்ந்து நச்சரித்துக்கொண்டே இருந்தாள், இன்னமும் அவள் நிறுத்தாது பழைய பல்லவியையே தொடர்ந்து பாடிக்கொண் டிருந்ததுடன் சொன்னாள்: ''அவளைக் கூட்டிப்போய்விடு!''

இதற்காக எதுவும் செய்ய முடியவில்லை, மகளைக் கூட்டிப் போய்விட வேண்டும் எனத் தன் மனைவி சொன்னது போல அவன் செய்தாக வேண்டும் என்பதை உணர்ந்தான், அவளை இழப்பது எவ்வளவு கவலை தருவது என்பதைப் பொருட்படுத்தாது.

இருவரும் வீட்டை விட்டு, ஒன்றாகக் கிளம்பி, ஒரு பெரிய,

இருண்ட காட்டிற்கு வந்ததும், அந்த சிறுமி தன் தந்தையிடம் சொன்னாள்:

''இப்போது நீங்கள் ஏன் திரும்பிப் போகக் கூடாது, அப்பா, நான் தனிமையில் போகும்போது? தங்களுக்காக என்னை வேலைக்கு வைத்துக்கொள்ள விரும்பும் யாரையேனும் இங்கே நான் காண்பேன்.''

''மிகவும் நல்லது,'' என்றான் கிழவன்.

அவர்கள் ஒருவருக்கொருவர் விடை பெற்றுக்கொள்ள, கிழவன் திரும்பிச் சென்றான், சிறுமி தனிமையில் சென்றாள். அவள் நடந்தாள், மேன்மேலும் நடந்தாள். இன்னமும் காட்டிலேயே இருந்தாள், கடைசியாக அவள் ஓர் ஆப்பிள் மரத்துக்கு வந்த போது, களைச்செடிகளுடன் அவ்வளவு அதிகமாக வளர்ந்து மரத்தின் ஒரு பகுதி மட்டுமே காணக் கூடியதாக இருந்தது.

''தயவு செய், சிறுமியே, இந்தக் களைச்செடிகளைப் பிடுங்கி, மீண்டும் என்னை நன்கு தோன்றுமாறு செய், என்றைக்காவது பதிலுக்கு உனக்கு நானும் நல்லது செய்வேன்,'' என்று ஆப்பிள் மரம் சொன்னது.

கிழவனுடைய மகள் தனது சட்டைக் கைகளைச் சுருட்டிவிட்டுக் கொண்டு வேலையில் ஈடுபட்டாள். களைச்செடிகளைப் பிடுங்கி, கொப்பை நறுக்கி, மரத்தைச் சுற்றிலும் மணலைத் தூவி, மரம் அவளுக்கு நன்றி சொல்லி, அவளும் மேலே நடந்தாள்.

விரைவிலேயே, தாகமாய் இருப்பதை உணர்ந்து, நீர் பருகுவதற்காக ஒரு நீரூற்றுக்குச் சென்றபோது, அவளிடம் நீரூற்று சொன்னது:

''தயவுசெய், சிறுமியே, என்னைச் சுத்தம் செய்தும், அழுத்தித் தேய்த்தும், மீண்டும் என்னை நன்கு தோன்றுமாறு செய், என்றைக்காவது பதிலுக்கு உனக்கு நானும் நல்லது செய்வேன்.''

சிறுமி நீரூற்றைச் சுத்தம் செய்தும், அழுத்தித் தேய்த்தும், தரையைச் சுற்றிலும் மணலைத் தூவியும், கிணறு அவளுக்கு நன்றி சொல்லி, அவளும் தனது வழியில் சென்றாள்.

விரைவிலேயே, மிகவும் அழுக்காகவும், உரோமம் அடர்ந்தும், அதனது தோலில் ஒட்டு முள் தொங்கிக் கொண்டிருந்த ஒரு நாயைச் சந்தித்தாள்.

''தயவு செய், சிறுமியே, என்னைத் துடைத்து மீண்டும் என்னை நன்கு தோன்றுமாறு செய், என்றைக்காவது பதிலுக்கு உனக்கு நானும் நல்லது செய்வேன்,'' என்றது நாய்.

சிறுமியும் வேலையில் ஈடுபட்டாள். நாயைச் சுத்தம் செய்து, துடைத்து, அதனது தோலினின்றும் ஒட்டு முள்களைப் பிடுங்க, நாய் அவளுக்கு நன்றி சொல்லி, மேலே நடந்தாள்.

விரைவிலேயே, செதுக்கப்பட்டும் பட்டை உரிந்தும் போன ஓர் அடுப்பிடம் வந்தாள்.

''தயவு செய், சிறுமியே, என்னைச் சுத்தம் செய்து, அழுத்தித் தேய்த்து, புதிதாகக் களிமண் பூச்சிடு, என்றைக்காவது பதிலுக்கு உனக்கு நானும் நல்லது செய்வேன்,'' என்றது அடுப்பு.

அடுப்பின் உள்ளேயும் வெளியேயும் சுத்தம் செய்து, அதனருகிலே கிடந்த களிமண்ணைக் கலந்து அடுப்பில் தடவி, அடுப்பு அவளுக்கு நன்றி சொல்லி மேலே நடந்தாள்.

விரைவிலேயே ஒரு பெண்ணைச் சந்தித்தாள் அவள்.

''வணக்கம், எனது சிறுமியே!'' என்றாள் அப்பெண்.

''வணக்கம் உங்களுக்கும்!'' என்று சிறுமி பதிலளித்தாள்.

''நீ எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்?''

''நான் வேலை தேடிக்கொண்டிருக்கிறேன், அத்தையே.''

''எனக்காக வேலை செய்ய விரும்புகிறாயா?''

''உண்மையில் விரும்புகிறேன்.''

''நான் சொல்வதை மட்டும் நீ செய்தால் வேலையை கடினமாகக் காணமாட்டாய்.''

''என்ன செய்ய வேண்டும் என்பதை எனக்குச் சொல்லி, எப்படிச் செய்வது என்பதை ஒரு முறை காட்டினால், மறு முறை நானாகவே அதைச் செய்ய முடியும் என்று உறுதியாக நம்புகிறேன்!''

அவர்கள் அந்தப் பெண்ணினுடைய வீட்டிற்கு வந்தார்கள். அப் பெண் சொன்னாள்:

''நான் சொல்வதைக் கேள், எனது சிறுமியே, என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உனக்குச் சொல்வேன். இங்கே உனக்காகச் சில பானைகள் இருக்கின்றன, ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் அவற்றில் நீ கொஞ்சம் நீர் சூடாக்கி, உணவுத் தொட்டிக்குள்ளாக அதை ஊற்றி, கொஞ்சம் மாவைக் கலக்க வேண்டும். எதை நீ பார்த் தாலும் அல்லது கேட்டாலும் பயப்பட வேண்டாம், ஆனால் கலந்த மாவு அதிகச் சூடாக இல்லாது பார்த்துக்கொள். பிறகு போய், கதவருகே நின்று இரு முறை சீட்டியடி. பாம்புகள், பல்லிகள், தேரைகள்

மற்றும் பிற அத்தகைய உயிரினங்கள் உன்னிடம் ஊர்ந்து வரும், நீ அவற்றிற்கு உணவூட்ட, அவை திரும்பவும் போய்விடும்.''

''மிகவும் நல்லது, எசமானியே, நீங்கள் என்னிடம் சொன்னது போலவே நான் செய்வேன்,'' என்றாள் சிறுமி.

மாலை வந்தது, அவள் அடுப்பை மூட்டி, கொஞ்சம் வெந்நீர் வைத்து, அதைத் தொட்டிக்குள்ளாக ஊற்றி, அதனுடன் கொஞ்சம் மாவைக் கலந்தாள். பிறகு போய், கதவருகே நின்று இரு முறை சீட்டியடித்தாள். பாம்புகளும், பல்லிகளும், தேரைகளும் மற்றும் பிற அத்தகைய உயிரினங்களும் அவளிடம் எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஊர்ந்து வந்தன. அவை வயிறாரச் சாப்பிட்டுவிட்டு திரும்ப ஊர்ந்து போயின.

வயிறாரச் சாப்பிட்டுவிட்டு திரும்ப ஊர்ந்துபோயின.

இவ்வாறு ஓராண்டுக்குச் சென்றது. தனது எசமானி தனக்குச் சொன்னது போலச் சிறுமி செய்தாள், ஆண்டு முடிந்தபோது எசமானி சொன்னாள்:

''எனக்காக நீ வேலை செய்யத் தொடங்கி இன்று ஓராண்டாகிறது, எனது சிறுமியே, மேலும் நீ தங்க விரும்புகிறாயா இல்லையா என்று சொல்வது உன்னைப் பொருத்தது. ஆனால் எனக்குப் பெரிதும் உதவியாக நீ இருந்தாய் என்பதை நான் கட்டாயம் சொல்ல வேண்டும், உன்னிடம் நான் பெரிதும் மகிழ்ச்சியடைந்தேன்.''

உணவுக்கும், தங்க இடமளித்ததற்கும், தன்னிடம் அன்பாக இருந்ததற்கும் சிறுமி அவளுக்கு நன்றி சொன்னாள், ஆனால் தான் வீட்டுக்குப் போக அதுதான் நேரம் என்று கூறினாள்.

''மிகவும் நல்லது,'' என்றாள் எசமானி. ''ஆனால் நீ புறப்படுவதற்கு முன்பு நீயே விரும்பக்கூடிய என்னுடைய எந்தக் குதிரையையும் வண்டியையும் நீயாகவே தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.''

எல்லா வகையான அரிய பொருள்களும் கொண்டு நிரப்பிய ஒரு பெரிய பெட்டியை சிறுமிக்குத் தந்து, காட்டின் ஓரம் வரை அவளுடன் சென்றாள் எசமானி. அவர்கள் பிரியாவிடைக் கூறிக்கொண்டு, எசமானி வீடு திரும்ப, சிறுமி தானாகவே ஓட்டிக்கொண்டு சென்றாள்.

விரைவிலேயே அவள் ஒரு முறை உதவி செய்திருந்த அடுப்பிடம் வந்தாள், அதில் புத்தம் புதிய மாமிசம் கலந்த பலகாரங்கள் நிறைந்திருந்தன.

''சற்று நெருக்கமாக ஓட்டிவா, எனது சிறுமியே, ஏனெனில் நீ எனக்கு மிகவும் உதவிசெய்தாய், உனக்குக் கொஞ்சம் மாமிசம் கலந்த பலகாரங்கள் கொடுக்க விரும்புகிறேன்,'' என்று சொன்னது அடுப்பு.

சிறுமி நெருக்கமாக ஓட்ட, பலகாரங்கள் எல்லாம் வண்டிக்குள்ளாகக் குதிக்க, அவள் அடுப்புக்கு நன்றி சொல்லி, வண்டியை ஓட்டிச்சென் றாள்.

விரைவிலேயே அவளை நோக்கி ஒரு முறை அவள் உதவி செய் திருந்த நாய் ஓடிவருவதைப் பார்த்தாள். அதனுடைய பற்களிலே ஒரு முத்துமாலை இருந்தது, வண்டி வரை ஓடிவந்து அது நின்றது.

''இதோ, எனது சிறுமியே, இந்த முத்துமாலையை எடுத்துக்கொள்!'' என்றது நாய். ''உனக்கு இது என்னுடைய அன்பளிப்பு, ஏனெனில் நீ எனக்கு மிகவும் உதவி செய்தாய்.''

சிறுமி நாய்க்கு நன்றி சொல்லி, வண்டியைச் செலுத்தினாள், மிகவும் மனநிறைவும் மகிழ்ச்சியும் கொண்டாள்.

விரைவிலேயே மிகவும் தாகமாக இருப்பதை உணர்ந்து, தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்:

''ஒரு முறை நான் உதவி செய்த நீரூற்றுக்குப் போய் நீர் பருகப் போகலாம் என்று நினைக்கிறேன்.''

நீரூற்று வரை ஓட்டிச்சென்றாள், அதில் புத்தம் புதியதும் சுத்தமான துமான நீர் நிறைந்திருந்தது, அதனருகே ஒரு தங்கப் பீப்பாயும், ஒரு தங்கக் குவளையும் இருந்தன.

''இதோ, சிறுமியே, நீர் பருகிவிட்டு இந்தப் பீப்பாயையும், குவளை யையும் உனக்காக எடுத்துக்கொள்,'' என்று நீரூற்று சொன்னது.

சிறுமி அதற்குள்ளாகக் குனிந்தாள், ஆனால் நீராகத்தான் இருக்க வேண்டும் என்று அவள் நினைத்தது முன்னர் ஒருபோதும் சுவைத் திராத சிறந்த ஒயினாக இருந்தது. அதைக் கொண்டு, தங்கப் பீப்பாயை நிரப்பினாள், பின்னர் பீப்பாய், குவளை இரண்டையும் வண்டியில் வைத்துக்கொண்டு, நீரூற்றுக்கு நன்றி சொல்லி, மேற்கொண்டு சென் றாள்.

விரைவிலேயே அவள் ஒரு முறை உதவி செய்திருந்த ஆப்பிள் மரத்திடம் வந்தாள், அது வார்த்தைகளால் வருணிக்க முடியாத அளவுக்கு அத்தனை அழகாக இருந்தது! அதிலிருந்த ஆப்பிள்கள் அத் தனையும் வெள்ளியாகவும் தங்கமாகவும் இருந்தன, அவற்றுடன் அத

னது கிளைகள் கனமாக இருந்தன.

''இதோ, எனது சிறுமியே, எனது ஆப்பிள்களை எடுத்துக்கொள், ஏனெனில் நீ எனக்கு மிகவும் உதவி செய்தாய்!'' என்று ஆப்பிள் மரம் சொன்னது.

சிறுமி அம்மரத்துக்கு நன்றி சொல்லி அதற்கு நெருக்கமாக வண்டியை ஓட்ட, வண்டிக்குள்ளாக எல்லா ஆப்பிள்களும் விழுந்தன. சிறுமி வீட்டிற்கு ஓட்டிவந்தாள்.

''வாருங்கள், அப்பா, எத்தனை நல்ல பொருள்களை நான் கொண்டு வந்திருக்கிறேன் எனப் பாருங்கள்!'' என்று அவள் அழைத்தாள்.

கிழவன் வீட்டிற்கு வெளியே வந்தான், அவனுக்கு முன்னே அவனுடைய மகள் இருந்தாள்! அவன் பெருமகிழ்ச்சியுற்று, அவளை வரவேற்பதற்காக ஓடினான்.

''எங்கே போயிருந்தாய், எனது குழந்தாய்?'' என்று அவளிடம் கேட்டான். ''நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?''

''வேலை செய்துகொண்டிருந்தேன், அப்பா,'' என்று சிறுமி பதிலளித்தாள். ''ஆனால் இந்தப் பொருள்களை வீட்டிற்குள்ளாக எடுத்துச் செல்ல விடுங்கள்.''

ஓ, அவை தாம் எவ்வளவு இருந்தன, வண்டி நிறைய முழுக்க! அவர்கள் அவற்றை வீட்டிற்குள்ளாக எடுத்துச்சென்றார்கள், ஒன்றை விட மற்றது மிக அழகானதாகக் காணப்பட்டது. ஆனால் எல்லாவற்றிலும் மிக அழகானதும், செல்வம் படைத்ததுமான முத்துமாலை அவளது கழுத்தைச் சுற்றிக் கிடந்தது!

கிழவனுடைய மகள் எத்தனை அழகிய பொருள்களைக் கொண்டு வந்திருக்கிறாள் என்பதை மாற்றாந்தாய் பார்த்தபோது, அவனைத் திரும்பவும் நச்சரிக்கத் தொடங்கி, தன் சொந்த மகளைக் காட்டில் எங்கே விட்டு வந்தானோ அதே இடத்திற்குத் தனது மகளையும் அழைத்துச் செல்லுமாறு சொல்லி வந்தாள். மேலும் இதை அவள் நீண்ட நாட்களாகத் தொடர்ந்து சொல்லிவந்தாள், எதையாவது சொல்லாமல் ஒருநாள் கூடச் செல்லவில்லை, ஏனெனில் ஒரு பெண்ணால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பொறாமைப் பட்டாள், கடைசியில் அவன் சொன்னான்:

''ஓ, ரொம்ப சரி, அதைச் செய்கிறேன், உடுப்பணிந்து கொள்ளுமாறு உன் மகளிடம் சொல்.''

எப்போது அந்தச் சிறுமி தயாரானாளோ அப்போது அவர்கள் வீட்டை விட்டு, ஒன்றாகப் புறப்பட்டார்கள்.

அவர்கள் காட்டை அடையவும் கிழவன் சொன்னான்:

''நான் திரும்பிப் போகிறேன், இப்போது, குழந்தாய், நீ தனிமையில் செல்.''

''மிகவும் நல்லது,'' என்றாள் சிறுமி.

வேறுபட்ட பாதைகளில் அவர்கள் சென்றார்கள், திரும்பச் செல்லக் கிழவன் சாலைக்கு வர, கிழவியினுடைய மகள் காட்டுக்கு உள்ளாகப் போய்க்கொண்டே இருந்தாள்.

மேன்மேலும் அவள் நடக்க, பிறகு களைச்செடிகளுடன் அடர்த்தியாக வளர்ந்த ஓர் ஆப்பிள் மரத்தை அடைகின்ற நேரம் வந்தது.

''தயவு செய், சிறுமியே, இந்தக் களைச்செடிகளைப் பிடுங்கி, மீண்டும் என்னை நன்கு தோன்றுமாறு செய், என்றைக்காவது பதிலுக்கு உனக்கு நானும் நல்லது செய்வேன்,'' என்று அந்த ஆப்பிள் மரம் சொன்னது.

''உனக்குக் கொள்ளை வர, எதற்காக என் கைகளைக் கறை படுத்திக் கொள்ள வேண்டும்!'' என்று சிறுமி பதிலளித்தாள்.

அவள் மேன்மேலும் நடந்தாள். சுத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் மோசமாக ஒரு நீரூற்று இருந்ததைக் கண்டாள்.

''தயவுசெய், சிறுமியே, என்னைச் சுரண்டி சுத்தம் செய்து மீண்டும் நன்றாகத் தோன்றுமாறு செய். பதிலுக்கு என்றைக்காவது உனக்கு நல்லது செய்வேன்!'' என்றது நீரூற்று.

''உனக்குக் கொள்ளை வர, நீரூற்றே எதற்காக அதை நான் செய்ய வேண்டும்!'' எனச் சிறுமி கோபத்தோடு கூறினாள்.

''தயவு செய், சிறுமியே, என்னைச் சுத்தம் செய்து துடைத்து, எனது தோலினின்றும் ஒட்டு முள்களைப் பிடுங்கு, என்றைக்காவது பதிலுக்கு உனக்கு நானும் நல்லது செய்வேன்!'' என நாய் கெஞ்சியது.

ஆனால் சிறுமியோ சொன்னாள்: ''எதற்காக எனது கைகளை அழுக்காக்கிக்கொள்ள வேண்டும்! எப்போதுமே நீ அங்கே காத்திருந்தால் உன்னைத் தொடவும் மாட்டேன்!''

மேற்கொண்டு அவள் சென்றாள். அந்த அடுப்பிடம் வந்தாள்.

''சிறுமியே, என்னைச் சுத்தம் செய், உனக்கு நானும் நல்லது செய்வேன்,'' என்று அது சொன்னது.

''என் கைகளை ஏன் அழுக்காக்கிக்கொள்ள வேண்டும்!'' என்று சிறுமி கோபத்தோடு கூறினாள்.

விரைவிலேயே அதே பெண்ணை இவள் சந்தித்தாள்.

''காலை வணக்கம், சிறுமியே!'' என்றாள் அப்பெண்.

''காலை வணக்கம் உங்களுக்கும், அத்தையே!'' எனச் சிறுமி பதிலளித்தாள்.

''நீ எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்?''

''நான் வேலை தேடிக்கொண்டிருக்கிறேன்.''

''எனக்காக வேலை செய்வதை எப்படி விரும்புகிறாய்?''

''எனக்குப் பொருட்டன்று, ஆனால் நான் என்ன செய்ய வேண்டி யிருக்கும்?''

''நான் சொல்வதை மட்டும் நீ செய்தால் எதுவும் மிகக் கடின மில்லை.''

''எப்படிச் செய்வது என்பதை எனக்கு ஒரு முறை காட்டுங்கள், மறு முறை நானாகவே அதைச் செய்ய முடியும் என்று நினைக்கிறேன்,'' எனறாள் சிறுமி.

''சரி, சற்றுக் கேள். உனக்குச் சில பானைகள் கொடுப்பேன், ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் அவற்றில் கொஞ்சம் நீர் ஊற்றி, நீ அதை வெதுவெதுப்பாக்க வேண்டும். அது அதிகச் சூடா வதற்கு முன்னால், உணவுத் தொட்டிக்குள்ளாக அதை ஊற்றி, பிறகு கொஞ்சம் மாவுடன் கல. அதன் பிறகு நீ போய் கதவருகே நின்று மூன்றுமுறை சீட்டியடிக்க வேண்டும், எல்லாவகையான பாம்புகளும், பல்லிகளும், தேரைகளும் மற்றும் பிற அத்தகைய உயிரினங்களும் ஊர்ந்து வரும். பயப்படாதே, ஆனால் அவற்றை வயிறாரச் சாப்பிட விடு, அவை திரும்பவும் அப்பால் ஊர்ந்து போய்விடும். இப்போது, அதை உன்னால் செய்ய முடியுமா?''

''செய்ய முடியும்,'' என்றாள் சிறுமி.

மாலை வரவே, அடுப்பை மூட்டி, அதன் மீது நீர் நிறைந்த பானை களை வைத்து, நீர் கொதிக்கும் வரை அவற்றைத் தொடர்ந்து வைத் திருந்தாள், பானைகள் பெரிதாக இருந்ததால் இடி போல அவை ஓசை எழுப்பின. பிறகு அவள் வெந்நீரை தொட்டிக்குள்ளாக ஊற்றி பட யளவு மாவை அதனுடன் சேர்த்தாள், ஆனால் அது வெந்த மாவாக வருவதற்குப் பதிலாக, கட்டியாக இறுகியது. அதன் பிறகு அவள்

போய், கதவருகே நின்று, மூன்று முறை சீட்டியடிக்க, பாம்புகள், பல்லி கள், தேரைகள் மற்றும் பிற அத்தகைய உயிரினங்கள் ஊர்ந்து கொண்டு வந்தன. நன்கு உணவைப் பெற வேண்டும் என்பதற்காகத் தொட்டிக் குள்ளாக ஏறிய அவை வெந்து செத்துப் போயின!

அவள் எண்ணியவாறு, அவை உண்பதைக் கண்ட சிறுமி, பிறகு அவை வேதனையால் நெளிந்ததையும், வெட்டியிழுத்ததையும், பிறகு அசைவற்றுப் போனதையும் கவனித்துத் தனது எசமானியிடம் கூறச் சென்றாள்.

''உங்களுடைய அந்த உயிரினங்கள் வேடிக்கையானவை, எசமா னியே!'' என்றாள். ''சாப்பிட்ட பிறகு அவை எதற்காகக் கீழே படுத்து விட்டன, திரும்பவும் எழுந்திருக்கவே இல்லை?''

''என்ன சொன்னாய் நீ!'' என எசமானி கத்தி, நடுக்குற்று வெளியே முற்றத்திற்குள்ளாக ஓடினாள்.

என்ன நடந்துவிட்டது என்பதைப் பார்த்ததும், தனது இரு கைக ளாலும் தலையைப் பற்றிக்கொண்டு கத்தினாள் எசமானி:

''ஓ, என் கடவுளே, நீ என்ன செய்துவிட்டாய்! அவற்றை உயிருடன் வேகவைத்துவிட்டாயே!''

கிழவியினுடைய மகளைத் திட்டித்தீர்த்து அழுதாள், ஆனால் இது விலங்குகளை மீண்டும் உயிர்பெற்றெழச் செய்யவில்லை. ஆகவே பிறகு அவை எல்லாவற்றையும் ஒரு பெட்டியில் போட்டாள், சிறுமியினுடைய ஆண்டுப் பணி முடிவுக்கு வந்தபோது அவளுக்கு வங்கு பற்றிய குதிரை ஒன்றையும், உடைந்த வண்டியையும் கொடுத்து, அந்தப் பெட்டியை அதன் மீது வைத்து, அதன் உச்சியில் கந்தைத் துணி மூட்டை ஒன்றை யும் வைத்து, அவளை அனுப்பிவைத்தாள்.

ஓட்டிக்கொண்டு போகும்போது, கிழவனுடைய மகளுக்கு என்ன கொடுத்தாளோ அதையே தனக்கும் எசமானி கொடுத்திருந்தாள் என்று எண்ணியவாறு, கிழவியினுடைய மகள் திருப்தியடையவும் மகிழவும் செய்தாள்.

திடீரென்று, தன்னுடைய கழுத்தைச் சுற்றிப் பட்டை தீட்டப்பட்ட கற்களால் ஆன அருமையான முத்துமாலை அணிந்த நாயைத் தவிர வேறு என்ன அவள் பார்க்கக் கூடும்! தனக்காகக் கழுத்தாரத்தை எடுக்க நினைத்தவாறு, வண்டியை விட்டுக் கீழே இறங்கி நாயின் பின்னே விரைந்தாள், ஆனால் நாய் சொன்னது:

''ஓ, கிடையாது, எனது சிறுமியே, எனக்கு உதவ நீ மறுத்தாய், ஆகவே முத்துமாலையை நீ பெற மாட்டாய்!''

முன்னர் அவள் கடந்து வந்த அடுப்பிடம் ஓட்டிச்சென்றாள், அது முழுக்க மாமிசம் கலந்த பலகாரங்களால் நிறைந்திருந்தது.

''என் அம்மா தின்பதற்காக மாமிசம் கலந்த பலகாரங்களை நான் எடுப்பேன் என்று நினைக்கிறேன்!'' எனத் தனக்குத்தானே அவள் சொல்லிக் கொண்டாள்.

வண்டியை விட்டுக் கீழே இறங்கினாள், ஆனால் மாமிசம் கலந்த பலகாரங்களை அவர் எடுத்துக்கொள்வதற்கு முன்பே, அடுப்புக் கதவு நழுவி மூடிக்கொண்டது.

''ஓ, கிடையாது, எனது சிறுமியே, எனக்கு உதவ நீ மறுத்தாய், ஆகவே எனது மாமிசம் கலந்த பலகாரங்களை நீ பெற மாட்டாய்!'' என்றது அடுப்பு.

சிறுமி மேலும் ஓட்டிச் செல்ல, நீரூற்றை அடைந்த நேரம் மிகுந்த தாகத்தை உணர்ந்தாள். அதை மேலோட்டமாகப் பார்க்க, அதனுடைய விளிம்பைத் தாண்டி ஓடுமாறு நீர் நிறைந்திருந்தது. அதனிடம் விரைந்தாள், ஆனால் அவள் பருகுவதற்கு முன்பே நீரூற்று மூடிக் கொண்டது.

''ஓ, கிடையாது, எனது சிறுமியே, என்னைச் சுத்தமாகத் துடைக்க நீ மறுத்தாய், ஆகவே நீ எந்தத் தண்ணீரையும் பெற மாட்டாய்!'' என்றது.

கிழவியினுடைய மகள் கண்ணீர் பெருக்கி, ஓட்டிச்சென்றாள்.

அவள் ஆப்பிள் மரத்திடம் வந்தாள், அந்தோ! — அதனுடைய கிளைகள் வெள்ளி, தங்க ஆப்பிள்களுடன் கனத்து நின்றன. உண்மையில், ஒரு கோழிக்குஞ்சினால் கொத்த முடியாதவாறு அவற்றினிடையே போதிய இடமில்லாத அளவுக்கு அவ்வளவு அதிகமாக அவை இருந்தன.

''சில ஆப்பிள்களைக் குலுக்கி, அவற்றைத் தாயார் உண்டு பார்ப்பதற்காக வீட்டிற்குக் கொண்டுபோகலாம் என்று நினைக்கிறேன்!'' எனச் சிறுமி தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

ஆனால் எப்போது அவள் ஆப்பிள் மரத்திற்கு அருகே நகர்ந்தாலோ அப்போது அவளுடைய கைகளுக்கு எட்டாதவாறு அதனுடைய கிளைகள் தூக்கிக்கொண்டன.

''ஓ, கிடையாது, எனது சிறுமியே, எனக்கு உதவ நீ மறுத்தாய்.

ஆகவே எனது ஆப்பிள்களில் எதையும் நீ பெற மாட்டாய்!'' என ஆப்பிள் மரம் சொன்னது.

கிழவியினுடைய மகள் கண்ணீர் பெருக்கி வீட்டிற்கு ஓட்டிச் சென்றாள்.

முற்றத்திற்குள்ளாக ஓட்டிச்சென்ற அவள் கிழவனை அழைத்தாள்:

''வந்து, நான் என்ன கொண்டுவந்தேன் பாருங்கள், அப்பா!''

கிழவனும் கிழவியும் குடிசையை விட்டு, வெளியே ஓடினார்கள், அங்கே அவர்களுக்கு முன்னே கிழவியினுடைய மகள் இருந்தாள். அவர்கள் பெருமகிழ்ச்சியுற்றார்கள், அவள் கொண்டுவந்திருந்த பெட்டியை எடுத்துக்கொண்டு, வீட்டிற்குள்ளாகச் சிறுமியை அழைத்துச் சென்றார்கள்.

ஆனால் அவர்கள் பெட்டியைத் திறந்தபோது, அது நிறைய பாம்புகளும் தேரைகளும் இருப்பதைக் கண்டு நடுக்குற்றுப்போனார்கள்.

''இதன் அருத்தம் என்ன, மகளே?'' எனக் கத்தினார்கள்.

என்ன நடைபெற்றது என்பதை சிறுமி அவர்களுக்குக் கூற, கிழவி சொன்னாள்:

''அது உன்னுடைய விதி தான் மகளே, நீ கடந்த வாழ்க்கையில் சிறந்த எல்லாவற்றையும் இழந்து விட்டாய். நீ வீட்டிலேயே தங்குவது நல்லது, இதற்கு மேல் எங்கும் போக வேண்டாம், ஏனெனில் கிழவனுடைய மகள் காட்டிலிருந்து உயர்ந்த வெகுமதிகளைக் கொண்டு வந்தாள், ஆனால் நீயோ தங்கியிருந்ததைக் காட்டுவதற்கு பாம்புகளைத் தவிர எதையும் பெற்றிருக்கவில்லை. நீ உயிருடன் திரும்பியதே கருணையால்தான்!''

சிறிது காலம் செல்லவும், கிழவனுடைய மகள் அருமையான இளைஞன் ஒருவனை மணந்தாள், ஆனால் கிழவியினுடைய மகளுக்குத் திருமணம் ஆகவில்லை. இன்னமும் அவள் கன்னியாகவே இருக்கிறாள்!

அவர்கள் சாகாதே யிருந்தால் சுடுரொட்டி தின்பர்,
நீர்பருகி மதுவிலக்கி வாளியில் உலர்புல் சுமப்பர்,
தொழுவத் திலிருந்து கோணியில் பாலெடுத் தேவருவர்!

வளர்ப்புத் தந்தை

ஒரு காலத்தில் மூன்று சகோதரர்கள் வாழ்ந்தார்கள். இளமைப் பிராயத்திலேயே அம்மாவையும் அப்பாவையும் இழந்த அவர்கள் எதையும் பெற்றிருக்கவில்லை: வீடோ பண்ணையோ. ஒரு நாள் அவர்கள் வேலை தேடி வீட்டை விட்டுப் புறப்பட்டார்கள். மேன் மேலும் நடந்து, நீண்ட வெண்தாடி கொண்ட ஒரு கிழவரைச் சந்தித்தார்கள்.

''குழந்தைகளே, எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?'' எனக் கிழவர் கேட்டார்.

''பண்ணை வேலைக்கு எங்களை எடுத்துக் கொள்ளும் யாரை யாவது தேடிப்போகிறோம்,'' எனச் சகோதரர்கள் பதிலளித்தனர்.

''உங்களுக்கென்று சொந்தமாகப் பண்ணை இல்லையா?''

''இல்லை. எங்களை ஏற்றுக்கொள்ளும் நல்ல மனிதரை மட்டும் காண முடிந்தால், அவருக்காக மிகவும் கடினமாக உழைத்து, எங்கள் சொந்தத் தந்தை போல அவரை நடத்துவோம்.''

''நீங்கள் விரும்புவது அதுதான் என்றால், நான் உங்களுக்கு ஒரு தந்தை போல இருப்பேன்,'' என்றார் கிழவர். ''நான் உங்களை மனிதர்களாக்கி, சீரிய பண்பின் வழிகளைக் கற்றுக் கொடுப்பேன்.''

கிழவருடன் சகோதரர்கள் சென்றார்கள், இருண்ட காடுகளையும்

விரிந்த வயல்களையும் கடந்து ஓர் அழகான சிறிய வீட்டிற்கு வந்தார் கள். இவ்வீடு செர்ரி பழத்தோட்டத்தால் சூழப்பட்டிருந்தது, அதைச் சுற்றிலும் மலர்கள் பூத்திருந்தன. மேலும் அவர்கள் அங்கே நின்ற போது, மலரைப் போல அவ்வளவு அழகு படைத்த பெண் ஒருத்தி கதவினின்றும் வெளியே ஓடிவந்தாள்.

மூத்த சகோதரன் அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சொன் னான்:

''அந்தப் பெண்ணை நான் மணக்கவும், எனக்கென்று சொந்தப் பண்ணையும், கால்நடை மந்தையும் பெறவும் விரும்புகிறேன்!''

''மிகவும் நல்லது, என் மகனே! நீ விரும்புவது அதுதான் என்றால், நாம் திருமண ஏற்பாடுகளைச் செய்வோம்,'' என்றார் கிழவர். உனக்கு ஒரு மனைவியும், சொந்தப் பண்ணையும், உன்னை மகிழ்விக்க எல்லாமும் பெறுவாய். ஒன்றை நினைவில் கொள். சீரிய பண்பின் வழியினின்றும் நீ ஒருபோதும் தவறி நடந்துவிடக் கூடாது.''

அவர்கள் திருமண ஏற்பாடுகளைச் செய்தார்கள், மூத்த சகோதரன் அந்தப் பெண்ணை மணந்தான். கிளர்ச்சியுடையதும், விருந்துக்குரியது மான மணவிழா முடிந்த பிறகு அவளுடைய வீட்டிலேயே தங்கி நிலத்தை உழத் தொடங்கினான்.

கிழவரும் இரு இளைய சகோதரர்களும் மேற்கொண்டு சென்றனர். விரைவிலேயே மாவுமில்லுடனும், அருகே குளத்துடனும் இருந்த பிர காசமான புதிய வீடு ஒன்றிற்கு வந்தனர். அங்கே தோட்டத்தில் நின்ற அழகிய பெண்ணை ஒரு பார்வை பார்த்துவிட்டு நடுச் சகோதரன் சொன்னான்:

''அந்தப் பெண்ணை நான் மணக்கவும், எனக்குச் சொந்தமாக மாவுமில் பெறவும் விரும்புகிறேன்.''

''மிகவும் நல்லது, என் மகனே, நீ விரும்புவது அதுதான் என்றால்!'' என்றார் கிழவர்.

அவர்கள் திருமண ஏற்பாடுகளைச் செய்ய, நடுச் சகோதரன் அப்பெண்ணை மணந்தான். கிளர்ச்சியுடையதும், விருந்துக்குரியதுமான மணவிழா முடிந்த பிறகு, அவளுடைய வீட்டிலேயே தங்கி ஓர் மாவுமில் முதலாளி ஆனான்.

''என் மகனே, மகிழ்ச்சியாக இரு, ஆனால் சீரிய பண்பின் வழியினின் றும் ஒருபோதும் தவறி நடந்துவிடக் கூடாது!'' என்றார் கிழவர். பிறகு

அவரும் கடைசிச் சகோதரனும் மேற்கொண்டு சென்றனர்.

விரைவிலேயே அவர்கள் எளிய, சிறிய குடிசைக்கு வந்தார்கள். அதை விட்டு வெளியே கந்தல் உடையில் வந்த பெண் விடியல் நேரத்து நட்சத்திரம் போல அத்தனை அழகாக இருந்தாள்.

''இந்தப் பெண்ணை எனது மனைவியாகப் பெற விரும்புகிறேன்!'' என்றான் இளைய சகோதரன். ''நாங்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்வோம். நாங்கள் சம்பாதிப்பதை எங்களை விட ஏழைகளுடன் பகிர்ந்துகொள்வோம்.''

''மிகவும் நல்லது, என் மகனே, நீ விரும்புவது அதுதான் என்றால்!'' என்றார் கிழவர். ''ஒன்றை நினைவில் கொள், சீரிய பண்பின் வழியி னின்றும் நீ ஒருபோதும் தவறி நடந்துவிடக் கூடாது!''

மூன்றாவது சகோதரனுக்கும் திருமணம் செய்துவிட்டு தனது வழியில் கிழவர் சென்றார்.

ஆண்டுகள் பல கடந்தன. மூத்த சகோதரன் அந்தளவு பணக் காரனாகி தானாகவே பல வீடுகள் கட்டி, அத்துடன் கொஞ்சப் பணமும் சேர்த்திருந்தான், மேலும் அவன் சிந்தித்தது எல்லாமே மேன்மேலும் பணம் சேர்ப்பது எப்படி என்பது பற்றித்தான். ஆனால் உள்ளத்தால் அவன் ஒரு கஞ்சன், தேவைப்படுவோருக்காகச் சிந்திக்கவும் இல்லை.

நடுச் சகோதரனுங்கூட வளமடைந்தான். மொத்தத்தில் வேலை செய்வதை நிறுத்தி, தனக்காக மற்றவர்களை வேலை செய்ய வைக்கக் கூலிக்கு அமர்த்தி, அவர்களுக்கு உத்தரவிட்டு, தனது நாட் களைச் சோர்வாகப் படுக்கையில் கழித்தும், தானாகவே உணவையும், குடியையும் விழுங்கியும் செலவிட்டான்.

ஆனால் இளைய சகோதரன் மிக அடக்கமாக வாழ்ந்தான். தன்னுடன் உள்ளவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள அவன் எப்போதுமே தயாராக இருந்தான்.

ஆகவே, தனது வளர்ப்புப் பையன்களை விட்டுப் பிரிந்ததிலிருந்து, உலக முழுதையும் சுற்றி நடந்து வந்துகொண்டிருந்த வெண்தாடிக் கிழவர், தான் போய் அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைப் பார்க்க எண்ணினார். கந்தலாகத் தானே உடையுடுத்திக் கொண்டு, மூத்த சகோதரனைப் பார்க்க முதலாவதாகச் சென்றார். அவனுடைய முற்றத்திற்குச் சென்று வணங்கிச் சொன்னார்:

''தயை செய்யுங்கள், அன்புள்ள ஐயா, இந்தக் கிழவனுக்குத் தின்ன ஏதேனும் தர மாட்டீர்களா?''

''பாசாங்கை நிறுத்து, வேலை செய்யவும் வாழ்வதற்குச் சம்பாதிக்க முடியாத கிழவன் இல்லை நீ!'' என்றான் மூத்த சகோதரன். ''யாருக்கும் உதவக் கூடிய அளவுக்கு என் கால்களில் உறுதியாக நான் நின்று கொண்டிருக்கவில்லை!''

மேலும் கல்வீடுகள், தானியம் நிறைந்த பரண்கள், உணவும் உடையும் நிறைந்த சரக்கறைகள், ஏராளமான பணம் இவற்றுடன் என்ன செய்வதென்று அவன் அறிந்ததைக் காட்டிலும் அவனுக்கு அதிகமிருந்த போதும், கிழவரை வெறுங்கையுடன் அப்பால் அனுப்பி வைத்தான்.

புறப்பட்டுச் சென்ற கிழவர் ஒரு மைல் வாக்கில் போன போது, தனது வளர்ப்பு மகனுடைய வீட்டையும் பண்ணையும் திரும்பிப் பார்த்தார். அந்தோ! — அது சுவாலையுடன் எரிந்து தரையோடு தரையானது.

கிழவர் நிறுத்தவில்லை, ஆனால் நடுச் சகோதரனைப் பார்க்கச் சென்றார். இப்போது அவனிடம் ஆலை மட்டுமன்றி பெரும் பண்ணையும் இருந்தது. அவனை ஆலையின் அருகில் கண்டு, வணங்கிச் சொன்னார்:

''தயவு செய்யுங்கள், அன்புள்ள ஐயா, இந்த ஏழைக் கிழவனுக்கு கையளவு மாவு கொடுங்கள்! நான் பசியாகவும், நலமில்லாதும் இருக்கிறேன்.''

''எனக்கே போதுமானது என்னிடம் இல்லை!'' எனச் சொன்னான் நடுச் சகோதரன். ''உன்னைப் போன்ற சோம்பேறிகளுக்கு முடிவே இல்லை! உங்கள் எல்லாருக்கும் நான் உணவு தர வேண்டும் என எதிர்பார்க்கிறாயா?''

புறப்பட்டுச் சென்ற கிழவர் சற்று தூரம் போன போது நின்று திரும்பிப் பார்த்தார். அந்தோ! — வீடு, ஆலை, பண்ணை நெருப்புப் பற்றிப் புகைந்தன.

இன்னமும் பிச்சைக்காரன் போல வேடமணிந்த கிழவர் இப்போது மிகவும் அடக்கத்தோடு வாழ்ந்த இளைய சகோதரனைக் காணச் சென்றார். அவனது குடிசை சிறியதாகவும் எளியதாகவும் இருந்தாலும், நேர்த்தியாகவும் சுத்தமாகவும் இருந்தது.

''தயவு செய்யுங்கள், அன்புள்ள ஐயா, தின்பதற்கு எனக்கொரு ரொட்டித் துண்டு தாருங்கள்!'' என்றார் கிழவர்.

''வீட்டுக்குள்ளாகப் போங்கள், தாத்தா, நீங்கள் சாப்பிடுவதோடு, உங்களோடு கொஞ்சம் உணவையும் எடுத்துப்போகலாம்,'' என்றான் இளைய சகோதரன்.

கிழவர் உள்ளே சென்றார். அவர் கந்தலாக உடையணிந்திருப்பதைக் கண்ட இளைய சகோதரனுடைய மனைவி அவர் மீது இரக்கம் கொண்டு, கொஞ்சம் துணிகள் கொண்டுவந்தாள். அவற்றை அவர் அணிந்து கொண்டிருக்கையில், அவளும் அவளது கணவனும் கிழவருடைய மார்பில் சீக்கட்டிய காயம் இருப்பதைக் கவனித்தார்கள். அவரை மேசை முன்னர் அமர்த்தி உணவும் நீரும் வழங்கி, பின்னர் அதைப் பற்றி அவரிடம் கேட்டார்கள்.

''எனக்கு ஒரே ஒரு நாள் வாழ்வதற்காக விடப்பட்டதை உங்களிடமிருந்து நான் மறைக்க மாட்டேன்,'' என்றார் கிழவர்.

''எதுவும் செய்ய முடியாதா?'' என அவர்கள் கேட்டார்கள்.

''முடியும். அநேகமாக யாராலும் எனக்கு உதவிட முடியும், ஆனால் யாரும் செய்ய மாட்டார்கள்.''

''ஏன் செய்ய மாட்டார்கள்? என்ன செய்வதென்று எங்களுக்குச் சொல்லுங்கள், அதைச் செய்கிறோம்,'' இளைய சகோதரன் சொன்னான்.

''அதற்காக ஒரு எசமானன் தனது வீட்டை அதனுடன் உள்ள எல்லாவற்றோடும் எரித்து அதன் சாம்பலால் எனது காயத்தில் தூவ வேண்டும். வேறு எதனாலும் உதவி செய்ய முடியாது,'' என்றார் கிழவர். ''இத்தகைய ஒரு நட்டத்தில் என்னுடைய உயிரைக் காக்க யார் விரும்புவார்!''

இளைய சகோதரன் மௌனமாக இருந்தான். நீண்ட நேரம் சிந்தித்துப் பிறகு தன் மனைவி பக்கம் திரும்பினான்.

''நீ என்ன சொல்கிறாய், மனைவியே?'' என்று கேட்டான்.

''நம்மால் எப்போதுமே ஒரு புதிய வீட்டைக் கட்ட முடியும், ஆனால் ஒரு மனிதன் இறந்துவிட்டால் திரும்பவும் உயிர்பெற்று அவனால் வர முடியாது,'' என்றாள்.

''அப்படியே, சொல்ல வேறு எதுவும் இல்லை!''

அவர்கள் குழந்தைகளை வீட்டிலிருந்து தூக்கி வந்தபோது, இளைய

சகோதரன் நின்று தனது குடிசையைத் திரும்பிப் பார்த்தான். இழக்கப் போகிற சிந்தனையால் அவன் வருந்தினான். ஆனால் கிழவருக்காக அவனது இரக்கம் அந்தளவு இருந்ததனால், ஒரு மரக் குச்சியைக் கொளுத்தி, வைக் கோலால் ஆன குடிசைக் கூரையில் காட்டினான்.

உடனடியாக வீடு தீப்பற்றி சுவாலையில் எரிந்துபோயிற்று அந்தோ! — அது எப்போது எரிந்து முடிந்ததோ அப்போது வேறொரு, மிகப் பெரியதும், வசதியானதுமான வீடு இவ்விடத்தில் தோன்றியது.

கிழவர் முறுவலித்தார்.

''என் மகனே, உன் சகோதரர்களில் நீ ஒருவன் மட்டுமே சீரிய பண்பின் அருத்தத்தை அறிந்திருக்கிறாய் என்பதை நான் காண முடிகிறது,'' என்றார். ''நல்ல அதிருஷ்டம் எப்போதுமே உன்னுடன் இருக்கட்டும்!''

பிச்சைக்காராக வந்தவர் தன்னுடைய வளர்ப்புத் தந்தையைத் தவிர வேறு யாருமில்லை என்பதை இளைய சகோதரன் இப்போது கண்டான். அவரிடத்தில் விரைந்தான், ஆனால் கிழவர் மறைந்து போய் அதற்குப் பிறகு காணப்படவே இல்லை.

புத்திசாலிச் சிறுமி

ஒரு காலத்தில் இரு சகோதரர்கள் இருந்தனர், ஒருவன் பணக்காரன், மற்றவன் ஏழை. பணக்காரச் சகோதரன், ஏழைச் சகோதரனிடம் எதுவுமில்லை, அவனது குழந்தைகளுக்கான பால் கூட கிடையாது என்பதை அறிந்து, அவனுக்காக வருந்தி தனது பசுக்களில் ஒன்றைக் கொடுத்தான்.

''தம்பி, எனக்காக வேலை செய்வதன் மூலம் நீ திருப்பிக் கொடுக்கலாம்,'' என்றான்.

பணக்காரனுக்காக ஏழைச் சகோதரன் வேலைசெய்யத் தொடங்கினான், ஆனால் முழுமையாக அவனுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்ட போது, பணக்காரச் சகோதரன் தனக்குப் பசுவைக் கொடுத்துவிடுமாறு அவனிடம் கேட்டான்.

''ஆனால், சகோதரா, உனக்காக அதிகக் காலமும் கடினமாகவும் நான் வேலை செய்யவில்லையா?'' என்று ஏழைச் சகோதரன் கேட்டான்.

''அது வேலையைச் சொல்! ஏன், நீ எதுவுமே செய்யவில்லை,'' என்று பணக்காரச் சகோதரன் சொன்னான். ''என்னுடைய பசு எனக்குத் திரும்பவும் வேண்டும், அது தான் முடிவு!''

ஆனால் ஏழைச் சகோதரன் வீணாக நீண்ட காலம் அடிமையாக

உழைத்ததை எண்ணி வருத்தப்பட்டு பசுவை விட்டுவிட விரும்பவில்லை. ஆகவே இருவரும் ஒரு பிரபுவைப் பார்க்கச் சென்று, தங்களுக்கிடையே யார் சரி, யார் தவறு என்று சொல்லி தீர்ப்பு வழங்குமாறு அவரைக் கேட்டார்கள்.

அதைச் செய்வதில் தன்னை வருத்திக்கொள்வது குறித்துப் பொருட் படுத்தாத பிரபு சொன்னார்:

''நான் உங்களிடம் மூன்று கேள்விகள் கேட்கப் போகிறேன், அவற் றிற்கு விடைகள் காண்பவனுக்குப் பசுக் கிடைக்கும்.''

''ரொம்ப சரி, அவற்றை நாங்கள் கேட்கிறோம்!'' என்று சகோதரர் கள் ஒப்புக்கொண்டனர்.

''இதோ அவை. முதலாவது கேள்வி: ஒரு மனிதனுடைய வயிற்றை எது நன்கு நிரப்புகிறது? இரண்டாவது: எது அவனுக்கு மிக அதிகமான மகிழ்ச்சியைத் தருகிறது? மூன்றாவது: அதி விரைவாகச் செல்வது எது? இப்போது போய், அவை பற்றிச் சிந்தித்து உங்களுடைய பதில் களுடன் நாளைக்குத் திரும்பலாம்.''

சகோதரர்கள் கிளம்பினார்கள், வீட்டிற்குச் செல்கையில் பணக் காரச் சகோதரன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்:

''என்ன முட்டாள்தனமான கேள்விகள், அம்மூன்றும்! பன்றித் தொடை தான் ஒரு மனிதனுடைய வயிற்றை நிரப்பச் சிறந்தது, பணந் தான் அவனுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கிறது, விரைவாக ஓடக் கூடியது வேட்டை நாய்கள் என்பதை அறிந்து கொள்ள நான் ரொம்பச் சிந்திக்க வேண்டியதில்லை. பசு நிச்சயமாக என்னுடைய தாகும்!''

ஆனால் ஏழைச் சகோதரன் எதையும் யோசிக்க முடியவில்லை. தலை யைத் தொங்கப் போட்டவாறு வீடு வந்து, உண்மையில் மிகவும் இழி வாக உணர்ந்தான்.

அப்போது மரூஸ்யா என்ற பெயர் கொண்ட அவனுடைய மகள் சோகத்திலும் துன்பத்திலும் ஆழ்ந்திருந்த தந்தையைக் கண்டு, எது அவனை அவ்வாறு ஆக்கியது என்று கேட்டாள்.

''பிரபு கேட்ட மூன்று கேள்விகளுக்கும் நான் விடைகளைக் காண வேண்டும், ஆனால் என்னுடைய உயிருக்காகவே என்னால் அதைச் செய்ய முடியாது,'' என்று அவளிடம் சொன்னான்.

''அந்தக் கேள்விகள் என்ன, அப்பா?'' என்று மரூஸ்யா கேட்டாள்.

''முதலாவது: ஒரு மனிதனுடைய வயிற்றை எது நன்கு நிரப்புகிறது? இரண்டாவது: எது அவனுக்கு மிக அதிகமான மகிழ்ச்சியைத் தரு கிறது? மூன்றாவது: அதி விரைவாகச் செல்வது எது?''

''அது சுலபமானது! நமது தாயாகிய பூமிதான் நமது வயிறுகளை நன்கு நிரப்புகிறது, ஏனெனில் பூமிதான் நம் எல்லாருக்கும் உண வளிக்கிறது; அதி விரைவாகச் செல்வது சிந்தனை, ஏனெனில் நாம் போக விரும்பிய எந்த இடத்திற்கும் நொடிப்பொழுதில் அது நம்மை எடுத்துச்செல்கிறது; மேலும் தூக்கந்தான் நமக்கு அதிக மகிழ்ச்சியைத் தருகிறது, ஏனெனில் அதன் பொருட்டு நாம் மிகவும் மதிக்கக்கூடிய செல்வங்களைக்கூட விட்டுவிடுகிறோம்.''

''இது சரிதான், மகளே, நீ சொன்னவற்றை நான் பிரபுவிடம் சொல்வேன்,'' என்றான் தந்தை.

மறுநாள் சகோதரர்கள் பிரபுவைப் பார்க்கச் செல்ல, தனது கேள்வி களுக்கு அவர்கள் விடை கண்டுவிட்டனரா என்று அவர் கேட்டார்.

''நாங்கள் கண்டுவிட்டோம்!'' என்று இருவரும் சொன்னார்கள்.

முதலாவதாக விடை சொல்லவும், பசுவை அடையவும் விரும்பிய பணக்காரச் சகோதரன் சொன்னான்:

''மனிதனுடைய வயிற்றை நன்கு நிரப்புவது பன்றித் தொடைக்கறி, பணம் அவனுக்கு அதிகமான மகிழ்ச்சியைத் தருகிறது, எதைக் காட் டிலும் மிக விரைவாகச் செல்வது. வேட்டை நாய்.''

''இல்லை, இல்லை, நீ சொல்வது தவறு, முற்றிலும் தவறு!'' என்று அவனிடம் சொன்ன பிரபு, ஏழைச் சகோதரன் பக்கம் திரும்பிச் சொன்னார்:

''வா, ஒருவேளை நீ நன்றாகச் சொல்ல முடியும்!''

''நமது தாயாகிய பூமிதான் ஒரு மனிதனுடைய வயிற்றை நன்கு நிரப்புகிறது, ஏனெனில் அவனுடைய வாழ்நாள் முழுக்க அது உணவளிக் கிறது,'' என்று ஏழைச் சகோதரன் தொடங்கினான்.

''சரியானது!'' என்று பிரபு கத்தினார். ''எது அதி விரைவாகச் செல்வது?''

''சிந்தனை, ஏனெனில் நாம் போக விரும்பிய எந்த இடத்திற்கும் நொடிப்பொழுதில் அது நம்மை எடுத்துச்செல்கிறது.''

''சரியானது! மேலும் எது ஒரு மனிதனுக்கு மிக அதிகமான மகிழ்ச்சியைத் தருகிறது?''

''தூக்கம், ஏனெனில் அதன் பொருட்டுதான் மிகவும் மதிக்கக்கூடிய செல்வங்களை ஒரு மனிதன் விட்டுவிடுவான்.''

''மீண்டும் சரிதான்!'' என்றார் பிரபு. ''பசு உன்னுடையதே! என்னுடைய கேள்விகளுக்கு விடைகள் கண்டுபிடிக்க யார் உனக்கு உதவியது என்பதை மட்டுமே என்னிடம் சொல்.''

''அது என்னுடைய மகள் மரூஸ்யா.''

பிரபு கோபமுற்றார்.

''நான் மிகுந்த அறிவுபடைந்த மனிதன், நான் தெரிந்த அளவுக்கு ஒரு சாதாரணச் சிறுமிக்குத் தெரிவதாகக் காணப்படுவதைப் பொறுத்துக்கொள்ள முடியாது!'' என்று கத்தினார். ''இப்போது நீ போகலாம்! வீட்டிற்கு உன் மகளிடம் செல், இந்த அவித்த முட்டைகள் பத்தையும் உன்னுடன் எடுத்துப் போ. இவற்றின் மீது அவள் ஓர் அடைக்கோழியை வைத்து, பத்துக் கோழிக்குஞ்சுகள் பொறிக்க வைத்து, அவற்றைப் பெரிய அளவில் வளர்த்து எனது காலை உணவுக்காக அவற்றில் மூன்றைப் பொறித்துத்தர வேண்டும். நான் காலையில் எழும்போது அவற்றை நீ என்னிடம் கொண்டுவர வேண்டும். மேலும் இது செய்யப்படவில்லை என்றால், மோசமாக நாளைக் கழிப்பாய்!''

ஏழைச் சகோதரன் வீட்டிற்குச் சென்று, தனது கண்களினின்றும் நீர் கொட்டுகின்ற அளவுக்கு அத்தனை வருத்தமாக இருந்தான்.

''ஏன் நீங்கள் அழுது கொண்டு இருக்கிறீர்கள், அப்பா?'' என்று மரூஸ்யா கேட்டாள்.

''அதை நான் எப்படிச் சொல்வேன், எனது குழந்தாய்!'' என்றான். ''பிரபு என்னிடம் பத்து அவித்த முட்டைகள் கொடுத்து, அவற்றின் மீது அடைக் கோழியை வைத்து, காலைக்குள்ளாக அவற்றினின்றும் கோழிக்குஞ்சுகள் பத்து பொறிக்க வைத்து, அவற்றைப் பெரிய அளவில் வளர்த்து, அவருடைய காலை உணவுக்காக அவற்றில் மூன்றை நீ பொறிக்க வேண்டும் என்று பிரபு சொன்னார்.''

மரூஸ்யா முறுவலித்தாள்.

வேகவைத்த துழவைப் பானை ஒன்றை அவனுக்குக் கொடுத்துச் சொன்னாள்:

''அப்பா, இந்தப் பானையை பிரபுவிடம் எடுத்துச்சென்று, நிலப் பகுதி ஒன்றை உழுது அங்கே இந்தத் துழவையை விதைத்து, தினை முற்றிய உடனேயே அதை அறுத்து கதிரடித்து, கோழிக்குஞ்சுகள்

பொரிக்கப்பட்ட உடனேயே அவற்றிற்கு உணவளிக்க எனக்காகத் தயாராக வைக்கும்படி சொல்லுங்கள்.''

தன் மகள் தனக்குச் சொன்னது போல ஏழைச் சகோதரன் செய்தான். துழவைப் பானையைப் பிரவுவிடம் கொண்டுவந்து, வார்த்தைக்கு வார்த்தை அவள் சொன்னதையே திருப்பிச் சொன்னான்.

அந்தத் துழவையைப் பிரபு மேன்மேலும் கூர்ந்து நோக்கிப் பிறகு அதை நாய்களுக்கு வீசினார். அதன் பின்னர் சணல் தண்டு ஒன்றை ஏழைச் சகோதரனிடம் நீட்டினார்.

''இந்தச் சணல் தண்டை உன் மகளிடம் எடுத்துச் செல்,'' என்று சொன்னார். ''இதை ஊறவைத்து, காயவைத்து, உரித்து, அதினின்றும் நூறு கஜம் நீளமுள்ள துணி தயாரிக்கச் சொல். மேலும் இது செய்யப் படவில்லை என்றால், மோசமாக நாளைக் கழிப்பாய்!''

வீட்டிற்குக் கிளம்பிய ஏழையின் கண்களினின்றும் கண்ணீர் கொட்டியது. வீட்டை அடைந்ததும், கதவருகே அவனைச் சந்தித்த மரூஸ்யா எது அழும்படி செய்தது என்று வினவினாள்.

''அதை நான் எப்படிச் சொல்வேன், எனது குழந்தாய்!'' என்றான். ''இந்தச் சணல் தண்டை பிரபு என்னிடம் கொடுத்து, அதை நீ ஊறவைத்து, காயவைத்து, உரித்து, அதினின்றும் நூறு கஜம் நீளமுள்ள துணி தயாரிக்க வேண்டுமாம்!''

அவள் முறுவலிப்போடு அவன் சொல்வதைக் கேட்டாள். ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு, வெளியே சென்று எவ்வளவு மெல்லியதாக முடியுமோ அவ்வளவு மெல்லிய குச்சி ஒன்றை மரத்தினின்றும் வெட்டி, தன் தந்தையிடம் கொடுத்தாள்.

''இதைப் பிரபுவிடம் எடுத்துச் செல்லுங்கள், அப்பா,'' என்றாள், ''இதினின்றும் நாரை நூற்பதற்காக எனக்கு ஒரு சிக்கு வாரியும், நூற்புக்கதிரும் வடிவமைக்கும்படி சொல்லுங்கள்.''

ஏழைச் சகோதரன் அந்தக் குச்சியைப் பிரபுவிடம் எடுத்துச்சென்று தன் மகள் சொன்னதை அவரிடம் கூறினான்.

அந்தக் குச்சியைப் பிரபு மேன்மேலும் உற்றுப்பார்த்து விட்டு அப்பால் அதை வீசியெறிந்தார்.

''அந்தச் சிறுமி சுலபமாக முட்டாளாக்கப்படக் கூடியவள் அன்று.'' என்று எண்ணிக் கொண்டார்.

அது பற்றி சிந்தித்து ஏழைச் சகோதரனிடம் சொன்னார்:

''போய், உன் மகளை என்னை வந்து பார்க்கச் சொல். ஆனால் அவள் நடக்கவோ சவாரி செய்யவோ கூடாது, வெறுங்காலிலோ, புதைமிதியிலோ வரக் கூடாது, பரிசுடனோ, பரிசு இன்றியோ வரக் கூடாது. இதைச் செய்வதற்கு அவள் தவறினால், மோசமாக நாளைக் கழிப்பாய்!''

ஏழைச் சகோதரன் வீட்டிற்குச் சென்றான். அவன் கண்களினின்றும் கண்ணீர் கொட்டியது.

''இப்போது நாம் என்ன செய்யப் போகிறோம், எனது குழந்தாய்? பிரபு உன்னை என்ன செய்யச் சொல்கிறார் என்பதைச் சற்றுப் பார்!'' என்று தன் மகளிடம் கூறினான்.

அவளிடம் சொல்ல வேண்டியனவற்றை எல்லாம் அவன் சொன்ன போது மரூஸ்யா கூறினாள்:

''கவலைப்பட வேண்டாம், அப்பா, எல்லாம் சரியாக இருக்கும். எனக்காக உயிரோடு முயல் ஒன்று மட்டுமே வாங்கி வாருங்கள்.''

அவள் சொன்னது போலவே தந்தை செய்து, அவளுக்கு முயல் ஒன்று கொண்டுவந்தான். மரூஸ்யா உடனடியாக வீட்டை விட்டுப் புறப்படத் தயாரானாள். முதலில், அவள் ஒரு பனிச்சறுக்கு வண்டியை வெளியே நிறுத்தி ஒரு வெள்ளாட்டை அதனோடு பூட்டினாள்; பிறகு சிட்டுக்குருவி ஒன்றைப் பிடித்தாள்; அதன் பிறகு ஒரு காலை வெறுமனே விட்டு மற்றொன்றில் ஒரு காலணி அணிந்து கொண்டாள். இதைச் செய்து முடித்து, முயலை அக்குளில் எடுத்து, ஒரு காலை பனிச்சறுக்கு வண்டியில் வைத்து, சிட்டுக் குருவியை ஒரு கையில் இறுக்கமாகப் பற்றிக் கொண்டு, பிரபுவினுடைய வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

பிரபு அவளைப் பார்த்ததுமே, அந்தப் பெண் தன்னை திறமை யினால் வென்றுவிட்டதை உணர்ந்து கொண்டு, அவள் மீது நாய்களை ஏவும்படி வேலையாட்களுக்கு உத்தர விட்டார். ஆனால் அவளோ அக்குளிலிருந்த முயலை வெளியே விட, நாய்கள் அவளை விட்டு விட்டு முயலின் பின்னே ஓடின. பிறகு அவள் பிரபுவினுடைய வீட்டிற் குள்ளாக வந்து அவரை வணங்கிச் சொன்னாள்:

''இதோ உங்களுக்கான ஒரு சிறிய பரிசு, மேன்மை சான்றீர்.''

சிட்டுக்குருவியை அவரிடம் நீட்டினாள். ஆனால் அவர் அதைப் பெற்றுக்கொள்ளும் முன்பே, அது சிறகுகளை அடித்துக் கொண்டு சன்னலுக்கு வெளியே பறந்தது!

அந்நேரத்தில் பிரபுவைப் பார்க்க இரண்டு ஆட்கள் வந்து, தங்களுக்கிடையே விசாரித்து, தங்களில் யார் சரி, யார் தவறு என்பதை முடிவு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

பிரபு முற்றத்திற்குள்ளாக வந்தார்.

''எதைப் பற்றி உங்களுடைய சச்சரவு என்பதை என்னிடம் சொல்லுங்கள், நல்லவர்களே,'' என்றார்.

இருவரில் ஒருவன் சொன்னான்:

''அது இப்படித்தான், மேன்மை சான்றீர். இந்த ஆளும் நானும் வயலில் தூங்கினோம். காலையில் நாங்கள் விழித்த போது, என்னுடைய பெண்குதிரை குட்டி ஈன்றிருந்ததைக் கண்டோம்.''

''அது பொய், என்னுடையது தான் குட்டி ஈன்றிருந்தது!'' என்று இரண்டாமவன் கத்தினான்.

பிரபு இதைப் பற்றிச் சிந்தித்தார்.

''பெண்குதிரைகளையும் குட்டியையும் இங்கே கொண்டுவாருங்கள்,'' என்றார். ''குட்டி தனது தாயிடம் ஓடும், அப்படியே விடையை நாம் காணலாம்.''

குதிரைகள் முற்றத்திற்கு அழைத்து வரப்பட்டன. பிறகு அவை கட்டப்பட்டு, குட்டி தனியாக விடப்பட்டது. புகார் தந்த இரு ஆட்களும் குட்டியை அழைக்கத் தொடங்க, எந்த ஒரு குதிரையிடமும் செல்வதற்குப் பதிலாக அது முற்றத்திலிருந்து ஓடிக் கொண்டிருக்கவே அந்தளவு குழம்பிப் போனது. என்ன செய்வதென்று யாருக்கும் தெரியாது வாய்பிளந்து நிற்க, மரூஸ்யா முன்னே வந்து சொன்னாள்:

''அது வேறுவிதமாகச் செய்யப்பட வேண்டும். குதிரைகளைச் சுதந்திரமாக விட்டு, குட்டியைக் கட்டிப்போடுங்கள். அதனுடைய தாய் அதனிடம் போகும்.''

அவள் சொன்னது போல அவர்கள் செய்தார்கள். எப்போது குதிரைகளை அவர்கள் அவிழ்த்து விட்டார்களோ, அப்போது அவற்றில் ஒன்று குட்டியிடம் நேராக ஓடியது.

பிரபு இச்சிறுமியை வீட்டிற்குப் போக விட்டார், ஏனெனில் தன்னை விட அவள் புத்திசாலியாக இருந்ததனால், அவளை விஞ்சிநிற்க அவரால் ஒருபோதும் முடியாது என்பது புரிந்து கொண்டார்.



நேர்மையான மருமகனும் நேர்மையற்ற மாமனும்

ஒரு சமயம் இரு சகோதரர்கள் இருந்தனர். ஒருவன் பணக்காரன், இன்னொருவன் ஏழை. ஏழைச் சகோதரன் ஒரு மகனை விட்டுவிட்டு இறந்து போனான். அவனும் அப்பாவைப் போலவே ஏழையாக இருந்தான்.

ஒரு நாள் அவன் தன் மாமனிடம் வந்து கேட்டான்:

''மாமா, எனக்குச் சொல்லுங்கள், எது சிறந்தது – நேர்மையா நேர்மையின்மையா?''

''ஹூம், நம்முடைய இந்தக் காலத்தில் நேர்மையை நீ எங்கே காண்பாய்!'' என்றான் மாமன். ''எங்கெனும் வஞ்சகத்தையும் மோசடியையும் தவிர வேறொன்றுமில்லை.''

''இல்லை, மாமா, நீங்கள் சொல்வது சரியில்லை என்று நினைக்கிறேன்!'' என்றான் மருமகன். ''நேர்மை இருக்கத்தான் செய்கிறது என்று நான் உறுதி சொல்வேன். நேர்மையின்மையைக் காட்டிலும் நேர்மை மிகச் சிறந்ததென்று நினைக்கிறேன்.''

''ஒரு நீதிபதியிடம் சென்று இது பற்றி நாம் கேட்போம்.''

''நாம் எதற்காக அப்படிச் செய்ய வேண்டும்! நாம் சாலை நெடுகிலும் நடந்து போகலாம். நாம் சந்திக்கும் முதல் மூன்று பேரிடம்

அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கேட்கலாம். நீங்கள் சொல் வதை அவர்கள் ஏற்றுக் கொண்டால், என்னுடைய வீட்டு விலங்குகள் எல்லாம் உங்களுடையவைதான்; என்னுடையதை ஒப்புக்கொண்டால் உங்களுடைய வீட்டு விலங்குகள் எல்லாம் என்னுடையவை.''

''மிகவும் நல்லது!''

அவர்கள் சாலை நெடுகிலும் போனார்கள். நீண்ட நேரம் நடந்த பிறகு, வேலை முடித்து வீடு திரும்பும் உழைப்பாளி போலக் காணப்பட்ட ஒருவனைச் சந்தித்தார்கள். அவனுக்கு அவர்கள் வணக்கம் தெரிவிக்க அவனும் பதிலுக்கு வணக்கம் சொன்னான். நேர்மை அல்லது நேர்மை யின்மை இதில் எது சிறந்ததென அவன் நினைக்கிறான் என்பதைத் தங்களிடம் சொல்லுமாறு கேட்டார்கள்.

''ஹூம், நல்லவர்களே, நம்முடைய இந்தக் காலத்தில் எங்கேனும் நேர்மையைச் சந்தித்திருக்கிறீர்களா?'' என்றான் அம்மனிதன். ''உதா ரணமாக என்னை எடுத்துக்கொள்ளுங்கள். எனது எசமானனுக்காக நான் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்தேன், ஆனால் மிகக் குறைவாகத்தான் சம்பாதித்தேன். எனது சம்பளத்தில் ஒரு பகுதியை மோசம் செய்யப்பட்டேன். ஆகவே நேர்மையாக இருக்க முயல்வது பயனற்றது. நேர்மையற்று இருப்பதே நல்லது!''

''பார்த்தாயா? முதல் முறையாகச் சரியென்று நிரூபித்து விட் டேன்!'' என்றான் மாமன். மருமகன் மிகவும் கவலையுற்றான், ஏனெ னில் தனது வீட்டு விலங்குகளை மாமனுக்குக் கொடுக்க வேண்டியிருக் கும் என்று பயந்தான்.

அவர்கள் மேலும் நடந்து ஒரு பிரபுவைச் சந்தித்தார்கள்.

''என்ன நினைக்கிறார் என்று அந்தப் பிரபுவிடம் நாம் கேட்க லாம்,'' என்றான் மருமகன். ''அவர் கற்ற மனிதராக இருக்க வேண் டும், அவரது வார்த்தையை நாம் நம்பலாம்.''

அவர்கள் பிரபுவிடம் சென்று சொன்னார்கள்:

''மேன்மை சான்றீர், நேர்மை அல்லது நேர்மையின்மை இதில் எது சிறந்தது என நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதைத் தயவுசெய்து எங்களுக்குச் சொல்லுங்கள்.''

''ஹூம், நல்லவர்களே, நம்முடைய இந்தக் காலத்தில் எங்கேனும் நேர்மையைச் சந்தித்திருக்கிறீர்களா!'' என்றார் பிரபு. ''எங்குமே அத் தகைய ஒன்று கிடையாது. நேர்மையற்று இருப்பதே நல்லது!''

''பார்த்தாயா? இரண்டாவது முறையாகச் சரி என்று நிரூபித்து விட்டேன்!'' என்றான் மாமன் மகிழ்ச்சியாக.

மருமகனோ முன்னிலும் அதிகக் கவலையடைந்தான்.

அவர்கள் மேலும் நடந்து ஒரு பாதிரியாரைச் சந்தித்தார்கள்.

''என்ன நினைக்கிறார் என்று அந்தப் பாதிரியிடம் நாம் கேட்கலாம்,'' என்றான் மருமகன். ''அவர் கடவுளின் மனிதர், அவரது வார்த்தையை நம்பலாம்.''

அவர்கள் பாதிரியிடம் சென்று சொன்னார்கள்:

''பாதிரியாரே, நேர்மை அல்லது நேர்மையின்மை இதில் எது சிறந்தது என நீங்கள் நினைக்கிறீர்கள் என்பதைத் தயவுசெய்து எங்களுக்குச் சொல்லுங்கள்.''

''ஹூம், நல்லவர்களே, நம்முடைய இந்தக் காலத்தில் எங்கேனும் நேர்மையைச் சந்தித்திருக்கிறீர்களா!'' என்றார் பாதிரி. ''எங்குமே அத்தகைய ஒன்று கிடையாது. நேர்மையற்று இருப்பதே நல்லது!''

''பார்த்தாயா? மூன்றாவது முறையாகச் சரி என்று நிரூபித்து விட்டேன்!'' என்று பெருமகிழ்ச்சியுடன் சொன்னான் மாமன்.

செய்வதற்கு எதுவுமே இல்லை, ஆகவே மருமகன் தனக்குச் சொந்தமான வீட்டு விலங்குகளை மாமனுக்குக் கொடுத்தான். அவனுக்கென்று எதுவுமே எஞ்சியிருக்கவில்லை. பட்டினி கிடந்தான், அந்தளவு துயரங்களை அனுபவித்தான், அவனால் மேற்கொண்டு பொறுத்துக் கொள்ள முடியாது, தன்னைத்தானே தூக்குப் போட்டுக் கொள்ள முடிவு செய்த நாளும் வந்தது. ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டு. காட்டுக்குப் போய், ஒரு நல்ல வலுவான மரத்தைப் பார்த்து, இந்த நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமான ஒரு கிளையைத் தேர்ந்தெடுக்க முயன்றான்.

''அந்தக் கிளை என்னைத் தாங்கிக் கொள்ளப் போதுமளவுக்கு உறுதியாக இருக்கக் கூடும்,'' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். ''அதற்குக் கீழிருந்த கிளைக்கு ஏறினால், அதில் கயிற்றை என்னால் வீச முடியும்.''

மரத்தின் மீது பார்வையைச் செலுத்தினான், ஆனால் தன்னைச் சுற்றிப் பார்த்த போது ஓர் எட்டுத் தொலைவில் ஓநாய் இருப்பதைக் கண்டான்! அந்தளவு நடுக்குற்ற அவன் கயிற்றைக் கீழே போட்டு விட்டு, மிக வேகமாக மரத்தைப் பற்றிக்கொண்டு ஏறினான்.

மரத்தின் மேல் அவன் உட்கார்ந்திருந்த போது, அந்தோ! — மூன்று பிசாசுகள் மரத்தை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தன, சற்று பிந்தி அவற்றினுடைய தலைவனும் எசமானனுமான நான்காவது பிசாசு வந்தது.

''இன்று நீ என்ன செய்தாய்?'' என்று நான்காவது பிசாசு முதலாவதைக் கேட்டது.

''ஏதோ, சீர்படுத்த முடியாததைச் செய்தேன், எசமானே,'' என முதலாவது பிசாசு பதிலளித்தது. ''ஓர் அணைக்கட்டை நாசப்படுத்தினேன். அதைச் சரி செய்ய முடியாததற்காகச் சீற்றமுற்ற பிரபு தனது ஆட்களை ஒரு பைத்தியக்காரன் போல சவுக்கால் விளாசுகிறான். பலரை அடித்துக்கொல்வான், அவர்கள் நமது கொடும்பிடிக்குள் வந்து விழுவார்கள்.''

''நீ நன்றாகச் செய்தாய், ஆனால் போதிய அளவுக்கு இல்லை.''

''ஏன் அப்படி?''

''காட்டில் நீர் அரித்தோடிய பகுதியில் மூன்று மரங்கள் வளர்ந்துள்ளன. அவற்றை வெட்டி ஓடைக்குக் குறுக்காகப் போட்டால், மற்றதைச் சுலபமாகச் செய்ய முடியும்.''

''இதை யார் தெரிந்திருக்க முடியும், இதை யார் ஊகிக்க முடியும்!''

நான்காவது பிசாசு இரண்டாவது பிசாசின் பக்கம் திரும்பியது.

''இன்று நீ என்ன செய்தாய்?'' எனக் கேட்டது.

''ஏதோ சீர்படுத்த முடியாததைச் செய்தேன், எசமானே! இந்தக் காட்டுக்கு அப்பால் இருக்கும் ஒரு நகரத்திலுள்ள எல்லாக் கிணறுகளையும் நீரே இல்லாமல் வற்றச் செய்துவிட்டேன். ஒரு கிணற்றைக் காண்பதற்காக நகரமக்கள் இப்போது முப்பது மைல் நடந்துபோக வேண்டியிருக்கும். தாகத்தாலும் களைப்பாலும் பலர் செத்து மடிந்து நமது கொடும்பிடிக்குள் வந்து விழுவார்கள்!''

''நீ நன்றாகச் செய்தாய், ஆனால் போதிய அளவுக்கு இல்லை,'' என்றது நான்காவது பிசாசு.

''ஏன் அப்படி?''

''நகரத்தின் மையத்தில் ஒரு ராஸ்ப்பெர்ரி புதர் வளர்ந்திருக்கிறது. அதைத் தோண்டினால் அதற்குக் கீழிருந்து போதிய நீர் வெளியேறி எல்லாருடைய தேவைகளையும் நிறைவு செய்யும்!''

''இதை யார் தெரிந்திருக்க முடியும், இதை யார் ஊகிக்க முடியும்!'' என்று கத்தியது இரண்டாவது பிசாசு.

நான்காவது பிசாசு இப்போது மூன்றாவது பிசாசிடம் திரும்பியது.

''இன்று நீ என்ன செய்தாய்?'' எனக் கேட்டது.

''ஏதோ சீர்படுத்த முடியாததைச் செய்தேன், எசமானே! காட்டுக்கு அப்பால் உள்ள ஒரு நாட்டின் மன்னருடைய ஒரே மகளை அந்தளவு நோய்வாய்ப்பட வைத்தேன், யாராலும் அவளைக் குணப் படுத்த முடியாது, அவள் நமது கொடும்பிடிக்குள் வந்து விழுவாள்!''

''நீ நன்றாகச் செய்தாய், ஆனால் போதிய அளவுக்கு இல்லை.''

''ஏன் அப்படி?''

''ஒரு முட்புதர் வெட்டப்பட்டு எரிக்கப்பட்டால், நோயுற்று இருக்கும் அறை புகையால் நிரம்பி அவள் குணமடைவாள்.''

''இதை யார் தெரிந்திருக்க முடியும், இதை யார் ஊகிக்க முடியும்!''

பிசாசுகள் ஓடிப் போயின. இந்நேரம் முழுக்க மரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டு, அவை பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டுக்கொண்டிருந்த மருமகன் சிந்தித்தான்:

''அவை சொல்லிய எல்லாம் உண்மையாக இருந்தால் என்ன? அப்படியிருந்தால், நான் போய் அணைக்கட்டைச் சரிபடுத்த முடியும்.''

அணைக்கட்டு இருப்பதாகப் பிசாசுகள் சொன்ன இடத்திற்கு அவன் சென்றான். அங்கே வேலையை விரைந்து முடிக்க வேலையாட்களைக் கட்டாயப்படுத்த பிரபு அவர்களை ஏசிக் கொண்டும் சாட்டையால் அடித்துக்கொண்டும் இருந்தான். ஆனால் முடிந்தளவு செய்தும், அவ் வளவு கடினமாக வேலை செய்தும், அவர்களுடைய முகங்களினின்றும் வியர்வை வழிந்து ஓடியும், அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

மருமகன் பிரபுவிடம் சென்றான்.

''உங்களுடைய வேலையாட்களை அடிப்பது உங்களுக்கு உதவி செய்யாது, மேன்மை தங்கிய பிரபுவே,'' என்றான். ''அணைக்கட்டை நான் சரிப்படுத்தினால் நீங்கள் எனக்கு என்ன தருவீர்கள்?''

''நூறு ரூபிள், இரண்டு குதிரைகள், என்னுடைய மூடுவண்டியும், வண்டியோட்டியும்!'' என்றார் பிரபு.

''மிகவும் நல்லது. எனக்கு உதவி செய்ய மூன்று வண்டிகளும் ஆறு ஆட்களும் மட்டுமே தேவை.''

''நீ விரும்பும் அளவுக்குப் பயன்படுத்திக் கொள்!''

மருமகனும் ஆறு ஆட்களும் காட்டுக்கு வண்டியை ஓட்டிச் சென்றார்கள். அங்கே நீர் அரித்தோடிய இடுக்கில் வளர்ந்திருந்த மூன்று மரங்களை அவர்கள் வெட்டுமாறு செய்தான். மரங்களைக் கொண்டு வந்து ஓடையின் குறுக்காகப் போட்டார்கள். அணைக்கட்டு சீக்கிரமே புத்தம் புதியது போல ஆனது. பிரபு தன்னுடைய வாக்கைக் காப்பாற்றினார். மருமகனுக்கு நூறு ரூபிளும், இரண்டு குதிரைகளும், ஒரு மூடு வண்டியும், வண்டியோட்டியும் கொடுத்தார்.

மருமகன் சிந்தித்துக் கொண்டான்:

''நீரில்லாமல் போய்விட்ட நகரத்திற்கு நான் போகலாம். பிசாசுகள் சொன்னது உண்மையாக இருந்தால், நகரமக்களுக்கு என்னால் உதவ முடியும்.''

தனது மூடுவண்டிக்குள்ளாக ஏறிக்கொண்டு நகரத்தை நோக்கி ஓட்டினான். வழியில் நுகத்தடியில் இரு நீர் வாளிகளைச் சுமந்து கொண்டு வந்த ஒரு கிழவியைச் சந்தித்தான்.

''அதிலே தண்ணீரா வைத்திருக்கிறாய், பாட்டி?'' எனக் கேட்டான்.

''ஆமாம், மகனே.''

''எனக்குக் கொஞ்சம் கிடைக்குமா?''

''வருத்தப் படுகிறேன், மகனே, கிணறு முப்பது மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. நான் வீடு போய்ச் சேர்வதற்குள்ளாகப் பாதியைச் சிந்தி விடுவேன். என்னுடைய குடும்பம் பெரியது. நான் கொண்டு வர முடிந்த ஒவ்வொரு துளியும் அவர்களுக்குத் தேவை.''

''கவலைப்பட வேண்டாம்! இப்போது நான் உங்களுடைய நகரத்திற்குச் சென்று கொண்டிருக்கிறேன். உங்கள் எல்லாருக்கும் ஆயுள் முழுக்க வருமாறு போதிய தண்ணீரைப் பெற்றுத்தருவேன்!''

கிழவி மருமகனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்து விட்டு வீட்டுக்கு விரைந்தாள். நகரம் முழுமைக்கும் தண்ணீர் தருவதாக வாக்களித்த ஒரு மனிதன் வந்துகொண்டிருக்கிறான் என்று ஒவ்வொருவரிடமும் கூறினாள். நகரமக்கள், ரொட்டியும் உப்பும் மற்றும் எல்லாவகையான வெகுமதிகளையும் தாங்கிக்கொண்டு அவனைச் சந்திப்பதற்காக நகர வாயிலுக்கு அப்பால் சென்றார்கள்.

நகரத்தின் மையத்தில் வளர்ந்திருந்த ராஸ்ப்பெர்ரி புதரை மருமகன் கண்டு, அதைத் தோண்டி வெளியே எடுத்தான். உடனேயே அதன் கீழிலிருந்து நீர் பொங்கி எழுந்து எல்லாப் பக்கமும் ஓடியது.

நகரமக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து அவனுக்குப் பணமும் பல வெகுமதிகளும் கொடுத்தார்கள். ஆகவே அவன் இப்போது அவனது மாமனைக் காட்டிலும் பணக்காரனானான்.

''பிசாசுகள் குறிப்பிட்ட நாட்டிற்குப் போய், அரசனுடைய மகளை என்னால் குணப்படுத்த முடியும்,'' என்று அவன் சிந்தித்துக்கொண்டான்.

விரைவில் அவன் அங்கு போய் மாளிகைக்கு விரைந்தான்.

''இளவரசியை எப்படிக் குணப்படுத்துவது என்று எனக்குத் தெரியும்!'' என்றான்.

''பல அந்நிய நாடுகளினின்றும் வந்த மருத்துவர்கள் முயன்று பார்த்தும், அவர்களால் குணப்படுத்த முடியவில்லை, ஆகவே எப்படி முடியும் உன்னால்!'' என்று அரசரின் வேலையாட்கள் அவனிடம் சொன்னார்கள்.

''பரவாயில்லை! நான் சொன்னதை அரசரிடம் போய்ச் சொல்லுங்கள் போதும்.''

அவர்கள் இதைச் சொன்னதும், அரசர் வெளியே வந்து சொன்னார்:

''என் மகளை நீ குணப்படுத்தி விட்டால், அவளை உனக்கு நான் மண முடித்து வைப்பேன். மேலும் நாட்டிலேயே உன்னை மிகப் பெரிய பணக்காரனாக்குவேன்.''

இளவரசியினுடைய தனியறைக்கு அவனை அவர்கள் அழைத்துச் சென்றார்கள். மரணத்தின் எல்லையில் அவள் இருப்பதையும், அவளைக் காப்பாற்ற வேண்டுமானால் அவன் விரைந்து செயல்பட வேண்டும் என்பதையும் கண்டான். ஆகவே ஒரு முட்புதரை வெட்டி, அதை எரித்து அதன் புகையை அவளுக்கு மேலாக விட்டான். இளவரசி உடனேயே நன்றாக உணர்ந்து, மூன்று நாள்களில் நலமடைந்தாள்.

அரசரும் அவருடைய எல்லாக் குடிமக்களும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அரசர் மருமகனிடன் சொன்னார்:

''நீ என் மகளைக் குணப்படுத்தி விட்டாய், நான் வாக்குத் தந்தது போல அவளை நீ மணந்து கொள்ளலாம். நான் இறக்கும் போது என்னுடைய இடத்தில் நீ அரசனாவாய்.''

இந்த அரசர் இறந்து வெகுநாட்களாவதற்குள் மருமகன் அரசனானான்.

பல ஆண்டுகளாக அவன் அரசாட்சி நடத்திக் கொண்டிருந்த போது

நாட்டிற்கு வந்த ஒரு பணக்கார வியாபாரி அங்கே வாணிகம் செய்து கொள்ள அரசனின் அநுமதி கேட்டுத் தனது வேலையாளை அனுப்பினான். மருமகனோ அந்த வியாபாரி நேரடியாகத் தன்னை வந்து பார்க்க வேண்டும் எனக் கூறினான். வியாபாரியும் வந்த போது, அவன் தனது மாமனைத் தவிர வேறு யாருமில்லை என்பதைக் கண்டான். தான் மாமனை அடையாளம் கண்டு கொண்டதை அவனிடம் காட்டிக் கொள்ளவில்லை. அவனுடைய கோரிக்கை ஏற்கப்பட்டதாக அவனிடம் கூறினான். ஆனால் தன்னைத் திரும்பவும் ஒரு முறை பார்க்காது அந்த வியாபாரி நகரத்தை விட்டுப் போகாதிருக்குமாறு பார்த்துக் கொள்ளத் தனது ஆட்களுக்குக் கட்டளையிட்டான். அரசனுடைய ஆட்கள் அவன் உத்தரவிட்டவாறே செய்ய, வியாபாரி மாளிகைக்குத் திரும்பவும் கொண்டு வரப்பட்டான்.

அவன் எங்கிருந்து வந்தான், அவனுடைய பெயர் என்ன என்று அரசன் அவனிடம் கேட்டான். அவற்றை வியாபாரி சொன்னபோது, தான் அவனுடைய மருமகன் என்று அரசன் கூறினான்.

''ஒரு மனிதன் நேர்மையாக இருந்தால் வளமடைய முடியாது என்று ஒரு முறை நீங்கள் சொன்னீர்களே, மாமா!'' என்றான். ''நல்லது, இப்போது நீங்கள் கூறியது தவறு என்பது நிரூபணமாகி விட்டது. ஏனெனில் நீங்கள் ஒரு வியாபாரி மட்டுமே, நேர்மையைத் தேர்ந்தெடுத்த நானோ ஓர் அரசன்.''

தனக்கு நேர்ந்த எல்லாவற்றையும் அவன் மாமனிடம் சொல்லி, எல்லாவகையான பொருட்களுடன் நிறைந்த இரு கப்பல்களை அவனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான்.

''நீங்கள் எனக்குச் செய்த தவறை நான் மறக்க விரும்புகிறேன், மாமா,'' என்றான். ''எல்லாவற்றுடனும் உள்ள இந்தக் கப்பல்களை உங்களுக்காக எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் வீடு திரும்பும் போது நேர்மை உயர்வானது என்றும் ஒரு மனிதன் தன்னைப் பற்றி மட்டுமே எண்ணாது மற்றவர்களுக்கும் உதவ வேண்டும் என்றும் எல்லாரிடமும் கூறுங்கள்.''

கப்பல்களைப் பெற்றுக்கொண்ட மாமன் வீட்டிற்குச் செலுத்தினான். ஆனால் அங்கு போய்ச்சேர்ந்ததும், எல்லாவற்றையும் திரும்ப எண்ணிப்பார்த்து தனது மருமகன் அரசனாகி விட்ட நிலையில் தான் வெறுமனே வியாபாரியாக இருப்பதை நினைத்து, மருமகன் மீது

பொறாமைப் பட்டான். இது பற்றி அவன் நினைந்து நினைந்து ஏங்கி மிகவும் பரிதாபகரமாகிப் போய், தனக்குத்தானே இப்படிச் சொல்லிக் கொண்ட ஒரு நாளும் வந்தது.

''என் மருமகன் செய்தது போலவே நானும் என்னையே தூக்குப் போட்டுக்கொள்ளப் போகலாம். அவனுக்கு நடந்தது போல ஒருவேளை எனக்குச் சாதகமாக விஷயங்கள் திரும்பலாம்.''

ஒரு கயிற்றை எடுத்துக்கொண்டு, காட்டில் தன் மருமகன் எங்கே சென்றானோ அதே இடத்திற்குச் சென்றான். ஆனால் திடீரென்று அவனுக்கு முன்பாக ஒன்றன் பின் ஒன்றாக பிசாசுகள் தோன்றின! அவை அவன் மீது பாய்ந்து அவனை மரத்திற்கு இழுத்துச்சென்று அதனது உச்சாணிக் கொப்பில் அவனைத் தூக்கிலிட்டன.

வாசக நண்பர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தையும் அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளையும் **ராதுகா பதிப்பகம்** *மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.*

கடிதங்களைத் தயை செய்து Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR *முகவரிக்கு அனுப்புங்கள்.*

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை – 600098

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை – 600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை – 625001
87 / 89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர் – 641001
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி – 620008
செர்ரி ரோடு, சேலம் – 636001
1, ஏ. திருவனந்தபுரம் சாலை, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி – 627003

விற்பனை நிலையம்

66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்